உ

"கிருபாகரக் கந்தா தந்தாள் உன் செங்கமலத் தாள்"

# புதுக்கோயிலான்... பெருங்கருணை



கொக்குவில்
கிருபாகர
சிவசுப்பிரமணிய
சுவாமி

2014
மஹாகும்பாபிஷேக
சிறப்புமலர்

KOKUVIL KIRUPAKARA SIVASUBRAMANIYA SWAMI (PUTHU) KOVIL - KUMBHAPISEKA MALAR 3

05-05-2014

# சமர்ப்பணம்



சித்திக் இறையா மையனுடன்
சிறப்பா யுறையுஞ் செவ்வேளே
முத்திக் கரைக்கு வழிகாட்டும்
முச்சத் திக்கோர் முதல்வா
பத்தர்க் கருளும் கிருபாகர
உன் பதமலர்க் கீதர்ப்பணமே!

☆

என்றும் இளையவனாக அழகியவனாக
எழிலார் கொக்குவிற் பதியமர்ந்து
அன்பர்க்கு அருள் சுரந்து
புதுமைக் கோலத்துடன்
வள்ளி தேவசேனா சமேதனாக
புதுக்கோவிலில் உறையும் கருணைக்கடலே!
அருள்வளர் கிருபாகர சிவசுப்பிரமணியக் கடவுளே!

☆




கஞ்சுகமொழிக் குஞ்சரியொடு
வள்ளியையும் வேட்ட வேல் வீரா !
எஞ்சலிலா அழகுசெய்து
உமக்கின்று இதமான வீடமைத்தோம்
விஞ்சுபுகழ் வேலவனே !
விரும்பி உன் புகழ்பாட
மிஞ்சும் ஆவலுடன்
மலரொன்று உன்னடிக்கே
சூட்டிடுவோம்,

- மலராசிரியர்,
- ஆலய நிர்வாகக் குழு -
(புதுக்கோயில்)

# பொருளடக்கம்


1. காணிக்கை
2. பிரதம குருவின் அருளாசிச் செய்தி
3. ஆசியுரைகள்
   1. இலங்கை நல்லை ஆதீனம்
   2. தமிழ்நாடு ஆதீனம்
   3. சோதிடபரிபாலமட இயக்குனர்
4. பெரியோர்களின் வாழ்த்துசெய்திகள்
   1. யாழ்ப்பாண அரசாங்க அதிபர்
   2. திருமதி. சாந்தி நாவுக்கரசன்
   3. நல்லூர் பற்று பிரதேச செயலாளர்
   4. நிர்வாகசபை தலைவர் திரு. ச.பாலாபரணம்
   5. மூத்த உறுப்பினர் திரு. வ. குலசிங்கம்
5. முன்னுரை
6. நுழைவாயில்
7. இன்றைய பெருஞ்சாந்தி விழா
8. நால்வர் திருமுறைகளில் குமரன் முருகன் துதி
9. ஆலய வரலாறு - ஒரு நோக்கு
10. கிருபாகரர் மீது பாடப்பெற்ற பனுவல்களும் பாடல்களும்
11. புதுக்கோயிலான் பேரில் எழுதப்பட்ட திருப்பள்ளியெழுச்சி
12. ச.கபாரத்தினமுதலியார் பாடிய ஆசிரியவிருத்தம்
13. சுப்பிரமணிய சுவாமி கோவில் மான்மியம்
14. கொக்கூர்க் குமர கிருபாகரரூஞ்சல் மு.சி
15. பிரார்த்தனை - சிவஸ்ரீ. தா. மகாதேசக்குருக்கள்
16. கும்பாபிஷேக மகிமை
17. ஆலயத்தில் ஆசாரம் - கலாநிதி திருமதி. இ. கலைவாணி
18. கோபுர தரிசனம் - பேராசிரியர் க. கோபாலகிருஷ்ணஐயர்
19. முருக வழிபாடு - திருமதி. பவாணி முகுந்தன்
20. திருவடிகளில்.... கலாநிதி க. நாகேஸ்வரன்
21. நாதாந்தம் - ஞானி சிவசுப்பிரமணியம்
22. நந்தி - கம்பவாரிதி இ. ஜெயராஜ்
23. கோயில்கள் பேணிவளர்த்த கலை : 1
24. கருணைபெற பஜனைவழி கலை : 2
25. கவிதைகள் / அருட்பாடல்கள் / பஜனைப் பாடல்கள்
26. வேண்டும் புதுக் கோயிலானுக்கு ஒரு புதிய இராஜகோபுரம்
27. புதுக்கோயிலடியார் தனிப்பெருமைகள்
28. கொக்குவில் அமைவும் வழியாடுகளும்
29. நிர்வாக சபை
30. ஆலய கிடைப்படம் 2011 வரை
31. அனுபந்தம் 1 (புகைப்படங்கள்)
32. அனுபந்தம் 2 (பட்டமளிப்பு)
33. அனுபந்தம் 3 (உபயகாரர் மாதாந்த பூசைகள்)
34. பொருளாளர் இதயத்திலிருந்து
35. செயலாளர் நன்றி அறிக்கை
36. நன்றி மலர் - பதிப்பாசிரியர்
38. விளம்பரங்கள்



ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

இலங்கையின் பிரதம அமைச்சர்

**Prime Minister of Srilanka**

## *Felicitation Message*

It is with much reverence that I send this felicitation message for the commemorative magazine issuing to coincide with the annual Kumbhabishaka festival at Kirupakara Shivasubramaniyamsuwami Kovil, Kokuvil, Jaffna.

Shivasubramaniyamsuwami Kovil, established in 1830, is a renowned sacred Hindu Kovil not only in Kokuvil area, but also in Jaffna district.

We should recollect that religious freedom in the island along with North-East area has been widen with the initiative taken by His Excellency the President Mahinda Rajapaksha for establishing peace. It has paved the way for peace that Sinhalese, Tamils, Muslims, Bhurgers and Malays can live together in harmony as a united country.

Today, an unprecedented huge economical, social and cultural revival is developing in North-East areas. It has created an environment that followers of various faiths such as Hindus, Buddhists, Islams and Christians can live together as children of Mother Lanka, under the united Sri Lankan Flag with mutual understanding and it is our duty to strengthen further this relationship.

In such an era, I wish Kumbhabisheka festival of Shivasubramanyamswami Kovil a success! Also, extend my sincere reverence to the Priest-in-charge and the entire devotees

Dr D M Jayaratne

**Dr.D.M.Jayaratne**

*Prime Minister and*

*Minister of Buddha Sasana & Religious Affairs*

*Democratic Socialist Republic of Sri Lanka*

05th May 2014



உ
ஓம்

# குரு அருளாசிச் செய்தி

**ஆலய பிரதம சிவாச்சாரியாரும், பிரதிஷ்டா குருவுமாகிய**
**சிவஸ்ரீ. க. சிவதாசக்குருக்கள்**

எல்லாம் வல்ல கஜவள்ளி, மகாவல்லி சமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி பாதார விந்தங்களை வணங்கி, புதுக்கோயிலான்..... என்ற பெயரோடு இன்று வெளியிடப்படும் மஹா கும்பாபிஷேக மலருக்கு எனது ஆசிகளை வழங்குவதில் மகிழச்சியடைகிறேன்.

108 வருடங்களுக்குமேல் பழைமை வாய்ந்த முருகப்பெருமான், கொக்குவில் பகுதியில் மணிமகுடமாக வீற்றிருந்து பக்தர்களின் துன்ப துயரங்களை நீக்கி சகல செல்வங்களையும் வாரிவழங்கும் தெய்வமாவார். ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய பெருமானின் இந்த ஜய வருஷ மஹா கும்பாபிஷே தினத்தில் அவரின் திருவருளை பரப்பும் இந்த வெளியீட்டில் அடியேனும் ஆசிச் செய்தி எழுதத் திருவருள் புரிந்த எம்பெருமானுக்கு வணக்கங்களை கூறி சமர்ப்பிக்கிறேன்.

எங்கள் சிவசுப்பிரமணியபெருமான் ஆலயத்தில் ஒரு "இராஜகோபுரம்" இல்லாதது மிகவும் பெரியகுறை. அதனை ஆலய நிர்வாகமும் பக்தர்களும் கூடிய சீக்கிரம் நிறைவேற்றி முடிக்க திருவருள் கைகூடவேண்டிப் பிரார்த்தித்து, சகல மக்களும் எல்லாச் செல்வங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ்க என்று வாழ்த்தி எனது நல்லாசிகளை கூறிக்கொள்கின்றேன்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

- சுபமஸ்து -

05.05.2014

இவ்வண்ணம்
**சிவஸ்ரீ. க. சிவதாசக்குருக்கள்**
(பிரதம குரு)





# அருளாசிச் செய்தி

## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**

---

முருகன் அடியார்களுக்கு,

கொக்குவில் பிரதேசத்தில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுாமியாக எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் பெருமானுக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் பொருட்டு கொக்குவில் பதியில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானுக்கு புனருத்தாரண கும்பாபிஷேகம் செய்வது ஊருக்கும் ஊர் மக்களுக்கும் நன்மையை தேடித்தருவதாகம் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வெண்டாம் நித்தமும் எம்பிரான் கோயில் புகுக. என்று எம் முன்னோர்கள் வாக்குக்கமைய சென்ற இடமெல்லாம் கோயில்கள் அமைத்து வழிபாடு செய்து வருகின்றனர் நற்றமிழ் மக்கள். அந்த வகையில் நல்லூர் முருகன் கோயலில் பற்றில் உள்ள கொக்குவில் பிரதேசத்தில் அமைந்திருக்கும் முருகப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவதன் மூலம் இறைவனுடைய அன்பை பெற முடிகிறது.

இக்கும்பாபிஷேகத்தை நடத்தும் தற்போதை நிர்வாக சபையினரையும், குருமார்களையும், ஊர் மக்களையும் சுப்பிரமணயிப் பெருமான் ஆசீர்வதிப்பார்களாக. இக்கும்பாபிஷேகத்தை சிறப்பித்து " புதுக்கோயிலன் பெயரில் மலரினை வெளியிடும் பதிப்பாசிரியர், சைவப்புலவர், கலாபூஷணம் மு.சி.ஸ்ரீதயாள் அவர்களை வாழ்த்திப் பாராட்டுகிறோம். நடைபெறும் கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



# கொக்குவில் வாக்கிய பஞ்சாங்கம் சோதிட பரிபாலனமட நிலைய இயக்குனர் பிரம்மஸ்ரீ. வெ. இரகுநாத ஐயர் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை



எமது கொக்குவிற் கிராமத்தின் மத்தியில் புதுக்கோவில் பதியில் கோயில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய சுவாமிக்கும், பரிவார தெய்வங்களுக்கும் ஜய வருடம் சித்திரை 22இல் ஜீர்னோத்தாரண மஹா கும்பாபிஷேகம் இன்றை புனித தினத்தில் நடைபெறுகிறது. பழமை வாய்ந்த கொக்குவிற் கிராமம் முருகபக்தர்கள் செறிந்து வாழும் கல்வியும், செல்வமும், வீரமும் நிறைந்த கொண்ட ஊர். பிள்ளையார் பெருங்கதை, கந்தபுராணப்படனம், சமயாசாரியர்கள் குருபூசைகள், பூஜாதி கிரியைகளெல்லாம் கிரமமாக நடைபெற்று வந்த தலம். கருணை வள்ளலான ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரன் மணியராக வீற்றிருந்து அன்பர்களின் குறைதீர்த்து அருள்பாலிக்கும் இத்தலம், ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் சிவபூஜை, கிரியைகளை நடத்தி ஆரம்பத்தில் சித்தி விநாயகனுக்கும் சிவசுப்பிரமணியப் பெருமானுக்கும் பிரதிஷ்டாகும்பாபிஷேகத்தை எமது தந்தையார் அமரர் வெங்கடேச ஐயரின் வழிப் பூட்டனாராகிய பிரம்மஸ்ரீ. இரகுநாதையரவர்களே நடத்தி வைத்தார் என்ற குறிப்புகளும், விபரங்களும் எமது சோதிட பரிபாலன மடத்தின் சுவடிகளில் அறிய வந்த செய்திகள்.

அண்டி வருவோரை ஆதரிக்கும் அருட்கடலாகிய சுப்பிரமணயர் தம் பரிவார தெய்வங்களுடன் புதுப்பொலிவு பெற்று விளங்கும் புதுக்கோவிலில் இன்று குடமுழுக்குக் கண்டு மகிழ்கிறார்.

இந்த மகத்தான பக்தித் திருநாளில், கும்பாபிஷேக கைங்கரியங்களும், "புதுக்கோயிலான்" என்ற மலர் வெளியீடும் குறைவின்றி நிறைவேற நிர்வாக சபையினரின் பணிகளையும் பதிப்பாசிரியரின் முயற்சியையும் வாழ்த்தி ஆசிக்கிறோம்.

சுபமஸ்து

சோதிடபரிபாலன மடம்,
அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில்.

**வெ. இரகுநாத ஐயர்**
வாக்கிய பஞ்சாங்க கணிதர்



# யாழ்ப்பாணம் – அரசாங்க அதிபர் உயர்திரு. அருமைநாயகம் அவர்கள்


Government Agent / District Secretary
Telephone
Fax
E-mail: gajaffna@dinet.lk
General Telephone

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.


My No. Message from GA | Your No. | Date 30.04.2014

## அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி

சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணம் நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் பகுதியிலே புதுக்கோவில் என அழைக்கப்படும் திருவருள்மிகு தேவசேனாதிபதி கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் 108 வருட கால பழமை வாய்ந்த ஆலயமாகும்.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் ஔவையாரின் அறிவுரைக்கேற்ப சோதிட வல்லுனரான கொக்குவில் இரண்டாம் இரகுநாத ஐயர் தலைமையில் அநாவர்த்தனப் பிரதிஷ்டை நடைபெற்று நித்திய பூசைகள் ஆரம்பிக்கப்பட்ட ஆலயமாகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் வைகாசி மாதம் 05 ஆந்திகதி அன்று நடைபெறுவதும் இந்நிகழ்வை மேலும் சிறப்புற மேற்காட்டுவதாகும். கும்பாபிஷேக மலரை வெளியீடு செய்வதும் அவ்வூர் மக்களுக்குக் கிடைத்த வெளிப்பாடு என்றால் மிகையாகாது.

இத்தகைய முக்கிய சிறப்புகளை வெளிக் கொணர இருக்கும் மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ்ப்பாண மாவட்டம்

SUNTHARAM ARUMAINAYAHAM
GOVERNMENT AGENT /
DISTRICT SECRETARY
JAFFNA DISTRICT



## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்
## பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்
### அவர்கள் அன்புடன் வழங்கிய வாழ்த்துரை

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்நகரின் கொக்குவில் எனும் நற்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தன்னை நாடிவருவோாக்கு வேண்டுவனவற்றை எல்லாம் வரி வழுங்குகின்ற புதுக்கோவில் என வழங்கும் கொக்குவில் கிருபாகர சுப்பிரமணிய பெருமானுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேக பெருஞ்சாந்திவிழா நடைபெறுகின்ற செய்தியறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அதனோடு ஓர் கும்பாபிஷேக சிறப்புமலர் வெளியிடுகின்ற மேலும் அதற்கு சிறப்பைத் தருகின்றது.

முருக வழிபாடு தொன்மையானது சங்ககாலத்திலே குறிஞ்சி நிலத்தெய்வமாக முருகன் போற்றப்படுகின்றான். மக்கள் வாழ்விலே காலலும் வீரமும் கலையும் மிளிரவே முருக வழிபாடு உலகெங்கும் பரவியது எனலாம். அழகுத் தெய்வமாக, கருணைத் தெய்வமாக முருகன் போற்றப்படுகின்றான். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆகம விதிகளுக்கு ஏற்ப ஆலயங்களில் கும்பாபிஷேம் நிகழ்த்தப்படுகின்றது. சாந்நித்தியம் கொண்டருளும் இறைவனை மீண்டும் கும்பத்தில் ஆகருஷித்து, ஆவாகித்து யாகசாலை அமைத்து அங்கு கும்பத்தை ஸ்தாபித்து யாககரியைகளை முறைப்படி நிகழ்த்திய பின் கருவறையில் உள்ள மூல விக்கிரகத்தில் இறைவனை முன்புபோல சாந்நித்தியம் கொண்டரும்படி சேர்ப்பித்தலே இக் கும்பாபிஷேகமாகும். இக்கும்பாபிஷேகத்தையும் அது சார்ந்த கிரியைகளையும் காணுகின்ற பாக்கியம் பெற்றவர்கள் இறைவனின் பெருங்கருணைக்கு பாத்திரமாகவதாகக் கூறப்படுகிறது.

அந்தவகையில் சிவசுப்பிரமணியப் பெருமானுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் நடைபெறுகின்ற இக்கும்பாபிஷேக பெருவழா சிறப்பாக நடைபெறவும் அதனையொட்டி புதுக்கோவிலானுக்கு வெளியிடப்படும் இக்கும்பாபிஷேக சிறப்பு மலர் எங்கும் தெய்வீக எழில் மணம் வீசவும் இறையருளை வேண்டிப் பிரார்த்திப்பதுடன் எனது வாழ்த்துக்களையும் தொவித்து கொள்கிறேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**
துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்



மாண்புமிகு பிரதமரின் கீழ்
இலங்கை மத விவகார அலுவல்களுக்கு பொறுப்பான அமைச்சின் கீழ் இயங்கும்
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர்**

## திருமதி. சாந்தி திருநாவுக்கரசன் அவர்களின் வாழ்த்துச்செய்தி

இயற்கை எழில் நிறைந்து விளங்கும் ஈழத்திருநாட்டில் பல ஆலயங்கள் வரலாற்றுப் புகழ்பெற்றுத் திகழ்கின்றன. அவற்றுள், யாழ் மாவட்டம் கொக்குவில் பிரதேசத்தில் பெருமையுடன் விளங்குவது கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம் ஆகும். இவ் ஆலயத்தில் நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்திற்கும் அதனையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலயம் என்பது இறைவன் திருவடியில் மனமாகிய ஆன்மா லயித்து இருக்கும் இடமாகும். ஆலயங்கள் தாம் அமையப்பெற்றுள்ள பிரதேசத்தின் சமூகக் கூடங்களாக விளங்குகின்றன. இவை மக்கள் மத்தியில் நமது பாரம்பரிய பண்பாட்டு மரபுகளைப் பேணி வளர்க்கும் நிலையங்களாகவும் விளங்குவதன் மூலம் எமது இளம் சந்ததியினரிடம் உயர்ந்த விழுமியங்களை வளர்த்தெடுக்கத் துணை செய்கின்றன. இத்தகைய உயர்ந்த பணிகளின் களமாக விளங்கும் ஆலயங்கள் மக்கள் வாழும் பிரதேசங்களில் அமைக்கப்படுவதுடன் அவை முறையாகப் பராமரிக்கப்பட்டு குடமுழுக்குகள் போன்றவை நடாத்தப்பெறுவதும் மிக அவசியமானதாகும்.

அந்தவகையில், யாழ்ப்பாணம் கொக்குவில், கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தவுள்ள ஆச்சாரிய பெருமக்களுக்கும், கும்பாபிஷேகத்திற்குரிய ஒழுங்குகளை சிறப்பாக மேற்கொண்ட ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது மனமார்ந்த பராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உலகில் யாவரும் இன்பமாக வாழ எல்லாம்வல்ல முருகப்பெருமான் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

148 1/1, காலி வீதி,
கொழும்பு - 4
23-04-2014

**சாந்தி நாவுக்கரசன்**
- பணிப்பாளர் -



# வாழ்த்துச்செய்தி

## நல்லூர் பிரதேச செயலர்

## பா. செந்தில்நந்தனன்

ஆலயங்களில் இடம்பெறும் கிரியைகளில் தலையாய கிரியையாக அமைவது மஹா கும்பாபிஷேகமாகும். அத்தகைய சிறப்புமிக்க கிரியையானது நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இடம்பெறுகின்றமை நம்கெல்லாம் மகிழ்ச்சிளைத் தரும் விடயமாகும்.

கிராம மக்களின் நலன் கருதியும், ஆன்மாக்களின் நன்மைக்காகவும் ஆலயங்கள் தோறும் இடம்பெறும் கிரியைகளில் பிரதானமான கும்பாபிஷேகக் கிரியையைக் காண்பதும், இறைபிரார்த்தனை செய்வதும் பக்தர்களுக்குக் கிடைத்துள்ள பெரும் பாக்கியமாகும். கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயத்தின் கும்பாபிஷேகம் காணக்கிடைத்திருப்பது பெரும் வரப்பிரசாதமாகும். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் கும்பாபிஷேகம் இவ்வாலயத்தின் புனரமைப்பின் பின்னர் இடம்பெறுகின்றது.

இதனடிப்படையில் மேற்படி ஆலயப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு சேவையாற்றி வருகின்ற ஆலயப் பரிபாலன சபையினர் விதந்து பாராட்டப்பட வேண்டியவர்களாவர். அவர்களின் பணியால் இன்று இவ்வாலயம் அழகுற நிர்மாணிக்கப்பட்டு காட்சியளிக்கின்றது. அந்த வகையிலே பரிபாலன சபையினர்க்கும், கும்பாபிஷேக பணிகளில் பங்காற்றிய இப்பிரதேச மக்களுக்கும் சிவசுப்பிரமணிய சுவாமியின் அருட்கடாட்சம் கிடைக்க எம்பெருமானை உளமார வேண்டி, இப்பெருஞ்சாந்தி விழா குறையின்றி கந்தப் பெருமானின் சித்தத்தினால் நடைபெற வேண்டுமென இறைஞ்சி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்சடைகின்றேன்.

**பா. செந்தில்நந்தனன்**
- நல்லூர் பிரதேச செயலர் -



# ஆலய நிர்வாகசபைத் தலைவர்

## திரு. ச .பாலாபரணம் அவர்கள்

## வழங்கிய வாழ்த்துரை

"விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனின் தம்பியே
கொக்குவிலூர் மேவுங் குருநாதா – மிக்கபுகழ்க்
கந்தா கிருபா கரசிவ சுப்ரமண்யா
தந்தாளுன் செங்கமகலத் தாள்"

- அருட்கவி -

பெருங்கருணை வள்ளலாகிய கிருபாகர சிவசுப்பிர மணியப் பெருமான் எங்கள் குலதெய்வம். எம்பெருமான் கோயில் திருப்பணிகளில் என்னை இணைத்துக்கொள்வும், பணிகள் செய்யவும் ஆளாக்கிய அந்த முருகனின் திருவருளை பணிந்து வணங்குகிறேன்.

நாம் இவ்வாலய திருப்பணித் தொண்டுகளுக்காக எம்மை ஓரளவு முழுமையாக 1910ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் இணைத்துக்கொண்டது தொடக்கம் இன்று வரை இவ்வாலயத்தின் அபிவிருத்திக்கும், புனருத்தாரணத்திற்கும் பொது மக்களின் அனுசரனையுடன் எம்மாலான பணிகளைச் செய்துள்ளோம். 2011இல் அடியேன் தலைவராக வந்த காலத்தில் உள்ளூர் அன்பர்களோடு வெளியூரில் இருக்கும் கோவிலுடன் தொடர்புடைய தொண்டர்களும் அதிகளவில் உதவினார்கள். இக்காலத்தில் தான் புதுக்கோயிலுக்கான புதிய பிள்ளையார் தேர் ஒன்றை உருவாக்குவதற்கு நாம் திரு. நா. சண்முகம்பிள்ளை அவர்களைக் கேட்ட போது அவர் அதையேற்று அப்பணியை நிறைவேற்றித் தந்துள்ளார். இவ்வாண்டு புதிய தேர் எம்பெருமான் அருளால் ஓட இருக்கிறது. திரு. சுப்பிரமணியம் முருகதாஸ் குடும்பத்தினர் ஏலவே செய்த உதவியோடு மகாலட்சுமிக்கு ஒரு பஞ்சலோக விக்கிரகத்தையும் வார்த்து தந்திருக்கின்றார்கள் இவர்களை விட இன்னும் சில அடியார்கள் புனருத்தாரண பணி வாகனங்கள் என்பவையாக முருகனுக்கு காணிக்கை செலுத்தியுள்ளார்கள். இந்த வகையிலே எமது காலப் பணிகள் முதற் கொண்டு புதுக்கோயில் முருகன் சிறப்புக்களையும் எடுத்துக்கூறும் புதுக்கோயிலான் பெருங்கருணை என்ற மஹா கும்பாபிஷேக மலரும் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது. இம்மலர் பதிப்பாசிரியருக்கும் ஆசியுரைகள் விஷய தானம் தந்துதவிய அறிஞர்களுக்கும் நிதி உதவி நல்கியவர்களுக்கும் எமது வாழ்த்துக்க உரித்தாகட்டும்.

எம்பெருமான் திருக்குடமுழுக்கு பணிகள் யாவும் முட்டின்றி நிறைவுற புதுக்கோயிலான் திருத்தாள்களை பணிந்து அமைகிறேன்.

நன்றி

இங்ஙனம்
**ச. பாலாபரணம்**
(தலைவர் - நிர்வாகசபை)



# முந்நாள் திருப்பணிச் சபையின் மூத்த உறுப்பினர் அவர்களின் ஆசீர்வாதம் திரு. வல்லிபுரம் குலசிங்கம் (கொழும்பு) அவர்கள்

பெருஞ்சாந்தி செய்வதும், அதைச் செய்விப்பதும், கோடிபுண்ணியம் என ஆகமம் கூறுகிறது. வரலாற்றுப் பழமைமிக்க ஆடியாமடம், புதுக்கோயில் தோன்றிய காலம் முதல் இன்றுவரை புதுமைமிக்க ஆலயமாக, புதுப்புதுத் தோற்றத்துடன் மிளிர்ந்து வந்திருக்கிறது. பெரிய முருகேசர் சின்ன முருகேசர் போன்றவர்களின் பணிகள், சபாரத்தின முதலியார், ஆ. முத்துதம்பி, ஞாசுந்தரம், சிற்றம்பலம், க. பொன்னம்பலம், சோமசுந்தரம் போன்றவர்களும் இன்னும் பலரும் செய்த பணிகளை மீட்டுப் பார்கிறேன். புதுக் கோயிலானுக்கு கொடியேற்றத்தோடு திருவிழாக்கள் தொடங்கப்பபெற்ற நாள்களையும், நான் திருப்பணிச்சபையிலிருந்த காலத்தில் அமைக்கப்பட்ட புதிய சித்திரத் தேரையும் மனக்கண்ணில் காண என் உள்ளமெல்லாம் சிலிர்க்கிறது.

கிருபாகர சுப்பிரமணிய ஆலயம் புனருத்தாரணப் பணியை அவாவி நின்ற அண்மைக் காலத்தில் இப்போதைய நிர்வாக சபையினரும், எமது மக்களும் இப்படியொரு பணியை ஆரம்பித்து இன்று பெருஞ்சாந்தியோடு நிறைவு செய்வது பெரிய ஆறுதலையும், மகிழ்ச்சியையும் தருகிறது. புதிய கோவிலின் வளர்ச்சியை ஆவணமாக்கித் தரும் நிர்வாக சபையினர் பணியோடு கோவில் வரலாற்று மகிமையையும் கூறும் "கும்பாபிஷேக மலரையும்" அதை ஆக்கித் தரும் மருகர் புலவர் சின்னத்தம்பி ஸ்ரீ தயாளனின் நற் தொண்டினையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

மோதர,
கொழும்பு - 13

இவ்வண்ணம்
தொண்டுக்குரிய

வல்லிபுரம் குலசிக்கம்

# முகவுரை

## எங்கள் கும்பாபிஷேக பெருஞ்சாந்தித் திருப்பணி

தமிழ் சைவப் பெருமக்களின் வழிபடுதலங்களாக உள்ள திருக்கோயில்களும், அமைப்புகளும் அங்குள்ள திருவுருவங்களும் தத்துவார்த்தம் நிறைந்ததும் அற்புதமான உட் பொருளை கொண்டது மாகவே அமைந்திருக்கின்றன. அங்கு நடைபெறும் உற்சவாதி திருவிழாக்களும், பூஜாதி, கிரியைகளும் நிறைந்த உண்மைகளை-தத்துவங்களை விளக்குவனவே. இதனால் தான் காலத்துக்கு காலம் ஆலயங்களின் கட்டுமானங்களையும் கலாமூர்த்தங்கள், இயந்திர தகடுகளையும், அஷ்டபந்தனைத்தையும், வாகனாதி ஊர்திகள் முதலானவற்றையும் புதுக்குவித்து சாந்தி கிரியைகள் நடத்தி குடமுழுக்கு செய்து திருவருட் சாந்நித்தியத்தை பெருக்குவதற்கு வழி செய்யப்படுகிறது.

**கும்பாபிஷேகம் எனப்படும் பெருஞ்சாந்தி :**

பொதுவா "சாந்தி" என்பது பிராயச்சித்தம் என்றால் மஹா கும்பாபிஷேகத்தை பெருஞ்சாந்தி எனலாம். "கபாலீச்சரத்தான் பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்...." என்ற தொடரினால் சைவசமய முதற்குரவர் திருஞானசம்பந்த சுவாமிகளும் பெருஞ்சாந்தி என்ற குடமுழுக்கு மகத்துவத்தை தம் திருமுறையிலே சொல்லிப் போகிறார்.

உயிர்கள் அதாவது ஆன்மாக்கள் மனதாலும் வாக்காலும் உடலாலும் அறிந்தும் அறியாமலும் செய்த செயல்களையும் பிராயச்சித்தம் மூலம் தீர்க்க முடியாத சில செயல்களையும் போக்குமாதலால் இந்நிகழ்வு மஹாகும்பாபிஷேகம் அல்லது பெருஞ்சாந்தி எனப்படுகிறது.

மேற்கூறிய பெருஞ் சாந்தியைச் செய்பவர், செய்விப்பவர், காண்பவர் அனைவருமே ஏதோ ஒரு வகையில் பாவச் செயல்களைச் செய்திருந்தாலும் அதனின்று நீங்கி புண்ணிய பலனைப் பெறுவார்கள் என்பது உறுதி.

புல்லினால் வருடம் கோடி புதுமண்ணால் பத்துகோடி
செல்லுமா ஞாலந்தனில் துன்ப செங்கலினால் நூறுகோடி
அல்லியன் கோதை பாகன் ஆலய மடாலயங்கள்
கல்லினால் கட்டி வைப்போர் கயிலை விட்டகலாரென்றே

என்கிறது திருவாசகம்.

**தொன்மை:**

இந்த வகையிலேதான் பக்தியுணர்வும் சைவசித்தாந்த விளக்கமும் கந்தபுராண கலாசார வழிமுறை நியமங்களும் உணர்ந்த ஆதி கொக்குவிலூர் மக்கள் 'நினைத்தது முடித்தான் வளவு' என்ற பெயரிலான (திருத்தப்பட்ட தோம்பு - 1754, நல்லூாக் குறிச்சித்தோம்பு - 1787) ஆடியாமடத்தை அண்டிய பகுதியில் சுப்பிரமணிய பெருமானுக்கு வழிபாடு தொடங்கியதும், கோயில் அமைக்க எண்ணியதும் என வரலாற்று செய்திகளால் அறிய முடிகிறது. முருகப் பெருமானுக்கு முறையான கோயில் அமைப்பும் முதல் பிரதிஷ்டையும் நிகழ்ந்த காலத்தை தெளிவாக குறிப்பிட முடியாவிட்டாலும் 1881 - 1922 வரையிலுள்ள காலப்பகுதயில் புதுக்கோயில் உருவாகிவிட்டது என்ற செய்தியை சைவசித்தாந்தமே மெய்ச் சமயம் என்று நிரூபித்த கொக்குவில் சபாரத்தின முதலியார் நூல்களிலிருந்து அறியமுடிகின்றது. முதல் கும்பாபிஷேக பிரதிஷ்டையை தொடர்ந்து காலம் காலமாக இவ்வாலயம் முரகன் அடியார்களின் ஆதரவால் பல புனராவர்த்தன பணிகளை கண்டு வந்திருக்கிறது.

சிறந்த முறையில் நித்திய நைமித்தியங்கள் நடைபெறுங் கோயில்களில் மந்திர சக்தியாலும் அடியவர்களின் வந்தனைகளாலும் கோவிலமைந்த பதியும் அவ்வூர் மக்களும் அந்த நாடும் கூட புனிதமடைகிறது. எண்ணங்கள் தூய்மை அடைகின்றன. செயல்கள் சித்தியைத் தருகின்றன.

இந்தக் வகையில் தான் புதுக்கோவிலடி மக்கள் மத்தியில் ஏற்பட்ட பக்தி எழுச்சியின் தூண்டுதலினாலேயே ஆகமம் விதித்த வகையில் 1998ல் நிகழ்நத பெருஞ்சாந்திக்குப் பின் இப்போது இருக்கின்ற நிர்வாக சபையினரும் அடியார்களும் ஜீர்னோத்தாரண பணிகளை முன்னெடுத்து நிறைவேற்றி இன்று ஒரு அற்புதமான நவகுண்ட பக்ஷ பெருஞ்சாந்திரய காண்கிறார்கள்.

நாம் எல்லோரும் சுவாமியைத்தான் வணங்கவேண்டும் என்று சொல்லுகிறோம். ஆபத்பாந்தவனாக கடவுளின் கருணையே எமக்கு எங்கும் எதிலும், எப்பொழுதும் காவல் என்று நம்பி சுவாமியை வழிபடுகிறோம். எல்லாத்தெய்வங்களையும் "சுவாமி" என்று சொன்னாலும், சிறப்பாக சுவாமி என்ற பெயர் முருகனுக்கே உரித்தானது. தேவசேனாதிபதி சூர = சுவாமி - கஜமுகானுஜன் என்று ஒரு வேதசுலோகம் விதந்து கூறுகிறது. சுவாமி நாதனாக முருகனும், பரப்பிம்மமும் ஒருவரே அவன் சுப்பிரமணியன்

"மேலான தெய்வத்தை மேதினியில் கண்டு தொழ
நாலாயிரம் கண் படைத்தீரே அந்த நான் முகனே"

என்பார் அருணகிரிப் பெருமான்

கொக்குவிற் புண்ணிய பதியிலே இந்த வகையில் சுப்பிரமணிய சுவாமி என்ற திருநாமத்தோடு, கருணா சமுத்திரமென்றும் கருத்திலமைந்த (கிருபை - கருணை, ஆகரம் - கடல்) கிருபாகரனென்றும் அடைமொழிச் சிறப்போடு குலதெய்வம் சுப்பிரமணிய சுவாமி கோயில் கொண்டருளி விளங்கும் புதிய கோவிலில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிக்கு வள்ளி தேவசேனா சமேத முருகனுக்கும் பரிவார மூர்த்தங்களுக்கும் இன்று ஜய வருஷம் சித்திரைத் திங்கள் 22ம் நாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மீண்டுமொரு குடமுழுக்கு வைபவம் தரிசிக்கும் பாக்யம் நம் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது. இந்த அருள் நிகழ்வின் பிரதிபலிப்பாக உங்கள் கைகளில் புதுக்கோயிலான்.... மகுடத்திலான புதிய மலர் கிருபாகரப் பெருமானின் கருணைப் பிரவாகத்தை செப்பும் உங்கள் கைகளில் திகழ்கிறது. என்னையே முன்னையது முடிக்கும் எம் முருகனின் மான்பு?

சுபம்

**- பதிப்பாசிரியர் -**

# நுழைவாயில்

புதுக்கோயிலான் (பெருங்கருமை) என்ற பெயர் தாங்கி புது மலராக உங்கள் கைகளில் தவழும் விசேட வெளியீடு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மஹாகும்பாபிஷேகம் தொடர்பாக பூத்த மூன்றாவது மலராகும்.

கொக்குவில் வாழ் மக்களின் குலதெய்வமாகப் பெருமான் உறையும் புத்தகோவில் சிவசுப்பிரமணியப் பெருமான் இன்று ஜீர்னோத்தாரண நவகுண்ட பக்ஷ புனராவர்தடதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் காண்கிறார். புதுப்பொலிவோடு நிர்மாணிக்கப்பட்ட வசந்த மண்டபம், அதற்குரிய தெற்குப் பெருவாயில், மேற்கு வாயில் கோபுரத்தளத்திலே அமைக்கப்பட்ட பிரமாண்டமான முருகப் பெருமான் சிற்பம், பரிவாரத் தெய்வமான மஹா லட்சுமிக்கு தாமிர விக்கிர ஸ்தாபனம் சற்று மண்டப அகலிப்பு, கல்யாண மண்டப அங்குரார்ப்பணம், வயிரவப் பெருமானின் பரிவாரக் கோயில் புனரமைப்பு, பிள்ளையாருக்கான புதிய சித்திரதேர் நிர்மாணம் என்று பல புதிய பரிமானங்களோடு கோயில் காட்சி தருகிறது. கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் எம்பெருமான் வள்ளி தேவசேனா சமேதராய், பரிவார மூர்த்திகளோடு பாலாலயத்திலிருந்து புதுக்கோவிலுக்குள் மீண்டும் பிரவேசித்து அருள்பாலிக்க ஆரம்பிக்கும் இப்புண்ணிய நாளின் நினைவு குறித்து ஆலய நிர்வாகத்தினர் இதனை வெளியிடுவதில் மகிழ்ச்சி கொண்டுள்ளார்கள்.

சிவபுண்ணியங்களில் மேலானது திருக்கோயிலைக் கட்டுவதும் நித்திய நைமித்தியங்களை முட்டின்றி நடத்தலுமாகும். இந்த வகையிலே கொக்குவிற் பகுதியில் முருகேசனடியார்களினால் "புதுக்கோயிலான் பெருங்கருணை"களிலே ஆராதிக்கப்பட்டதும் ஆண்டளவில் நிர்மாணம் பெற்றதுமான புதுக்கோயில், தற்போதைய நிர்வாக சபையினரது முயற்சியாலும், பொதுமக்களின் நிதியாதரவுடனும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. கிருபாகர சுப்பிரமணியப் பெருமானின் பக்தர்களாக, தன்னலங்கருதாப் பண்பினராக, கல்வியும், செல்வமும் பூத்த மீளா அடிமைகளான எம் உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள் என்றும் எம்பெருமான் திருக்கோயிலை எழிலார் வடிவுடன் காண விழைந்ததன் விளைவு இன்று அறுவடையாவதைக் காண ஊரே திரண்டு நிற்கிறது.

பெருங்கருணாசமுத்திரம் என்ற பொருளமைந்த "கிருபாகரன்" என்ற சிறப்புத் திருநாமம் எம்பெருமானுக்கு எத்துணை பொருத்தம்? முருகு என்றால் அழகுதானே! இளமை கெடாத இன்பம் ஞான அவன் திரு உரு "நினைத்தது முடித்தான்" என்ற குறிச்சியில் குடிகொண்ட குமரமுருகன் என்றும் புதிது புதிதாக விளங்குகிறான் என்றும் அவனுறையும் "புதுக்கோயில்தான்" "முன்னியது முடித்தலில் முருகொத்தீயே.." என்று முருகனின் நினைத்ததை முடிப்பிக்கும் பெருந்திறனை மேற்கோளாகக் சுட்டும் புறநானூற்று சங்கப் பாடல் எவ்வளவு பொருத்தமானது!

கீர்த்தி மிகப் பொலிவும் கொக்குவில் வளர் எம்பெருமான் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி பேரில் நாமறிந்தவரையில் இதுவரையில் நூல்களும் பல நூறு அருட்பாடல்களும்

வெளிவந்திருப்பது குறிப்பிடப்பாலது. விபரம் அனுபந்தத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதை அன்பர்கள் கண்டு கொள்வார்களாக.

புதுக்கோயிலன் பதிச்சிறப்பும், தொன்மையும் அவன் கருணைத் திறனும் அகச் சான்றுகளாக அவன் கீர்த்தி பேசும் இப்பனுவில்களில் அனேகம் உள்ளன. இந்த வகையிலே கிருபாகர முருகன் "முன்னியது முடித்தலில் முருகொத்தீயே" என்று புறநானூறு குறிப்பிடும் வகையிலே அரசன் இலவந்தியை பள்ளித்துஞ்சிய நன்மாறனை நக்கீரர் பாடலின் பிரகாரம் புதுக்கோயில் முருகனும் நினைத்ததை முடித்து தரும் வள்ளளாய் விளங்குபவன். நினைந்துருகும் தன் அடியவர்களுக்கு அருளை அள்ளிக் கொடுக்கும் கற்பகதரு அவன். மேலான முருகனாக தோன்றியுள்ளான் என்பது சைவ சித்தாந்த தத்துவம். இதனை "பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பு அது ஓர் மேனியாய்க் கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட, ஒரு திருமுருகனாய் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய"என்ற பாடல் இதனை உணர்த்துவதாகும். கருணைச் சாகரமாக வீற்றிருந்த புதுக்கோயில் கிருபாகரனென்ற திருநாமம் பெற்று அருள்பாலிக்கிறான்.

கந்தபுராண கலாசாரத்திலூறிய கொக்குவிலம்பதியில் பழைமைவாய்ந்த பதியில் விளங்கும் இக் கோவிலில் நடைபெறும் ஜீர்ணோத்ர புணருத்தாரன மகா கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்படும் தெய்வீகமலர் "புதுக்கோயிலான் பெருங்கருணை" என்ற பெயரிலான இப் புதிய வெளியீடு பெருஞ்சாந்தி நினைவாக இக்கோயிலில் மலரும் மூன்றாவது மலர் இது.

பழமை வாய்ந்த எம் குலதெய்வம் சிவ சுப்பிரமணிய சுவாமி கோவிலின் தோற்றமும். வளர்ச்சியும் பெருமையும், அருமையும் துலங்கும் அற்புதமான விடயதானங்களுடன் இரண்டு கும்பாபிஷேக மலர்களையும், 1981 இரதோற்சவ மலரையும், எம் மூத்தபதிப்பாசிரியர் திரு.செ.இரத்தினப்பிரகாசம் அவர்களது முயற்சியால் வெளிவந்த நூல்களையும் கண்ட உங்களுக்கு இம்மலரில் 2002ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரையிலான கோவில் வளர்ச்சி பற்றிய தகவல்களையும், மேலதிகத் திருப்பணிகளையும் பற்றிய விடயத்தில், தம் குலதெய்வத்துக்காக நம் ஊாரவர்களும், வெளிநாடுகளில் வசித்துவரும் அடியார்களும் ஆற்றிவரும் தொண்டுகள் வார்த்தைகளினால் வடித்தெழுதிவிட முடியாதவையாகும். இந்நிலையில் கையில் கிடைத்த விபரங்களையும் சிறப்பாக குறிப்பிடப்பட வேண்டியவையுமான விடயங்கள் மாத்திரம் அவசரமவசரமாகப் அம்மலரின் கண் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை மிக விரயமாக குறிப்பிட விரும்புகிறோம். இம் முயற்சியில் சிலபோது ஏதும் தவறுகளிருப்பின் அதை பொருட்படுத்தமாட்டீர்கள் என நம்புகிறோம். விரிவு அஞ்சி, ஏலவே பதிவாகிவிட்ட சில விபரங்களும், கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் பெருமையையும், வளர்ச்சியையும் கூறும் பாடல்கள் தவிர்ந்த ஏனைய பாடல்களை மீண்டும் பிரசுரித்தல் கூறியது கூறுவதாக அமையும் என்ற கருத்தில் தவிர்க்கப்படவேண்டிய நிலையில் இவ்வெளியீடு உருப்பெறுகிறது.

மேலே நாம் குறிப்பிட்டவாறு ஏறத்தாழ கடந்த ஐந்து வருடங்கள் போல் எம் ஆலயத்தின்மட்டத்தில் நிகழ்ந்த பணிகளையும், அபிவிருத்திகளையும் பதிவு செய்து வைத்து ஆற்றுப்படுத்தவேண்டிய தேவையும் சபைக்கு இருந்தது. நிர்வாகசபையின் மேற்கொள்ளக்கூடிய இப்பணிகளின் தேவை பலராலும் சுட்டிக்கபட்டப் பட்டும் உள்ளது. குறிப்பிடவேண்டிய விடயமாக இந்த வகையில் குறுகிய காலத்தில் எடுக்கப்பட்ட முடிவை, செயலுருவம் கொடுக்க திருவருள் சுரந்த எம்பெருமானின் கருணையே கருணை!

எக்காரியத்தையும் எளிதில் முடித்துத்தரக்கூடிய வல்லமைஅருளும் எம்குல தெய்வம் புதுக்கோவிற் பெருமான் உண்மையில் என்றும் இளையவனாய், அழகோனாய், மாறாத செல்வனாய் என்றும் உள்ளவன். மிகக் குறுகிய கால அவகாசத்தில் புதுக்கோயிலன் பெருமையை கூறும் மூன்றாவது பெருங்சாந்தி மலர் வெளியீடு இன்று எங்கள் கரங்களில் தவழ்கிறது. இதற்குதவியாய் இருந்த சான்றோர்கள், ஊரார்கள், மலருக்கான ஆசியுரைகள், வாழ்த்துரைகள், அற்புதமான கட்டுரைகள், கவிதைகளை உரிய காலத்தில் தந்துதவிய பேரசிரியர்கள், அறிஞர்களுக்கு நிர்வாக சபையோடும், கும்பாபிஷேக திருப்பணிச் சபையினரோடும் மலராசிரியராகிய அடியேனும் எனது மனமார்ந்த நன்றியறிதல்களையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

வாருங்கள் இனி புதுக்கோவிலான் மலர் வனத்துள் நுழைவோம். முருகனின் பழமை பெருமை அற்புதமான தகவல்களோடு நல்லறிஞர்கள் பேராசிரியர்கள் கட்டுரைகளில் இருந்து வீசும் நறுமணம் நிசிசயம் உங்களை கவர்ந்து ஈர்க்கும்.

நினைத்தது முடிச்சான் குறிச்சியில் கோயில் கொண்டுள்ள நம் சுப்பிரமணிய சுவாமியின் திருவருள் இம்மலர் வெளியீடு தொடர்பிலும் சாத்தியமாவதும் எம்பெருமான் திருவிளையாடலே.

அனைவர்க்கும் நன்றி

உண்மைஅன்பும் கோவில் விசுவாவமும் கொண்ட உங்கள் அன்பின்

.................................

"தயாளன்"

கலாபூஷணம் சைவப்புலவர் எம்.எஸ்.ஶ்ரீதயாளன் M.pil, PGDG
(கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைசபை உறுப்பினர்)

கொக்குவில்
24 5/1, எபநேசர் இடம்,
தெகிவளை.

# கொக்குவில்பதி கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இன்று பெருஞ்சாந்தி வைபவம் கோலாகலமாக நடைபெறுகிறது.


யாழ் குடாநாட்டில், நல்லூர்க் கோயிற் பற்றிலுள்ள கொக்குவில் கிராமத்தில் கந்தபுராண படிப்பு முரக வழிபாட்டுடன் கூடிய மடாலய அமைப்பிலான சிறிய ஆலயம் 1830 ஆண்டளவில் "புதுக்கோயில்" என்ற பெயரோடு இரண்டாம் இரகுநாதையர் (கொக்குவில் வாக்கிய பஞ்சாங்க கணிதர்) தலைமையில் அநாவர்த்தனர் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சைவ சித்தாந்த புலமை மிகுந்த பெரியார் 1881 ச. சபாரத்தினமுதலியார் வாழ்ந்து தொண்டாற்றிய இக்கோவிலின் அமைவிடம் ஆடியபாதம் வீதி சந்திக்கு அண்மையிலுள்ள "நினைத்தது முடித்தான்" (தோம்பு-1754) வளவை அண்டி இருக்கிறது. "முன்னியது முடிக்கும் முருகு" ஆகிய சுப்பிரமணிய சுவாமியின் இவ்வாலயம் இன்றுவரை பல ஜீர்ணோத்தர குட முழுக்குகளை கண்ட அருள் நிறைந்தது. பஞ்சகர்த்தா சபை தலைவராக இருந்த பெரிய முருகேசர் காலத்திலும், பின்னரும், கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி தன் சக்திகளோடும், விநாயகர், வேணுகோபாலர், மகாலட்சுமி, வைரவர், நடராஜர், தட்சணாமூர்த்தி, சண்முகர், நவக்கிரகம் போன்ற பரிபார தெய்வற்களோடு விஸ்தரிக்கப்பட்ட நிலையில் மேலை தெற்குவாசல் அமைப்புடன் அறுகோணச் சித்திரத்தேர், இவ்வருடம் பிள்ளையார் தேர், தண்டிகை முதலான வளங்களையும் கொண்டு சிறந்த அமைப்புடன் கொக்குவில் மத்தியில் திகழ்கிறது. 1927ம் ஆண்டு முதல் மஹோற்சவம் நடந்த பழமை மிக்க புதுக்கோயில் 1966, 1988ம் ஆண்டுகளில் நிறைவாக மஹா கும்பாபிஷேகங்களைக் கண்டு இன்று 5/5/2014 திங்கட்கிழமை, நவகுண்டபக்ஷ் பெருஞ்சாந்தி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுகிறது. மேற்படி கோவில் பிரதான சிவாச்சாரியார் சிவஸ்ரீ. தா.சிவதாசக்குருக்கள் தலைமையில் இணுவில் காயத்திரிபீடம் சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள் சர்வோதகராய் விளங்க சிறப்புற நடைபெறும் இக்கும்பாபிஷேகத்தை ஒட்டி "புதுக்கோயிலான.." என்ற பெயரில் மஹாகும்பாபிஷேக சிறப்புகளைக் குறிக்கும் சிறப்புமரரொன்று வெளியிடப்படவுள்ளது.

2009ம் ஆண்டிலிருந்து செயற்படும் திரு.ச.பாலாபரணம் (தலைவர்), திரு.செ.செல்வரஞ்சன், திரு.அ.அருள்நேசன் ஆகியோரின் தலைமையிலான நிர்வாகசபையினர் காலத்தில் வசந்த மண்டபம் புதுப்பித்தல், கருவறை புனரமைப்பு, வசந்த மண்டப பெருவாயில் திறப்பு, மேலைக் கோபுரத்தளத்தில் முருகனின் சிற்ப ஸ்தாபனம், மகாலட்சுமி பிரதிஷ்டை, தண்டிகை வாகனம், பிள்ளையார் புதிய தேர் அமைப்பு, வைரவர் பரிபாரக் கோயில் திருத்தம், உட்பிரகாரம், வெளிவீதிகள் விசாலிப்பு, இந்து ஈளைஞர் பேரவை மீளமைப்புப் போன்ற பல அபிவிருத்திகள் இடம்பெற்றுள்ளன.

கருணாசமுத்திரம் என்ற பொருள் கொண்ட கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுாமி கோவில் நவகுண்ட பக்ஷ் மஹா கும்பாபிஷேகம் 5/5/2014 திங்கட்கிழமை அருற் நிறைந்த கிரியைகளுடன் நடைபெற்று அடியார்கள் கருதிய பயனையும், தெய்வீகத்தையும் நல்க புதுக்கோவிற் பெருமானின் பெருங்கருணையைப் பிரார்த்திப்போம்!

**"சைவப்புலவர், கலாபூஷணம்" சி.ஸ்ரீதயாளன்**

# சமய குரவர்கள் நால்வர் திருமுறைகளில் குமரன் முருகன் போற்றப்படும் இடங்கள்




குமரன் முருகன் அடியார்களும் ஏக தெய்வ வழிபாட்டில் பிடிப்புடையவர்களே. திருவிசைப்பாவின் பதிகமென்றும், திருமுருகாற்றுப்படையும் முருகனை முதன்மைப்படுத்துவன. திருமுறையிலடங்காத அருணகிரியாரின் பாடல்கள் முருகனையே சிறப்பித்துப் பாடப்பெற்றவை ஆகும். எடுத்துக்காட்டாக அருணகிரியாரின் பாடலொன்றை நோக்குவோம். இப்பாடலில் கிருபாகரன் என்ற பதம் புதுக்கோயில் சிவசுப்பிரமணியனுக்கு இடப்பட்ட திருநாமத்தின் மகத்துவத்தை சுட்டுவது போல அமைந்திருப்பது கண்டு வியக்கத்தக்கது.

> "பேற்றைத் தவம் சற்றும் இல்லாத என்னைப் பிரபஞ்சம் என்னும்
> சேற்றைக் கழிய வழி விட்டவா! சஞ்சடாடவி மேல்
> ஆற்றைப், பணியை, இதழியைத், தும்பையை, அம்புலியின்
> கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் கிருபாகரனே"
>
> - அருணகிரிநாத சுவாமிகள் -

மேற்சொன்ன முருகன் அருள் பாடல்களைத் தவிர சிவபெருமானின் பிரபாவத்தை மாத்திரம் பாடிய திருமுறை ஆசிரியர்கள் நால்வர் குமரன் முருகனை எவ்வாறு காண்பிக்கிறார்கள் என்பதை மேலே தரிசிப்போம்.

பக்திச் சுவைநனி சொட்டச் சொட்ட சமய குரவர்கள் நால்வரும், ஏனைய அருளாசிரியர்களும் பாடிய சைவத் திருமுறைகளில் ஏகதெய்வமாகிய சிவபெருமானையன்றி

வேறெந்தத் தெய்வங்களையும் முன்னிறுத்திப் பாடப்பட்ட பாடல்களே இல்லை எனலாம். வேதகால வழிபாட்டு முறைகளை ஆராய்ந்த ஆன்றோர்களும், புலவர்களும் மிகப்பழைய காலத்தில் பலதெய்வ வழிபாடு நிலவியதன்றும் பின்னர் ஒரு தெய்வத்தை மேலானதாகக் கொள்ளும் முறையாக அதுமாறி, காலப்போக்கில் ஒரு பரம்பொருளை வழிபடும் முறையே உயர்ந்த வழியாகக் காட்டிச் சென்றுமுள்ளனர்.

**"ஏகம் சத்விப்ரா வகுதா வதந்தா"**

என்பது வே தசுலோகம்.

வேதக்கிரியைகளின் துதிபாடும் சுலோகங்கள் கூட சுப்ரம் மண்யோம் சுப்ரம் மண்யோம் சுப்ரம் மண்யோம் என்றே நிறைவுறுவன. மேலான பரப்பிரம்மம் என்ற கருத்தில் அமைந்த சுப்ரம் மண்யம் என்ற நாமத்தையுடை முருகப் பெருமானும் சிவனும் ஒருவரே "பிரம்மாய் நின்றசோதிப் பிளம்பதோர் மேனியாக கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒருதிரு முருகனாள் வந்திங்கு உதித்தனன் உலகம் உய்ய" என்று குறிப்பிடும் கந்தபுராண ஆசிரியர் முருகனே பிரம்மம் பிரம்மனே முருகன் என்ற சைவசித்தாந்த கருத்தை புலப்படுத்துவதோடு முருகன் உதிக்கின்ற சூரியனைப் போல சனாதனமான தெய்வமே குமரன் முருகன் என்றும் சுட்டுகிறார்.

தமிழ் திருமுறைகள் யாவும் வேதசாரமே என்பார் காசி வாசி குப்பிளான் செந்திநாத ஐயர்.

* சைவசமயத்தில் பிறந்த நாம் தமிழ் வேதங்களா பன்னிரு திருமுறைகளை கோயில்களிலும், வீடுகளிலும் ஓதிவருகிறோம்.

மெய்யன்பர்களே திருமுறைகளில் சமயாசாரியார்களினால் அருளப்பட்டதும், மைந்தன் குமரக்கடவுள் பற்றிய மகிமைகளைப் புலப்படுத்துவனவாகவு முள்ள 41 தோத்திரங்களை அவற்றின் சிறப்பும், பயனும் கருதி மேலே தருகின்றோம். இவற்றை முருகன் அடியார்கள் மீண்டும் மீண்டும் ஓதுவதன் மூலம் கிருபாகரனான குமரப் பெருமானின் அருளைப் பெற்றுய்யலாம் என்பது உறுதி. இனி அப்பாடல்களை ஓதுவதற்கு தயாராகுவோமா அன்பர்களே?

**- மலராசிரியர் -**
**05.05.2014**

## திரு முது குன்றம்

பண் : நட்டபாடை　　　　　　　　　　முதலாம் திருமுறை

அருகரொடு புத்தரவ ரறியா அரன் மலையான்
மருகன் வரும் இடபக்கொ யுடையானிடம் மலரார்
கருகுகுழன் மடவார்கடி குறிஞ்சி யது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே

## திரு இராமன் தீச்சரம்

பண் : வியாழக்குறிஞ்சி　　　　　　　　　　முதலாம் திருமுறை

தழைமயி லேறவன் றாதையோதான்
மழைபொழி சடையவன் மன்னு காதில்
குழையது விலங்கிய கோல மார்பின்
இழையவன் இராமன் தீச்சரமே

## திருமீயச்சூர்

பண் : காந்தாரம்　　　　　　　　　　இரண்டாம் திருமுறை

காயச் செல்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயக் கடர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூர் அன் றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே

## திரு அரசிற் கரைப்புத்தூர்

பண் : காந்தாரம்　　　　　　　　　　இரண்டாம் திருமுறை

வள்ளி முலைதோய் குமரன் றாதை வான் றோயும்
வெள்ளி மலைபோல் விடையொன் றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீர் அரிசிற் றென்பாற் சிறைவண்டும்
புள்ளு மலிபூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே

## திருச்சக்கரமாற்று

பண் : காந்தாரம்　　　　　　　　　　இரண்டாம் திருமுறை

விளங்கிய சீர்ப் பிரமனூர் வேணுபுரம் புகலிவெங்குருமேற் சோலை
வளங்கவரும் தோணிபுரம் பூந்தராய் சிரபுரம்வண் புறவமண்மேல்
களங்கமிலூர் சண்பை கமழ் காழிவயங் கொச்சைகழு மலமென்றின்ன
விளங்குமரன் றன்னைப் பெற் றிமையவர் தம் பகையெறிவித் திறைவனூரே

திருகோமூத்திரி

பண் : காந்தாரம் இரண்டாம் திருமுறை

காய்ந்துவரு காலனையன் றுதைத்தவனூர் கழுமலமாத் தோணிரஞ்சீர்
ஏய்ந்தவெங' குருப'புகலியிந்திரனூர் இருங்கமலத் தயனூர் இன்பம்
வாய்ந்தபுற வந்திகழுஞ் சிரபுரம்பூந் தராய்கொச்சை காழிசண்பை
சேத்தனை முன் பயந்துலகில் தேவர்கடம் பகைகெடுத்தோன் திகழுமூரே

திருநறையூர்ச்சித்தீச்சரம்

பண் : பியந்தைக்காந்தாரம் இரண்டாம் திருமுறை

இடமயி லன்னசாயன் மடமங்கை தன்கை யெதிர்நாணி பூண வரையில்
கடும்அயி லம்புகோத்து வெயில் செற'றுகந்து வமரர்க்களித்த தலைவன்
மடமயில் ஊர்திதாதை யெனநின்று தொண்டர் மனநின்ற மைந்தன் மருவும்
நடமயி லாலநீடு குயில் கூவு சோலை நறையூரி னம்ப னவனே

திருப்புகலூர்

பண் : செவ்வழி இரண்டாம் திருமுறை

நேமியானும் முகநான் குடையந்நெறி யண்ணலும்
ஆமிதென்று தகைந்தேத்தப் போயாரழ லாயினான்
சாமி நாதை சரணாகு மென்று தலை சாய்மினோ
பூமி யெல்லாம் புகழ்செல்வம் மல்கும் புகலூரையே

திருத்தென்குடித்திட்டை

பண் : கொல்லி மூன்றாம் திருமுறை

ஊறினா ரோசையுள் லொன்றின ஈரொன்றிமால்
கூறினா ரமர்தகுங் குமரவேள் டாதையூர்
ஆறினார் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே

திருப்பிரமபுரம் - திரு வியமகம்

பண் : பழம்பஞ்சுரம் மூன்றாம் திருமுறை

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல் விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது முன்பணியே யமரர்கள் செய்வதும் உப்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரமபுரத்தை உகந்தனையே

## விடம் தீர்த்த பதிகம் (பொது)

பண் : இந்தளம் நான்காம் திருமுறை

ஆறுகொ லாமவ ரங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே

## திருக்கச்சி மேற்றளி (பிள்ளை பாளையம்)

பண் : திருநேரிசை நான்காம் திருமுறை

மாலன மாயன் நன்னை மகிழ்ந்தனர் விருத்த ராகும்
பாலனார் பசுபதியார் பல்வெள்ளை நீறு பூசிக்
காலனைக் காலாற் செற்றார் காஞ்சிமா நகர்தன் னுள்ளார்
ஏல நற் கடம்பன் தாதை இலங்குமேற் றளிய னாரே

பண் : திருநேரிசை நான்காம் திருமுறை

செவ்வியைப் பாகங் கொண்டார் சேந்தனை மகனாகக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத காஞ்சி நகர்தன் னுள்ளார்
எல்லியை விளங்க நின்றார் இலங்குமேற் றளிய னாரே

## திருப்பெருவேளூர்

பண் : திருநேரிசை நான்காம் திருமுறை

குறவிதோண் மணந்த செல்வக் குமரவேள் டாதை என்றும்
நறவிள நறுமென் கூத்த னங்கையோர் பாகத் தாளைப்
பிறவியை மாற்றும் வானைப் பெருவேளூர் பேணி னானை
உறவினால் வல்ல னாகி உணருமா றுணர்த்து வேனே

## பொது

பண் : தனித்திருநெரிசை நான்காம் திருமுறை

உடம்பெனும் மனையை கத்துள் உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனுந் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே

### திருப்பேரெயில்

பண் : திருக்குறுந்தொகை ஐந்தாம் திருமுறை

முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனிற் றானோர் தலைமகன்
என்னை யாழும் இறையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளரே

### திருக்கடம்பூர்

பண் : திருக்குறுந்தொகை ஐந்தாம் திருமுறை

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தெங்க டம்பனைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
எங்க டன்பணி செய்து கிடப்பதே

### திருக்கோழம்பம்

பண் : திருக்குறுந்தொகை ஐந்தாம் திருமுறை

சமர சூரபன் மாவைத் தடிந்தவேற்
குமரன் றாதைநற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாளுடை யார்களே

### திருப்புவனூர்

பண் : திருக்குறுந்தொகை ஐந்தாம் திருமுறை

நார ணன்னொடு நான்முக னிந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
பூர ணன்திருப் பூவனூர் மேவிய
கார ணன்னெனை யாளுடைக் காளையே

### திருக்காட்டுப்பள்ளி

பண் : திருக்குறுந்தொகை ஐந்தாம் திருமுறை

அடும்புங் கொன்றையும் வன்னியு மத்தமும்
துடும்பல் செய்சடைத் தூமணிச் சோதியான்
கடம்பன் றாதை கருதுங்காட் டுப்பள்ளி
உடம்பி னார்க்கோர் உறுதுணை யாகுமே

## திரு அதிகை வீரட்டானம்

பண் : திருவடித் திருத்தாண்டகம் ஆறாம் திருமுறை

அரவணைத்யான் சிந்தித் தரற்றும்மடி யருமறையான் சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி சார்ந்தார்கட் கெல்லாஞ் கரணாமடி
பரவுவர் பாவம் மறைக்கும் மடி பதினென் கணங்களும் பாடும்மடி
திரைவிரவு தென் கெடில நாடன்னடி திருவீரட்டானத் தெஞ் செல்வன்னடி

## திருப்புறம்பயம்

பண் : திருத்தாண்டகம் ஆறாம் திருமுறை

கோவாய விந்திரனுள்ளிட்டா ராகக் குமரனும் விக்கின விநாய கன்னும்
பூவாய பீடத்துமேல யன்னும் பூமி யளந்தானும் போற்றி சைப்பப்
பாவாய வின்னிசைகள் பாடி யாடிப் பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண்டார்க்கப் புறம்பயநம் மூரென்று போயினாரே

## திருப்பூவனம்

பண் : திருத்தாண்டகம் ஆறாம் திருமுறை

படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும் பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த வடையோடு கொடியுந் தோன்றும் நான் மறைவியின் ஒலிதோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுங் தோன்று மூரல் வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே

## திருமறைக்காடு

பண் : திருத்தாண்டகம் ஆறாம் திருமுறை

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய் காலணையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானனி தோலான் கண்டாய் புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடி மேற் சூடி கண்டாய் வெண்ணீற்றான் கண்டாய் நஞ்செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய் மறைக்காட்டுறையும் மணாளன் தானே

## திருவாரூர்

பண் : திருத்தாண்டகம் — ஆறாம் திருமுறை

ஐயன் காண் குமரன்காண் ஆதி யாண்காண டன்மழு வாள்டா னொன்று பியன்மே
லேந்து
கையன் காண் கடற்பூதப் படையி னான்காண் கண்ணெரியால் ஐங்கணையோனு
டல்காய்ந் தான்காண்
வெய்யன்காண் டண்புனல் சூழ் செஞ்சடை யான்காண் வெண்ணீற்றான்
காண்விசயற்கருள்செய் தான்காண்
செய்யன்காண் காரியன்காண் வெளியோன் றான் காண் டிருவாரூ ரான்கா னென்
சிந்தை யானே

## திருநெய்த்தானம்

பண் : திருத்தாண்டகம் — ஆறாம் திருமுறை

மறைபடுமிவ் வுடல் வாழ்வை மெய்யென் றெண்ணி வினையிலே கிடந்தழுத்தி
வியவே னெஞ்சே
குறைவுடையார் மனத்துளான் குமரன் தாதை கூத்தாடுங் குணமுடையான்
கொலைவேற் கையான்
அறை கழலுந் திருவடிமேற் சிலம்பு மார்ப்ப வவனிதலம் பெயரவரு நட்டம் நின்ற
நிறைவுடையா னிடமாம் நெய்த்தான மென்று நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே

## திருவீழிமிழலை

பண் : திருத்தாண்டகம் — ஆறாம் திருமுறை

சமரம்மிகு சலந்தரன்போர் வேண்டி னானைச் சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்
நமனையொரு கால் குறைந்த நாதர் போலும் நாரணனை இடப்பாகத் தடைத்தார் போலுங்
குமரனையும் மகனாக வுடையார் போலுங் குளிர்வீழி மிழலையமர் குழகர் போலும்
அமரர்களின் பின் அமுதுணருஞ் சுண்டார் போலும் அடியேனை ஆளுடைய வடிகடாமே

## திருக்கச்சியேகம்பம்

பண் : திருத்தாண்டகம் — ஆறாம் திருமுறை

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண் மூவிலை வேல் மூர்த்திகாண் முருக
வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தினாற்குத் தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு
வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச் சிவனவன் காண்செங்கண்மால் விடையொன்
றேதும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன் காண் அவனென் எண்ணத்தானே

## திருக்குடந்தைக் கீழ்க் கோட்டம்

பண் : திருத்தாண்டகம் ஆறாம் திருமுறை

காரிலங்கு திருவுசத் தவற்கும் மற்றைக் கமலத்திற் காரணற்குங் காட்சி யொண்ணாச்
சீரிலங்கு தழற்பிழாம்பிற் சிவந்தார் போலும் சிலைவளை வித் தவுணர்புரஞ்
சிதைத்தார் போலும்
பாரிலங்கு புனலனல்கால் பரமா காசம் பரிதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலும்
கூரிலங்கு வேற்குமரன் றாதை போ்லுங் குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே

## திருநாரையூர்

பண் : திருத்தாண்டகம் ஆறாம் திருமுறை

தக்கனது வேள்விகெடச் சாடி னானைத் தலைகலனாப் பலியேற்ற தலைவன் றன்னை
கொக்கரைசச் சரிவீணைப் பாணி யானைக் கோணாகம் பூணாகக் கொண்டான்
றன்னை
அக்கினொடும் என்பணிந்த அழகன் றன்னை அறுமுகனோ டானைமுகற் கப்பன்
றன்னை
அக்கினொடும் என்பணிந்த அழகன் றன்னை அறுமுகனோ டானை முகற் றானை
நாரையூர்
நக்கனைவக் கரையானை நள்ளாற் றானை நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே

## திரு இன்னம்பர்

பண் : திருத்தாண்டகம் ஆறாம் திருமுறை

கோழிக் கொயோன்தன் றாதைபோலுங் கொம்பனாள் பாகங் குளிர்ந்தார் போலும்
ஊழி முதல்வருந் தாமே போலுமுள் குவா ருள்ளத்தி னுள்ளார் போலும்
ஆழித்தேர் வித்தகரும் தாமே போலும் அடைந்தவர்கட் கன்பராய் நின்றார் போலும்
எழு பிறவிக்குந் தாமே போலும் இன்னம்பர் தான்தோன்றி யீச னாரே

## திரு ஓணகாந்தன் தளி

பண் : இந்தளம் ஏழாம் திருமுறை

திங்கடங்கு சடைக்கண் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணப தியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவி யார்கோற் றட்டி யாளர்
உங்க ளுக்காட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் தளியு ளீரை

## திருத்தினைநகர்

பண் : தக்கேசி

ஏழாம் திருமுறை

வேந்த ராய் உல காண்டறம் புரிந்து
வீற்றி ருந்த வுடலது தன்னைத்
தேய்ந்தி றந்துவெந் துயர் உழந் திடும் இப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்த ளங்கையில் ஆட்டுகந் தானைப்
பரம னைக்கடற் சூர்தடிந் திட்ட
சேர்தர் தாதையைத் திருத்தினை நகருட்
சிவக்கொ முந்தினைச் சென்றடைமனனே

## திருவாரூர்

பண் : காந்தாரம்

ஏழாம் திருமுறை

நமர்பிறர் என்ப தறியேன் நான் கண்டதே கண்டு வாழ்வேன்
தமரம் பெரிதும் உகப்பன் றக்கவா றொன்றும் இலாதேன்
குமரன் றிருமால் பிரமன் கூடிய தேவர் வணங்கும்
அமரனிருப்பதும் ஆரூரவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்

## திருநள்ளாறு

பண் : தக்கேசி

ஏழாம் திருமுறை

மறவனை அன்று பன்றிப்பின் சென்ற
மாய னைநால்வர்க் காலின் கீழ் உரைத்த
அறவனையம் ரார்க்கரி யானை
அமரர் சேனைக்கு நாயக னாக
குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற
கோனை நான் செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவி ரியும் நள் ளாறனை அமுதை
நாயினேன்மறந் தென்நினைக் கேனே

## திருக்கலய நல்லூர்

பண் : தக்கராகம் ஏழாம் திருமுறை

பொரும்பலம துடையசுரன் றாராகனைப் பொருது
பொன்று வித்த பொருளினை முன்படைத்துகந்த புனிதன்
கரும்புவில்லின் மலர்வாளிக் காமன் உடல் வேவக்
கனல் விழித்த கண்ணுதலோன் கருதும் ஊர் வினவில்
இரும்புனல்வெண் திரைபெருகி ஏலம் இல வங்க
மிருகரையும் பொருதலைக்கும் அரிசிலின் தென்கரைமேல்
கரும்புனைவெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில் சூழ் கலயநல்லூர் காணே

## திருத்துருத்தியும், திருவேள்ளிக்குடியும்

பண் : நட்டராகம் ஏழாம் திருமுறை

குறவனார் தம்மகள் டம்மக னார்மண வாட்டிகொல்லை
மறவனா ராயங்கோர் பன்றிப்பின் போவது மாயங்கண்டீர்
இறைவனார் ஆதியார் சோதிட ராயங்கோர் சோர்வுபடா
அறவனார் ஆவ தறிந்தோமே நாமிவர்க் காட்படோமே

## திருவதிகைத் திருவீரட்டானம்

பண் : கொல்லிக் கௌவானம் ஏழாம் திருமுறை

பொன்னானை மயிலூர்தி முருகவேள் டாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி
அன்னானை அமாரர்கடம் பெருமானைக் கருமானின்
உரியானை அதிகமா நகருள்வாழ் பவனை
என்னானை யெறி கெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோது மிகழ்வன்போ லியானே

## திருநாகைக்காரோணம்

பண் : கொல்லிக்கௌவாணம் ஏழாம் திருமுறை

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மமே ஆட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலி உண் பெருவயிறன் கணபதி ஒன் றறியா
னெம் பெருமான் இதுதகவோ இயம்பி யருள் செய்யீர்
திண்ணெனஎன் உடல்விருத்தி தாரீரே ஆகிற்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடனாகைக் காரோணம் மேவியிருந்தீரே

## திருக்கழுமலம்

பண் : தக்கேசி ஏழாம் திருமுறை

திருத்தினை நகர் உறை சேந்தன் அப்ப னென்
செய்வினை அறுத்திடுஞ் செம்பொனை அம்பொன்
ஒருத்தனை அல்லதிங் காரையும் உணரே
னுணர்வு பெற் றேன் உய்யுங் காரணந் தன்னால்
விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி
விழித்தெங்குங் காணமாட்டாது விட்டிருந்தேன்
தருத்தனை நிருத்தஞ்செய் காலனை வேலைக்
கழுமல வளநகர்க் கண்டு கொண்டு டேனே

## திருவாரூர்

பண் : தக்கேசி ஏழாம் திருமுறை

ஒட்டி ஆட்கொண்டு போய் ஒளித் திட்ட
உச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லையிருடன்னைப்
பாவிப் பார்மனத் தூறுமத் தேனைக்
கட்டி யைக்கரும் பின்றெளி தன்னைக்
காத லாற்கடற் சூர்தடிந் திட்ட
செட்டி யப்பனைப் பட்டனைச் செல்வ
ஆரூ ரானை மறக்கலு மாமே

## திருக்கோலக்கா

பண் : தக்கேசி ஏழாம் திருமுறை

ஆத்தம் என்றெனை ஆளுகந் தானை
யமரர் நாதனைக் குமரனைப் பயந்த
வார்த்த யங்கிய முலைமட மானை
வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்த னைச்சிவ னைச்செழுந் தேனைத்
தில்லை அம்பலத் துண்நிறைந் தாடும்
கூத்த னைக்குரு மாமணி தன்னைக்
கோலக் காவினிற் கண்டு கொண்டேனே

## திருமுது குன்றம்

(நம்பி என்ற திருப்பதிகம்)

பண் : தக்கேசி ஏழாம் திருமுறை

திங்கள் நம்பிமுடி மேல் அடி யார் பார்
சிறந்த நம்பிபிறந் தஉயிர்க் கெல்லாம்
அங்கண் நம்பியருண் மால் விசும் பாளும்
அமரர் நம்பிகும ரன்முதல் றேவர்
தங்கண ம்பிதேவத் துக்கொரு நம்பி
தாதை என் றுன் சரண்பணிந்தேத்தும்
எங்கள் நம்பி என் றுன்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும் எங்கள் நம்பி கண்டாயே

## திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம் அறுசீர் ஆசிரிய விருத்தம்
எட்டாம் திருமுறை

சுந்தர நீறணித் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற் சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன் நல் வெலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள் கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே

உ
சிவமயம்

கொக்குவில்

# அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) வரலாறு

யாழ்ப்பாணம் நல்லூர்ப்பற்றில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் சிவவழிபாட்டினை வலியுறுத்தியும், கந்தபுராண கலாசாரத்தை முன்னிறுத்தியும், கந்தபுராணப் படனம் செய்யும் பக்திமுறையை ஆரம்பித்தும் வைத்த காலத்திலேயே நடுக் கொக்குவிலில் சுப்பிரமணியப் பெருமானை முன்னெடுத்து வழிபாடியற்றும் முருக வணக்க மரபு நன்றே நிலவி வந்ததற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. ஆடியபாதன் மடம் அல்லது ஆடியாமடம் என அழைக்கப்பட்டதும் இன்றைய கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் அமைந்திருக்கக்கூடியதுமான பகுதியில், கட்டிட அமைப்பிலான கோவில் நிறுவும் பணி இக்கோவிலுக்கு கிழக்கு திசையில் அமைத்து, காட்டுப்புலம் முருகமூர்த்தி கோவில் ஸ்தாபனத்துக்கு பிறகு நிகழ்ந்ததென்பது வரலாறாயினும், கொக்குவில் கிராமத்தில் அன்றே புதுக்கோயில் என அழைக்கப்பட்ட இவ் வாலய வரலாற்றினை ஒன்றரை நூற்றாண்டு காலத்தையது என மதிப்பிடல் பிழையானது. கொக்குவில் சோதிட பரிபாலன மட ஸ்தாபனம், வாக்கிய பஞ்சாங்க கணிதர்கள், குறிப்பாக இரகுநாதையர், குகதாசர் எனத் தன்பெயரோடு இவ்வாலய தோற்றத்துக்கு வழிசெய்த, சைவசித்தாந்த அறிஞர் கொக்குவில் சபாரத்தின முதலியார் பெரிய முருகேசர் சின்ன முருகேசர் பெயர்களாலழைக்கப்பட்டவர்கள் சண்முகம், வேலாயுதர் உள்ளிட்ட முதற் பஞ்சாயத்தார் காலமும், அவர்களின் பணிகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. மேலாக அக்காலத்தின் முன்பும், பின்பும் எழுந்த பிரபந்தங்களில் வரும் அகச்சான்றுகள், கர்ண பரம்பரைத் தகவல்கள் கோவில் தேரில் எழுந்த பாடல்கள் மூலமும் கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் சிறப்புகளை அறியமுடிகிறது.

ஆகியோருக்கு பிறகு ஓரளவு நிறுவன மயப்படுத்தப்பட்டு பரிபாலன சபையாகி திருப்பணிச் சபைகளாக இருந்து முகாமை செய்யப்பட்டு புதுக்கோவிலடி வழிபடுவோர் களால் உருவாக்கப்பட்ட நிர்வாக சபை என்ற நிலையில் இன்று தன் பணிகளை ஆற்றி வருகிறது.

1962 முதல் இவ்வாலயத்துக்கென அவ்வப்போது உருவாக்கப்பட்ட நிர்வாக சபையினர் தத்தம் காலத்தில் குறிப்பிடத்தக்க பல பணிகளைச் செய்து பரார்த்த வழிபாட்டுக்கு உகந்த ஆலயமாக என்றும், புதுக்கோவிலாக விளங்கப் பாடு பட்டதை மறக்க முடியாது. இவற்றுள்ளும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி களை இவ்வாலயம் கோவில் மண்டபங்கள் அகலிப்பு கோவிலுக்கான சொத்துக்களைப் போல், அசையும் பொருள்களைப் பாதுகாத்தல், சித்திரத் தேர் நிர்மாணம், பரிவார தெய்வங்களுக்கான கோயிலமைப்பு, அவற்றுக்கான பிரதிஷ்டை போன்ற கைங்கரியங்களைச் சிறப்பானவையாகச் சுட்டலாம்.

மெருகேற்றப்பட்ட அற்புதமான விமான அமைப்புகளை, இக்கோயில் ஒரு இராஜகோபுரம் இல்லையே என்பதைத் தவிர புதுக்கோயில் எவ்வாற்றானும் இன்றும் புதுக் கோயிலாகவே திகழ்கிறது எனலாம். கோவில் கிழக்கு வாயில் கோபுரத்தை அவாவி நிற்கும் கிருபாகர சுப்பிரமணிய சுவாமி கோவிலிற்கு அமைக்கப்பட்டிருக்கும் மேற்கு வாயிலில் எனின் இராஜ கோபுரமொன்று அமைக்கப்படுவதற்கு வசதியான உறுதியான தளமொன்றை

காலத்தில் இருந்த திருப்பணிச்சபையினர் உருவாக்கி வைத்திருப்பது நல்ல சகுனமே எனின் இனிமேல் இவ்வாலயம் தேவஸ்தானம் என்ற நிலையில் பூரணம் பெற எம் பெருமானுக்கு இராஜகோபுரம் ஒன்று தேவை என்பதை புதுக்ரோவஜலான' மூலம் அடியார்களுக்கு தெரிவிப்பதும் இவ்வுரையின் நோக்கமும் ஆகிறது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதும் தூலலிங்கமாகிய கோபுரம் இறைவனின் பதாங்களை நினைவுறுத்துதலென்பதும் இங்கே சிந்திக்க லானது.

**"பேற்றைத் தவம் சற்றும் இல்லாத என்னைப் பிரபஞ்சம் என்னும்**
**சேற்றைக் கழிய வழி விட்டவா! செஞ்சடாடவி மேல்**
**ஆற்றைப், பணியை, இதழியைத், தும்பையை, அம்புலியின்**
**கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் கிருபாகரனே"**

- அருணகிரிநாத சுவாமிகள் -

இவ்வாலயம் இற்றைக்கு நூற்று எழுபத்தைந்து வருடங்களுக்கு முன் அதாவது 1830ல் இச் சுற்றாடலில் வாழ்ந்த சைவ நன்மக்களால் தாபிக்கப்பட்டது. இவர்கள் தாங்கள் சுதந்திரமாக இறைவழிபாடு செய்து மனநலம் பெறுவதற்கும் உயிர் மேல்நிலை அடைவதற்கும் "குறைவிலா நிறைவாய் கோதிலா அமுதாய்" விளங்கும் இறைவன் திருக்கோயில் இன்றியமையாதெனக் கருதி இவ் முருகன் ஆலயத்தை அமைத்தார்கள். முருகப்பெருமான் இங்கே :கிருபாகரன்" என்ற திருப்பெயருடன் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேதராக வீற்றிருந்து அருளாட்சி புரிகிறார்.

**தோற்றம்:**

ஆரம்ப காலத்தில் திருவாளர்கள் சண்முகம் முருகேசு, வேலாயுதர் முருகேசு, சட்டநாதர் சின்னப்பு, கதிரித்தம்பு, அம்பலவா ணர், தாமோதரம்பிள்ளை ஆகியோரைக் கொண்ட ஒரு "பஞ்சகர்த்தா சபை" ஏற்படுத்தப் பட்டு அச்சபையினால் கோவில் அமைக்கும் பொறுப்பு சண்முகம் முருகேசுவிடம் ஒப்படைக்கப்பட்டது. சபையினர் கோயிலை நிறுவுவதற்காக "நினைக் முடிச்சான்" வளவு எனக் கொக்குவில் தோம்பில் பதியப்பட்டிரு க்கும் (பதிவு 1786) காணியின் ஒரு பகுதியை வாங்கித் தர்மசாதனம் செய்துள்ளனர். அத்துடன் சண்முகம் முருகேசுவும் தனது நிலத்தின் ஒரு பகுதியை வழங்கியுள்ளார். இரு நிலப்பகுதிகளும் இன்று கோயில் நிலங்களாக இருக்கின்றன.

**நிர்மாணம்:**

சண்முகம் முருகேசுவின் அயராத முயற்சியினால் திருக்கோவிலின் பிரதான் அங்கங்களான கருவறை, விமானம், அர்த்த மண்டபம், முன் மண்டபம், விநாயகர் சந்நிதி,

திருமஞ்சனக்கிணறு, மடைப்பள்ளி, களஞ்சிய அறை ஆகிய கட்டிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டன. திருக்கோவிலின் முக்கிய பகுதிகள், உருவானபின் விநாயகப் பெருமான் சிலையும், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியப் பெருமான் சிலையும் பிரதிஷ்டை செய்யப் பெற்று கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. அந்நாளில் கொக்குவிலில் வாழ்ந்த பிரபல பஞ்சாங்க கர்த்தாவாகிய இரகுநாதையர் மஹா கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தார்.

**திருப்பணிகள்:**

ஊர்மக்களின் உபயங்களாகத் தம்பமண்டபம், வசந்த மண்டபம், சுற்றுமதில், வாகனசாலை, வைரவர் சந்நிதி, கொடித்தம்பம், யாகசாலை, தேர், பெரிய கண்டாமணி இன்னோரன்ன பல்வேறு திருப்பணிகள் காலம் தோறும் நிறைவேற்றப்பட்டு திருக்கோவில் விரிவாக்கம் பெற்றது. 31.03.1966இல் நடந்தேறிய கும்பாபிஷேகத்தின் போது அமைக்கப்பட்ட வேணுகோபாலர் சந்நிதி, நவக்கிரக சந்நிதி, பழனியாண்டவர் கோயில், மடைப்பள்ளிக் கிணறு, உள்வீதிக் கொட்டகை போன்ற திருப்பணிகளும் ஊர்மக்கள் சிலரின் தனித்தனி உபயங்களாக நிறைவேற்றப்பட்டுள்ளன. சண்டேஸ்வரர் சந்நிதி, பழனியாண்டவர் கோயில் மண்டபம் ஆகிய இரு திருப்பணிகளும் 1986ஆம் ஆண்டு ஆகம விதிகளுக்கமையக் கட்டப்பட்டுள்ளன. 1986ஆம் ஆண்டு நடைபெற்ற திருக்கோவில் குடமுழுக்கு விழாவை சிவாச்சாரியார் பிரதிஷ்டா சிரோமணி, வேதாகமகிரியாசூடாமணி சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமை ஏற்று நடாத்தி வைத்தார்.

**திருக்கோவில் புதுப்பித்தல்:**

திருக்கோவில் விமானங்கள், மண்டபங்கள், கட்டடங்கள் ஆகியவை பழுதடைந்த நிலையில் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் நோக்கில் 1994ஆம் ஆண்டு மூலமூர்த்தியும், பரிவாரமூர்த்திகளும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டன. திருத்த வேலைகள் ஆரம்பித்து நடந்து கொண்டிருந்த வேளையில் சில எதிர்பாராத சம்பவங்களினாலும், போர்ச்சூழலினாலும் வேலைகள் தடைப்பட்டன. சில நாட்களின் பின்னர் புதிய பரிபாலன சபையின் விடாமுயற்சியாலும், முருகன் அடியார்களின் ஒத்துழைப்பாலும் பின்வரும் திருப்பணிகள் நடந்தேறின.

1. விமானங்கள் புதுப்பித்தல்.

2. பிரதான மூன்று மண்டபங்கள் மூடுசாந்து போட்டு (Cement Concrete roof) நிர்மாணித்தல்.

3. முத்துக்குமாரசுவாமி, மகாலட்சுமிஅம்பாள், தில்லைநடராஜப் பெருமான், தட்சணா மூர்த்தி, பாலமுருகன் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு புதிய சந்நிதிகள் அமைத்து ஸ்தாபிக்கப்பட்டன.

4. நவக்கிரகங்களின் சந்நிதி, தேரடிவைரவர் சந்நிதி இடமாற்றம்.

5. வசந்தமண்டபம், யாகசாலை, களஞ்சிய அறை யாவும் அழகாகப் புதுப்பிக்கப்பட்டு சீமன்ற் கொங்கிறீற்றினால் கூரையிடப் பட்டமை.

ஆகியவை நன்முறையில் நிறைவேற்றப்பட்டன. இதனை தொடர்ந்து புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் 10.04.1998 அன்று கோவில் சிவாச்சாரியார் சிவஸ்ரீ. சிவதாசக் குருக்களினால் நடாத்தி வைக்கப்பட்டது. மலேசியா பொன்னையா (துரைராசா) குடும்ப உபயமாக சமயகுரவர் நால்வருக்கும் சந்நிதி அமைத்து 12.12.2003ல் அப்பெருமக்களுடைய தாமிர விக்கிரகங்களும் திருக்கோவிலில் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. திருமதி. பூப்பிள்ளை நடராசா குடும்பத்தின் உபயமாக கோவிலுக்கு 2001ம் ஆண்டு பங்குனி உத்தரத்தன்று வள்ளி தேவசேனா சமேத முருகமூர்த்தி (சிறியது) கும்பாபிஷேகம் செய்து அன்பளிப்புச் செய்யப்பட்டது. திருக்கோயில் ஆரம்பித்த காலத்திற்குப் பின் பலவித திருப்பணிகள் செய்யப்பட்டு ஆலயம் இன்றுள்ள அளவிற்கு பரந்து விரிந்திருக்கிறது.

**திருக்கோயில் வீதிகள்:**

திருக்கோயிலின் இருமருங்கும் கொக்குவில் இந்துக் கல்லூரியும், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையும் முறையே வடக்கும் தெற்குமாக அமைந்துள்ள இதனை

"அருங்கலைகள் பலபயிற்றும் மருங்கூட மிருபாலா
நெருங்கிநிலை கொள்ளவருள் நீடுகிரு பாகரனே"

"ஒருங்கிமன முனைமுயங்க வுன்பாத தாமரைகள்
வருங்கால மென்றுகொலோ வடிவேற்கைப் பெருமானே"

என்று பெரியார் அ. நாகலிங்கம் அவர்களின் பாடல் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

ஆலயத்தின் மேற்கு வீதியாகிய காங்கேசன்துறை வீதியின் கிழக்குப் பக்கத்தில் அமைந்த கடைகளும், வடக்கு வீதியில் உள்ள வள்ளியாச்சி கடையும் அடியார்களின் பேராதாவினால் கட்டப்பட்டவை ஆகும். அருகே உள்ள கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் கொக்குவில் வாழ் இளைஞர்களினால் 1979ம் ஆண்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1980 தை 14ம் நாள் தைப்பொங்கலன்று திறந்து வைக்கப்பட்டது. தெற்கு வீதியில் அந்நாளில் ஆடியபாதன் எனும் பெருமகன் உண்டாக்கிய கேணி இருந்த இடத்திலேயே கோயில் தீர்த்தக் கிணறு அமைந்து இப்பிரதேசத்து முந்திய வரலாற்றை நினைவூட்டி நிற்கிறது. ஆரம்பப் பாடசாலையின் வடக்கு எல்லையிலிருந்து தெற்கு வீதிவரை காங்கேசன்துறை வீதி கிழக்குப் பக்கத்தில் அமைந்த மாடிக் கட்டடமும் மற்றைய கடைகளும் கோவிலின் உடைமைக ளாகும்.

**உற்சவ மூர்த்திகள்:**

திருக்கோவிலில் உள்ள வெண்கலத்தி லான தாமிர உற்சவ மூர்த்திகளும் வெவ்வேறு அடியார்களின் உபயங்களாகும் இவ் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள பெரியதும், அழகோடு கூடியதுமான ஆறுமுகசுவாமி மூர்த்தம் சு. காசிப்பிள்ளை என்பவரால் ஊரிலும், மலேசியாவிலும்

பணம் சேர்த்து ஆலய முன்றலில் வார்த்தெடுக்கப்பட்டது. ஆறுமுகமூர்த்தம் வார்ப்பின் போது அங்கு கூடியிருந்த மக்கள் தாம் அணிந்திருந்த நகைகளையும் கழற்றி அவ்வார்ப்பில் இட்டுள்ளனர். இந்நிகழ்ச்சி பற்றி "ஒருமறையில் உருவான சுவாமி" என எமது மூத்த தலைமுறையினர் ஆறுமுகப் பெருமானைப் போற்றியுள்ளனர். எழுந்தருளிப் பிள்ளையார் காசிப்பிள்ளையின் (பிள்ளைத்தம்பி) தனி உபயமாகும்.

**திருக்கோயில் நிர்வாகம்:**

திருக்கோவிலின் நிர்வாகம், நித்திய பூசை ஒழுங்குகள் யாவற்றையும் ஆரம்பத்தில் சண்முகம் முருகேசு கவனித்து வந்தார். அவருக்குப் பின் ச. சபாரத்தின முதலியார் இப்பணியை மேற்கொண்டார். அவரைத் தொடர்ந்து வி.கே. ஞானசுந்தரம் தலைமையில் மருதப்பாவும், காசிப்பிள்ளையும் பரிபாலன வேலைகளை மேற்கொண்டனர். வி.கே. ஞானசுந்தரத்தின் மறைவிற்குப் பின் சிறிது காலம் ஆலயக் குருக்களே வழிபடுவோரின் உதவியை நேரில் பெற்று கோயில் பூசைகளை நடாத்தினார். பின்னர் ஊர் மக்கள் ஒன்று கூடி ஆண்டு தோறும் பரிபாலனசபைகளை நிறுவி கோயிலின் சகல அலுவல்களையும் நிர்வகித்து வந்தனர். பரிபாலன சபைகளில் பிரதான பங்கெடுத்துப் பணியாற்றிய திரு. விசுவலிங்கம், திரு. முத்துத்தம்பி, திரு. இராசரத்தினம், திரு. மாணிக்கவாசகர், திரு. வினாசித்தம்பி, திரு. சின்னத்தம்பி காசிப்பிள்ளை, திரு. மருதப்பு, திரு. சிற்றம்பலம், திரு. செ. நடராசா, திரு. த. சதாசிவம் பொன்னம்பலம், திரு. சோமசுந்தரம், திரு. ஜெயரெட்ணம், திரு. வ. குலசிங்கம், திரு. ந. பொன்னம்பலம், திரு. பா. சடாட்சரம், திரு. த. பாக்கியராசா, திரு. சி. அம்பிகாபதி ஆகியோரின் அர்ப்பணிப்பான தொண்டுகள் பாராட்டத்தக்கவையும் மறக்கமுடியாதவையும் ஆகும். ஆண்டுதோறும் ஏற்படுத்தப்பட்டு வந்த புதுக்கோயில் பரிபாலனசபை 1962ம் ஆண்டு கார்த்திகை 30ம் திகதி (30.11.1962) சங்க அமைப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளது. (பதிவு எண் S.149) தற்போது திருக்கோவில் பரிபாலனசபையின் அங்கத்துவ சந்தா ஆயுட் சந்தா ரூபா 1000/= ஆகவும், மாதச்சந்தா ரூபா 5/= ஆகவும் உள்ளன.

**திருக்கோவில் சிவாச்சாரியார்கள்:**

திருக்கோவிலின் முதல் சிவாச்சாரியா ராக இருந்தவர் சின்னப்பா ஐயர் ஆவார். அவரைத் தொடர்ந்து அவரது மருகர் இராசரத்தினக் குருக்களும் சிவாச்சாரியார் களாக இருந்துள்ளனர். இராசரத்தினக் குருக்களின் வழித் தோன்றல்கள் பூசைகளை நடாத்தி வரும்பொழுது இவ்வரன் முறையில் வந்த குமாரசாமிக் குருக்களின் பின் தகுந்த குருக்கள் இருக்கவில்லை. இது பெரும்குறையாக இருந்தபோதும் கோயில் பூசைகளும், உற்சவங்களும் செவ்வனே நடைபெற பரிபாலன சபையார் அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். 1982ம் ஆண்டு தொடக்கம் குமாரசாமிக் குருக்களின் குடும்பத்திலே வந்த சிவஸ்ரீ. சிவதாசக்குருக்கள் (ரவி ஐயா) பொறுப்பாக இருந்து கோயில் பூசைகளை செவ்வனே நிறைவேற்றி வருகிறார்.

**திருக்கோவில் நித்திய பூசைகள்:**

1957ம் ஆண்டு ஐப்பசி மாதத்திலிருந்து ஆலயத்தில் நித்திய பூசைகள் நான்கு காலப் பூசைகளாக நடைபெறுகின்றன. இவ் நித்திய பூசைகள் அதிகாலை 5.00 மணி (திருவனந்தல்), காலைப்பூசை 9.00 மணி, மத்தியானப்பூசை 12.00 மணி, மாலைப் பூசை 6.00 மணி (சாயரட்டை) ஆகிய நேரங்களில் நடைபெறுகின்றன.

1987ல் இந்திய அமைதிப்படையின் இராணுவ நடவடிக்கையினாலும், 1996ல் யாழ்ப்பாணக் குடிமக்கள் இடப்பெயர்வினாலும் இரு சந்தர்ப்பங்களிலும் கோவில் பூட்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் 14.10.1987 முதல் 22.12.1987 வரையும், 31.10.1995 முதல் 02.05.1996 உள்ள காலப்பகுதிகளில் நித்திய பூசைகளோ விழாக்களோ நடைபெறவில்லை. நீடித்திருந்த நாட்டின் அவலநிலையிலும் கோவில் பூசைகள் எவ்வித இடையூறுமின்றி நடைபெற பன்னிரண்டு முருகன் அடியார்கள் ஒவ்வொரு மாதப்பூசைச் செலவையும் ரூபா 2000/=மாக 2007ம் ஆண்டு வரை ஏற்றுக்கொள் செலவையும் முன்வைத்தனர். இவ் ஏற்பாடு இப்போது மாதம் ரூபா 6000/= மாக உயர்த்தி நடைமுறையில் உள்ளது.

**திருக்கோவில் உற்சவங்கள்:**

ஆலயம் நிறுவப்பட்ட காலங்களில் கந்தபுராணப் படிப்பு அறுபத்துமூவர் குருபூசைகள் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளன. இவற்றை முன்னின்று நடத்தியவர்களில் திரு. சபாரத்தின முதலியார், திரு. ஐயாத்துரை, திரு. கந்தப்பிள்ளை, திரு. மருதப்பு, திரு. செல்லத்துரை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பின்னர் வருடாவருடம் அலங்கார உற்சவமும் நல்ல முறையில் நடைபெற்று வந்துள்ளது. 1927ல் கோவில் கொடித்தம்பம், தேர், யாகசாலை ஆகியவை அமைக்கப்பட்ட பின்னர் மகோற்சவ விழாக்கள் ஆரம்பமாயின. முதன் மகோற்சவத்தை வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் குருக்களாக இருந்த வைத்தியநாதக் குருக்கள் தொடக்கி வைத்தார். பத்து நாட்கள் உற்சவத்தில் பிரதான விழாக்கள் கொடியேற்றம் திரு. மு. கந்தையா குடும்பத்தினரதும், தேர் திரு. பத்மநாதபிள்ளை குடும்பத்தினரதும், தீர்த்தம் திரு. சிற்றம்பலம் குடும்பத்தினரதும் உபயங்களாகவே அன்றுதொட்டு இன்றுவரை நடந்து வருகின்றன. 1979ல் தேர்த்திருப்பணிச் சபை ஒன்று நியமிக்கப்பட்டு புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டது. இரதோற்சவம் இப்போது தனி உபயமாகச் செல்வரெத்தினம் ஸ்ரீராம் (லண்டன்) செய்து வருகின்றார்.

நாட்டின் போர்ச் சூழல் காரணமாக 1987, 1988லும், திருக்கோவில் மூர்த்திகள் பாலஸ்தானம் செய்திருந்தபடியால் 1995, 1996, 1997 ஆகிய காலப்பகுதிகளுமாகிய மேற்கூறிய ஐந்து வருடங்களிலும் ஆலய மகோற்சவங்கள் நடைபெறவில்லை.

**திருக்கோவில் வாகனங்கள்:**

திருக்கோவிலில் உள்ள வாகனங்களில் முன்னர் பாவனையிலிருந்த பெரிய மயில், பெரிய குதிரை, ஆட்டுக்கடா, சூரன் ஆகியன காத்திரமானவையும், சிறந்த அமைப்புடையன வையுமாகும். இவற்றோடு இன்று சில புதிய வாகனங்களும், புதிய சூரனும் கோவிலின் வழிபடுவோர்களால் உபயங்களாக வழங்கப்பட்டுள்ளன. புதுக்கோவிலில் உள்ள பெரிய சூரனின் தோற்றம் பற்றிக் கோவில் வெளியீடான "பிரபந்தத்திரட்டு-நான்காம் பாகம்" எனும் நூலில் கீழ்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

"புதுக்கோவிலில் இருக்கும் பழைய சூரன் வேறொரு கோவிலிலும் இல்லாத முறையில் உருவமைப்பில் மிகவும் பெரியதாகவும் அழகுடையதாகவும் விளங்கியது. இது கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் மா. வேலுப்பிள்ளை உபயமாக வட்டுக்கோட்டை ஆசாரியாரால் நிர்மாணிக்கப் பட்டதென்றும், அங்கிருந்து எட்டு (8) ஊர்மக்களால் தோளில் காவிக் கொக்குவிலுக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள் என்றும் எமது மூத்த தலைமுறையினர் கூறுவர்" முன்னை நாட்களில் இவ்வாலயத்தில் ஐப்பசி மாதத்தில் நடக்கும் மானம்பூ உற்சவத்திற்கு கிருபாகரப் பெருமான் தேவியார் இருவருடனும் பெரிய குதிரை வாகனத்தில் எழுந்தருளி காங்கேசன்துறை வீதியால் தலையாழி ஞானவைரவர் கோவிலுக்கு வாழைவெட்ட அம்பு போடப்போயத் திரும்புவது வழக்கம். அந்நேரத்தில் கிருபாகரப் பெருமானின் அருள்பொழியும் திருக்கோலத்தையும் பெருமான் ஆரோகணித்திருக்கும் பெரிய குதிரை வாகனத்தின் அழகையும், கெம்பீரத்தையும், தோற்றப் பொலிவையும் கண்டு வியக்காதார் இல்லை.

**திருக்கோவிலின் புதிய சித்திரத்தேர்:**

திருக்கோவிலின் முன்னைய கட்டுத் தேர் பழுதடைந்த நிலையில் புதியதேர் அமைக்க சித்திரத்தேர் அங்குரார்ப்பணக் கூட்டம் 30.06.1979ல் நடைபெற்றது. அன்று "தேர்த்திருப்பணிச்சபை" என ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இச்சபை இரு செயற் குழுக்களாக இயங்கியது. ஊரில் செயற்பட்ட குழுவில் முக்கிய பங்காற்றியவர்கள் திரு. S.P. வேலாயுதபிள்ளை. திரு. ஏ. குலசிங்கம் , திரு. மு. சோமசுந்தரம், திரு. சு. நாகலிங்கம். திரு. பொ. தேவராசா ஆகியோராவர். செயற்குழுவின் கொழும்புக்கிளையில் திரு. ஏ. சண்முகமும் திரு. செ. இரத்தினப்பிரகாசமும் பிரதான பங்கெடுத்துள்ளனர். தேர்த்திருப்பணிச் சபையின் அயரா உழைப்பினாலும், தாயத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் வாழ்ந்து வரும் மக்களின் பெரிய ஒத்தாசையினாலும் புதிய சித்திரத்தேரும், தேர்க்கொட்டகையும் உருவாக்கம் பெற்றன. புதுக்கோவிலின் சித்திரத் தேர் அறுகோண அமைப்புடனும், பன்னிருயாளிகளும் கொண்டு புதிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. புதிய சித்திரத்தேரும், தேர்க் கொட்டகை வேலைகளும் முடிவடைந்தபின் வெள்ளோட்ட விழா 23.05.1983ல் கோலாகலமாக நடந்தேறியது. அதனைத் தொடர்ந்து வருடாவருடம்

மஹோற்சவ ஒன்பதாம் நாள் நடைபெறும் தேர்த்திருவிழாவன்று ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஆறுமுகப்பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளி "நையாத மனத்தினையும் நைவித்து" அருள்சொரிந்து வீதியிலே உலாவரும் காட்சி இத்தலத்தின் சிறப்பாகும்.

**தேர்த்திருப்பணிமலர்:**

வெள்ளோட்ட விழாவன்று பின்நேரம் பின்நேரம் இரு முக்கிய நிகழச்சிகள் நடந்தேறின. முதலாவதாக மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிட்னர் தலைமையில் புதிய சித்திரத்தேரை நிர்மாணித்த ஸ்தபதி கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை கௌரவிக்கப்பட்டார். அடுத்து திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம் தலைமையில் தேர்த்திருபணிச்சபையால் அற்புதமான "தேர்த்திருப்பணிமலர்" ஒன்று வெளியிடப்பட்டது. மலரின் முதற்பிரதியை பிரபல வாக்கிய பஞ்சாங்க கர்த்தாவாகிய பிரம்மஸ்ரீ. இ. வெங்கடேசஐயர் பெற்றுக் கொண்டார். தேர்த்திருப்பணி மலரின் சிறப்பினை அனுபவித்து அருட்கவி சி.வினாசித்தம்பி பாடிய செய்யுள்களில் ஒன்று.

"திருத்தொண்டுச் செல்வர்கள்! தேர்த்திருப்பணி மலரைக் கற்றுக் கருத்தினிற் கொக்கூர்க் கந்தன் காட்சியைக் கண்டேன் அன்னான் தரித்திடு மயிலைக் கண்டேன் தனிக்கொடி யசையக் கண்டேன் கரத்தினில் வேலைக் கண்டேன் கஜவல்லி வள்ளி கண்டேன்" என்பதாகும்.

மேலும் காஞ்சிபுரம் க. வச்சிரவேல் முதிலயார் "கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் தேர்த்திருப்பணி மலர் போற்றி கொள்ளத்தக்கது அப்படியே போற்றிக் கொண்டுள்ளேன். இறைவன் சம்பந்தமாக மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அத்துணைப் பொருளும் அதில் தரப்பட்டுள்ளன. அதைப் பெறுவதற்கு ஒருவர் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளமையும் நினைவுகொள்ளத் தக்கது.

தேர்த்திருப்பணி மலர் கணக்கால் தேறியபணம் தேரும் கொட்டகையினதும் பராமரிப்புச் செலவுகளுக்காக "புதுக்கோயில் தேர் நிதி" என்ற நம்பிக்கை நிதிக்கணக்கில் இடப்பட்டுள்ளது. ரூபா 26,000 துடன் ஆரமப்பிக்கப்பட்ட இந்நிதி ரூபா 100,000 மாக திரு. இரத்தினப்பிரகாசம் மிகுதிப்பணம் போட்டு உயர்த்தியுள்ளார். அண்மையில் இவரது இளவல் திரு. த.செ. நடராசா இந்நிதிக்கு ரூபா 100,000 அன்பளிப்புச் செய்து, இப்போது இந்நிதி ரூபா 200,000மாக உள்ளது.

**2014ம் ஆண்டு நிர்வாகசபை உறுப்பினர்கள்**

| பதவி | பெயர் |
|---|---|
| தலைவர் | ச. பாலாபரணம் |
| உபதலைவர் | த. சகாதேவன் |
| காரியதரிசி | செ. செல்வறஞ்ஜன் |
| உபகாரியதரிசி | தி. பிரதாபன் |
| தனாதிகாரி | அ. அருள்நேசன் |
| உபதனாதிகாரி | மு. ஜெயதேவா |
| உள்ளகக் கணக்காளர் | பி. குருபரன் |

| நிர்வாக சபை உறுப்பினர்கள் |
| --- |
| திருமதி.இ.கமலாதேவி<br>ப.தர்மசீலன்<br>மு.சிவதாசன்<br>க.வசீகரன்<br>ச.சச்சிதானந்தம்<br>திருமதி.தே.புஸ்பராணி<br>ச.அம்பிகாபதி |

## கொக்குவில் கிருபாகர சிவசுப்ரமணிய கோவிலில் கடந்த 2011,2012,2013ம் ஆண்டிற்கான பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றிய பொதுச்சபை உறுப்பினர்கள்

செ.செல்வரஞ்சன், செ.ஹிக்ஷாங்கி, ச.பாலாபரணம், சு.மதனசுரேந்திரன், தே.புஸ்பராணி, இ.இராஜேஸ்வரி, அ.அருள்வதனன், அ.டினோசன், பா.நிரூபன், அ.அருள்நேசன், ப.தர்மசீலன், சீ.சிவதரன், க.வசீகரன், நா.சற்குணலிங்கம், மு.சிவதாசன், செ.வசந்தாதேவி, தே.அனுசோல்யா, நா.சண்முகரத்தினம், த.சகாதேவன், ஞ.சச்சிதானந்தபிள்ளை, இ.கமலாதேவி, சிவஸ்ரீ.மு.சிவதாசக்குருக்கள், ீ.ஏ.சூரியகுமாரன், ட.சுகுனா, ஏ.செல்வக்குமார், ஆ.ஜெயதேவா, ீ.குருபரன், லே.லலிதாதேவி, ஆசளீ.பாலசுந்தரம், ஆசள.து.சச்சிதானந்தம், ஆ.அன்னபூரணி, ஆசள.ஞ.யோகேஸ்வரி, ஞ.சாரங்கன், சு.நித்தியா, சு.இராஜகோபால், ீ.பாஸ்கரமூர்த்தி, கு.தங்கேஸ்வரன், த.பிரதாபன், இ.வசுமதி, சி.அம்பிகாபதி, ர.பிரியதர்சினி, ச.புஸ்பராணி, ே.சண்முகரத்தினம்.

கடந்த காலங்களில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு வருகை தந்து, கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுவதற்கு உதவி புரிந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நிர்வாக சபை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருக்கோயில் இலக்கியம்:**

அடியார்கள் பலர் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணயி சுவாமி கோயிலில் வீற்றிருந்து அருள்புரியும் மூலமூர்த்தியாகிய ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத கிருபாகரப் பெருமான் மீதும், மற்றும் பரிவார மூர்த்திக ளாகிய சித்தி விநாயகர், வேணுகோபாலர், தட்சணாமூர்த்தி ஆகியவர்கள் மீதம் பல பக்திப் பனுவல்கள் பாடியுள்ளார்கள். அவையாவன:

## கிருபாகரர் மீது பாடப்பெற்றவை:

கொக்குவில் கிருபாகர சுப்பிரமணியர் ஆசிரிய விருத்தம், ஊஞ்சல் எச்சரிக்கை, பராக்கு
ச. சபாரத்தினப்பிள்ளை (குகதாசர்)
கொக்குவில் சிவசுப்பிரமணியர் மும்மணிக்கோவை
ச. சபாரத்தினப்பிள்ளை (குகதாசர்)
கொக்குவில் சிவசுப்பிரமணியர் வெண்பா அந்தாதி
ச. சபாரத்தினப்பிள்ளை (குகதாசர்)
கொக்குவில் சிவசுப்பிரமணியர் நான்மணிமாலை
ச. சபாரத்தினப்பிள்ளை (குகதாசர்)
கொக்குவில் சிவசுப்பிரமணியர் சரவணபவமாலை
ச. சபாரத்தினப்பிள்ளை (குகதாசர்)
கொக்குவில் சிவசுப்பிரமணியர் தோத்திரமாலை
அருட்கவி விநாசித்தம்பி
கொக்குவில் சிவசுப்பிரமணியர் தோத்திரம்
அருட்கவி விநாசித்தம்பி
கொக்குவில் நவரத்தின மணித் தங்கரதமாலை
அருட்கவி விநாசித்தம்பி
கொக்குவில் குமர கிருபாகரர் ஊஞ்சல்
பண்டிதர் மு. சின்னத்தம்பி
கொக்குவில் சிவசுப்பிரமணியர் கலித்துறை அந்தாதி
பண்டிதர் மு. சின்னத்தம்பி
கொக்குவில் சிவசுப்பிரமணியர் தேரேறி வந்து
பண்டிதர் மு. சின்னத்தம்பி
கொக்குவில் கிருபாகரன் தேர் உலா
அ. நாகலிங்கம்
கொக்குவில் சிவசுப்பிரமணியர் அந்தாதி
அ. நாகலிங்கம்
கொக்குவில் புதுக்கோயறி கந்தன் கலம்பகமாலை
அ. நாகலிங்கம்
கொக்குவில் சிவசுப்பிரமணியர் தாண்டகப்பத்து
அ. நாகலிங்கம்
கொக்குவில் லேன் பாட்டு, சிந்தியற்பத்து, குறட்பத்து, சைவஉரன், தேவபாணி
அ. நாகலிங்கம்
கொக்குவில் புதுத்தேர் அகவல்
பண்டிதர் ச. அமிர்தாம்பிகை
கொக்குவில் ஆறுமாமுகன் அருட்பேராயிரம்
பண்டிதர் ச. சுப்பிரமணியம்
கொக்குவில் கிருபாகர் திருப்பள்ளியெழுச்சி
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் வேலோன் அருள்வேட்டல்
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் சிவசுப்பிரமணியர் பதிற்றந்தாதி
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் கிருபாகர் இரண்டை மணிமாலை
செ. வேலாயுதபிள்ளை
கொக்கூர் ஒருபா ஒருப∴து
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் சேவல் விருத்தம்
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் மயில் விருத்தம்
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் வேல் விருத்தம்
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் பதிற்றுப்பத்து அந்தாதி
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் முத்துக்குமாரசுவாமி ஊசல்
சாமிநாதஐயர்
கொக்குவில் குமரன் நவமணிமாலை
செ. வேலாயுதபிள்ளை
கொக்கூர் குமரன் அட்டகம்
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் சிவசுப்பிரமணியர் கலிவெண்பா
செ. வேலாயுதபிள்ளை
கொக்கூர் குமரன் ஆற்றுப்படை
செ. வேலாயுதபிள்ளை
கொக்கூர் ஏசல்
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் குரு அருள் வேண்டல்
அ. நாகலிங்கம்
கொக்குவில் கிருபாகரர் முத்தகப்பத்து
அ. நாகலிங்கம்
கொக்குவில் முருகன் கீர்த்தனங்கள்
ச. சண்முககுமரேசன்
கொக்குவில் கிருபாகரர் பக்திப்பாடல்கள்
என். வீரமணிஐயர்
கொக்குவில் திருமுருகன் தாண்டகம்
த. கிருஷ்ணபிள்ளை
கொக்குவில் முத்துக்குமாரசுவாமி பதிகம்
பண்டிதர். ச. சுப்பிரமணியம்
கொக்குவில் முத்துக்குமரன் புகழ்மாலை
பண்டிதர். ச. சுப்பிரமணியம்
கொக்குவில் முருகன் எழுகூற்றிருக்கை
பண்டிதர். ச. சுப்பிரமணியம்
கொக்குவில் சிவசுப்பிரமணியர் பதிற்றுப்பத்து அந்தாதி
பண்டிதர். ச. சுப்பிரமணியம்
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணயி சுவாமி கோயில் மான்மியம்
பண்டிதர். ச. சுப்பிரமணியம்
ஸ்ரீசுப்பிரமணிய புஜங்க தோத்திரம்
பண்டிதர். ச. சுப்பிரமணியம்
கொக்குவில் சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ்
வ. சிவராஜசிங்கம்
கொக்கூர் முருகன் மும்மணிமாலை
உடுப்பிட்டி கா. நீலகண்டன்
புதுக்கோயில் திருமுருகன் தேறலா கண்ணி
மு.சி. ஸ்ரீ தயாளன்

## சித்திவிநாயகர் மீது பாடப்பெற்றவை:

கொக்குவில் சித்திவிநாயகர் ஆசிரிய விருத்தம்
ச. சபாபதிப்பிள்ளை
கொக்குவில் சித்திவிநாயகர் இரட்டை மணிமாலை
அ. நாகலிங்கம்
கொக்குவில் சித்திவிநாயகர் பதிற்றந்தாதி
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் சித்திவிநாயகர் ஒருபா ஒருப∴து
செ. வேலாயுதபிள்ளை
கொக்குவில் சித்திவிநாயகர் திருவூஞ்சற்பதிகம்
செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் சித்திவிநாயகர் கலிவெண்பா

செ. வேலாயுதபிள்ளை

கொக்குவில் சித்திவிநாயகர் தோத்திரப் பஞ்சகம்

செ.வேலாயுதபிள்ளை

**வேணுகோபாலர் மீது பாடப்பெற்றவை:**

கொக்குவில் பதுக்கோயில் வேணுகோபாலன் திருவூஞ்சல்

அ. நாகலிங்கம்

கொக்குவில் வேணுகோபாலன் ஒருபா ஒருப∴து

செ. வேலாயுதபிள்ளை

**தட்சணாமூர்த்தி மீது பாடப்பெற்றவை:**

கொக்குவில் தட்சணாமூர்த்தி தோத்திர ஷட்கம்

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

**பழனியாண்டவர் மீது பாடப்பெற்றவை:**

கொக்கூர் ஸ்ரீ தண்டபாணி விருத்தம்

சாமிநாதஐயர்

**நடேசர் மீது பாடப்பெற்றவை:**

நடேசமகிமா நடராஜ மூர்த்தி துதி

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

இப்பாடல்கள் அனைத்தும் புதுக்கோயில் தொண்டர் குழுவினால் வெளியிடப்பட்ட "மகா கும்பாபிஷேகமலர்", "தேர்த்திருப்பணி மலர்", "சித்திரத் தேர் சிறப்பிதழ்", "சண்டேசமலர்", "பிரபந்ததிரட்டு - நான்கு பாகங்கள்" ஆகியவற்றில் காணலாம். இவற்றைத் தவிர "ஆறுமுகன் அருட்போராயிரம்", "திருமால் ஆயிரம் திருநாமதுதி", "நால்வர் வழிபாடு" போன்ற நூல்களும் இக்குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறு சமயச்சார்பான நூல்கள் வெளியருவருவதற்குக் காரணமாக அயராது உழைத்து வருபவரும், கிருபாகரன் பணியே மூச்சாகக் கொண்டு செயற்பட்டு வருபவரும் புதுக்கோயில் தொண்டர் குழுவில் அச்சாணியாக விளங்கி வருபவருமாகிய திரு. செ. இரத்தினபிரகாசத்திற்கு நாம் என்றென்றும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நிறைவாக சென்ற நூற்று எழுபத்தைந்து ஆண்டுகளில் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் (புதுக்கோயில்) பல பெருமக்களால் (பட்டியலைப் பார்க்க) தனித்தனியே அவ்வப்பொழுது ஒவ்வொரு பகுதியாகக் கட்டப்பெற்றாலும் இன்று கோயில் புதுப்பிக்கப்பெற்று புதுப்பொலிவுடன் பெயரிற்கேற்ப புதுக்கோயிலாகக் காட்டிசியளிக்கிறது. திருக்கோயில் சிவாச்சாரியார் சிவஸ்ரீ. க. சிவதாசக்குருக்கள் கனடா வந்த சமயம் கோயிலுக்கு ஒரு இராஜகோபுரம் அமைக்க வேண்டுமென்று தமது உள்ளடக்கிடக்கையை வெளிப்படுத்தி இருந்தார். கோயிலுக்கு தனிச் சிறப்பைக் கொடுப்பது கோபுரமாகும். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பர். திருக்கோயிலுக்கு ஒரு இராஜகோபுரம் விரைவில் அமைய ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத கிருபாகரப் பெருமான் பொன்னார் திருவடிகளை போற்றி செய்து வேண்டிக் கொள்கிறோம்.

# கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி திருப்பள்ளியெழுச்சி

செ. வேலாயுதபிள்ளை

### காப்பு

#### பிள்ளையார்

ஓங்கார மெய்ப்பொருளை யுள்ளத் திருத்தினேன்
ஈங்கொன்றும் வாரா திடர்.

#### நாமகள

பூங்காச்சூழ் கொக்கூர்ப் புதுக்கோவிற் பூரணன்மேற்
பாங்காகப் பள்ளியெடை யான்பாட நீங்காதென்
நாவி லுறைகவென நாமகளே வேண்டுகின்றேன்
தேவி யெனதுகுறை தீர்.

### நூல்

ஆதவன் கீழ்த்திசை யெழுந்தனன் வானம்
ஆற்புதக் கோலங்கொண் டொளிர்கின்ற தை
போதலர் சோலையிற் புதுமணங் கமழும்
புள்ளினம் மகிழ்வொடு நின்புகழ் பாடும்
முாதவ முனிவருந் தேவரு முன்றன்
முலர்முகங் கண்டிட வந்தன ரிங்கே
கீதவ ளந்தரு கொக்குவி லுறையும்
கிருபாகர னேபள்ளி யெழுந்தகு ளாயே. 1

கோழிகள் கூவின குருகுக ளார்த்த
குணதிசை வெளுத்தது கூம்பின குமுதம்
மேழிகைக் கொண்டவர் நின்புகழ் பாடி
மிடுக்கொடு நடந்துதம் வயலிட நண்ணினர்
ஏழிசை முழக்கமிக் கெழுந்ததுன் னடியார்
ஏத்தியுன் னருள்பெற வீண்டி னரன்பால்
கோழியைக் கொடியென வுயர்த்திய குமரா
குருபரனே னேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

புக்தியை வேண்டிப் பாடுந ரொருபால்
பல்வளஞ் சிறக்கப் பரவுந ரொருபால்
வித்தையி லோங்க வேண்டுந ரொருபால்
விதியினை வெல்ல விழைகுந ரொருபால்
முந்தியை நாடி முயலுந ரொருபால்
மும்மல மறுக்க முனையுந ரொருபால்
இத்தகை யடியவர் கண்டுளங் களிக்க
இளமுரு காபள்ளி யெழுந்தரு ளாயே 3

இயலிசை நாடக மெனுந்தமிழ் மூன்றின்
இயல்பினை நின்னொடு மிணைபிரி யாத
கயல்விழிக் குஞ்சரி வள்ளியென் றோதுங்
கன்னியர் தம்மொடுங் காட்டுவை யெமக்குச்
செயல்வகை யாதெனத் தெரித்தருள் குருவே
செந்தமிழ்ப் பொருளாய்த் திகழ்ந்திடுந் தேவே
மயல்கெட நின்னடி வாழ்த்திட வந்தோம்
மாமணி யேபள்ளி யெழுந்தரு ளாயே. 4

அந்தமி முயிரென வாறிரு தோளும்
ஆய்த வெழுத்தென வாங்குறு வேலும்
வுந்துறு மெய்யின் வகையென விளங்கும்
வாண்முகத் தறுமூன் றாந்திரு விழியும்
மைந்துறு மேனியிற் காட்டியம் மாண்பால்
மன்னுசெந் தமிழே யுருவெனக் கொண்டாய்
எந்தம்மை யாட்கொளக் கொக்குவி லுறையும்
ம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 5

நீலநி றக்கடன் மீதெழு கதிரவன்
நீள்கர நீட்டியி ருள்கடிந் தாங்குக்
கோலம யின்மிசைக் குலவிய மலர்தே
கூர்த்தமெஞ் ஞான வேலினை யோச்சும்
சீலம துள்ளியுன் திருவடி யடைந்தோம்
திருமுரு காகிரு பாகர மூர்த்தி
சோலைவ னஞ்செறி கொக்குவி லுறையும்
சுந்தர னேபள்ளி யெழுந்தரு ளாயே. 6

பொழிவிடைப் பூவாய்த் திகழ்வாய் நீயே
பூவிடை மணமாய்ப் பொலிவாய் நீயே
நிழறரு தருவாய் நிற்பாய் நீயே
நீரிலுந் தீயிலு நிலைத்தாய் நீயே
எழிலுடைப் பொருள்கள் யாங்குள வாங்கே
எழிலே யுருவாய்த் திகழ்வாய் முருகா
கழலடி பணிந்து கதிர்பெற வந்தோம்
கருணாகர னேபள்ளி எழுந்தரு ளாயே. 7

முக்குண வயத்தால் முறைமறந் தலையும்
முதுக்குறை வுடையரை நல்வழிப் படுத்திப்
புக்குவ ராக்கிப் பவவினை யறுத்துப்
பகரரும் பேரின்ப வீட்டினை யருள்வான்
திக்குக ளெட்டிலுங் கோயில்கொ் டோனே
திருமுரு காவுன்றன் கருணையின் திறத்தால்
கொக்குவிற் பதிப்புதுக் கோவிலி லுறையும்
கோமள மேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

ஊனுடை யுறையுளு முறுபொருள் பிறவும்
ஊலகினில் வாழ்வதற் குவந்தளித் தருள்வாய்
மாணுறு கல்வியும் ஞானமு மருளி
மறுமைக்கு நல்வழி காட்டியு மாவாய்
ஆணவ மலமெனு மரும்பகை யழித்தே
ஆந்தமில் பேரின்ப வாழ்வெமக் கருள்வாய்
காணுதற் கினியகிரு பாகர மூர்த்தி
கந்தழி யேபள்ளி யெழுந்தரு ளாயே. 9

கலியுக வரதாகடம் பாசிவ பாலா
கந்தா குகனே குறிஞ்சிக் கிழவா
பொலிதரு வேலா யுதனே செவ்வேள்
பொற்புறு மயில்வா கனனே குழகா
கலையெறி புலவா சரவண பவனே
கார்த்திகே யாவிசா காவென வுன்றன்
பலபல பெயர்கள் பாடிநாம் துதிப்போம்
பாகவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

உ

குகமயம்

# கொக்குவிலின் புதுக்கோயில் ஆரம்ப காலத்திலிருந்தே திருப்பணிகள் பல புரிந்தவரும் குகதாசர் என்ற பெயரோடு சைவசித்தாந்த பேரறிஞருமாக விளங்கியவருமான திரு. ச.சுபாரத்தினமுதலியார் எம்பெருமான் மீது பாடிய

# கிருபாகர சுப்பிரமணியர் ஆசிரியவிருத்தம்

காப்பு

செஞ்சடில மாமதித் தேவ ளருள்மகவைப்
பஞ்சி னடியுமையாள் பாலகனை மஞ்சுபடிந்
தம்புலியூர் கொக்குலிலெ மாறுமுக னைப்பாடத்
தும்பிமுகன் றாளே துணை.

தியானம்

சீரெறு மொருகோடி சூரியப் பிரபைகொடு
திகழுநவ மணி மகுடமுந்
திரிபுண் டரக்கீறு மொளிர்திலத நெஞ்றியுஞ்
செய்யமதி முகமொ ராறும்
ஆரேறு மருள்வாரி பொழிவிழிக ளீராறு
மாடகக் குழையி லங்கும்
ஆறிரு திருச்செவிக ளுஞ்சிவா கமஞான
வுமிழ்தொழுகு மலர் வாய்களும்
போரேறு வேன்முதற் படையபய வரதமொடு
புடையினொளிர் கரமி ராறும்
பொோன்செய்முப் புரியிலகு திருமார்பு மருளறிவு
போங்குபய பாத மலரும்
காரேறு மஞ்ஞைமிசைக் காட்டிவந் தாள்வையோ
கந்தமுரு. கேச கிருபா
கரசுப்ர மணியவுயர் கொக்குவி னடங்குலவு
கர்த்தசிவ சரவண பவா. 1

## திருவவதாரம்

அந்தநா ளிமையவர்க டங்குறை யிரந்துசென்
றைம்முகப் பரனை வேண்ட
ஆதியறு மாமுகத் தொல்லைவடி வெய்திநுத
லுங்கங் களிற்பு லிங்கம்
துந்தருள வவைசென்று சரவணப் பொய்கையிற்
றாமறு சிறார்க ளாகிச்
சார்ந்தழியி னாரலமிழ் தூண்டவுண் டம்மையுமை
தாணுவொடு வந்த ணைப்ப
உந்தவடி வங்கொண்டு மற்றவர்கள் புடையிலே
யுற்றுலவி யாடல் குலவி
உம்பரிட ரொடுசூர னுறவொழிய வேலுய்த்த
வுன்கருணை நாளு மறவேன்
குந்தசிவ குருநாத பிரணவசி ரங்கெழுமு
கலைஞுமுரு கேச கிருபா
கரசுப்ர மணியவுயர் கொக்குவி னடங்குலவு
கர்த்தசிவ சரவண பவா. 2

## திருவிளையாடல்

மூன்றுலகு மாண்டுள சராசர மனைத்துமுன்
முறைபிறழ வைத்த ருளினாய்
முண்டகா சனமூர்த்தி குறியமுனி பரமற்கு
முதலெழுத் தறிவு றுத்தாய்
ஆன்றதரு தொழில்வல்ல பிரமனைச் சிறைவீழ்த்தி
யுகிவசிட் டிகள்பு ரிந்தாய்
அமரரொடு சூரறிய வாதிமறை யறியாத
வவ்வடிவு காட்டி நின்றாய்
தோன்றுநெறி முறையற்ற வவுணனையு மாட்கொண்டு
தோண்டுபட வைத்த ருளினாய்
சுந்தரியொ டமிர்தவல் லியர்தமை வலிந்தாண்டு
சுபமங் கலம்பு ரிந்தாய்
கான்றவரு ணறவுபொழி விழியா றிரண்டுடைய
கடவுளே பெரும கிருபா
கரசுப்ர மணியவுயர் கொக்குவி னடங்குலவு
கர்த்தசிவ சரவண பவா. 3

### திருவடிவம்

அருளினொடு சத்திபர ஞானமவை தம்மினா
லத்துவா மந்தி ரத்தால்
அருவினுட னருவுருவ துருவங்க ணின்னடிய
ராய்சகள மொடு நிட்களம்
வருசகள நிட்கள மெனாவடி வெடுத்தென்று
மன்னுயிர்க் கருளு மரசே
மைந்துபடு பிரணவமு மைந்துபிர மங்களினு
மாமுக மொராறு கொண்டு
தருகிரியை யிச்சைமதி முச்சத்தி பேதங்க
டந்திகுற மாதொ டயிலாத்
தாங்குருத் திரையுயர் கைப்படக ளாக்கொண்டு
தமியேமை ரட்சித்து நங்
கருமடிய மறையாதி தந்தருளு மெந்தையே
கர்த்தவ்ய நாத கிருபா
கரசுப்ர மணியவுயர் கொக்குவி னடங்குலவு
கர்த்தசிவ சரவண பவா. 4

### பதிநிலை

அணுவினுக் கணுவா யகண்டிதா காரமா
யனைத்துளவு மாகி யன்றாய்
அகிலத்து நீரனலி யெனவியா பித்துமற்
றாங்குதோ யாம லயலாய்
நணுகரிய தூரத்து மப்பாலு மாகியே
நாடிமன வாக் கறிகலா
நாதநீ யாவிலு மியாவுநின் மாட்டுமுறு
ஞானவரு ணிலையறி வனோ
குணவடிவ முதலசந் நிதியளவி னேகொண்டு
கொடியரே முய்யு மாறு
குஞ்சித மலர்ப்பாத பஞ்சகிர்த் தியநடன
கோலாக லம்பு ரிந்து
கணிகமுறை தனிலெமைப் பரமுத்தி யுய்க்குமன்
கருணையறி வேன்கொல் கிருபா
கரசுப்ர மணியவுயர் கொக்குவி னடங்குலவு
கர்த்தசிவ சரவண பவா. 5

### அருணிலை

அற்பக லிகந்தவச் சொற்றபு மிடத்தினே
யன்பருனை யாரு மதனை
அடியே முணர்ந்துய்ய வொருசிறிது மாதரா
ராடவர்ப் பெறு மின்பினாற்
பொற்புற விளக்கியே பக்குவரை வன்பினிற்
பூண்டடிமை கோட றனையம்
புலவேடர் வாய்ப்பட்ட குறமகளை நாடியே
போதந்து வேட்ட முறையிற்
றேற்றென விளக்கினை யதான்றியில் வாழ்க்கைநெறி
செகதலத் தினிது நிகழச்
சித்திதரு மிருசகைச் சத்திகளை மேவியே
சீவரை யியக்கி நிற்பாய்
கற்பக வெழிற்புலவ ரீடேற வேறொட்ட
கருணாக ரேச கிருபா
கரசுப்ர மணியவுயர் கொக்குவி னடங்குலவு
கர்த்தசிவ சரவண பவா. 6

### ஆன்மநிலை

ஆணவக் குழியிலே யிருவினைத் தளையிலே
யடுமாயை யழனடு விலே
ஆர்த்திதரு பொருளிலே கீர்த்திபெறு நெறியிலே
யாலவிழி யர் மயலிலே
காணிவித் தைகளிலே சுற்றமித் திரரிலே
கடையே னமிழ்த ழிந்து
கனவிலும் விதிமுறையி னினதடியை யர்ச்சியேன்
கர்த்தனே யென்செய் குவேன்
நாணமற் றுளவெனது சிந்தையோ புத்திமதி
நானெத் தனைசொ னாலும்
நாடாது பொய்களவு கோபமோ கக்குழியு
ணாயேனை யீர்த்த மிழ்த்திக்
காணசொட் டாமலுன தருளினை மறைக்கவுன்
கருணையெவ ணுற்ற கிருபா
கரசுப்ர மணியவுயர் கொக்குவி னடங்குலவு
கர்த்தசிவ சரவண பவா. 7

### இதுவுமது

தீவினைக் கேயெனது திரிகரண மடிமையாய்ச்
செய்வதறி யாத ழிந்து
சீலமரு ணீதிபொறை தானந் தவங்களொடு
தேவதா பத்தி நியம
ஆவலெட் டுணையளவு மின்றியெனை யேநிரய
வாழிக்கொ ராளாக்கு மேல்
அப்பனே யிப்புவியி லாருக்கு மொழிகுவேன்
அடியே னிதாற்ற வலனோ
பாவலர்க் கெளியையெனு நசையினா லறிவற்ற
பாவியே னுளறு புன்சொல்
பன்னிரு செவிப்புலனி லேற்றுமயி லேறிநீ
படரோடு கூற்று வருநாட்
காவலுற் றெதிவந்து ரட்சித்த லுன்பரங்
களைகணே பெரும கிருபா
கரசுப்ர மணியவுயர் கொக்குவி னடங்குலவு
கர்த்தசிவ சரவண பவா. 8

### வேண்டுகோள்

அன்னையொடு தந்தைநீ பின்னையுள சுற்றநீ
யடியேனை யாண்ட குருநீ
அருமைதரு மனைவிநீ யுரிமைபெறு புதல்வர்நீ
யாதர மனைத்து நீயே
என்னையென் பிழைகுறித் தெந்தநீ கைவிடி
லெனக்குமோ ருய்தி யுண்டோ
ஏதேதி யான்செயினு மதையுனது சேவடிக்
கேன்றபூ சனையெனாக் கொண்
டின்னலொடு வறுமைபிணி மனமிடி எனுகாம
லெலுக்காலு மெனையி ரட்சித்
திருநிதியொ டறிவுபுக ழுயர்மகவு முதலாய
வினியபோ கங்க ளூட்டிக்
கன்னல்கற் கண்டுபா கெனருசித் திருடுமுனது
கழலொழிவி லருளு கிருபா
கரசுப்ர மணியவுயர் கொக்குவி னடங்குலவு
கர்த்தசிவ சரவண பவா. 9

### இதுவுமது

சேந்திமுன் னாயவாறு சேத்திரப் பிரியனே
திருமருவு கதிரை முதலே
சேத்தனே கலிகால வேந்தலே யாதிநாட்
டிருவடி பிழைத்த விருவர்
பந்தமற வந்தாண்ட வுனைமறந் தழியவிப்
பாழ்வனத் தெனைவி தித்தாய்
பராமுக மிச்செயா துனதுபணி புரியவுன்
பதிமீ தழைத்த ருளியே
சிந்தனை யொடுங்கிவரு சிற்சத்தி யாலுனைத்
தெரிசித்து யாவு நீயாத்
தேறியுறு சகலகே வலாமற்று யாளெனது
சேதித்து நோக்க மற்றுக்
கந்தவனு பூதியிடை யான்றிளைத் திடவுனது
கருணைமழை பொழிவை கிருபா
கரசுப்ர மணியவுயர் கொக்குவி னடங்குலவு
கர்த்தசிவ சரவண பவா. 10

### வாழ்த்து

துய்யசதுர் மறைவாழி யாகம குலம்வாழி
தோத்திர செபங்கள் வாழி
தோமறு புராணவகை மிருதிவழி நூல்வாழி
துவிதீய பூசை வாழி
செய்யமனு நீதியொடு தானந் தவம்வாழி
சிவகுமர னாமம் வாழி
சேவலொடு மயில்வாழி தந்திகுற மாதரார்
சேவடித் துணைகள் வாழி
ஐயமற வெனையாளு மறுமுகப் பண்புடைய
வயில்வாழி குலிவம வாழி
ஆறிரு கரம்வாழி யற்பகுக தாசனே
னர்ச்சனை தழைத்து வாழி
கையருற வற்றகொக் குவினகர முறையினெக்
காலமும் வாழி கிருபா
கரசுப்ர மணியரடி யடியருள மீதிலே
கற்பமுறை வாழி வாழி.

# கொக்குவில் கிருபாகர சுப்பிரமணிய சுவாமி கோவில் மான்மியம்

காப்பு : விநாயகர் துதி

(கட்டளைக் கலித்துறை)

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

திருவார் சிவநெறிசீலம் தமிழ்கல்வி கேள்விசெறி
உருவார் உயர்மக்கள் வாழ்கொக்கு வில்மத்தி ஒம்பியுறும்
கிருபா உயர்மக்கள் மாண்பு கிளத்திடவே
ஒருவாரணன் இரு பாதாம்புயங்கள் உறுதுணையே.

திருப்பதி வரலாறு

ஆசிரியப்பா

திருவளர் ஈழத்துச் செம்பியர் வழிசேர்
பெருமநு நெறியில் பேரர சாட்சிசெய்
செந்தமிழ் மன்னர் சீர்ராச தானியாய்
வந்துள நல்லை மாநகர் வரையதாய்
வடகுட வரம்பாய் வடிவேல் வரதனால்
வடகுண திசையராம் வானவர் நகரென
ஒடுங்கா வளமும் மடங்காச் சீலமும்
அடங்கா ஒளியும் ஆற்றலும் அமைந்த
பெருங்குடி மக்கள் பரம்பரை பிறழாது
வருஞ்சிறப் பான வரலாறுடையது.
தென்குட திக்கினில் சேட்டன் நாச்சிமார்
மஞ்ச வனப்பதி முதலி முருகனாம்
குணபால் காளி மாத்தனைக் குமரன்
குணம்மிகு அம்மனும் நலமுறக் காத்தருள்
தென்திசை சேத்திர பாலரா லயங்களும்
செந்தா மரையிதழ்ச் சீரெனப் சேரவே
அந்தா மரயகப் பொகுட்டென அவிர்தரும்
முருகன் இருக்கையாம் மாண்புதுக் கோயில்
திருகுறா தொருநூற் றெழுபதாண்டின் முன்
கருவுற்று வளர்ந்தே கற்பக தருவாய்
பரிணமித் தருட்கனி பயனெனப் பயக்குதே.
விகடமாய் இடையிடை எழும்விக் கினங்களுள்
சகட உருளெனச் சரித்துநேர் வந்ததே
தானவர் தாழவும் வானவர் வாழவும்

கானமர் கடம்பன் கடைக்கணின் கருணையால்
நவஆ லயங்கள்மேல் நவ ஆலயமதாம்
நலம்வளர் நாமம் நண்ணுமெய் நாட்டுமே
நினைத்ததை முடிப்பதாம் நிலப்பெயர் நிறுத்துமே
வனத்திறல் மயூர வாகனன் அருள்வளம்
தருகைநீள் கையார் தருக்கைபோல் தரத்தரப்
பெருகவே பேறுகள் பெருகப் பெற்றவர்
தரும மேதலை காக்குமென் தத்துவம்
கரும மாய்ப்பல திருப்பணி கண்டனர்
வளர்பிறை வளர்ந்தது ஆலயவளாகமும்
கிளரிறை பணியரும் கிளைஞரும் வளர்ந்தனர்
அறிவுடையாரே அனைத்தும் உடைமையால்
அறிவுடன் ஆக்கம் அருள்கல்வி தழைய
இந்துக் கல்லூரியை எதிர்முகத் திருத்திச்
சந்திர கலையெனச் சகல கலைகளும்
தந்துற வளர்க்கும் தானமும் விளைத்தது
சந்ததம் எமர்பஞ் சாங்க சாத்திரம்
தந்தம் சுபாசுப சடங்குகள் சமைக்க
முந்தை நாள் முதலா வாக்கியபஞ் சாங்கம்
திருமூலர் கொக்குவில் வருமூ றிலாக்கவி
ஒருவா சகமென ஓதும் சிலம்பர்
தருசீட ராம்சபா ரத்தின முதலியார்
நாகலிங் கமாம் நாற்கவி நாதரும்
விருதார்வே லாயுத பிள்ளையென் பார்முதல்
வருமான மார்கவி வாணரைத் தந்தவர்
தருமொழி மாலைகள் தடம்புயந் தரித்தான்
கால விகற்பத் தியற்கை செயற்கையால்
சால உறுஞ்சங் கடஞ்சஞ் சலங்கள்
மூல வேரொடு முற்ற முடிந்திடக்
கால மானவை என்றுமே காத்துளான்
பொருவி லாந்திருத் தொண்டு புரிந்துளோர்
முந்தையார் முரு கேசர் முதற் பலர்
வந்த சீர்மர போர்கள் வழிவழி
கந்த மாதனம் கந்த கிரியென
சந்த தம்தன் சரணார விந்தமே

சிந்தை செய்தெழு செந்நெறியே நின்று
வந்தனை பெறுமுயர் வாழ்வின ராகவே
தரும் சாசனம் சண்முகன் சாற்றினான்
வேண்டும் அன்பர்கள் வேண்டியாங் கெய்தவே
நீண்ட கைத்தலன் நிறையருள் நிலையன்
தூண்டு சுடர் வேற் சுப்பிரமணியன்
சமரச பான்மை சகத்தவர்க் காக்குக
அமரர் சிறைமீள் அறுமுகத் தமலன்
அநகன் ஆண்டருள் குகனே
அநவர தமும்துணை யாக அமையுமே.

## அபிவிருத்தித் திருப்பணிகள்

(கட்டளைக் கலித்துறை)

முன்னவன் மூல முருகன் ஆறுமுகன் தென்முகத்தோன்
தன்னுரு வாம்பாலன் தண்டபா ணியும்மாமன் வேணுதரன்
மன்னுசண் டீசர் எனுமூர்த் திகள்அறு மாமுகத்தோ்
பன்னும்பல மூர்த்திகள்பரி வாரகுலமும் படைத்துளதே. 1

சிவசுப் பிரமணியர் பரியாய நாமங்கள் சேர்மரபில்
தவசுப் பயன்மக்க ளாய்வந்து தாழ்வில் தபோதனராய்
அவதிப் படாதன் பருள்வழி ஆவ தனுசரித்தே
தவதிப் பணிமாத ருஞ்சாரச் செய்தனர் சாதனையே. 2

ஈனமுளதென் றிழுக்கா தெவருமொன் றாகிஎந்தை
தானமுன் சார்ந்தருட் சாதனம் ஏற்கச் சமைநலத்தால்
ஊனமொன் றில்லை அன்பால் உடையான் பணிஉ_ஞற்றி
வானமும் வையமும் வாழ்த்த வரகுண ராயினரே. 3

தோன்றிற் புகழொடு தோன்றுக என்பதோர் தொன்மொழியால்
தோன்றி இசைநட்ட தொன்மையர் போல்வரு தொண்டர்களும்
ஊன்றி உளத்தன் புடையான் திருத்தொண் டுஞற்றிநின்றே
சான்றி னமைந்து தழைத்துத் தலைப்படும் சால்பினரே. 4

# தொண்டரும் தொண்டும்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

தொண்டர்தம் தொகையும் சூழ்ந்த திருத்தொண்டின் சிறப்பும் சொல்லில்
தொண்டர்சீர் துதித்த நம்பி அருண்மொழி சொலலாம் நாமார்
பண்டிரு முருகே சர்கள் பறுவதம் காசிப் பிள்ளை
தண்டமிழ்ச் சபாரத் னச்சீர் முதலியார் மற்றும் சான்றோர். 1

ஞானசுந் தரரே ஆறு முகத்தர்நல் ராமலிங்கர்
ஊனமில் சின்னத் தம்பி உறுசிவ சங்கரர் மேல்
மானமார் மருதப் பர்மாண்புறு பொன்னம்பலம் மாசில்லோர்
தானமார் மூர்த்தம் வீதி மணி மண்டபங்கள் வைத்தார். 2

சிலதொண்டர் பெயரே பாட்டில் சேர்ந்தடங் கினமற் றப்பால்
பலதொண்டர் பெயரும் தொண்டும் பண்டுதேர் மலர்வி ரிக்கும்
நலங்கொண்ட அநுபந் தங்கள் நயமாக விதந்துசொல்லும்
சலந்தவிர் தயவாய் நோக்கிக் குறை வொறுத் தேற்பீர் தக்கீர். 3

ஏற்றதிருப் பணியெண்ணில்லை: கந்தையா கொடிமுன் னேற்றல்
சாற்றுதேர் பற்மநாதர் தழைசிற்றம் பலவர் தீர்த்தம்
ஆற்றுகிறார் மரபோர் ஆங்கே அர்ச்சிப்பார் சின்னப் பாவின்
மாற்றநிலை யாத்துரை ஐயர்இராசரத் தினரே ஆவார் 4

## வேண்டுகோள்
(சந்த விருத்தம்)

கந்தப் பதுமச் சரவணமும்
கந்த புரியும் கந்தவெற்பும்
கழுநீ ருதிக்குந் திருத்தணியும்
காஞ்சி புரத்தின் மாவடியும் 1

சொந்தப் புரிஏ ரகத்துடனே
சோலை மலையும் பரஞ்குன்றும்
துங்கத் திருவா வினன் குடியும்
சோதித் திருவேங் கடமலையும் 2

சந்தப் பொதியும் குற்றாலத்
தலமும் இலஞ்சித் தமிழ்பதியும்
தழைக்குங் கதிர்கா மத்தடமுஞ்
சணிலந் தோறும் விளையாடிச் 3

செந்திற் பதிகொக் கூர்சேர்வாய்
செருவும் செல்லும் சேட்படுப்பாய்
செல்லும் செல்வம் சமாதானம்
சேரச் சேரேம் திருநாட்டே 4

பூவே பூவிற் பரிமள மேயப்
பூநிறை சுவை நறவே
பொங்குங் கடலே கடலி லுதித் தெழு
புனிதத் தெள்ளமுதே 5

காவே காவிற் கொஞ்சம் பஞ்ச
வனக்கட வுட்கிளியே
கண்ணே கண்ணுறு பாவாய் பூவாய்
கனியே கனிரசமே 6

தேவே தேவர் சீரோமணி யேயென்
சீருயி ரேயுயிரிற்
செம்பொ னேயரு ளேமுமு மணியே
மணியிற் றேசிகமே 7

மூவா மறையே முதுதமிழ் விரகா
முன்வந் தருள் முருகா
முற்சமர் முற்றுவி சாந்திச மாதானம்
முந்தத் தந்தருளே 8

## திருவருட்பேறு

தக்கதிருப் பணியால் சால்பம் தாவில் நிருவாகத் தால்சார்
மிக்கவழி பாட்டா ரால்சயெ் நித்தியநை மிகத்தால் மேவிக்
கொக்கினிரு பிளவுசேவல் கோலமயில் எனக்கொள் கொற்றன்
கொக்குவிலிற் கிருபாகர சிவசுப்பிர மணியக் கோமான். 1

மிக்கொழுவார் வினைகட் குள்ளே நக்கிரப்பான் விழுமி யோராம
பக்குவர்செய் பணியு வந்தே பரிசுபதம் பாலிக்கின்றான்
மக்களது மருள்போய் ஞானப் பிரகாச மாக்கும்
புக்கிருந்து புதுக்கோயில் புவனமெலாம் புரக்கும் வேளே. 2

என்றுமெலாம் நிறைந்து றைந்தே என்றுமிளை யாதே காப்பான்
என்றுமே இளையான் சேந்தன் என்றுவே றெண்ணா தெம்மோர்
நன்றுமே சேவை நாடி நலம்பெற்றோம் பெறுவோம் நாளும்
ஒன்றுமே ஐயம் வேண்டா, உறுந்தொண்டர் உறுமே ஆக்கம். 3

கிருபா கரனடி கருதுநற் கிழமையோர்
திருவா பரணராம் சீரியர் சரதமே
கிருபா கரனே கிருத்திகா நமோநம
தருவாய் தாணிழல் சரவண சரணம். 4

**சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.**

**குறிப்பு:**

(கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் அமைவிடம், தோற்றம், வளர்ச்சி, அபிருத்திப்பணிகள் பெருமானின் அருள்சிறப்பு முதலான அகச்சான்றிதழ் மலிந்த இம்மான்மியம் இம்மலருக்கு விஷேட சிறப்பை தருவதாகும்.) **– பதிப்பாசிரியர் –2014 –**

# கொக்கூர்க் குமர கிருபாகரரூஞ்சல்

காப்பு

சீராருங் கடப்பமலர்த் தெரியல் சூடிச்
சினத்தவுணர் மடியவொரு செவ்வே லேந்திக்
காராரு மலர்க்குழலி யணங்கின் யானை
கடிமணஞ்செய் திமையோர்தங் காவன் மீட்ட
பேராருங் குமாரனெழிற் பெம்மான் மீது
பெருகுமுயர்க் காதலினா லூஞ்சல் பாட
ஏராரும் பிரணவமே யிபமாய் வைகு
மீசனேநின் னிணையடிகள் காப்ப தாமே.

நூல்

ஓதுமுயர் நால்வேதங் கால்க ளாக
உரைபெருகு மாகமங்கள் விட்ட மாகப்
போதமிகு கலைகளெல்லாம் வடங்க ளாகப்
புகலுதவு மந்திரங்கள் பலகை யாக
நீதமிகு மாறெழுத்தே பீட மாக
நியமமெனு மாசனத்தே நிலவி வைகிக்
கோதகலு மன்பருறை கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்
1

மங்கலமா ருமையுடனே யிமையம் வைகி
மகிழும்போ தவுணர்செய் மாயங் கேட்டுச்
சங்கரனார் நயனங்கள் சொரியு மாறு
தழற்பொறிக ளறுமுகமா யொன்றாய்த்
-தோன்றிப்
பங்கயஞ்சேர் சரவணத்திற் பால னாகிப்
பார்மகிழத் தவழ்ந்தோடி யறுவர் மாதர்
கொங்கையமு துண்கோவே கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்
2

தளிர்மதியு ஞாயிறுநற் கவிகை தாங்க
நாதமொடு காலோன்வெண் கவரி வீச
வளர்நிதியின் செல்வனிழற் றுவச மேந்த
வானவரு மிந்திரனு முலகு முய்ய
ஒளிர்கதிர்வேல் கரமேந்தி நிலவி யோடி
யோங்கறொறுந் தாவிவிளை யாடுஞ் செல்வா!
குளிர்வதியுஞ் சோலைவளர் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்
3

அயினிலவு மபயகரங் கருணை காட்ட
அடிநோக்கு வரதகர மணைத்துக் காக்க
ஒயினிலவு கலாபமிசை யுலவி யோங்கி
யுலகுயர முக்கிரியை தானே தாங்கி
துயிலகலுந் தொண்டர்நிதந் துதித்து நிற்கத்
தூயவகங் கெழுமியிருந் தாடு மீசா!
குயிலுலவு காவுயருங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்
4

விந்தைமிகு சீர்பழனிக் குன்றின் மீதும்
விளங்குவெண் ணிமயமலைச் சாரன் மீதுங்
கந்தமிகு மேரகத்தி னுச்சி மீதுங்
கவினிலவ வோங்குபரங் குன்ற மீதுஞ்
சிந்தைமகி ழன்பர்துதி செந்தின் மீதுஞ்
சீரலைவாய் மீதும்நட மாடுஞ் செல்வா!
கொந்தலரு மாநிறையுங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்
5

ஏடுயரும் சரவணப்பூம் பள்ளி டஞ்ச மென்று
விறைவாவுன் னிணையடிக டஞ்ச மென்று
பீடுயரு மெய்யடியா ரிரந்து நிற்பப்
பெருகுமருள் நடனமதிற் கருணை பொங்க
நீடுயரு மெழிற்றெய்வ யானை யோடும்
நிலவுகுற வஞ்சிவள்ளிக் கொடியி னோடுங்
கோடுயருஞ் சூதமிகுங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்
6

அந்தழல்போன் மின்னுமணி மகுட மாட
ஆடகப்பொன் னாடையுடன் றண்டை யாடக்
கந்தணியு மாரமுமார் கடம்பு மாடக்
கரமேவு குந்தமொடு வேலு மாடச்
சுந்தரியும் வள்ளியுமாய்த் துலங்கி யாடத்
துரிதமுட னாடிவருஞ் சேயே! மாவின்
கொந்தலஞ் சோலைமிகு கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்
7

திருவுயரு மறுமுகங்க ளசைந்து தோன்றத்
தேசோங்கு மெழிற்கரங்க ளசைந்து தோன்ற
உருவுதிக முத்தரிய மசைந்து தோன்ற
ஒளியுதவு மணிமகுட மசைந்து தோன்றப்
பொருவரிய தேவியரு மசைந்து தோன்றப்
புகலுதவு வேலுடனே யாடு நாதா!
குருவருளாற் பீடுயருங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்

8

அலைக்கவருஞ் சூர்முதலா மவுணர் மாய்
வறுமுகமு மெழிலுருவுங் காட்டி யன்பர்
நிலைக்கமுத மாகியவாழ் வளித்த வீரா!
நிலவுமுயர் சேவடியே புகல தாகக்
கலக்கமுற மாட்டோமென் றடியா ரேத்தக்
கனகமணிப் பீடமதிற் பொலிந்து வைகிக்
குலைக்கமுகின் பழமுதிருங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்

9

உளங்கெழுமி யாறெழுத்தின் பொருள மாகி
யுயர்முனிக்குத் தீந்தமிழின் விளக்க மோதி
வளங்கெழுமிப் பிரமனுக்குப் போத நல்கி
வடிவேலாற் கிரவுஞ்ச மடியத் தாக்கிக்
களங்கெழுமிச் சூர்தடிந்தே யரண மாகிக்
கருங்குழலி யானைதனை மணந்த கோவே!
குளங்கெழுமி நலந்திகழுந் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்

10

தொக்குயருந் தேவியர்கள் சூழ்ந்து வைகப்
பக்கமர மாதரெழிற் கீதம் பாட
மிக்குயரு பூதகண மார்த்தே நிற்ப
நெக்குருகு நெஞ்சினொடு மன்ப ரேத்தப்
பக்குவஞ்சேர் மெய்யடியா ருள்ளக் கோயில்
புக்கிருந்து புகலுதவும் புனித வாழ்வே!
கொக்குவில்வ ளர்கருணைக் கடலே! ஞான
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல்

11

வாழி

உலகுயர வளனல்கு முகில்கள் வாழி
ஓங்குமறை யாகமங்கள் கலைகள் வாழி
நிலவிவரு மறநூல்கள் நீடு வாழி
நிலைபெறுவா ரோதுசடாட் சரமும் வாழி
நலமுதவு மன்னவர்செங் கோலும் வாழி
நாட்டமிகு மனுபூதிச் செல்வர் வாழி
குலவுமுயர் தொண்டர்கடங் கூட்டம் வாழி
குமரகிரு பாகரர்நற் றிருந்தாள் வாழி.

பண்டிதர். சைவப்புலவர் மு. சின்னதம்பி

## பயன்பாட்டுத் தேவைகருதி இவ்வூஞ்சற் பாக்கள்

தற்போதும் கிருபாகரன் புதுக்கோவிலில் நடைபெறம் திருக்கல்யாணம், பூங்காவனம் போன்ற உற்சவங்களில் மேலே உள்ள திருவூஞ்சற் பாடல்களே அடியார்களினால் பக்தி பூர்வமாக பாடப்பட்டு வருகிறது. எனினும் எம்பெருமானுக்கு பாடப்பட்டது எனச் சொல்லப்படும் டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் பாடல்களும் குகதாசர் சபாரத்தின முதலியார் ஊஞ்சலோடு பராக்கு எச்சரிக்கை லாலி போன்ற பாடல்களையும் சேர்த்து எழுதப்பட் விபரங்களையும் முன்னைய கோவில் வெளியீடுகளில் பார்க்க முடியும். விரிவஞ்சி பயன்பாட்டில் உள்ளதும் உற்சவ கால நேரப்பொருத்தப்பாடு நோக்கி எம்எஸ் பண்டிதரால் ஆக்கப்பட்டும் ஒருமை பன்மை வழுக்கள் நீக்கப்பட்டதுமான இந்த ஊஞ்சற்பாடல்களை மாத்திரம் இம்மலரில் எவ்வாறேனும் இணைக்கவேண்டிய தேவை ஏற்பட்டது.

- நன்றி -

## இணுவை காயத்திரி சாஸ்தா பீட அதிபரும், இம் மஹா கும்பாபிஷேக சர்வபோதக குருவுமாகிய
## சிவஸ்ரீ. தானு மகாதேவக் குருக்கள் அவர்கள்
## வழங்கிய பிரார்த்தனை விடயதானம்

ஜீர்னோத்தாரண மஹா கும்பாபிஷேகம் ஒரு ஆலயத்திலே 12 வருடங்கட்கு ஒருமுறை நடைபெறுகிறது. தினசரி பூஜைகளும் விஷேச காலங்களில் உற்சவமும் வருடம் ஒருமுறை மஹோற்சவமும் 12 வருடங்கட்கு ஒருமுறை புநராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகமும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த உலகத்தை ஆள்பவர்கள் 12 ஆசிரியர்கள் இவர்கள் முறையே வைகர்த்தனன் விவஸ்வதன், மார்த்தாண்டன், பாஸ்கரன், ரவி லோக பிரகாசன், லோகசாக்ஷி, திரிவிக்கிரமன் ஆதித்யன், சூர்யன் அம்சுமாலி, திவாகரன் என்று பெயர் பெறுவார்கள் இவர்களுடைய ஆட்சிக்காலம் நிறைவெய்திய பழையபடி வைகர்த்தனன் ஆட்சி தொடங்கும். இப்படி 12 சூரியர்கள் ஆட்சி காலத்தை வைத்து 12 வருடத்திற்கு ஒருமுறை மஹா கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும். அஷ்ட பந்தனத்தில் வலிமையும் 12 வருடத்திற்குத்தான் தாக்குபிடிக்கும். மந்திர சக்தியும் 12 வருடத்திற்கு ஒருமுறை திரும்ப உருவேற்ற வேண்டும். கும்ப கலசத்தில் 12 வருடத்திற்கு உயிர்ப்புடன் வாழக்கூடிய சக்தியுள்ள வருகினை இட்டு வைப்பதன் காரணமும் இதுதான். இப்படியாக மஹா கும்பாபிஷேகத்திற்கு நாம் முதலில் பாலஸ்தாபனம் செய்து திருப்பணிகளை நிறைவேற்றி பாலாலய பிம்பத்திலிருந்து மூர்த்தியை கும்பத்தில் எழுந்தருளச் செய்து முதலாவது பிரார்த்தனை செய்கிறோம்.

ஸ்வாமின் சர்வ ஜகன்னாத யாவத் மூல பிரவேசகம் தாவத் "தவம் பிரீதி பாவேந கும்பேஸ் மின் சன்னாதிர்பவ" என்பதே அப்பிரார்த்தனையாகும் இதன் கருத்து உலகத்திற்கு தலைவனாக விளங்குகின்ற தேவரீர் மூலாலயத்தில் சென்று பிம்ப சான்னித்யம் ஏற்படும் வரை கும்பத்தில் வீற்றிருந்து திருவருள் புரிவீராக என்பதே முதலாவது பிரார்த்தனை.

இரண்டாவது பிரார்த்தனை அக்கினியில் சுவாமியை எழுந்தருளப் பண்ணி ஆராதித்த பின் செய்யும் பிரார்த்தனை.

ஸ்வாமின் சர்வ ஜகன்னாத யாவத் பூஜாவஸா நகம் தாவத் தவம் பிரீதி பாவேன அக்னஸ்மின் சன்னிதிர்பவ இதன் கருத்து "நான் ஆராதிக்கும் வரை தாங்கள் அக்னியில் சான்னித்யமாகி வீற்றிருந்து திருவருள் புரிய வேண்டும் என்பதாகும். இதன்பின் மூன்றாவது பிரார்த்தனை கும்பாபிஷேக தினத்தன்று மஹா கும்பாபிஷேகம் நிறைவெய்தியவுடன் பிரார்த்திக்கப்படுகின்றது. அந்த பிரார்த்தனையே தெய்வ சான்னித்யத்தை ஸ்திரப்படுத்தும் பிரார்த்தனையாகும்.

ஸ்வாமின் சர்வ ஜகன்னாத யாவத் சந்திர திவாகரன் தாவத் த்வம் பிரீதிபாவேன் பிம்பேஸ்மின் சன்னிதிர்பவ

சுவாமியே எல்லா உலகங்களுக்கும் தலைவரே எவ்வளவு காலத்திற்கு சூரிய சந்திரர்கள் இருக்கிறார்களோ அவ்வளவு காலத்திற்கு இருத பிம்பத்தில் இருந்து திருவருள் புரிய வேண்டும் என்பதே அந்த மூன்றாவது பிரார்த்தனையாகும்.

வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈயும் இறைவனும் எங்கள் பிரார்த்தனையை அங்கீகரித்து திருவருள் புரியும் பெரும் தன்மை மஹா கும்பாபிஷேக காலங்களில்தான் நடைபெறுவது கும்பாபிஷேகத்தின் சிறப்பாகும்.

சிவஸ்ரீ. தா. மகாதேவக் குருக்கள் (இணுவில்)

# கும்பாபிஷேக மகிமை



மூத்த தொண்டர் செ. இரத்தினப்பிரகாசம் (கொழும்பு)



ஆலய பிரதான குரு சிவஸ்ரீ. க. சிவதாசக்குருக்கள்

புதுக்கோயிலான் 2014 கும்பாபிஷேகத்த ஒட்டிய 2/5/2014 கிரியைகள் நடந்தேறின.

அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்து விளங்கும் இறைவனை உருவத் திருமேனியில் தியானித்து, ஆவாகித்து வழிபடவேண்டிய முறைகளை ஆகமநூல் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்கூறி யிருக்கின்றது. அந்த உருவத்திருமேனியை வைத்து வழிபட வேண்டிய தலம் எத்தகையதாய் அமைய வேண்டும் என்பதையும் ஆகமநூல் சிறப்பாகக் கூறியிருக்கின்றது. இறைவன் உருவத்திருமேனியில் நின்று அடியார்களுக்கு அருள்புரியும் தலம் ஆலயமாகும். அதனைப் பிரசாதம் தேவாயதனம் என்று பல பெயர் கொண்டு அழைப்பதுண்டு. பொதுவாக ஆலயம் என்ற பெயரால் பெரும்பாலும் வழங்கப்படு கின்றது. ஆ-ஆன்மாக்கள் லயம்-ஒடுங்குதல் என்று கருத்தாகும். ஆன்மாக்கள் இறைவன் சந்நிதியை அடைந்து, பக்தியுடன் ஒடுங்கும் தன்மையைப் பெறுவதால் ஆலயம் என்று பெயர் வழங்கலாயிற்று, ஆ-எங்கும் லீயதெ கும்பம் பிம்பம் தம்பம் முதலிய இடங்களில் மறைவாக அதிஷ்டித்து நின்று அருளுகின்றார் என்று இலக்கண முறையாகவும் எருத்துக் கொள்ளலாம். விதிமுறையாக ஆலயத்தை அமைத்து அவரவர் விரும்பும் உருவத் திருமேனியைத் தாபித்துக் கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வருவதை நாம் காண்கின் றோம். இந்தக் கும்பாபிஷேகத்தின் நிகழ்ச்சி ஒழுங்கு முறைகளை நாம் ஊன்றிக் கவனித்தோமானால், பல பல அடிப்படையான தத்துவக் கருத்துக்கள் நம் வாழ்க்கையில் காணக்கூடியதாய் இருக்கும், கும்பாபிஷகம் தொடக்கம் முதல் முடிவுவரைகாணக்கூடியதாய் இருக்கும். கும்பாபிஷேகம் தொடக்கம் முதல் முடிவுவரை நிகழ்ச்சிகளை எட்டு பெரும் பிரிவுகளாகக் காணலாம்.

அவற்றுள் முதலாவது வரித்தல், அனுமதிபெறல், பிரார்த்தித்தல் என மூன்று கொண்டது.

1. அ.வரித்தல்:

ஒரு கும்பாபிஷேகத்தை நடத்தத்தக்க ஆசாரியரைத் தேர்ந்தெடுத்தல், மனிதனுடைய வாழ்க்கை தெய்வப் பண்புடையதாய் அமைய வேண்டுமானால், முதலில் தக்க குருவைத் தேர்ந்தெடுத்துக்

கொள்ளுவது இன்றியமை யாததாகும். முதலில் தக்க குருவைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவது இன்றியமையாத தாகும். அதுபோலவே இறைவனைப் பிரதிஷ்டை செய்யத் தகுதிவாய்ந்த சிவாசாரியர் ஒருவரை முதலில் தேர்ந்தெடுப்பது மிக முக்கியமாகும். ஆசாரியர் நல்லொழுக்கமும் ஆகமசாஸ்திர அறிவும் பக்தியும் நிறைந்தவராய் இருக்க வேண்டும். சிவாசாரியருடைய தவவலிமையாலும், நித்திய நைமித்திக பூசை முறையாக நடந்து வருவதாலும், உருவத் திருமேனியை நன்கு அலங்கரித்துத் தூய்மையாக வைத்திருப்பதாலும் விக்கிரகம் தெய்வத்தன்மையுடையதாய் விளங்குகின்றது என்று ஆகம சாஸ்திரம் கூறுகின்றது. அதில் சிவாசாரியருடைய தகவலிமையை முன்னமாக எடுத்துக் காட்டியிருப்பதால் கும்பாபிஷேகத் திற்கு முதலாவதாக ஆசாரியவரணம் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

**ஆ. அனுமதி பெறல்:**

ஆசாரியர் பாலாலயம் சென்று இறைவனிடம் தருணாலயத்தில் பிரதிஷ்டை செய்ய அனுமதி தருமாறு வேண்டுதல். இதனை தேவாநுஞ்ஞை என்பர்.

அடுத்து ஒழுக்கமும் சீலமும் பொருந்திய தேவமந்திரம் கற்றுணர்ந்த அந்தணர்களைக் கிழக்கு முகமாக மண்டபத்தில் அமரச் செய்து, அவர்களுக்கு சந்தன தாம்பூலம் கொடுத்து, மலரால் அவர்களை அர்ச்சித்து அவர்களிடம் அனுமதி பெறுவதாகும். கற்றுணர்ந்த சபையோர்களே இறைவனைப் பாலாலயத்திலிருந்து தருணாலயத்திற்குக் கொண்டு சென்று பிரதிஷ்டை செய்ய இறைவனிடம் அனுமதி பெற்றோம். அக்கிரியைகளில் மந்திரங்கள் விட்டுப்போகாமலும் கிரியைகள் மாறுபடாமலும் நடத்தித் தரவேண்டும். மேலும் எனக்கும் பிரதிஷ்டை செய்யக்கூடிய தகுதியையும் அருளவேண்டும் என்று ஆசாரியர் பிரார்த்திக்க அவர்களும், 'இறைவனின் பிரதிஷ்டா கர்மாவைச் செய்து முடிக்க உமக்கு ஆற்றல் உண்டாகுக' என்று ஆசி கூறி கூறுவர். இதனைப் பிராமணாநுமதி பெறல் என்பர்.

இறைவனைப் பிரதிஷ்டை செய்ய அந்தணர்கள் வாழ்த்து அனுமதி அவசியமா என்ற ஐயம் எழலாம். கண்ணன் கூறுகின்றான்.

"இவ்வுலகம் இறைவனருளால் இயங்குகின்றது. அந்த இறைவன் எங்கும் வியாபித்திருக்கின்றான். அவனருளைப் பெற உருவத்திருமேனியில் மந்திரம் கூறி ஆவாகித்துப் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. ஆகவே அந்த இறைவன் மந்திரதுக்குட்பட்டவன் அந்த மதிரம் அந்தணர்களால் கற்கப்பட்டு விளங்குகின்றது. மந்திரம் அந்தணர்களால் கற்கப்பட்டு விளங்குகின்றது. மந்திரம் அந்நணர்களுக்குரியதாகின்றது. அந்த அந்தணர்கள் எனக்குப் போற்றத்தக்கவர்கள், ஏனெனில் எல்லா உயிர்களும் வழிபட்டு உய்ய உருவத்திருமேனியில் என்னை ஆவாதிக்கும் மந்திரம் அந்தணரிடம் உறைவதால் அவர்கள் எனக்குப் போற்றத்தக்கவர்கள்" என்று வியந்து கூறினார்.

தாய் தந்தையர் சேர்க்ககையால் குழந்தை உண்டாகின்றது. அக்குழந்தை வளர்ந்து மனிதனாகின்றான். அவன் குருவிடம் சென்று மந்திரத்தைக் கற்றுக் கொள்கின்றான் என்ற நியதி அளவில் மட்டிலும் அவன் அந்தணனாகமாட்டான். தாய் தந்தையர் சேர்க்கையால் உதயமாகின்ற மைந்தனுக்குத் தூய்மை உண்டுபண்ணக்கூடிய சில கிரியை முறைகள் விதிக்கப்பட்டுள்ளன. குழந்தை பிறந்த உடன் தங்கத்தை உரைத்துக் தேனில் கலந்து எல்லாத் தெய்வங்களும் உனக்கு நல்லறிவைக் கொடுக்கட்டும் என்று மந்திர வாழ்த்துக் கூறித் தந்தை மைந்தனின் நாவில் தடவுகின்றார். பின் மூன்று வேதங்களின் சாரமான பிரணவத்தைக் கூறித் தயிரையும் மைந்தனின் நாவில் தடவுகின்றார். வேத மந்திரம் கற்கத் தகுதியுள்ளவனாவாய் என்று வாழ்த்துக் கூறுகின்றார். மேலும் இது போன்ற சில கிரியைகளால் அக்குழந்தை தந்தையின் இந்திரியத்தால் வரும் தோஷமும், தாயின் கார்ப்பவாசத்திலுள்ள தோஷமும் நீங்கப் பெற்றுப் பரிசுத்தமாக விளங்குகின்றது. பின் ஏழாம் வயதில் வேதசாரமான காயத்திரியைத் தந்தை மகனுக்கு உபதேசிக்கின்றார். அவன் முறையாக ஜபித்து வருகின்றான். இதனால் அவன் உள்ளம் தூய்மையடைகின்றது. பின் குருவை அடைந்து வேதத்தை முறையாகக் கற்கிறான். தாயின் கர்ப்பாவாசத்திலிருந்தே தூய்மை பெற்று வளர்ந்து வருகின்ற பாலகன் வேதத்தை கற்பதால் அந்த வேதம் சித்தியுடையதாக ஆகின்றது. ஆகவே அந்தணர் அனுமதி என்பது அவர்கள் உள்ளத்திலிருந்து வருகின்ற வாழ்த்து. அது வேத புருஷனின் வாழ்த்து அனுமதியாகும். ஆகவேதான் இரண்டாவதாகப் பிராமணநுஞ்ஞை கூறப்பட்டுள்ளது.

**இ. பிரார்த்தித்தல்:**

எந்த ஒரு காரியத்தையும் இடையூறு இல்லாமல் நிறைவேற்ற விநாயகப் பெருமான் திருவருள் வேண்டும். காற்று மழை நெருப்பு முதலிய உற்பாதங்கள் நிகழாது மங்கள கரமாகக் கிரியைகள் நிறைவேற நவக்கிரகங் களின் அருள் வேண்டும். ஆகவே, கணாதி ஹோமம், நவக்கிரகஹோமம் இவ்விரண்டையும் சிவாசாரியர் செய்து முடிக்கின்றார் இது பிரார்த்தனையாகும்.

**ii. சுத்திகரித்தல்:**

எந்த ஒரு கரியுத்தையும் செய்து முடிக்கப் பொருள் இன்றியமையாதது. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற முதுமொழியை யாவரும் அறிவர், ஆகவே, சிவதர்மம் செய்து முடிக்கப் பொருள் மிக முக்கியமானது. அந்தப் பொருள் தூய்மை யுடையதாய் இருக்கவேண்டும். அதாவது, நேர்மை வழியில் அப்பொருள் பல வழியாக வந்திருக்கக் கூடும் ஆகவே, அப்பொருளைச் சுத்திகரித்தல் என்ற கிரியையைக் குரு நடத்துகின்றார். சிவாஸ்திர சுத்தமாக்கிப் பதினொரு பாகமாகப் பிரித்து எஜமானிடம் கொடுத்துச் சிவதர்மத்தைச் செய்து முடிக்குமாறு ஆசாரியர் தெரிவிக்கிறார்.

பொருளைச் சுத்திகரித்த பின் குரு தன்னையும் இறைவன் உறைவிடமான ஆலயத்தையும் சுத்திகரிக்கின்றார். மதுபாகம் என்னும் கிரியையைச் செய்து ஆன்ம சுத்தியைப் பெறுகின்றார். நெய், தேன், பழம் இவைகளில் ஆன்ம தத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்ற மூன்று தத்துவங்களையும் பூசித்து மதுபாகத்தை அருந்துகின்றார். அறிந்தோ அறியாமலோ முற்பிறவியிலோ சிவநிந்தை, சிவசாஸ்திர நிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைச் செய்திருந்தாலும் அத்தோஷம் நீங்கப் பெற்றுக் குரு ஆன்ம சுத்தியுடையவராய் விளங்கு கின்றார். பின் பத்து வகையாக நீராடிப் புறச் சுத்தியைச் செய்து கொள்ளுகின்றார். அதனால் உடல் ஆரோக்கியம், பலவகையாக நீராடிப் புறச் சுத்தியைச் செய்து கொள்ளுகின்றார். அதனால் உடல் ஆரோக்கியம், பலவகையான பாபங்கள் நீங்குதல், மனதில் ஒருமைப்பாடு, திரிகரணசுத்தி இவைகளைப் பெறுகின்றார். நல்லறங்களைச் செய்யத் தொடங்கும்பொழுது தீயவர் தீயசக்திகளை உபயோகித்து இடையூற்றை விளைவிப்பர். அத்தீய சத்திகளை நீக்க ரட்சோக்ந சாந்தியைக் குருசெய்கின்றார். நான்கு திசைகளிலிருந்து வரும் தீயசக்திகளை அழிக்கும் ஆற்றல் மிக்க தேவர்களே உங்களுக்கு வணக்கம்-எம்மைக் காத்தருள் புரிவீர்களாக என்று பிரார்த்தனை அமைந்துள்ளது. தீயசக்தியை நீக்கியபின் ஆலயத்தின் வெளிவீதியில் எண் திசைகளில் நின்று அமைதி நிலையைக் குலைக்கும் யக்கர், அரக்கர், பூதங்கள், பிசாசுகள், பிர்மராக்ஷஸர், மஹாகாளி, சரளீவடுவகர் ஆகிய எண்மருக்கும் பலி உணவு கொடுத்து மரியாதை செய்து, நீங்கள் இவ்விடத்தை விட்டு நீங்கி மலையடிவாரம், காடு, ஆற்றங்கரை, பாலைவனம், மயானம் முதலிய இடங்களிற் சென்று வசியுங்கள்: இங்கே இறைவனுடைய பிரதிஷ்டை நடைபெறப் போகின்றது என்று கூறிப் பிரவேச பலி என்ற கிரியையைக் குரு செய்கின்றார். தீயசக்திகளை விரட்டி அரட்டி அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவரைத் தூரச் சென்று வசிக்குமாறு குரு ஆணையிடுகின்றார். பின் கிராம சாந்தி என்ற கிரியையை நடத்துகின்றார். ஆலயம் மட்டும் சுத்தமானாற் போதாது. அக்கராமத்தில் வசிப்பவர்களும் நோய் பிணியற்றவர்களாய், அகால மரணமற்றவர்களாய், வறுமையற்றவர்களாய் விளங்கவேண்டும். அப்பொழுதுதான் ஆலயம் சிறப்புடையதாகும். அடியார்கள் வந்து தரிசிப்பதனாற்தான் ஆலயம் தெய்வ சாந்நித்தியம் உடையதாய் விளங்கும். ஆகவே கிராம நன்மைக்காகச் செய்யப்படும் சாந்தியாதலால் கிராமசாந்தி என்று பெயர் வழங்கப்பட்டது. அதனைச் செய்து அதன்பின் பிரமா, இந்திரன், அக்கினி முதலிய எண் திசைப் பாலகர்கள் அவ்விடத்தில் வந்து வசிக்கக் கூடியதாகப் பூமியைச் சுத்திகரிக்கின்றார். அதன் பொருட்டு வாஸ்துசாந்தி என்ற கிரியையைச் சிவாச்சாரியர் செய்கின்றார்.

**வியாகரசிரோமணி தி. கி. சீதாராமசாஸ்திரிகள் அவர்கள் எழுதி உதவியது**

கும்பாபிஷேக மலர் வெளியீடு
நன்றியுடன் புதுக்கோயில்
மலராசிரியர்
(2/5/2014)

# ஆலயத்தில் ஆசாரம் காப்போம் அனாசாரத்தைக் களைவோம்

**கலாநிதி (திருமதி) கலைவாணி இராமநாதன்,**
ஓய்வுநிலைப் பேராசிரியர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆலயம் - ஆன்மா லயப்படும் நிலையம் - உயிர் ஒடுங்குமிடம். ஆன்மா இறைவனுடன் லயப்பட்டு ஒன்றுபட்டு இருப்பதை காட்டுவது நந்தியின் வடிவமாகும். பலிபீடத்தில் மும்மலங்களையும், பஞ்சமாபாதகங்களையும் பலியிட்டு உள்ளத்தை சுத்திகரித்து சித்தசுத்தி பெற்றுவிட்டால் அன்புநிலை ஒன்றே உயிரில் கலந்துவிடும். அந்த அன்புநிலை சிவமாகும். பாங்கினை புலப்படுத்தும் "அன்பும் சிவமும் ஒன்றாதல் ஆன்மாவும் பரமான்மாவும் அன்பிலே ஐக்கியப்பட்டு நிற்றலே" சிவஞானபோதம் கூறும் "ஏகனாகி நிற்றல்" ஆகும். எப்படி இறைபணியில் நிற்பது ஏகனாக இறைபணி நிற்றல், என்றநிலை ஒருவருக்கு வாய்த்துவிட்டால் எல்லோரிடமும் சமநோக்கு பேதமின்மை ஏற்றத்தாழ்வின்மை, மனச்சமநிலை உண்டாகின்றது. அதன் பின்னர் இறைவனால் இட்ட சமய, சமூகப்பணிகளை ஆற்றுவது இயல்பாகவே அன்புநிலையினால் உருவாகும். இவ்வாறு நம்மை நாமே உருவாக்கிக்கொள்வதற்கு ஆலயவழிபாடு மிகவும் இன்றியமையாதது. வழிபாடு என்றால் வழிப்படுத்தல், வழிகாட்டுதல் ஆற்றுப்படுத்தல் எனப்படும். ஒருவரை நன்னெறியில் ஒழுங்கு முறையில் நற்பண்புகளில் மனிதநேயத்தில் நிலைபெறுமாறு வழிப்படுத்தல் அல்லது ஆற்றுப்படுத்ததல் எனலாம். ஆலயத்திற்கு வழிபடுதற்கு - இறைவனிடம் பக்தி செலுத்துதற்கு அன்புகாட்டுவதற்கு பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதற்காக எப்படி? எவ்வாறு? செல்லவேண்டும் என ஏராளமான நற்பண்புகளை ஆறுமுகநாவலர் கூறுகிறார். ஆனால் இன்றோ ஆலயங்களில் பெரும்பாலும் தலைவிரிகோலமாகவே பெண்கள் வருகின்றனர். துன்பநிகழ்வுகளில் தம்மையறியாமலே தலைமயிர் அவிழ்ந்து விழுவதும் கவனிக்காது அந்தக்காலங்களில் இந்திய, இந்துப் பெண்கள் அமங்கல நிகழ்வுகளில் அழுதுகொண்டிருப்பர். இதிகாசங்களிலும் பாஞ்சாலி தலைவிரித்த கோலமாகவே பின்னர் வாழ்ந்தது, பாரதப் போராக உருவெடுத்ததைக் காண்கிறோம். இராவணனால் தலைவிரிகோலமாக்கப்பட்ட சீதை அசோகவனத்திலிருந்து மீளும்வரை கொண்ட அக்கோலம் இறுதியில் இராமாயணப் போராக உருவாகியதை யாவரும் அறிவர். தற்காலங்களில் மங்கல நிகழ்வுகளிலும் தலைவிரித்து விடுவது அலங்காரமாகிப் போனது. திருமண வீடுகளிலும் - மணவறைகளில் மணமகள் தலையைவாரி பின்னலிட்டிருக்க உதவிக்கு வரும் தோழியரோ தலைமயிரை அவிழ்த்து ஒரு கிளிப் மட்டும் சொருகிய நிலையில் தொங்கிக் கொண்டிருக்கும். அருகிலோ அந்தணர் குடுமி முடிந்தபடி குத்துவிளக்கிலும் தீபங்கள் எரிந்தபடியிருக்கும். தற்செயலாக தலைமுடி தீப்பற்றிவிட்டால்.. என பந்தலில் உள்ள ஒருசிலர் மனம் கலங்கியபடியிருக்கும்.

ஆலயங்களில் ஆசாரம் பேணுதல் என்பது சுகாதார ஒழுங்கு முறையினையும் - உடல் உள்ளம் ஆகியவற்றின் ஒழுங்குமுறையினையும் சுட்டும். ஆடை அணிதலில் ஒழுங்குமுறை அவசியம். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல் முறைமை. நிலத்தில் வீழ்ந்து வணங்கும்போது ஆடைகள் விலகாது ஒழுங்காக இருப்பதற்கு முன்பெல்லாம் சேலை கட்டுதல் பயன்பட்டது. காலம்செல்ல சேலைகட்டும் ஆசாரநியமம் மெல்ல விலக பஞ்சாபிஉடைக் கலாசாரம் வந்தது. அதுகூட பெண்களைப் பொறுத்தவரை உடலுக்கும் மனத்திற்குமான பாதுகாப்பான உடைதான். பின்னர் ஜீன்ஸ், ரொப் (TOP) எனவும் குட்டைப் பாவாடை, சட்டை, ரைற் ளமசைவ, ரீசேட் என ஆடை ஒழுங்கு அனாசாரமாக மாறியது. அதுமட்டுமல்ல ஆலயங்களிலும் தலைமுடியை அவிழ்த்துவிட்டு வரும் வழக்கம் தலையெடுத்தது. துர்க்காபுரம் அம்மன் ஆலயத்திலும், நயினை அம்பிகையின் ஆலயத்திலும் ஆலய பரிபாலனசபையினர் தலைமுடியை அள்ளிமுடியுங்கள் அல்லது பின்னலிட்டுக் கட்டுங்கள் - ஆசாரசீலராக ஆலயத்தில் வழிபாட்டுக்கு வாருங்கள் என ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புக்கள் வந்துகொண்டிருப்பதையும் அவதானித் துள்ளோம்.

ஆயினும் ஒரு சிலர் தவிர பலரும் தமிழ் சைவாசார நியமங்களைக் கவனிப்பதுமில்லை, அக்கறை கொள்வது மில்லை என்பது மிகவும் கசப்பான விடயம். சமீபகாலங்களில் ஆலயத் திருவிழாக்களில் பெண்கள் என்றால் தாய்மார்களே தலைவிரித்து வரும்போது பிள்ளைகட்கு யார் எமது ஆசார ஒழுக்கங்களை சொல்லிக் கொடுப்பார்கள் என பல ஆண்கள் எம்மிடம் குறைப்பட்டுக்கொள்வர். ஆண்களும் தந்தை ஸ்தானத்தில் கணவன் ஸ்தானத்தில் இருப்பவர்கள் தானே அவர்களும் மனைவிக்கும் குழந்தைகட்கும் அறிவுரை சொல்லலாம். சொல்ல முடியவில்லை எனில் அதீத அலங்காரப்பிரியர்களாக அல்லது சொல்வதற்குப் பயந்தவர்களாக இருக்கலாம். ஆலயங்களில் பிரசாதங்கள், படையல்கள், தீர்த்தம், பால், பலகாரம், பழங்கள் தூப தீப, விபூதி, சந்தனப் பிரசாதங்கள் வைக்கப் பட்டிருக்கும் இவற்றின் மீது காற்றிலே ஒரு தலைமுடிபறந்து சென்று விழுந்தாலே அது அனாசாரமாக குற்றப்பட்ட படையலாக மாறிவிடும் என்பது ஆகம சாத்திரங் கூறும் ஒழுங்குமுறையாகும்.

எனவே குளிக்கப்போய் சேறு பூசுவதாக எமது ஆலய பண்பாட்டை நாமே புறக்கணிப்பது அறியாமை என்றே சொல்ல வேண்டும். சனிபகவானுக்கு பயப்படாத சைவமக்களே குறைவு. அதற்காக அட்டமத்து சனிகாலம், ஏழரைச் சனிக்காலம் புரட்டாசி மாத சனி விரதம் என விரத ஆசாரத்தைக் கடைப்பிடிக்கும் மக்களுக்கு கறுப்புநிறத் தலைமுடி தவறுதலாகத் தன்னும் நவக்கிரக சன்னிதியில் விழுந்துவிட்டால் படையல்களை அசுத்தமாகினால் பின்னர் விரதபங்கம் மட்டுமல்ல நிவாரணமே கிடைப்பதற்கு பலவருடங்கள் ஆகலாம் என்ற சமய ஒழுக்க அறிவு சைவமக்களிடம் அருகிப்போய் விட்டதைத் தான் இவை காட்டுகின்றன.

அலங்காரமாக வருவதற்குத் தடையில்லை. அலங்கோலமாக வராமல் இருப்பதே முக்கியமாகும். பழையன கழிதல், புதியன புகுதல், என்பது ஆலயங்கட்டும் பண்பாட்டுக்கும் கூடப் பொருந்தும். ஆனால் எதை விடுவது எதை எடுப்பது என்பதில்தான் ஐயப்பாடுகள் எழுகின்றன. என்ன நடந்தாலும் மொழிக்காகவும் சமய ஆன்மீக நெறிக்காகவும் எதையும் உயிரையுமே இழக்கத்துணிந்த ஓர் சமுதாயத்தில் சைவப்பண்பாடுகள் மறக்கப்படுவது மிகவும் துயரமான நிலையாகும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் செய்த சீர்திருத்தப் பணிகளை மெச்சிப் பேசும் நாம் அவற்றை நடைமுறையில் கடைப்பிடிக்கிறோமோ என்பதனை எத்தனைபேர் எண்ணிப் பார்க்கிறார்கள் என்பது பலரும் அறியாத விடயமே. மேல்நாட்டு வளர்ச்சியில் நிச்சமயமாக எமது இந்து சமூகம் அவர்களிடமிருந்து சுவாமி விவேகானந்தர் கூறியவாறு அரசியல் ஜனநாயகம், அறிவியல், பொருளியல் போன்ற வளர்ச்சிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். பதிலுக்கு மேலைநாடுகட்கு இந்திய ஆனமீகச் செல்வத்தை வழங்க வேண்டும் என்பதே இந்துக்களது ஆன்மீக கலாசார நிலைப்பாடாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்வது சிறப்பானது.

பண்பாட்டின் ஆணிவேர் இல்லத்திலிருந்து குறிப்பாகப் பெண்களிடம் இருந்துதான் ஆரம்பமாகின்றது என்பதனால் பெண்கள் பற்றிக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. எங்கள் தலைமுறையினர் தலைவிரித்துத்தான் இன்னும் எமது நாட்டுப்போர் ஓயவில்லையோ என்ற ஆதங்கமும் எழுவதுண்டு. தவிர தமிழ் சைவப்பண்பாட்டிலே நிலைபெற்ற சமூகம் ஆலயங்களின் வாயிலாகவும் தமது பக்திக் கலாசாரத்தைப் பேணி வருகிறது. அந்த நிலையில் இந்து ஆலயங்களின் பரிபாலனத்திலும் ஒரு சோகம் யாதெனில் ஒலிபெருக்கிகளின் அதிர்வு ஒலிகள் - சப்தங்கள் இவை கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டும் என சொல்லாமல் சொல்கின்றனவோ என்னவோ அமைதியும் ஆசாரமும் அழகும் பேணும் ஆலயங்களில் ஒலிபெருக்கி ஓசைநயமாக ஒலிக்க வேண்டுமே தவிர அயலில் உள்ள படசாலைகள், இதய நோயாளிகள், இரத்த அழுத்தமுள்ளவர்கள், மாணவர்கள் இவர்களது கல்வி ஆசார ஒழுங்குகளைப் பாதிப்பதாக இருக்கக் கூடாது என்பது சமூக நலன் பேணுபவர்களின் அக்கறை என்பதனையும் புரிந்து கொள்வதும் அவசியமாகும்.

ஆலய பரிபாலனசபைகள் இவைகளில் அக்கறையும் கவனமும் எடுக்கமுடியும். இளம்தலைமுறையினரின் அன்பு, இறை நம்பிக்கை சமூகநலம் என்பவற்றை வளஉப்பதில் ஆலயங்கட்கும் பெரும் பங்குண்டு. சிவாச்சாரியார்கள் என்றாலே சிவா-ஆசாரம் பேணுபவஉகள் என்ற ஒரு பொருளும் அதற்குள் உள்ளது. அனாசாரத்தைக் களைந்து ஆலயங்களில் அன்பு, ஒழுங்கு, பண்பு விருத்தி இவற்றை வளர்ப்பதிலும் வழிபடுவோருக்கு வழிபடுத்துபவஉகளாக இருப்பதும் வரவேற்கத்தக்கது. சிவநிந்தை, குருநிந்தை மிகப்பெரிய பாவகாரியம் என்பதை திருமூலர்

*"பத்தினி பத்தஉகள் தத்துவஞானிகள்*
*சித்தம் கலங்கிடச் சிதைவுகள் செய்தவர்*
*அந்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாய்ந்திடும்"*

என ஆழமாக எடுத்துக் கூறியதை இளம் தலைமுறையினருக்கு உணர்த்தும் கடமை பெரியவஉகட்குண்டு. பாடசாலைகளில் கல்வி கற்கும் தலைமுறையினர் பக்தியையும் ஒழுக்கத்தையும் ஆலய வழிபாட்டிலே கற்றுக்கொள்ளமுடியும். இவ்வாறு இளந்தலைமுறையினரை நல்லொழுக்கத் திற்கும் ஆசாரத்துக்கும் அழைத்துச் செல்வது பெற்றோர்கள், ஆசிரியர்களது தலையாய கடமையாகும்.

*"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உறவுசீலம்*
*வழுக்கிலாத்தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல், வாய்மை அழுக்கிலாத்துறவு*
*அறிவொடு அர்ச்சித்தல் ஆதி இழுக்கிலா அறங்கள்"*

என்னும் சைவசித்தாந்த வாழ்வியல் செல்நெறியின் சாரமும் சரியை, கிரியை வழிபாடுகள் மகோற்சவங்களை நெறிப்படுத்தும் ஆலயங்கட்கு மேற்குறித்த ஆசார ஒழுக்கவிழுமியங்களை சமூகத்திற்கு கற்றுக்கொடுக்கும் கடமையும் இருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதே ஆகும்.

இன்றைய கல்வி நிறுவனங்களும் உயர் கல்விசாலைகளும் மாணவ சமூகத்தை துறைசார் வல்லுனர்களாக நிபுணர்களாக ஆக்குவதில் காட்டும் கரிசனமும் ஒத்துழைப்பும் மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால் அத்தனை புலமைத்துவமும் திறன்களும் சமுதாய, ஆலய ஆசாரங்களைக் காப்பதிலும் பயன்படுமானால் எமது சைவ தமிழ் கலாசாரம் மீண்டும் புத்தெழுச்சியடைய முடியும். கல்விச்சாலைகள் எல்லோரையும் அறிவாளிகளாக விஞ்ஞானிகளாக மருத்துவஉகளாக பொறியியலாளராக, ஆசிரிய வாண்மை விருத்தியுள்ளவர்களாக உருவாக்குவதில் வெற்றி பெற்று வருகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் மனிதர்களை நல்லமானிடத்தை உருவாக்குவதில் பின்தங்கிய நிலையே காணப்படுகின்றன என்பதனை அமிஉதானந்தமயிமிஷன், சாயி சிந்தனை என்பவற்றில் வாழ்க வழமுடன் என்ற நிறுவனங்களும் ஞானியரும் பலமுறை சுட்டிக்காட்டியதும் இங்கு நினைவுகூரத்தக்கது. உலக வங்கியும், உயர் கல்விசாஉ நிறுவனங்களும் எமது தலைமுறையினரின் கல்விச் செயற்பாடுகளைச் தொழில்சார் கல்வியாக சந்தைப்படுத்தும் கல்வியாக , அறிவுசார் பொருளாதாரத்தை மேம்படுத்தும் கல்விப்புலமாக மாற்ற உத்தரவு போடுவதும் தெரிகின்றது. அதனால்தானோ என்னவோ கல்விக் கோயிலாக விளங்க வேண்டிய பாடசாலைகளும் கலை ஆசார திருக் கோவில்களும் இன்று வணிகமயப் பட்டிருப்பதனை மனிதநேயம் பேணும் அனைவரும் உணர்ந்தும் வெறுமே வருத்தப்படுவதும், திருத்த முடியாதவிடத்து ஒதுங்கி நிற்பதும் காலத்தின் கோலமாகி விட்டதையும்

உணர்கிறோம். எமது நாட்டுச் சித்தர்பெருமான் தவயோகசுவாமிகள் தமது நறசிந்தனைப் பாடல்களில் சமுதாய ஒழுக்கத்தை வலியுறுத்தும்போது,

*"ஒழுக்கம் விழுப்பம் தரும்தம்பிமாரே*
*ஓம் என்று சிந்தை செய்வீஉ தம்பிமாரே*
*அழுக்காறு அவா வெகுளி தம்பிமாரே*
*ஆன்மாவைப் பந்திக்கும் தம்பிமாரே"*

என இளம் தலைமுறையினர் தமது ஒழுக்க ஆசாரத்திறநனில் அக்கறை செலுத்த வேண்டுமென அறிவுறுத்தினார்.

திருக்கோயில்களிலும் கல்விச் சாலைகளிலும் அனாசாரம் நிலவினால் உலக ஒழுங்கும் பாதிப்படையும் என்பதற்கு இன்றைய இயற்கையின் சூரியவெப்பத்தகிப்பும், கிணறுகளில் மழையற்றுப் போனதால் நீர் வற்றிப் போவதும், துர்மரணங்களும், விபத்து மரணங்களும் தரும் செய்திகளாகப் பத்திரிகைகள் தாங்கி வருகின்றன. மணிவாசகருக்காகக் கூலியாளராக வந்த சிவனாஉக்கு பாண்டிய மன்னன் பிரம்பால் அடித்த அடி அனைவருக்கும் விழுந்த அடியானது அதாவது நாடும் மக்களுமே சிவனடியாரை நிந்தித்த பாவத்தை அனுபவித்தனர் என்பது சைவபக்திக் கால வரலாறு பாண்டிய மன்னனோ மக்களின் அழுகுரல் தாளாது மதுரைத் திருத்தலத்து இறைவனை நினைத்து தான் தவறு செய்து விட்டேனோ என வருந்தும் பாடலில்

*"ஆதியாம் கடவுள் ஆலவாய் அமலன்நங்கை*
*பாதியான் கடந்தபூசை பண்டையில் குறைந்ததுண்டோ*
*நீதியான் தவத்தின்மிக்காஉ நெஞ்சகம் புழுங்கமண் மேல்*
*தீதுயான் செய்ததுண்டோ செப்புமின் அமைச்சர்காள்"*

என்றிவ்வாறு அறவோரை, பெரியோரை அடியாஉகளை யான் நிந்தித்தபாவம் தான் இவ்வாறு தீமையாக விளைந்ததோ என துயரடைந்தான். மன்னராயினும் என்ன சாதாரண மக்களாயினும் என்ன அவரவஉ வினைகளின் பயனை அவரவர்களே அனுபவிக்க வேண்டும் என்பது இங்கு வெளியாகின்றது. எனவே அகம்பாவம், ஆணவம், தற்பெருமை, தற்செருக்கு முதலிய கீழானகுணங்களை அகற்றி மேலான நன்னெறியான ஆசாரத்தில் நிலைபெறவே ஆலயம் வாருங்கள் என நந்தியெம் பெருமானுடன் அமைந்துள்ள பலிபீடம் தெரிவிப்பதை அனைவரும் உணர்ந்து வழிபடவேண்டும். தீயகுணங்களை அனாசாரப் பண்புகளைப் பலியிட்டு உன்னத மனிதத்துவத்தை வளர்த்தெடுப்பதையே ஆலய பலிபீட அமைப்பும் புலப்படுத்துகிறது.

மேலும் சிவாலயங்களும் தமது வழிபாட்டு ஒழுங்கு முறைகளில் நித்ய, நைமித்ய கிரியைகளின் போது மகோற்சவ காலங்களிலும் நற்பண்புகளை ஆலயத்திற்கு வருவோரிடம் அறிவுறுத்த வேண்டும். ஆலயபரிபாலன சபையினரும் ஆலயங்களில் ஆசார ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதில் அக்கறை செலுத்துவதும் சிறப்பானதாகும். தற்காலத்திலே

தர்ம காரியங்களையும், ஆசார நியமங்களையும், மக்களிற்கு அமைதியான ஆனந்தமான வாழ்வையும் அளிக்குமாறு இறைவனிற்கு பிரார்த்தனை செலுத்தவேண்டிய ஆலயங்கள் பலவற்றிலும் பல சீர்குலைவுகளும் திருட்டுக்களும், வழக்குகளுக்கு செல்லும் நிலைமைகளுமே தோன்றியுள்ளன என்பதற்கு நீதிமன்றங்களுக்கு வரும் வழக்குகளே தக்க சான்றாகும்.

*"ஆதியிலே வழிபாடு சார்ந்த பெருங்கோயில் பல*
*சாதி மதச் சாக்கடையாய் சண்டாளர் இருப்பிடமாய்*
*நீதி அறம் அழிந்து வரல் நின்மலனே நீ அறிவாய்*
*கோதுகளை அறுத்தும்குணம் பெருகச் செய்யாயோ"*

என்ற பாடலில் குறிப்பிட்டவாறு சமுதாயத்தில் சாந்தி நிலவுவதற்குப் பதில் கோயில்கள் சண்டை சச்சரவுகளின் பிறப்பிடமாகி விட்ட தற்கால நிலைமைகளையும் படம் பிடித்துக் காட்டுவதாகவேயுள்ளது.

ஆலயங்கள் ஒழுங்குமுறையில் செயற்படுவது சைவமக்கள் கைகளிலும், ஆலய நிர்வாகம், சிவாச்சாரியார் என்போரது பங்களிப்பிலும்தான் தங்கியிருக்கிறது. அண்மைக்காலமாக எமதுசமுதாயத்தில் இடம்பெறும் வன்முறைகள், ஒழுங்கீனங்கள், துன்புறுத்தல்கள் என்று போரின் பின்னரான அமைதியற்ற சூழ்நிலைகள், கலாசார சீர்கேடுகள் என்றிவ்வாறு பல்வேறு சாவால்களை சந்திக்கவேண்டிய சூழலில் எமது சமூகம் சிக்கித்தவிக்கிறது. கற்றல் செயற்பாடுகளை தனியே முன்னெடுப்பதுடன் நில்லாது எமது ஆலயங்களில் கலா ஆசாரத்தை மேம்படுத்துவதுடன் ஒழுக்கம் - ஒழுங்குமுறைமை சார்ந்த ஆற்றுப் படுத்தலையும் இயன்றவரை மக்கள் மத்தியில் பயிற்றப்படவேண்டும். கோயில் சார்ந்த வாழ்வியலை கைக்கொள்ளும்போது பிறழ்வு நடத்தைகள் குறையும். சிறப்பான எதிர்கால இளம் சந்ததியினர் உருவாகுவர். அதனால் எங்கள் இளம்தலைமுறையினரை புதிய உற்சாகத்துடன் மாறிவரும் சமுதாய கலாசார பண்பாட்டு அறிவியல் மாற்றங்களுக்கேற்ப சிறப்பான வழியில் கட்டமைக்கவும் - எதிர்காலத்தில் நன்னெறிகளில் - நல்லொழுக்கப் பாதையில் பயணிக்கவும் ஆலயங்களுடன் இணைந்து பெரியோஉகளும், இந்து நிறுவனங்களும், சமூகசேவை மையங்களுமாக அவஉகளை ஆற்றுப்படுத்த உதவவேண்டும் என எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்"பிரமணிய சுவாமியின் திருப் பாதங்களைப் பணிந்து இறைஞ்சுவோம்.

கற்பக்கிரகத்தின் முற்புறத்தில் அமைக்கப்பட்டுள் யாக மண்டபம்



யாகசாலை நிர்மானம் கும்பங்கள்

படப்பிடிப்பு : 2/5/2014 : பதிப்பாசிரியர்

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**
(இந்து நாகரிகத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - முன்னாள் முதல்வர்)

திருக்கோயில்களின் தலைவாயிலில் வானளாவ விளங்கும் உயர்ந்து விளங்கும் கோபுரங்கள் தூலலிங்கம் என்ற சிறப்புப் பெறுவன. கோயிலின் கம்பீரத் தோற்றத்திற்கும் வனப்பிற்கும் கோபுரங்களே காரணமாகின்றன. 'கோலக் கோபுரக் கோரணஞ் சூழாக் கால்களாற் பயனென்' என்ற நாவுக்கரசரின் வாக்கு கோபுரத்தின் மகிமையைக் கூறுகின்றது. கோபுரத்துடன் கூடி விளங்கும் கோயில்தான் எல்லா நிலைகளிலும் நிறைவு பெற்றதொன்றாக அமையும். எனவே கோபுரம் கோயில்களுக் குரிய இன்றியமையாத அங்கமாக விளங்குகின்றது. கலைச்சிறப்பும் தத்துவ மகிமையும் கொண்டு மிளிர்வன கோபுரங்கள்.

திருக்கோயிலில், கர்ப்பகிருகம் விமானம், மண்டபங்கள், பிராகாரம் போன்ற பல்வகை அம்சங்களும் சிறப்படைவதற்குத் தலைவாயிலில் சிறந்து விளங்கும் கோபுரமே துணைசெய்கின்றது. எனவே இக்காரணம் பற்றியே பண்டைய நாட்களில் மன்னர்கள் தாம் எழுப்பிய கோயில்களில் கோபுரங்களையும் சிறப்பாக அமைத்தனர். கோபுரத்தின் அமைப்பிலே சிறந்ததொரு தத்துவம் உள்ளது. பூமியிலே ஆழ்ந்தும் அகன்றும் ஆகாய வெளியிலே உயர்ந்தும் விளங்குவது கோபுரமாகும். மூலத்தானத்துள் அமைந்து விளங்கும் சூக்குமலிங்கம் நித்திய நைமித்தியக் கிரியைகள் நிகழும் போது அடியார்கள் உள்ளே நின்று வழிபடுவதற்குரியது. சூக்குமலிங்கம் ஒரு கோயிலில் எழுந்தருளி அருள்பாலிக்கும் மூர்த்தியை அறிந்து கொள்ள ஏதுவாகின்றது. கொடி மரத்தடியில் அமைந்து விளங்குவது பத்திரலிங்கம் ஆனால் தூலலிங்கமெனச் சிறப்புப் பெறும் கோபுரமோ துலாம்பாரமாகத் தூரத்தே நின்று கைதொழுது வழிபடுவதற்கும் வசதிக் குறைவான காலங்களில் கோயில் தரிசனம் செய்ய முடியாத வேளைகளில் வழிபடுவதற்கும் பெருந்துணை புரிவது இவ்வாறு சகல நிலையங்களிலும் சிறப்புப் பெறும் கோபுரத்தை ராஜகோபுரம் என்றழைப்பர். இறைவனது சாந்நித்தியம் கோபுரத்திலும் நிறைந்து விளங்கும்.

தென்னாட்டிலும் ஈழத்திலும் காலங் காலமாக எழுச்சி பெற்றுவரும் திருக்கோயில் களில் கோபுரங்கள் எமது பண்பாட்டுச் சின்னமாக விளங்கி உலகளாவிய நிலையில் எமது பண்பாட்டுப் பெருமையை பறைசாற்றி நிற்கின்றன.

தமிழ் நாட்டிலே உள்ள கோயில்களில் கோபுரங்கள்தான் அடியார்களை வரவேற்று நிற்கின்றன. கோபுரத்தை தரிசித்த மாத்திரத்தில் பரம்பொருளின் தெய்வீகப் பெருமை எமது உள்ளங்களில் குடிகொண்டு விடுகிறது. கோயில் என்றால் கோபுரமே எனக் கூறக்கூடிய அளவுக்குத் தமிழகத்தில் உள்ள கோயில்கள் தோறும் எடுக்கப்பட்டுள்ளன. எனவே கோயில் எழுந்த சூழலில் தெய்வீக மணங் கமழச் செய்வனவாக இவை விளங்குகின்றன.

கோயில் வாயிலை அலங்கரித்து நிற்கும் கட்டிட அமைப்பாகிய கோபுரத்தின் வரலாறு சுவையானதொன்று. தமிழகத்திலே கோயிற் கட்டிடக்கலை சிறப்பாக பல்லவர் காலத்திலிருந்துதான் மேன்மையடைகின்றது. மிகவும் தொன்மையான கோபுரம் எனக் குறிப்பிடத்தக்கன. பல்லவ மன்னன்

இராஜ சிம்மன் எடுத்த கோயில்களில் தான் காணப்படுவதாக அறிஞர் கருதுவர். காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் மாமல்ல புரத்தில் எழுந்த கடற்கரைக் கோயிலும் மிகச்சிறிய கோபுரங்கள் உள்ளன. இக் காலக் கோயிற் கட்டிட அமைப்பில் நாம் காணும் சிறப்பம்சம் யாதெனில் கருவறையை அலங்கரிக்கும் விமானம் உயரமாகவும், கோபுரம் மிகச் சிறியதாகவும் அமைந்து விளங்குவன. வாயிலில் மேற்பகுதியில் ஒரு சிறிய துவாரசாலை மட்டும் காணப்படக்கூடியது.

பல்லவ மன்னர்களையடுத்து கோயில் திருப்பணிகளில் தம்மைச் சிறப்பாக ஈடுபடுத்திய பேரராசர்கள் நிர்மாணித்த கோயில்களில் கோபுரங்கள் விமானங்களை விடச் சிறியவையாகக் கட்டப்பட்டன. சில கோபுரங்களின் கீழ்ப்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டு விளங்குகின்றன. சோழர் காலத்தில் இராஜராஜ சோழனின் காலம் சிறப்பு வாய்ந்தது. இவன் எடுப்பித்த தஞ்சைப் பெருங்கோயில் ஒரு புதிய மரபைக் கொண்டு விளங்கியது. இவனுடைய காலத்திலும் கருவறையின் மேல் உள்ள விமானம் உயர்த்தியே கட்டப்பட்டதாயினும் அதன் முன்னர் இரண்டு கோபுரங்கள் உள்ளன. வெளியில் உள்ளது உயரமாகவும் உள்ளே உள்ளது உயரக்குறைவாகவும் கட்டப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கோயில் கோபுரங்கள் திருவாயில் என்ற பெயர் பெற்றன. விமானத்தின் முன்னர் இரு கோபுரங்களை அமைப்பது சோழர் காலத்தில் முக்கிய மரபாக இருந்தது. இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து கோயிலின் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப்படும் மரபும் தொடங்கியது. எடுத்துக் காட்டாக தில்லையில் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் 12ம் 13ம் நூற்றாண்டில் கட்டப்பட்டன. இவை ஏழு நிலைக் கோபுரங்களாகக் கட்டப்பட்டன. எனவே எழுநிலைக் கோபுரம் என்ற சிறப்புப் பெயர் ஏற்படலாயிற்று. அடிப்பகுதி அகன்று பரந்து விளங்கிய இக்கோபுரங்கள் சுமார் 100 அடி உயரம் எழுந்தன.

இத்தகைய கோபுரங்களில் கீழ்ப்பகுதியில் பல பரிவார தெய்வங்களின் உருவங்களும் மேற்பகுதியில் முக்கிய தெய்வத்தின் பல தோற்றங்களும் சிற்பங்களாக இடம்பெற்றுள்ளன. கோபுரத்தின் நுழை வாயிலின் இரு மருங்கும் நிலைக்கால்களில் பரதநாட்டிய கரணங்கள் சிற்பங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சோழர் காலத்தையடுத்து தமிழகத்தை யாண்ட விஜயநகரப் பேரரசு மன்னர்கள் கோபுரங்களையமைக்கும் பணியில் பல சிறப்பம்சங்களைப் புகுத்தினர். இவர்கள் புகழ் வாய்ந்த கோபுரங்களை எழுப்பினர். கோயிலின் வாயிலை இத்தகைய வானளாவ எழுந்த கோபுரங்கள் பெரும் வனப்பையும் கம்பீரத்தையும் எடுத்துக் காட்டின. காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களில் இவை போன்ற கோபுரங்கள் எழுந்தன. விஜய நகர மன்னர் வரிசையில் கோபுரப் பணியில் சிறந்து விளங்கியவர் கிருஷ்ண தேவராயர் ஆவார். இவர் 180 அடி உயரத்திற்கு மேல் கோபுரங்கனை எழுப்பியவர். இவரது கோபுரங்கள் ராயர் கோபுரம் என்று அழைக்கப் படலாயிற்று எனவே இக்காலப் பகுதியைக் கோயிற் கட்டிடக்கலை வரலாற்றில் கோபுர காலம் எனக் குறிப்பிடலாம். இம் மன்னகளது பிரதி நிதிகளாகிய நாயக்க மன்னர்களும் உயர்ந்த கோபுரங்களை எழுப்பியுள்ளனர். திருமலை மன்னர் மதுரையில் எழுப்பிய கோபுரத்தில் எண்ணற்ற அழகிய சுதை உருவங்களை வைத்து தனது தெய்வீக பக்தியை வெளிப்படுத்தியுள்ளான். இன்றும் இத்தகைய கோபுரங்கள் காண்போரின் உள்ளங்களில் தெய்வீகப் பெருமையையும் வரலாற்றுப் புகழையும் உணர்த்தி நிற்கின்றன.

கோபுரங்கள் புராண இதிகாசங்களைக் கட்புலனாக்கும் வெற்றி வாய்ந்தன. அவற்றில் இடம்பெறும் சிற்பங்கள் தெய்வீக வரலாறு, கலை, தத்துவப் பொருள் ஆகியவற்றை விளக்கி நிற்கின்றன. கோபுரங்கள் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று ஆகிய நிலைகளைக் கொண்டு விளங்குவன. கோபுரத்தின் முடியில் இத்தகைய எண்ணிக்கையைக் கொண்ட கலசங்கள் அமைத்து கும்பாபிஷேகங்கள் நிகழ்த்தப் படுகின்றன. கோபுரங்களில் பெரும்பாலானவை ஐந்து மாடங்களாகிய நிலைகளைக் கொண்டது. தலைவாசலும் ஐந்து மாடங்களுமாக ஆறு அமைப்புக்களும் உடம்பின் ஆறு ஆதாரங்க ளாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாதகம், விசுத்தி, ஆஞ்சை ஆகியவ்றறைக் குறிப்பனவாகும். இந்துக் கோயில்களை அலங்கரிக்கும் கோபுரங்கள் ஆகமங்கள் விதித்துக் கூறும் திருக்கோயில் அமைப்பின் பூரணத்துவத்தையும் பெருமையையும் எடுத்து இயம்புகின்றன.

மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்தின் கோபுரங்கள் வரலாற்றுப் புகழோடு கலைச்சிறப்புப் பெற்று விளங்குகின்றன. அம்பிகையின் ஆலயத்திற்கு முன் அமைந்து விளங்கும் கோபுரம் எழுநிலைக் கோபுரமாகும் 740 கதை விக்கிரகங்களைக் கொண்டது. ஏறக்குறைய 117 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி 78 அடி நீளமும் 38 அடி அகலமும் கொண்டது. எண்ணற்ற கலையெழில் கொண்ட சிற்பங்களினால் இது 'சித்திரக் கோபுரம்' என அழைக்கப்படுகின்றது. இக்கோயிலின் நாற்புறமும் நான்கு கோபுரங்கள் அலங்காரத்துடன் காட்சி தருகின்றன. ஒவ்வொன்றும் ஒன்பது நிலைகளைக் கொண்டது. இப்பிரதான கோபுரங்களுள் தென்புறத்தில் உள்ள கோபுரமே உயரத்தில் கூடியது. நிலமட்டத்திலிருந்து 160 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி 108 அடி நீளமும் 67 அடி அகலமுமுடையது. ஏறக்குறைய 1511 சுதைச் சிற்பங்கள் தெய்வீகப் பெருமைகளை விளக்கி நிற்கின்றன. மேற்குக் கோபுரம் 154 அடி உயரமானது. இதன் அடித்தளம் 101 அடி நீளமும் 63 அடி அகலமுமாகும். ஏறக்குறைய 1124 சுதைச் சிற்பங்கள் உள்ளன. வடக்குக் கோபுரம் மொட்டைக் கோபுரம் என அழைக்கப் படுகின்றது. கிழக்கு கோபுரம் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் நிர்மாணிக்கப்பட்டதாகும். (1216 - 38). எனவே இதனை சுந்தர பாண்டியன் கோபுரம் என அழைப்பர். இக்கோபுரம் 111 அடி நீளமும் 65 அடி அகலமும் கொண்டு விளங்குகின்றது. ஏறக்குறைய 1101 சுதைச் சிற்பங்கள் இக்கோபுரத்தை அலங்கரிக்கின்றன. இவ்வாறு கோபுரத்தின் சிறப்புக்களை அறிய மதுரை ஸ்ரீ மீனாட்க்ஷி அம்மையின் ஆலயம் சிறந்ததொன்றாக விளங்குகின்றது.

அண்மைக் காலத்தில் கோபுர வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீரங்கம் இராஜ கோபுரமாகும். ஆசியாவிலேயே உயரமான கோபுரமென புகழத்தக்க பெருமை கொண்டது. அடியார்களைக் கருவியாக்கி அரங்கன் நிகழ்த்திய சாதனை என்று அனைவரும் பெருமைப்படத்தக்க கோபுரமிதுவாகும். ஸ்ரீ ரங்கம் தெற்கு வாசலில் உள்ள இக்கோபுரம் பதின்மூன்று நிலைகளைக் கொண்டது. கிழக்கு மேற்கில் 165 3/4 அடி அகலமும் தெற்கு வடக்கில் 97 அடி அகலமும் கொண்டது. பதின்மூன்று செம்புக் கலசங்களில் ஒவ்வொன்றும் 10 1/2 அடி உயரமும் 5 1/2 அடி பருமனும் 135 கிலோ கிராம் எடையும் கொண்டது. 1979 மே மாதம் முதல் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொருநாளும் சுமார் இருநூறு கலைஞர்களும் தொழிலாளர்களும் இணைந்து உழைத்து இவ்வரும் பெரும் திருப்பணியை நிறைவேற்றி யுள்ளனர். இத்தகைய விபரங்கள் திருக்கோயிற் கோபுரத்தின் பெருமையினை எமக்கு அறிவுறுத்துகின்றன.

கோபுர அமைப்பில் கர்ப்பக்கிருக அளவுக்கும் திருக்கோயிலின் நீள அகல உயரங்களுக்கும் பொருத்தமாகவே திருக்கோபுரம் அமைய வேண்டுமென்பது சிவாகம சிதி. கோபுர நிலையில் இரு அமைப்புக்கள் உள்ளன. கோபுரத்தின் நான்கு மூலைக் கோணங்களும் நேர்கோடாக அமைவது ஒருவகை, அம்மூலைக் கோணங்கள் நேர்கோடடடிலமையாது உள்ளே சற்று வளைந்து அமைவது இன்னொரு வகை. திருக்கோயிலின் தன்மைக்கும் வளத்திற்கும் ஏற்ப கோபுரங்களின் உயர அளவுகள் அமைவது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திலே ஊரின்கண் வாழும் மக்களுக்கு சமய உயர்வைத் தூண்டவல்ல கோபுரங்கள் ஆலயங்கள் தோறும் எழுந்ததைப் போன்று ஈழநாட்டின் கண்ணும் ஆலயங்கள் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. திருக்கேதீச்சுவரம், கொழும்பு பொன்னம்பல வாணேசுரர், மாவிட்டபுரம் கந்தசுவாமி, நல்லூர்க் கந்தன், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில், நயினை நாகபூஷணி, காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி, வண்ணை வெங்கடவனின் ஆலயம், நாச்சிமார் கோயில் போன்ற ஆலயங்களின் கோபுரங்கள் எழில்மிகு தோற்றத்துடன் காட்சி தருகின்றன. ஈழத்துச் சிதரம்பரம் போன்ற பல ஆலயங்களில் கோபுரத் திருப்பணி நடந்தேறி வருகின்றன.

ஆலயத்தில் இறைவனுக்கென கோபுரம் அமைத்தல் எமது பொருளை அருளாக்கும் புண்ணியத் திருப்பணி எனில் மிகையில்லை. கலையைப் பேணும் ஒருவகைக் கலைப் பணியாகவும் அமைகின்றது. அருள் நெறிக்கும் ஆன்ம நெறிக்கும் மக்களை ஆற்றுப் படுத்தவல்ல தெய்வத் திருப்பணி இதற்கு திருப்பணியில் எமது வாழ்வில் ஒருமுறையாவது எம்மை ஈடுபடுத்திக் கொள்வதே எமக்குக் கிடைத்த அருட்பேறாகும். காரைநகர் திக்கரை முருகமூர்த்திக்கு மஹாகும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்து அருள் வெள்ளம் எங்கணும் பரவிக் கொண்டிருக்கும் இத் தெய்வீக வேளையில் எம் பெருமானுக்குத் திருக்கோபுரம் அமைக்கும் திருப்பணியில் நாம் அனைவரும் ஈடுபடத்தக்க நல்லதொரு வாய்ப்புக் கிட்டியுள்ளது. அதனைப் பயன்படுத்தி அத்திருப்பணியில் பங்கு கொள்ளுதல் நம் அனைவரதும் கடமையாகும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் நல்கும். அத்துடன் எமது வாழ்க்கைக்கு நல்வழி காட்டும் கலங்கரை விளக்கமாகும். இத்தகைய பெருமை பெற்ற கோபுரத் திருப்பணியில் நாம் பங்கு கொண்டு எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

இந்த வகையில் கொக்குவிற் பதியில் ஆண்டு பல்லாண்டுக்கு முன்பே கோயில் கொண்டருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ கிருபாகரசிவ சுப்பிரமணியப் பெருமானுக்கு சிறப்பாக கீழைத்திசை இராஜகோபுரம் ஒன்று அமைய வேண்டும் என்ற அற்புதமான சிந்தனையை முன்வைத்திருக்கும் இவ்வாலயத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ. க.சிவதாசக்குருக்கள் ஐயா மலராசிரியர் நண்பர் கலாபூஷணம் சைவப்புலவர் இந்து சமய ஆலோசகர் சின்னத்தம்பி ஸ்ரீதயான் மற்றும் நிர்வாக சபையினரும் குலதெய்வத்தின் பக்தர்கள் அனைவர்ளதும் சிந்தனை வெகுசீக்கிரத்தில் செயலுறுவம் பெறவேண்டும் என்று எல்லாம் வல்ல கிருபாகரன் அருளைப் பிரார்த்தித்து ஆசிப்பதிலும் நிறைவடைகிறேன்.

பேராசிரியர் **ப. கோபாலகிருஷ்ணன்**<br>**வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்**

15/04/2014

# இலங்கையில் முருகவழிபாடு பற்றிய சில சிந்தனைகள

திருமதி.பவானி முகுந்தன் (இந்து சமயகலாசார அலுவல்கள் திணைக்களம்)

ஒரு நாமம் ஓர் உருவம் என்றில்லாத இறைவனுக்குப் பெயர்களும் உருவங்களும் கற்பித்து வழிபடுவது பக்தர்களின் இயல்பாகும். அதற்கு ஆகமங்களும் வழிவகுத்துள்ளன. மூவரும் தேவரும் வழிபடும் முருகப்பெருமானுக்கும் பல நாமங்கள் உள்ளன. கந்தன், குமரன், காங்கேயன், மயில்வாகனன், சரவணபவன், விசாகன், வள்ளிமணாளன், தேவசேனாபதி, சுவாமிநாதன், ஆறுமுகன், சுப்பிரமணியன், எனப் பல்வேறு திருநாமங்களால் முருகன் அழைக்கப்படுகின்றார். எனினும் இலங்கையிலே தமிழர்வாழும் பிரதேசங்களில் "ஆறுமுகப்பெருமானும்" "சுப்பிரமணியரும்" "கந்தசுவாமியுமே" முதன்மைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தென்னிந்தியாவில் தமிழ்நாட்டுத்தெய்வமாக விளங்கும் "முருகன்" வடஇந்தியாவில் "ஸ்கந்தனாக" அடையாளப்படுத்தப்பட்டதுக்கு அலெக்சாண்டரின் வட இந்தியப்படையெடுப்புக் காரணமாக அமைந்தது. அதேபோல் இலங்கையில் தமிழ்க்கடவுள் முருகன் இன்றைக்கு சிங்கள ஆரியரது காவல்தெய்வமாக கொண்டாடப்பட்டுத் "கதிர்காமத்தெய்யோ" என்று போற்றப்பட்டு தமிழரிடமிருந்து பிரித்துக்காட்டும் முயற்சி எமக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தும் செயற்பாடாகும்.

முருகவழிபாடும் இலங்கைத்தமிழர் பண்பாடும் ஒன்றுடன் ஒன்று இறுகப்பிணைந்திருக்கின்றன என்பதைத் தமிழரின் வரலாற்றையும் கடவுள் வழிபாட்டு முறைகளையும் பாஉத்தால் எளிதாகப் புரிந்து கொள்ளலாம் தமிழரின் தொன்மையும் முருக வழிபாடும் காலப்போக்கில் எவ்வாறு மாறியது அல்லது அடுத்தவர் பண்பாட்டால் குழம்பியது என்பதையும் வரலாற்றின் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம்.

யாழ்ப்பாணச்சமயநிலை முதலில் "கந்தபுராணக்கலாசாரத்துடன்" பின்னிப்பிணைந்தே வளர்ந்தது.

பொதுவாக ஆலயங்களில் பஞ்சபுராணம் ஓதுதல் என்றால் தேவாரம் முதல் பெரியபுராணம் ஈறாக ஐந்து மட்டுமே பாடப்படுவது மரபு. ஆனால் இலங்கையில் மட்டுமேகுறிப்பாக யாழ்ப்பானத்தில் ஆறாவதாக திருப்புகழையும் பாடுவது வழக்கமாக உள்ளது இது அங்குள்ள முருகவழிபாட்டின் சிறப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கந்தபுராண படனம் செய்வது பயன்சொல்வது என்பது இயல்பாகவே நடைபெற்று வந்துள்ளது மழை இல்லாவிட்டால், பஞ்சம் வந்தால், தொற்று நோய்கள் பரவத்தொடங்கினால் எல்லாம் கந்தபுராணப்படிப்பு நடத்தினால் அவை விலகும் என்பது இலங்கையில் நம்பிக்கை. குடும்பங்களில் பாரிய துயர் அல்லது இடையூறுகள் வந்தால் மக்கள் வைக்கும் நேர்த்திக்கடன்களில் முக்கியமானது அலகு குத்துதல் பால்க்காவடி எடுத்தல், பறவைக்காவடி எடுத்தல் என்பனவாகும்.

காவடி எடுத்தல் முருகனுக்கே சிறப்பாக அமையும் வழிபாட்டு முறையாகும்.ஆனால் இன்றைய காலகட்டத்தில் ஏனைய தெய்வங்களது திருவிழாக் காலங்களிலும் இவ்நேர்த்தி செய்யப்படுவது, இலங்கை மக்களது அடிப்படை உணர்வு பூர்வமான சமயவழிபாடு முருக வழிபாடே என்பதை உணர்த்துகின்றது.

இன்று குடமுழுக்குபெறும் கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோவில் "புதுக்கோவில்" என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்படுகின்றது .இப்பெயருக்கான காரணம் நானறியேன் .எனினும் முருகன் தமிழ் மொழியின் இனிமையுடன் கலந்த "அழகன்" , "வீரன" தமிழரின் "காதலன்" இம்மூன்றும் இணையும் போது தினம் தினம் புதுமையே நிகழ்த்தும் புதியவன் ஆகின்றான் முருகன். அந்த வகையில் புதுக்கோவிலின் அருளாட்சியின் விஸ்தீரணம் எனது மனக்கண்ணிலே தெரிகின்றது,

இவ்வாலயத்திலே அழகான ஆறுமுகப்பெருமான் அருள்புரிகின்றார் .இவருக்கு "ஒரு முறையிலே உருவான சுவாமி என்ற சிறப்புபெயரும் உண்டு.

ஆறுமுகப்பெறுமானின் திருவுருவம் பற்றி விளக்கிய அறிஞஉகள், ஆறுமுகங்களும் ஆறுகாலங்களைக்குறிக்கும் பன்னிரண்டு கைகளும் ஓர் ஆண்டின் பன்னிரண்டு மாதங்களைக் குறிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர் இவை தவிர அறிஞர் கமில்சுவலபில் அவர்கள் ஆறுமுகங்களும் அன்பு,உண்மை,அறிவு,இன்பம்,சக்தி,சித்தி என்ற ஆறு பரிமாணங்களை விளக்குகின்றன என்கின்றார்.

"சரவணபவ"என்ற ஆறெழுத்து சடாட்சரம் முருகப்பெருமானுக்குரிய மந்திரமாகும். முருக நாமத்தை உளம் உருகி ஓதினால் நாளும் கோளும் ஒன்றும் செய்யாது. அஞ்சுமுகந் தோன்றினால் முருகனின் ஆறுமுகந்தோன்றும் நெஞ்சில் ஒருமுறை எண்ணினால் இருமுறை தோன்றி "அஞ்சாதே"என்று அருள்புரிவார் சுப்பிரமணியர்.

அபிஷேகக்கந்தனும் அன்னதானக் கந்தனும் அழகுக்கந்தனும் உகந்தைக்கந்தனும் சுற்றி அருளாட்சி செய்ய கொக்குவிலின் மத்தியிலேயே அமைந்திருக்கும் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் அருட்கடாட்சத்தை நாமும் பெற்றுக்கொள்வோம்

# திருவடிகளில் இயற்கையெழுத்தை அழிக்க வல்ல ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி

கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை எழுதுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பேறு என்றே கருதுகிறேன். அன்பு நண்பர் கதாப்பிரசங்க விற்பன்னர் எம்.எஸ். ஸ்ரீதயாளன் அவர்களது வேண்டுகோளின்படி இவ்வாழ்த்து இச்சிறப்பு மலரிலே இடம்பெற்றுள்ளது. ஆலய நிர்வாகத்தினருக்கும், சிவாச்சாரியப் பெருமக்களுக்கும், முருகனடியார்களுக்கும் எமது வணக்கமும் உரித்தாகுக. கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் மகிமையும், திருவருள் வீச்சும் யாம் நேரிலே அனுபவித்தவை. திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளது திருவடிகள் கிட்ட திருத்தலம் மகிமை கொண்ட ஊர் இது (கருணாகரம் கிருபானந்தம்) வண்ணார் பண்ணையிலிருந்து இடம்பெயர்ந்த எம்மை எமது குடும்பத்துடன் வரவழைத்துக் கொக்குவில் இந்துக் கல்லூரியிலே பாதுகாப்புடன் தங்கவைத்துப் பின் வட்டுக்கோட்டை வழியாக நயினாதீவுக்கு அனுப்பிய தெய்வம் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆவார். உயிரைக் கையிலே பிடித்தவண்ணம் அகோர ஷெல், ஹெலி, பீரங்கித் தாக்குதல்களுக்கும் மத்தியிலே எமது குடும்பத்தை வாவென்று அழைத்து உயிர்ப்பிச்சை தந்தவன் கிருபாகரன் கொக்குவில் சிவசுப்பிரமணியன்.

“கிருபை வேண்டும் என்பது சிவயோக சுவாமிகளது வரிகள் நல்லூரான் கிருபை வேண்டும்” என்று பாடிப்பாடி வாழ்ந்த தலைமுனிவர் ஸ்ரீ யோக சுவாமிகள் வடசொல்லாயினும் அதியற்புதமான சொல் “கிருபாகரர்“, “கிருபைராஜா“ கிருபாநிதி என்ற பெயர்களும் சுருரை சுற்றிவழங்கும் சிவனது பரங்கருணையினை இருந்து யாபேர், கிருபாநிதி இவரைப்போல கிடைக்குமே இத்தாரணி தண்ணில் சபாபதிக்கு வேறு தெய்வம் காரணமாகுமா? என்று உருகி உருகிப்பாடுவர். “சுப்ரமண்யன்“ முருகனுக்குரிய வடமொழிப் பெயர். சிவசுப்பிரமணியன் என்பது சிவனோடிணைந்த முருகன் திருநாமம். “சிவனும் முருகனும் வேறல்லர்” என்று முழங்கும் கந்தபுராணம் யாழ்ப்பாணப் பண்பாடு கொக்குவில் பண்பாடு கந்தபுராண கவசத்திலே ஊறித் திளைத்த பண்பாட்டுப் பெருநிலம். புல்வேறு புகழ் மிக்க திருவருள் நிறை திருத்தலங்கள் சூழவுள்ள பதி கொக்குவிற்பதி. கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் கீர்த்தி கொக்குவில் கிராமத்தின் கீர்த்தியாகும். தமிழும் சைவமும் கல்வியும் வழிபாடும் ஓங்கி வளருமிடம் கொக்குவில் சந்நிதியாகும்.

மஞ்சவனப்பதி முருகன் திருக்கோயில், சோதிட பரிபாலன அச்சியந்திரசாலை வாக்கிய பஞ்சாங்கம் உற்பத்தி, நல்ல கறுத்தக் கொழும்பான் மாம்பழம், பலாப்பழம், கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர்களின் விளையாட்டுச் சாதனைகள், கல்விப்புலமையாளர், புராணபடனகாரர், பிரசங்ககாரர், நடனகாரர், இசைஞானச் செல்வர் பலர் வாழுமிடம் கொக்குவிற்பதி. இப்பெருமைக்கெல்லாம் காரணம் கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் திருவருட் கடாட்சமே எனில் அது மிகையன்று.

ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணியன் என்றும் வற்றாத கருணையுடன் அடியவர் துயர் தீர்த்து. அரவணைத்து தனது திருவடிகளாலே அயன் கையெழுத்தை அழிக்க வல்லவன் என்று

அருணகிரிநாதப் பெருமான் பாடியுள்ளவரிகள் பேருண்மையானவை. "அவன் கால் பட்டழிந்ததிங்கு என்றலை மேல அயன் கையெழுத்தே" என்பது இன்னும் உண்மையாகும். சகல பராக்கிரமங்களும் பொருந்திய பரம்பொருள் கொக்குவிலில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆவார். முழு நம்பிக்கையுடன் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் திருவடிகளைச் சிக்கெனப் பிடித்துத் துதிப்போர்க்கு வல்வினைபோம். துன்பம் போம் என்பது துதி. ஆழகன் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியைக் காண தரிசிக்க "நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான் முகனே" என்ற கவலை நம் ஒவ்வொருவருக்கும் எழவேண்டும். எப்பேர்பட்ட துன்ப துயரங்கள் எம்மைச் சூழ்ந்தாலும் அவற்றிற்கெல்லாம் அஞ்சாத நெஞ்சம் தந்து தஞ்சமென நிற்பவன் முருகப் பெருமான் ஒருவனே தான். பல்வேறு திருநாமங்களைக் கொண்ட முருகனைச் சிவயோக சுவாமிகள் பாடும் போது "ஆறுமுகன் தஞ்சமெடி" என்று பாடியுள்ளார். வேலவன், வெற்றிவடிவேலன் காலைப்பிடித்துக் கருத்தொடுமிடற்று எதிர்கால வாழ்வுக்காகப் பிரார்த்தித்து வேண்டுதல் செய்வோமாக! "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்".

முதுநிலை விரிவுரையாளர்,
**மகாவித்துவான், சித்தாந்த பண்டிதர், வாகீச கலாநிதி,**
**டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன்**
மொழித்துறை, சப்ரகமுக பல்கலைக்கழகம்.
பெலிகுல்லோயா.

## முனைவர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்

தொ.பே. 0431-2702472

தருமைஆதீனம், ஸ்ரீ மௌனமடம்
மலைக்கோட்டை
திருச்சிராப்பள்ளி
620002

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்.
-நம்பி-

ஸ்ரீலங்கா, யாழ்ப்பாணம் கொக்குவிலில் எழுந்தருளி இருக்கும் சிவசுப்பிரமணயி சுவாமி கோவில் ஜீர்னோத்தாரண நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டை பற்றி அறிவித்திருந்தீர்கள். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் சித்தன் ஸ்ரீ முருகன் வள்ளி தேவசேனா சமேதனாக பரிவார மூர்த்தங்களுடன் பாலாலயத்திலிருந்து புதிய கர்ப்பக்கிரகத்திற்கு பிரவேசிக்கும் இன்றைய நாளிலே கிராம சேமத்திற்கும் பொதுமக்கள் சேமத்தற்கும் சிவாச்சாரியார்கள் சேமத்திற்கும் நாட்டின் சேமத்திற்குமாக தருமை ஆதீனம் சார்பில் எம் நல்லாசிகளை வழங்குவதில் பெருமை கூறிக்கொள்கின்றோம்.

தாங்கள் 24-05-2008ல் எமது ஆதீனத்திற்கு வந்து நம்பி ஆண்டார் நம்பி பற்றிய ஆய்வு நூலை எமக்கு காண்பித்ததும் நாரையூருக்கு சென்றதும் அங்கு ஆசி பெற்றதும் நினைவுக்கிருக்கின்றன. உங்கள் புத்தகப்பணி சிறப்புற வாழ்ததுகிறேன். தாயுமானவனென்னும் சிரகிரிப் பெருமானை இறைஞ்சுகிறேன்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இவ்வண்ணம்

# கலியுகத்தில் பக்தி வழிபாடு எது?

ஒரு காலத்தை வெல்ல வேண்டுமானால், அக்காலத்துக்கேற்ற செயல்களை யாம் செய்தாகவே வேண்டும். எல்லாக் காலத்திற்கும் எல்லா செயல்களும் பொருந்தமாட்டாது. சேய்தலம் சாத்தியமாகாது. காலம் யுகங்களாக வகுக்கப்பட்டுள்ளது. நான்கு யுகங்களும் ஒரு கல்பம் என அழைக்கப்படுகின்றது. கல்ப காலம் முடிவுக்கு வந்ததும், உலகம் பிரளயத்தில் இல்லாமல் போய்விடும். மீண்டும் அடுத்த கல்பம் ஆரம்பிக்கும் போது அத்தனை உலகங்களும் சிருஷ்டிக்குள் அடங்கும்.

இந்த வகையில் காலமே படைத்து. காலமே காத்து, காலமே அழிகின்றது. ன்கின்ற வகையில். கடவுளே காலவடிவினன் என்பது கண்கூடு.

நாம் வழிபாட்டை ஆற்றுவதற்கே இன்ன வயது இன்ன காலம் இன்ன நேரம் என்று எண்ணிக் கொண்டிருப்பதைவிட பொருத்தமான நேரங்களில் எல்லாம் கடவுளை உள்ளும் புறமும் நினைந்து வழிபாடு செய்ய வேண்டும். இநத வகையிலேதான் ஆலய வழிபாடு, வாழ்க்கையில் அவசியமானது, ஆனால் நாம் அதனை முறையாக ஆற்றியாக வேண்டும். அதற்கென விதிமுறைகள் உள. ஆலயத்துக்குச் செல்லும் போது அகத்தூய்மையும், புறத்தூய்மையும் அவசியம். வழிபாட்டின் போது எமது மனதை, பூரணமாக இறைபால் செலுத்தியாக வேண்டும். ஆலயத்துள் எமக்குத் தெரிந்தோரைச் சந்திக்க நேர்ந்தால் அவர்களோடு பேசிக்கொண்டு நிற்பதையும் குசலம் தொவிப்பதையும் தவிர்த்தாக வேண்டும். ஆலயத்தின் அமைதியான ஆத்மீக சூழலையாம் குலைத்து விடக் கூடாது இது பண்பு.

தமிழ் நாட்டிலே அமைந்துள்ள திருத்தலங்களுள் பிருதுவித் தலமாக காஞ்சிபுரமும், அப்புத்தலமாக திருவானைக்காவும் தேயு தலமாக திரு அண்ணாமலையும், வாயு தலமாக திருக்காளத்தியும், ஆகாய தலமாக சிதம்பரமும் மிளிர்கின்றன. இந்த வகையிலே கோயில்களின் சிறப்பால் ஊரே பெருமை அடைகிறது. ஒரு ஊர் அங்கு அமைந்துள்ள ஆலயத்தால் மேன்மையும், பெயரும் பெறுகின்றது என்றால் மிகையாகாது. ஊர் வாழ் மக்களுக்கு ஆத்மீக பலத்தையும் தூய மனதையும். பக்குவத்தையும் தர உதவுவது பக்தி ஆலயமே. ஆலய கோபுரமே அவவூருக்கு மகுடமாக, வழிகாட்டியாக அமைகின்றது. ஆலய மில்லாத ஊர் அடவி காடாகும் என்பது அப்பர் சுவாமிகளின் கருத்தாகும்.

இந்த வகையிலே "ஆற்றங்கரையான் செல்லச்சந்நிதி முருகனாக இன்னருள் பாலிக்க, கொக்குவிலில் புதுக்கோயிலான்" இன்று கும்பாபிஷேகம் கண்டு புதுப்பொலிவெய்தி, புதுக்கோயிலான் என்ற பெயரில் ஒரு மலரையும் நிர்வாக சபையினர் வெளியிடுகிறார்கள். பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் சந்நியானுக்கு 'ஆற்றங்கரையான்' என்ற பெயரில் சில காலத்திற்கு முன் ஒரு நூலை எழுதியிருந்தார். சைவப் பெருமக்களுக்கோர் வரப்பரசாதமாகும். சுபாரத்தினமுதலியார் வழிபாட்டு வழி வந்த இவ்வாலயத்தின் வளர்ச்சியில் இன்று, சிவஞாதுரந்தரர் M.S. ஸ்ரீதயாளன் அவர்கள் வழிகாட்டலிலான புதுக்கோயிலான் என்ற கும்பாபிஷேக மலாப்பணி வரவேற்கத்தக்கதொன்றாகும். எங்கும் என்றும் எப்போதும் பக்தி மார்க்கத்தை மனிதப்பிறவிகள் தவறாது பின்பற்ற அருளுமாறு எல்லாம் வல்ல ஈசனை வேண்டி நிற்போம்.

**-ஆக்கம் கலாபூஷணம்-**

**திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு**



# இந்து சமய கலை கலாசார வளர்ச்சிப் பணிமன்றம்

No. 11 6/4, 42nd Lane, Colombo - 6 பதிவு இல. GA 677

## தத்துவங்கள் அகநிலை தொண்ணூற்றியாறு

மனிதனுடைய அகநிலைக் கருவிகள் முப்பத்தாறு எனவும், புறநிலைக் கருவிகள் அறுபது எனவும் சைவசிந்தாந்த நூல்கள் கூறும்.

> ஞானேந்திரியங்கள் அறிவுப் பொறிகளாகவும், தன்மாத்திரைகள் புலன்களாகவும், கன்மேந்திரியம் செயற்கருவிகளாகவும், அந்தக் கரணங்கள் உட்கருவிகளாகவும் அறியப்படுகின்றவை.

1. அகநிலை சார்ந்தவை
   1) ஆன்ம தத்துவம்-24
      i) ஞானேந்திரியம் (5)
         கண், காது, நாக்கு, மூக்கு, தோல்
      ii) தன்மாத்திரைகள் (5)
         ஓசை, தொடு உணர்வு, ஒளி, சுவை, நாற்றம்
      iii) கன்மேந்திரியம் (5)
         வாய், கால், கை, எருவாய் (குதம்), கருவாய் (பிறப்புறுப்பு)
      iv) அந்தக்கரணங்கள் (4)
         மனம், பத்தி, சித்தம், அகங்காரம்
      v) பஞ்ச பூதங்கள் (5)
         நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்
   **2) வித்யா தத்துவம்-7 :** காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை
   **3) சிவ தத்துவம்-5 :** சுத்தவித்தை, ஈச்சுரம், சதாசிவம், சக்தி (விந்து), சிவம் (நாதம்)
2. புறநிலைக் கருவிகள்
   i) நிலத்தின் கூறுகள் (5)
      மயிர், தோல், எலும்பு, நரம்பு, தசை
   ii) நீரின் கூறுகள் (5)
      சிறுநீர், உதிரம், மூளை, கொழுப்பு, சுக்கிலம்
   iii) தீயின் கூறுகள் (5)
      ஊண், உறக்கம், பயம், மைதுனம், சோம்பல்
   iv) வாயுவின் கூறுகள் (5)
      ஓடுதல், இருத்தல், நடத்தல், கிடத்தல், நிற்றல்
   v) ஆகாயத்தின் கூறுகள் (5)
      மோகம், வெகுளி, அகங்காரம், பொறாமை, மயக்கம்
   vi) செய்தல் கருவிகள் கூறுகள் (5)
      பேசுதல், நடத்தல், உழைத்தல், களித்தல், கழித்தல்
   vii) வாயுக்கள் (10)
      பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிஹரன், தேவதத்தன், தனஞ்செயன்
   viii) நாடிகள் (10)
      இடிகலை, பிங்கலை, சுழுமுனை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சிகுவை, சங்கினி, குரு
   ix) வாக்குகள் (4)
      சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி
   x) ஏடணை விருப்பம் (3)
      அருத்த (பொருள்) ஏடணை, புத்திர (மகன்) ஏடணை, உலக ஏடணை
   xi) குணங்கள் (3)
      சாத்வீகம், தாமசம், ராஜசம்

> **நாதாந்தம்**
> நாதாந்தத்தில் முக்கண் தோன்றும்
> நாதாந்தம் 36 தத்துவம்
> நாதாந்தம் சுத்தமாயை
> நாதாந்தம் சுத்தவித்தை
> நாதாந்தம் சிவதத்துவம்
> நாதாந்தம் சிவாயநம
> அந்தம் இவையாவும்
> பன்னிரு திருமுறையின் சாரம்சம்
> -ஞானி சிவசுப்பிரமணியம்-
> -தத்துவசாரம்-

**புதுக்கோயிலான் மலருக்கு என் வாழ்த்துக்கள் !**

# நந்தி

-கம்பவாரிதி இ. ஜெயராஜ்-

உலகை என்றும் உய்விப்பது நம் சைவசமயம்.
ஸ்தாபகர் இல்லாத பெருமை இதற்குரியது.
காலம் கடந்து நிற்கும் சைவத்தின் வீரியமே,
அதன் உண்மைத் தன்மைக்காம் சான்று.
காலாகாலமாய் இச்சமயத்தை,
வெல்லவும் கொல்லவுமாய்ப் பலர் முயன்றும்,
முடியாது தோற்றனர்.
இயற்கையுடன் பொருந்திய நம் சைவத்தை,
எவராலும் எதனாலும் விழுங்க முடியவில்லை.
எவ்விதப் பரபரப்புமின்றி,
சைவம் காலம் கடந்து நடைபோடுகிறது.
எதிர்க்க நினைத்த சமயங்களையும்,
அழிக்க நினைக்காமல்,
அவற்றின் மூலக் கருத்துகளையும் உள்வாங்கி,
காலம் கடந்து நின்றதால்,
அவற்றிற்கும் சிரஞ்சீவித் தன்மையை ஈந்தது நம் சைவம்.
இத்துணைப் பெருமைகளும் சைவத்தைச் சார,
அச்சமயத்தின் அடிப்படை அமைப்பே காரணமாம்.
அவ் அடிப்படை யாது?

*　*　*

இயற்கையை இறையின் வடிவாய் அறிந்ததால்,
அவ் இயற்கையுடன் பொருந்தி நடத்தலே,
வாழ்வின் உயர்வுக்காம் அடிப்படை என உணர்ந்தனர்,
நம் சைவ மூதாதையர்.
அவ் இயற்கையுடன் பொருந்தி நடத்தலையே,
அறம் என அவர்கள் வகுத்தனர்.
வாழ்வின் கூறுகள் அனைத்தையும் விளங்கி,
அவர்கள் வகுத்துத் தந்த அறம்,
இறைவனை நோக்கிய ஆன்மீகப் பாதையின்,
முதற்படியாம்.
இம் முதற்படி இயங்குபடியாய் (Mooving Step) இருந்து,
தன்னில் ஏறிய எவரையும்,
இறைவனை நோக்கி இட்டுச் சென்றது.
இவ் அறப்படியில் ஏறுதல் ஒன்றே,
இறைவனை நோக்கிச் செல்லத் தலைப்படுவார்தம் வேலையாம்.
அங்ஙனம் அவ் அறப்படியில் ஏறிவிடின்,
அதுவே அவரை அடுத்தடுத்த படிகளினூடு நகர்த்தி,
இறைவனிடம் சேர்ப்பிக்கும்.
இவ் அற்புத வழியை நம் மூதாதையர் உணர்ந்திருந்தனர்.
இவ் ஒப்பற்ற கருத்தினை,
நம் தமிழ்ப் பாட்டன்,
பொய்யாமொழிப் புலவன் திருவள்ளுவனும்,
பதிவு செய்கிறான்.

*　*　*

ஒழுக்கத்து நீத்தார் பெருமை
விழுப்பத்து வேண்டும் பனுவற் துணிவு

இந் நீத்தார் பெருமை அதிகாரக் குறளுக்கு,
உரை செய்யும் பரிமேலழகர்,
'ஒழுக்கத்து நீத்தார்' எனும் தொடருக்கு,
ஒழுக்கத்தின் கண் நின்று நீத்தார் எனப் பொருள் கொண்டு,
ஒழுக்கத்தின் கண் நின்று நீத்தலாவது எனத் தொடங்கி,
மேற்சொன்ன விடயத்தைப் பதிவு செய்கிறார்.

அறத்தின் வழி நிற்க ஒருவர்க்குப் பாவம் தேயும்.
பாவம் தேய அறியாமை நீங்கும்.
அறியாமை நீங்க,
நிலைத்தவை எவை, நிலையாதவை எவை என்பது பற்றிய,
வேறுபாடுகள் தோன்றும்.
அவ் வேறுபாடுகள் தோன்ற,
அழியும் இயல்புடைய,
இம்மை, மறுமை இன்பங்களில் வெறுப்புண்டாகும்.
அவ் வெறுப்பு உண்டாக,
பிறவித் துன்பம் அறியப்படும்.
அது அறியப்பட,
பிறவிக்குக் காரணமான பயனில் முயற்சிகள் நீங்கி,
வீட்டுக்குக் காரணமான யோக முயற்சி உண்டாகும்.
அது உண்டாக, மெய்யுணர்வு பிறக்கும்.
மெய்யுணர்வு பிறக்க,
நான், எனது எனும் அகங்கார, மமகாரங்கள் நீங்கும்.
அவை நீங்க, இறைவன் திருவடிப்பேறு கிட்டும்.
இங்ஙனமாய்,
தெய்வக் குறளுக்கு,
பரிமேலழகர் உரைக்கும் விரிவுரையை உணரின்,
அறத்தில் நிற்றலே,
இறைப்பேறு அடைதற்காம் வழி என்று உணரலாம்.

*　*　*

இப்பேருண்மையை உணர்ந்த நம் சைவசமயம்,
இறைவனுக்கும் அறத்திற்குமான தொடர்பினை,
உலகத்தார் அறிந்து உய்தற் பொருட்டே,
'நந்தி' எனும் வடிவத்தை உருவாக்கியது.
சிவ வாகனமாய் நம் சைவம் உரைக்கும் நந்தி வடிவம்,
அறத்தின் குறியீடேயாம்.
நந்தியைத் தர்மத்தின் வடிவாய் உணர்ந்து நோக்க,
நம் சைவ நடைமுறை பலவற்றிற்கும்,
புதிய விளக்கங்களைப் பெறலாம்.
அவற்றுள் ஒரு சில காண்பாம்.

*　*　*

நம் இறையாம் சிவன்,
இடப வாகனத்தூர்பவன் என்பது,
சைவம் தரும் செய்தி.
'வெள்ளை எருதேறீ', 'விடையேறி' என்றெல்லாம்,
திருமுறைகள் இச்செய்தியை உறுதி செய்யும்.
இறைவன் நந்தியில் வருவான் என்பதற்கான,
உண்மைப் பொருள்,
இறைவன் தர்மத்தில் உறைவான் என்பதே.
தர்மம் இலா இடத்தில்,
இறைத் தரிசனம் கிட்டாதென்பதையே,
மேற்செய்தி உறுதி செய்கிறது.

*　*　*

நந்திக்கும் லிங்கத்திற்கும் குறுக்கே செல்வது,
ஆலயத்தில் செய்யத் தகாத குற்றங்களில் ஒன்றாம்.
நல்லூர் ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடை,
இக்கருத்தை வலியுறுத்துகிறது.
இக்கருத்து ஆகம அடிப்படையிலானது.
நந்தியைத் தர்ம சொரூபமாய் விளங்க,
லிங்கத்திற்கும் நந்திக்கும் இடையே செல்வதான செயலை,
அறக் குறுக்கீடு செய்து இறைவழிபாடு இயற்றுதற்காம்
அடையாளமாய் உணரலாம்.
அங்ஙனம் அறம் மீறி இறைவழிபாடு செய்வார்க்கு,
இறையருள் கிட்டாது ஒழிவதோடு,
பாவமும் சேரும் என்பதையே,
'நந்திக்குக் குறுக்கே செல்வார் நரகம் செல்வார்.'
எனும் கருத்தினால் நம்மூதாதையர் வலியுறுத்தினர்.

*　*　*

பிரதோஷவிரத காலங்களில்,
நந்திதேவரின் கொம்புகளினூடே சிவனை வழிபடுதல்,
விரத விதியாம்.
இக்கருத்தும்,
நந்தியை அறவடிவாய்க் கொண்டு உணரப்பட வேண்டியதே.
நந்தியின் கொம்புகளினூடு சிவனை வழிபடுவதென்பது,
தர்ம எல்லையின் உள் நின்று,
இறையை வழிபடுதலை உணர்த்தும் காரியமேயாம்.

*   *   *

சிவன் ஏறுகிற நந்தி வாகனம்,
வெள்ளை நிறமுடையது என்பது வழக்கு.
வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி
வெள்ளை நிறம் தூய்மையை உணர்த்துவது.
அறமும் தூய்மையின் வடிவமேயாம்.
ஆதலால் நந்தியின் வெள்ளை நிறம் குறிப்பது,
அறத் தூய்மையையே என்று அறிக.

*   *   *

கயிலையின் முதற்கோபுர வாயிலில்,
நந்தி தேவர் பொற்பிரம்புடன் காவல் செய்து நின்று,
கயிலாயத்தில் சிவனை வழிபட வருகின்ற தேவர்களை,
ஒழுங்கு செய்து உள் அனுப்புவார் என்பது,
புராணச் செய்தி.

நெற்றியிற் கண்ணர் நாற் பெருந்தோளர்
நீறணி மேனி அநேகர்
பெற்றம் மேற்கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் நன்னருள் பெறுவார்
மற்றவர்க்கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பதற்(கு) கைலைமால் வரைதான்.

என்று இச்செய்தியைப் பெரியபுராணம் உறுதி செய்யும்.
நந்தியின் அருள் பெறாதவர் கயிலையுள் சென்று,
இறை தரிசனம் பெறல் இயலாதாம்.
இங்கும் நந்தியைத் தர்மமாய்த் தரிசிக்க,
தர்ம அங்கீகாரம் பெறாதார்
கயிலைக்காட்சி பெறார் எனும் பேருண்மை வெளிப்படும்.

*   *   *

திருநாளைப்போவார் என்றழைக்கப்படும் நந்தனார்,
தன் குலம் காரணமாய் ஆலயத்துள் செல்ல அஞ்சி,
திருப்புன்கூர் எனும் ஆலயத்தில்,
வெளியே நின்று இறைவனை வழிபட,
இறைவனைக் காணா வண்ணம்,
நந்தி மறைத்ததாகவும்,
நந்தனார் உருகி வேண்ட, நந்தி விலகி,
நந்தனார்க்குச் சிவக்காட்சி கிடைத்ததாகவும்,
புராணம் உரைக்கும்.
சீர் ஏறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரே கும்பிடவேண்டும் என நினைந்தார்க்கது நேர்வார்
கார் ஏறும் எயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போர்ஏற்றை விலங்கஅருள் புரிந்தருளிப் புலப்படுத்தார்.
இப்புராணச் செய்தியிலும்,
நந்தியை அறமாய் உணர்த்தும் குறிப்புண்டு.
தன் குலத்தொழிலாகிய புலைத் தொழிலால்,
அறம் மாறுபட்டு நின்ற நந்தனார்க்கு,
முதலில், சிவதரிசனம் கிடைக்காமல்,
அறத்தடை நிகழ்ந்தது.
தன்னையறியாது தானிழைத்த தவறுணர்ந்து,

அன்பு மிகுதியால் அவர் வருந்தி வேண்ட,
தடை செய்த தர்மம் விலகி,
அவர்க்குச் சிவதரிசனம் கிடைத்ததனையே,
மேற் புராணச்செய்தி குறிப்பதாய்க் கொள்ளல் வேண்டும்.

*　*　*

மற்றொரு பேருண்மையை நாம் அறிதல் அவசியம்.
உண்மையில் நந்தி என்பது,
சிவனுக்குரிய நாமமேயாம்.
'நந்தி நாமம் நமச்சிவாய' எனும் தேவாரத் தொடராலும்,
'நங்கள் நாதனாம் நந்தி' எனும் திருமந்திரத் தொடராலும்,
இவ்வுண்மையை அறிகிறோம்.
இச் செய்தியால் நந்தியும் சிவனும் ஒருவரே என்பதும்,
சிவரூபம், தர்மரூபமே என்பதும் தெரிய வரும்.
அது நோக்கியே,
அன்னை காரைக்காலம்மையார் சிவனாரை,
'அறவா!' என்றழைத்தனர்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமைவேண்டும் மீண்டும்பிறப்புண்டேல் உனைஎன்றும்
மறவாமை வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீஆடும்போது நின்அடியின் கீழிருக்க என்றார்.

*　*　*

சக்தி சிவத்தினின்று வேறுபட்டதாய் உரைக்கப்படினும்,
அது எங்ஙனம் சிவனில் பிரிவில்லாததோ,
அங்ஙனமே நந்தியும் சிவனில் பிரிவில்லாததாம்.
சக்தி சிவத்தின் ஆற்றல்.
நந்தி சிவத்தின் இயல்பு.
ஆற்றலும் இயல்பும்,
குறித்த நேரங்களில்,
ஒருவரிடம் வெளிப்பட்டுத் தோன்றும்.
மற்றைய நேரங்களில்,
அவை அவருள் உள்ளடங்கியிருக்கும்.
அங்ஙனமே,
ஆற்றலும், இயல்புமாய் இருக்கும் சக்தியும், நந்தியும்,
சிவத்தில்,
வெளிப்பட்டும் உட்பொதிந்தும் இருத்தல் இயல்பாம்.
சக்தியைச் சிவம் தன்னுட் பொதித்து இருக்கும் நிலையை,
பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று, அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும் எனும்,
புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பேசும்.

*　*　*

அங்ஙனமே நந்தியையும் இறைவன் தன்னுள் அடக்குவான்.
இக்கருத்தைப் பெரியபுராணத்தின்,
இளையான்குடி மாறநாயனார் வரலாற்றிற் காணலாம்.
அடியார்க்கு விருந்திட்டு வறுமைப்பதம் எய்திய,
இளையான்குடி மாறநாயனார் வீட்டுக்கு,
சிவனார் நள்ளிரவில் விருந்தாய் வருகிறார்.
அச்செய்தியை உரைக்கும் சேக்கிழார்,
திருமாலும் பிரமனும், பன்றியும் அன்னமுமாய்,
தேடியும் அறிய முடியாத சிவனார்,
ஊர்கின்ற நந்தியுமின்றி உமையுமின்றி,
தவ வேடத்தோடு வந்தார் என்கிறார்.

மற்று அவர் செயல் இன்ன தன்மையதாக
மால், அயன் ஆன அக்

கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத
கொள்கையர் ஆயினார்
பெற்றம் ஊர்வதுமின்றி நீடிய
பேதையாள் உடன் இன்றி ஓர்
நற்றவத் தவவேடமே கொடு
ஞாலம் உய்திட நண்ணினார்.

மேற்பாடலுக்கு உரை செய்த அறிஞர் பலரும்,
நந்தியும் உமையும் இன்றி இறைவன் வருதல்,
சாத்தியமின்றாம் ஆதலால்,
அவற்றை தன் உட் பொதித்து,
இறைவன் எழுந்தருளினார் என்றே உரை செய்தனர்.
இதன் மூலம் நந்தியும், சக்தியும்,
சிவனிற் பிரிவின்றி இருக்கும் உண்மையை
உறுதிபட அறிந்து கொள்கிறோம்.

* * *

மேற்கூறிய உண்மைகளால்,
நந்தி வடிவம் தர்மக் குறியீடு என்பதும்,
நந்தியின் அருளின்றி,
இறைவனை அடைய முடியாதென்பதும்,
நந்தியே இறை இயல்பாம் என்பதும்,
அதனால், நந்தியும் சிவமும் ஒன்றே என்பதும் தெரியவரும்.

* * *

இத்துணைப் பெருமைகள் உடைய நந்தியே,
சைவத்தின் அடையாளமாய்,
சிவத்தின் அடையாளமாய்,
தர்மத்தின் அடையாளமாய்,
நம் சைவக்கொடியில் பொறிக்கப்படுகிறது.

* * *

நந்தியே சைவத்தின் கொடிச் சின்னமாம்.
இக் கருத்தை ஒருசிலர் ஐயுறுவர்.
அவர் தமக்காய்,
மேற்செய்திக்கான தக்க மேற்கோள் காட்டுதல்,
அவசியம்.
அது காண்பாம்.

* * *

புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தாய் அமைந்த,
பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றிய சங்கப் பாடல்,
நந்தியே சிவனின் கொடிச் சின்னம் என்பதை,
உறுதி செய்கிறது.
சங்கநூல்களுள் அமைந்த செய்தியாதலால்,
இச்செய்தியின் தொன்மையை நாம் உணர்கிறோம்.

* * *

அப்பாடலில் சிவனைப் புலவர் வர்ணிக்கிறார்.
அனைத்து உயிர்களுக்கும் காவலாகும்,
சிவனின் அருளுடைமையைக் காட்ட,
தவமுதிர்ச்சியின் சான்றாய்த் திகழும்,
தாழ்சடையும்,
நீர் வற்றாக் கமண்டலமும் அவனிடத்து உள்ளன.
அச்சிவன்,
தன் தலையிலும், மார்பிலும்,
கொன்றைப் பூவினை அணிந்தவன்.
தனது வாகனமாகவும், கொடியாகவும்,
தூய ஆன் ஏற்றைக் கொண்டிருப்பான்.
அவன் கழுத்தை நச்சுக்கறை அழகு செய்கிறது. .
வேதம் ஓதும் அந்தணரால் அது புகழப்படுகிறது.
பெண்ணுருவைத் தனது ஒரு பாகத்திலே,
வெளிக்காட்டியும் இருப்பான்.
அவளைத் தன்னுள் அடக்கி,
தனித்தும் அவன் விளங்குவான்.

அவனது நெற்றிக்கு அழகு தரும் பிறை,
பதினெண் தேவர்களாலும் போற்றப்படுகிறது என்பதாய்,
அப்பாடலின் பொருள் அமைகிறது.

கண்ணி கார் நறுங்கொன்றை, காமர்
வண்ண மார்பின் தாரும் கொன்றை
ஊர்தி வால் வெள்ளேறே, சிறந்த
சீர்கெழு கொடியும் அவ் ஏறு என்ப
கறைமிடறு அணியலும் அணிந்தன்று, அக்கறை
மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று, அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்
பிறைநுதல் வண்ணம் ஆகின்று, அப்பிறை
பதினெண் கண்ணும் ஏத்தவும் படுமே
எல்லா உயிர்க்கும் ஏமமாகிய
நீரறவு அறியாக் கரகத்துத்,
தாழ்சடை பொலிந்த அருந்தவத் தோற்கே.

மேற்பாடலில் வரும்,
ஊர்தி வால் வெள்ளேறே, சிறந்த
சீர்கெழு கொடியும் அவ் ஏறு என்ப எனும் அடிகளால்,
நந்தியே சிவனின் வாகனமும் கொடியும் ஆகிறது
எனும் உண்மை,
சித்தாந்தப்படுத்தப்படுகிறது.
நந்தி, சைவத்தின் கொடி என்பதற்கான அர்த்தம்,
தர்மமே சைவத்தின் அடிப்படை என்பதேயாம்.

* * *

இவ்வாக்கமானது அகில இலங்கை கம்பன் கோட்டத்து அமைப்பானதும் மகாலட்சுமி கோவிலான ஐஸ்வர்யா ஆலயத்தின் ஸ்தாபகருமான கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களினால் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோயில் கும்பாபிஷேக மலருக்காக பிரத்தியேகமாக மலராசிரியருக்கு அனுப்பிவைக்கப்பட்ட சிறப்பு கட்டுரையாகும்

நன்றி

23/04/2014

-பதிப்பாசிரியர்--

# கோயில்கள் பேணிவளர்த்த தெய்வீகக் கலைகள் : 1

## கதாப்பிரசங்கம்

கதாப்பிரசங்கம் என்னும் கதாகாலஷேபக்கலையானது இசைப் பாடல்களோடு இனிய கதைகளைச் சொல்லும் வகையில், பொதுமக்கள் இன்பமாக அனுபவிக்கும் பாங்கில் கதை செய்யும் ஒரு பாரம்பரியக்கலை முறைமையாகும். தனியொருவர் இசைப்பாடல்களோடு இணைந்து ஒரு கதையை இடையில் பாடிப்பாடி மேடையில் செய்யும் ஆற்றுக்கலை இதுவாகும். முத்தமிழ் எனப்படும் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் இணைந்த ஒரு ஒப்பற்ற நிகழ்த்துக்கலையாய் மிகப் பழங்காலத்திலிருந்தே இசைஞானமுடைய கலைஞர்களால் நிகழ்த்தப்பெற்று வந்த தெய்வீகக் கலை இதுவாகும்.

ஆரம்பித்திலே ஹரிகதை (செய்தல்) என அழைக்கப்பட்ட இக்கதாகாலாட்ஷேபம் என்னும் இன்னிசை விரிவுரை முறைமையானது மக்களை வெகுவாகக் கவர்ந்தமைக்கு முக்கிய காரணம், இசை, நாடக உணர்வோடு புராணேதிகாச இலக்கியங்களையும் வீரசாகஜக் கதைகளையும், சமூக விழிப்புணர்வுக்கான தகவல்களையும் பொழுது போக்காகவும், பயனுள்ள வகையிலும் இக்கலை மூலம் துய்த்து அறிய முடிந்தமையே எனலாம்.

கதா கலாஷேபம் என்ற பெயரே கதை கேட்கின்ற காலப்பொழுதை கலாரசைனை உணர்வோடு இன்பமாகக்கழித்தல் என்ற பொருளிலேயே அமைந்திருக்கிறது. நாம் அவதானிக்கமுடியும். மக்களனைவரும் மனங்கொண்டு கேட்கும்வகையில், அவர்கள் பயனறிந்து அனுபவிக்கும் வகையில், பொருத்தமான பாணியில் அதனை ஆற்றுகை செய்வதற்குத் தேவையான விஷயங்களாக மிகப்பல அமிஷங்களை நாம் இனங்காணலாம்.

ஒருவர் காலாட்ஷேபமாகக் கதை செய்வதற்கு நிறைந்த மொழியறிவு மாத்திரமின்றி, இசை அறிவு, புராண, இதிகாச, சாத்திர அறிவு, இலக்கிய இலக்கணங்களில் தேர்ச்சி, வாக்குச் சாமர்த்தியம் என்பவற்றோடு நகைச்சுவை ததுதம்ப விடயங்களை எடுத்தாளும் பாங்கும், பக்க வாத்தியங்களோடு இசைந்த சங்கீதப் புலமையும் தேவை. மேடையில் ஒரே இடத்தில் இருந்தவாறே அபிநயங்காட்டி, ஒப்புவிக்கும் முறைமை பற்றியே இக்காலத்து தனி நடிப்புக் கலைக்கும் இதுவே மூலம் என்று அறிஞர் கூறுவர். எனவே இந்தத் தகைமைகளோடு கதை செய்யும் ஒருவர், தாம் ஒப்புவிக்கும் விடயங்களில் போதிய விளக்கமும், பயிற்சியும் நிறைந்தவராய் இருந்தாலன்றி, இக்கதாகாலஷேபக் கலையை பண்டிதர் முதல் பாமரர் வரை மதித்துப் போற்றும்படி நிகழ்த்துவதென்பது சிரமமான காரியமாயிருந்தது. இது பற்றியே இக்கலையை ஆற்றுவோரும் போற்றுவோரும், அனுபவிப்போரும் அருகி வருகின்றனர் என்பது சுட்டி நோக்கற் பாலது.

முற்காலங்களில் அரச மாளிகைகளில், மன்னர்களுக்கு இன்பமூட்டும் நோக்கோடும், காலஷேபனத்துக்காகவும் பயன்பட்ட இக்கதை சொல்லும் முறைமையானது பின்னர் கோவில்களிலும், பொதுமக்கள் கூடுமிடங்களிலும் இடம்பெறத்தொடங்கியதும், இக்கதைகளால் கவரப்பட்டும், பாடப்படும் இசையால் ஈர்க்கப்பட்டும் ஹரிகதை செய்தல் எனப் பொதுவாக அழைக்கப்பட்ட இந்த இசைப்பிரசங்கக் கலைக்கு பொதுமக்கள் அமோக ஆதரவு வழங்கிப் போற்றி வரலாயினர்.

கதை சொல்லுதல் என்பது இந்திய, தமிழ்த்தேசங்களிலும், இலங்கையிலும் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே வழக்கிலிருந்து வந்திருக்கிறது.

**பௌராணிகப் பிரசங்க மரபு :**

புராணங்களில் கூறப்படும் கதைகளை, நீதி, அறஒழுக்கக் கரத்துக்களை, சமூக விழுமியங்களை, மக்களின் முன்பாக விளக்கிக் கூறுபவர்கள் தான், பௌராணிகர்கள் என அழைக்கப்பட்டார்கள். பெரும்பாலும் புராண, இசை அறிவு பெற்றிருந்தவர்களால் இம்மரபு தொடர்ந்து பின்பற்றப்பட்டது. புராண இதிகாசங்களைப் பிசங்கிப்பவர்களுக்கு சாதுரியமாக, சரளமாக பேசும் ஆற்றலம் குரல்வளமும் தேவை, அத்தோடு பக்க வாத்தியங்களுடனும் அவற்றை அனுசரித்தும் இசையோடு பாடும் சங்கீத அறிவும் அவசியம்.

கதாப்பிரங்கிமார், இசைப்பேருரையாளர், இசைச் சொற்பொழிவாளர், கதாகாலஷேபகர் என்ற பெயர்களால் இக்கலாவித்தகர்கள் அழைக்கப்பட்டனர். ஆரம்ப காலத்தில் பொதுமக்கள் மத்தியிலே நின்றுகொண்டும், அவர்கள் மத்தியில் உலாவி நடையிட்டும், ஆடி ஆடி ஆற்றப்பட்ட கதாகாலஷேகம், பின்னர் தமது பக்கவாத்தியக் குழுவினர் புடைசூழ பிரசங்கக் கலைஞர் மேடையில் அமர்ந்தே இந்நிகழ்ச்சிகளை வழங்கும் முறைமையாக மாற்றியது.

சங்கீத இசையறிவு பெற்றிருந்தவர்களான இவர்கள் புராண இதிகாசக் கதைகளுக்கு இசை என்ற சாதனத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். பிற்பாட்டு, மிருதங்கம், தாளம், பக்கவீணை, சாரங்கி, புல்லாங்குழல், முகர்சங்கு, கடம், கஞ்சிரா முதலான வாத்தியங்களைப் பக்கத் துணையாகக் கொண்டு அற்புதமான ஆற்றுகைக் கலையாக அவர்கள் இதனைப் பரிணமிக்கச் செய்தனர். பொதுவாக மேற்சொன்ன கருவிகளில் மூன்று நான்கு வாத்தியங்களையாவது தவறாது அணி செய் வாத்தியங்களாகக் கொள்வது இசை இடையிட்ட இக்கலையின் தவிர்க்கமுடியாத பண்பாகும். மகா வித்துவான் வைத்தியநாத அய்யர் நின்ற நிலையிலேயே தமது கதாப்பிரசங்கங்களை நிகழ்த்துவார் என்பது டாக்டர் உ.வே.சாமிநாதையரின் குறிப்பு மூலம் தெரிகிறது. இலங்கையிலும் கதா பிரசங்க வித்துவான்கள் நின்ற நிலையிலேயே கதை செய்யும் வழக்கம் இருந்தது.

**கதைக்கான சாஹித்தியங்கள்**

கதை செய்யும்போது அக்கதையை வளர்த்துச்செல்ல, கதை சார்ந்த பாடல்கள் தேவைப்பட்டன. இந்தியாவிலும் தென்னாட்டிலும் நம் இலங்கையிலும் பேரறிஞர்கள், புலவர்களாகிய சான்றோர்கள் புராண, இதிகாசக் கதை நிகழ்ச்சிகளைப் பாடல்களாக வடித்துத் தரும் முறைமை அக்காலத்தில் வழக்கிலிருந்தது. குறிப்பாக இராமநாடகக் கீர்த்தனைகளை, அக்காலத்தில் கம்பராமாயணத்தைக் கதை செய்த வேங்கடராம அய்யர், கோதண்டராம அய்யர் போன்ற கதாப்பிரசங்கிகளின் தேவைக்காக சீர்காழி அருணாச்சலக் கவிராயர் இயற்றிக் கொடுத்துள்ளார் என அறியமுடிகிறது. இவ்வாறே, குமாரசாமி முதலியார் "கந்த புராணக் கீர்த்தனைகளையும் 1860இல் கோபாலகிருஷ்ண பாரதியார் "நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளையும்"யும், வேலூர் சுப்பராய முதலியார் "மகாபாரதக் கீர்த்தனைகளையும்" இயற்ற, இவற்றையும் இது போன்ற கதை சாஹித்தியங்களையும் இன்றுவரை இசைச்சொற்பொழிவாளர்கள், ஹரிகதைக் கலைஞர்களானவர்கள் கீர்த்தனைகளாக தம் கதைகளினிடையே பயன்படுத்துகிறார்கள். இலங்கையிலும் இவ்வாறு பலர் இம்முயற்சியில் பங்களித்து

வந்திருக்கின்றனர். சங்கர சுப்பையர், சங்கானை நாகலிங்கப் பரதேசியார், மாணிக்கத் தியாகராஜா, கொக்குவில் குமாரசுவாமிப்புலவர், அளவை விநாசித்தம்பிப் புலவர், "சாஹித்திய கர்த்தா" இணுவை வீரமணி ஐயர், வடிவேலர், வர்ணகுலசிங்கம், பண்டிதர் மு. சின்னத்தம்பி, ஆனந்தராசா, ஷண்முககுமரேசன், உடுவை. ஸ்ரீதயாளன், சிவசண்முகமூர்த்தி ஆகியோரும் இன்றைய பாடலாசிரியர் சிலரும் இப்பட்டியலில் அடங்கலாயினர்.

**கீர்த்தன்:**

இன்றைய கதாகாலஷேபங்களுக்கு அடிப்படையாக அமைந்த கலை வடிவங்களில் கீர்த்தன் என்ற வடிவம் முக்கியமானது. இதற்கு முன்னர் பொழுதுபோக்குக்காக மட்டும் பயன்பட்டுவந்த போவாட, லாவணி போன்ற வடிவங்களுக்கு மேலாக எழுந்த கீர்த்தன்கள் தான் இன்றுவரை திகழும் சங்கீத கதாப் பிரசங்களுக்கு அடிப்படையாயமைந்தது என்றால் அது பிழையாகாது. இன்று சமயப் பிரசாரத்துக்காகவும், பக்தியுணர்வு வளர்ச்சிக்காகவும் நிகழ்த்தப்பட்டுவரும் கதாகாலஷேபங்களுக்கு வழிகாட்டியாக, பொழுது போக்கையும், வீர உணர்வையும் தூண்டுவதற்காக ஆற்றுகை செய்யப்பட்ட கதாகாலஷேபக் கலையின் வளர்ச்சி தஞ்சாவூர் உள்ளிட்ட தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் சமகாலத்தில் மிகப்பிரபல்யமாய் இருந்தது. கோபாலகிருஷ்ண பாரதியார் ஹரிகதையையும், சிவசதைகளையும் பல மணித்தியாங்கள் பிரசங்கிக்கக் கூடியவர் என்பர். சேக்கிழாரின் நந்தனார் சரித்திரக்கதை ஸாகித்தியங்களோடு நாடகமாக்கித் தந்தபோதும், அதனை மக்கள் அருந்தியுடன் அள்ளி உண்ணச் செய்தவர் எம்பார் ரங்காச்சாரியரே என்பர். இவரது மகனே எம்பார் விஜயராகவாச்சாரியார் எனும் வைஷ்ணவ சமய நவரசப் பிரசங்கியார். தமிழிலும் வேறு மொழிகளிலும் அவர் ஹரிகதை செய்த பெருமைக்குரியவராவார். ஹரிகதைக் கலைஞர் தொடர்பான கருத்தியலில் முக்கியமாகக் கருதக்கூடிய ஒருவராக கர்நாடக இசையுலகில் மாபெரும் வித்வானாகத் திகழ்ந்த சித்தூர் சுப்பிரமணியபிள்ளை அவர்கள் முக்கியமானவர் என்ற தகவல் அறிவதற்கு விருந்தாயமைவதாகும். இவரைப்போல அநேக பிரபல சங்கீத வித்வான்களும் ஹரிக்கதைக் கலைஞர்களாகவே திகழ்ந்திருக்கிறார்கள். மிகப் பெரிய சங்கீத மேதையாயிருந்த சூலமங்கலம் வைத்தியநாதர் நமக்கு வாழ்வும், வளமும், பொருளும் தந்தது தம் ஹரிகதையே என்பார். இவரால் பல பிற்பாட்டுக்காரர்களே பெயர்பெற்ற பிரசங்கிகளாயினர்.

தஞ்சாவூரில் தமக்கென ஒரு பாணியை ஏற்படுத்திக் கொண்டே ஹரிகதை செய்தவர் மோர்கங்கார் ராம்சந்திபாவா. இவரைப்போல பலர் இருந்திருக்கிறார்கள். அவருள் தஞ்சாவூர் மு.ராமசுப்பிரமணி சர்மாவும் முக்கியமானவர். ஹரிகதை, கதாப்பிரசங்கவளர்ச்சிக்கு பங்களித்த பலரை எண்ணும்போது அக்காலத்தில் பெரியசங்கீத சபாக்களிலும், ஆலய விழாக்களிலும் திருமணம்,' தியாகராஜசுவாமி உற்சவங்களிலும் இக்கலைக்கு முதலிடம் கொடுத்துதவி ஆதரித்த சான்றோர்களையும் வள்ளல்களையும் மறந்துவிடமுடியாது.

திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் திருமணம் 1916 நடைபெற்றபோது சாரதாம்பாளின் ஹரிகதை அவ்வைபவத்தில் இடம்பெற்றது என்ற செய்தி அவர் வரலாற்றைப் படிக்கும்போது தெரியவந்ததொன்றாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 175 கலைஞர்கள் இத்துறையில் ஈடுபட்டவர்களாகவும் கதாகாலஷேப மரபை வளர்த்தவர்களாகவும் தம்நூலில் எடுத்துரைக்கும் ஹரிகதா ஸ்ரீனிவாசன் நன்றியோடு பாராட்ட வேண்டியவராவார்.

### இலங்கையில் சங்கீத கதாப்பிரசங்க மரபு:

சைவப் பிரசங்கமென்னும் சமயக்கதை சொல்லலின் தோற்றுவாயாக நல்லூர் ஆறுமுக நவாலரின் பிரசங்க முறைமையை எடுத்துக்காட்டாக கூறுவர். "சைவமென்னுங் செஞ்சாலி வளரும் பொருட்டுப் பிரசங்கம் என்னும் மழையை முதன் முதற் பொழிந்தார்" என்று குறிப்பிடும் த.கைலாபிள்ளை அவர்கள் தமிழிலே சைவ பிரசங்க மரபை முதலில் ஆரம்பித்து வைத்தவர் யாழ்ப்பாணத்து, நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரே என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். அவர் தமது நூலிலே மேலும் "முன்னிருந்த எங்கள் சமயாச்சாரியர்க்ள தாம் தரிசனஞ் செய்யப்போன தலங்களிலெல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தாம்போன இடங்களிலெல்லாம் போகோபகாரமான சைவப் பிரசங்கங்கள் செய்து வந்தார்" என்றும் குறித்துச் சொல்கிறார். கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாணத்திலே தமது மதப்பிரசாரத்துக்காக அக்காலத்தில் தம் தேவாலயங்களில் நடத்தி வந்த மதப் பிரசங்கங்களைக் கண்டும், கேட்டும் அனுபவ வாயிலாக அறிந்திருந்த ஆறுமுகநாவலரவர்கள் அந்த உத்தியை சைவசமய எழுச்சிக்காக தாமே சைவப் பிரசங்களைச் செய்வதன் மூலம் கையாண்டார். அதில் நாவலர் பெற்ற வெற்றியும் அதிகம். எனவே தான் சைவப்பிரசங்க மரபு தழைத்து, பக்திநெறியில் மக்கள் மனங்கொள்ளக் கூடிய வகையிலே இனிய முறையிலே புராண, இதிகாசங்களையும், சமய நீதிக் கதைகளையும் கோவில்களிலும், பொதுமக்கள் கூடும் மன்றுகளிலும் அவர் பக்தியுணர்வு பீறிட்டெழ சமயக் கதைகளைச் சொல்லி வந்தார். தம் கதைகளுக்கு மேலும் அணி சேர்க்க நாவலர் தேவார திருவாசகம் முதலாம் திருமுறைகளை இடையிடையே பாடினார். 1847ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரப் பெருமானுறையும் சிவன் கோவிலிலே பெருமானால் ஆரம்பிக்கப்பட்ட இசைவாணர்களால், புராண இதிகாச சாத்தி பின் வந்த சான்றோர், வாக்கு இசைச் சாதுரியத்தால் கதை செய்த புராண இதிகாசக் கதைகளையும் சிறப்பாக கந்த புராணம், திருவிளையாடற் புராணக் கதைகளையும் தேடித் தேடி ஆவலுடன் செவிமடுக்கலாயினர். அக்கறையுடன் கையாளப்பட்டு வளரலாயிற்று. தாங்கள் கதை சொல்லும் போது உருக்கமாகவும், இனிமையாகவும் பாடப்படும் திருமுறைகள், பக்திக் கீர்த்தனங்களுக்கு பக்கவாத்திய அனுசரணையும் பெற்று இந்த அருட்கலை "கதாப்பிரசங்கம்" என்ற பெயரோடு ஒளிர்ந்து வரத் தொடங்கியது. ஈழத்தில் ஆரம்பித்து வைத்த இச்சைவப் பிரசங்க முறைமையில் அவர் இந்தியாவிலும் செய்து பெரும்புகழீட்டினார். செழுமைபெற்ற பெரியோர்களினால் தொடர்ந்து பேணப்படலாயிற்று. சமய வரலாறுகளை மாத்திரமல்ல, தத்துவங்கள் வழிபாட்டு முறைமைகள் போன்றவற்றையும்கூட இனிய இசைசேர்த்து இசைப் பிரசங்கமாக இம்மரபே இலங்கையில் தனித்துவமான தெய்வீகக் கலையாகப் பரிணமிக்கலாயிற்று.

### திருமுருக கிருபானந்தவாரியார்:

சங்கீத கதாப்பிரசங்கம் என்றவுடனே எமது நினைவில் நிறைந்து நிற்பவர் அருட்திரு. கிருபானந்தவாரியாரே. இந்தியாவில் வாரியார் சுவாமிகளையும் இலங்கையில் குரமணி பரமாசாரிய நம்பிதான் சுவாமிகளையும் இவ்விரு நாடுகளையும் பெறாவிட்டால் சங்கீதப் பிரசங்க முறைமையின் வளர்ச்சியைப் பூரணமாகப் பார்க்கமுடியாது. ஆஜானுபாகுவான அருள்கனிந்த தோற்றமும், சிவப்பழமான பொலிவும், அறிவின் நிறைவும் கொண்ட வாரியார் மேடையில் அமர்ந்து "கைத்தலம் நிறைகனி அப்பமோடவல் பொரிகப்பிரியகரிமுகன் அடி பேணி..." என்று ஆரம்பித்து மக்களை ஈாத்து நகைச்சுவைத் துணுக்குகளோடும் பண்ணும் கதாப்பிரசங்கத்துக்குத்தான் நிகரேது? எம்பெருமானுக்கு கொக்குவில் மஞ்சவனப்பதியில் அமைந்திருக்கும் கோவிலில் வாரியார் வருடாவருடம் வந்து கதை செய்து இலங்கை கதாபிரசங்க வளர்ச்சிக்கும் உந்து சக்தியாய் விளங்கயதை அறியாதார் யார்?

**மணி ஐயர்**

1937களில் சி.எஸ்.எஸ். மணிபகவதராய் தமிழ் மொழியாட்சியும் சங்கீத ஞானமும் நிறையப் பெற்று, தன் கணீர் என்ற குரலால் கம்பீரமாக மேடையினருகே நின்ற நிலையில் பலகாலம் பிரசங்க மழையைப் பொழிந்து இலங்கையின் முதலாது சைவ ஆதீனமும் அமைத்து சங்கீத கதாப்பிரசங்க மரபைப் பேணி தம்பிரான் சுவாமிகள் பிரசங்க பாணியை யார் மறப்பர்.

யாழ்ப்பாண இசைப்பாரம்பரிய மரபு வளர்ச்சியிலே கதாப்பிரசங்கம் வகிக்கும் பங்கினை எடுத்துக்காட்டி தமக்குப்பின் சைவ பிரசங்கிமார்களையும் உருவாக்கிய பெருமை பிற்கால தம்பிரான் சுவாமிகளையே சாரும். 1966ல் புதுக்கோவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் சுவாமி கோவிலில் இடம்பெற்ற மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து ஒரு மண்டலத்திற்கு பகவதா் இங்கு பக்கவாத்திய சகிதம் சங்கீத மழை பொழிந்தமை இங்கு சிறப்பாக குறிப்பிடத்தக்கது. அப்போது அவருக்கு செல்வி ஞானாம்பிகை முருகேசு வயலின் வாசிக்க, பிரபல மிருதங்க கலைஞர்கள் என். தங்கம், ஜெயசுந்தரம், அம்பலவாணர் ஆகியோர் பக்க வாத்தியம் இசைக்க கணேசசுந்தரம் பிற்பாட்டு பாடுவார். கணேசசுந்தரம் இல்லாத நாட்களில் மணிஐயரின் சாலை நண்பரான மு. சின்னத்தம்பி ஆசிரியரின் மகன் ஸ்ரீ தயாளன் இடைகளில் பிற்பாட்டும் திருமுறைகளும் பாடுவார்.

இந்தவகையில், இத்தெய்வீகக் கலைவளர்ச்சி தொடர்பில், மிகப் பிரகாசித்ததுடன் இலங்கையில் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனமொன்றையும் 1966களில் ஸ்தாபித்து கதாப்பிரசங்க முறைமையும், அக்கலையின் தெய்வீகத்தையும் கலந்து வளர்த்தவர் என்ற வகையில் "முத்தமிழ்மணி" சி.எஸ்.எஸ்.மணிபாகவதா் எனப் பெயர் பெற்ற நல்லை ஆதீனகர்த்தா் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்ததேசிக பரமாசாரிய தம்பிரான் சுவாமிகள் பிரதானமானவராவார். இலங்கையில் சங்கீத கதாப்பிரசங்க மரபானது உடுவை வாசியும், பின்னர் கீரிமலையில் ஆசிரமமமைத்து வாழ்ந்து, சங்கீத உபந்நியாசகர்களுக்கு முன்னோடியாக விளங்கியவருமான பாகவரா், சங்கரசுப்பையர் காலத்தில் ஆரம்பம் பெறுவுதாகக் கூறப்படுகிறது. குரமணி சி.எஸ்எஸ். ஆவா்களின் குரவாகவும் விளங்கி அவரை அரங்கேற வைத்தவரும் சங்கரசுப்பையரே என்பர். இவருக்குப்பின் கதை செய்தல் மரபு இலங்கையிலும் அக்கறையோடு பேணப்பட்டு வந்த வரலாறுகள் உண்டு.

**பிற்காலத்தில் இம்மரபுக் கலைவளர்ச்சி:**

தகவல்கள் பெற்ற அளவில் கீரிமலையில் ஆசிரமம் அமைத்து, ஹரிகதைகளை, இனிய இசைப்பிரசங்கங்களை ஆற்றி சமய வளர்ச்சிப்பணியில் உடுவை சங்கர சுப்பையர் குறிப்பிடத்தக்கவராவார். இவரைப்போல சங்கானை நாகலிங்கப் பரதேசியார், இவரின் மாணவர் "இசைவல்லாளர்" குப்பிளான் செல்லத்துரை, மாணிக்கத்தியாகராஜா், நல்லூர் முத்தமிழ்மணி சி.எஸ்.எஸ். மணிபகவதா் கொக்குவில் குமாரசுவாமிப்புலவர், இணுவை தியாகு.வேலுப்பிள்ளை சிவஞானம், வடிவேல்சுவாமி, தாவடி ஆறுமுகம், குமாரசமி, உடுவில் இசைப்புலவர் என்.சண்முகரத்தினம், வட்டுக்கோட்டை ஆசிரியர் அளவை பொன்னம்பலம், இணுவை வடிவேல்சுவாமி, மட்டக்களப்பு டாக்டர் இரா.சிவ அன்பு, அளவையூர் அருட்கவி விநாசித்தம்பி, கானகதா வாருதி சிவ.வை.நித்தியானந்தசர்மா, சுப.கணேசசுந்தரன், கொக்குவில் சின்னத்தம்பி ஸ்ரீதயாளன், திருமலை பண்டிதா் வடிவேலு, சிவ.சண்முகமூர்த்தி, மட்டுநகா் சிவயோகன், சாம்பசிவம், ராசலிங்கம், ஆனந்தராசா, அளவை. வர்ணகுலசிங்கம், பொன் தெய்வேந்திரம், கலாநிதி கனக.நாகேஸ்வரன் ஆகியோர் இலங்கையில் இசை கதாப்பிரசங்க மரபுக்கு அணி செய்பவர்களாக விளங்கியும், விளங்கிக் கொண்டும் இருப்பவர்கள் எனலாம். இலங்கையைப்

பொறுத்தளவில், செல்நெறி இசைப்பாரம்பரியமோ, இசைப்பிரசங்கக் கலையோ அதிக தூரம் மீள்கண்டு பிடிப்புக்களையோ, செல்வாக்கையோ என்று கூறும் பேராசிரியர் சிவத்தம்பி, செல்நெறி எனது இசைப் பாரம்பரியத்தில் இவ்விரண்டும் கால வெள்ளத்தால் அழியுறாது காக்கவேண்டியது செந்தமிழ் மக்களின் கடமை என்றும் குறிப்பிடுவார். இசைக்கச்சேரிபோல தனியொருவர் நிருபணங்களோடு பக்க வாத்தியங்களோடு கதைகளை எடுத்துரைக்கும் மரபு சார்ந்த இககலை மிக அற்புதமானது என்றும் கூறுவார்.

பேசத்தெரிந்த பெரும் பேச்சாளர்கள், இசைஞானம் சற்றும் இல்லாதவர்களாகவும், நன்றாக சங்கீத ஞானம் உள்ளவர்கள் வாக்கு வன்மையும் சாதுரியமும் இல்லாதவர்களாவும் இருக்கக் காண்கின்றோம். போதிய மொழியறிவு, இலக்கண இலக்கிய அறிவு நிரம்பியவர்கள் தாம் கற்றதை மற்றவர்கள் உளம் கொள்ளக்கூடிய வகையில் கதையாகச் சொல்லக்கூடியவர்களாக மற்றவர்களுக்கு பயனும், இன்பமும் தரக்கூடியவர்களாக இருக்கமுடியாதவர்களாக இருக்க காணுகிறோம். அபினயமும், நடிப்பும் சந்தர்ப்பத்துக்கேற்ற கதையில் வரும் பாத்திரமாக மாறும் நடிக்கும் ஆற்றல் வேறு இக்கலைக்கு வேண்டும். இத்தகைய தகைமைகளை உற்று முயலும்போது தான் இக்கலையானது பொதும்கள் மத்தியில் தொடர்ந்து போற்றப்படுவதற்கு உகந்த களமும் இப்போது கிடைப்பது அரிதாகிறது. ஒரே கதை மீண்டும் மீண்டும் செய்யப்படுகையில் புதுப்புது தன்மைகளும், உத்திகளும், கற்பனைகளும் அமைந்து அந்நிகழ்ச்சியைச் சோமிக்க வைத்து விடும். அந்தச் சிறப்புக்களை வர்ணிக்க வார்த்தைகளுக்கே வன்மை கிடையாது.

சமய நிறுவனங்களும் ஊடகங்களும் இக்கலை வளர்ச்சிக்கு...:

சமய ஆலயங்கள் ஆன்மீக நிறுவனங் களுக்கு மேலாக இலங்கை அரசின் தேசிய வானொலியும் தொலைக்காட்சியும் இக்கலையின் வெளிப்பாட்டிற்கும் அரிய பங்கு பேணி அளித்து வருகிறது. விசேட விதமாக இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ் வானொலி நிகழ்ச்சிகளில் கதாப்பிரசங்கம் என்ற தலைப்போடு ஒவ்வொரு வெள்ளிதோறும் இரவு பத்து முப்பது மணிமுதல் இந்நிகழ்ச்சி இடம்பெறத் தவறுவதில்லை. இவ்வாறே இலங்கை தொலைக்காட்சியான ரூபவாஹினியும் சைவ நீதி என்ற நிகழ்ச்சித் தொடரில் கதாப்பிரசங்க கலைக்கு முக்கியம் அளித்து வருகின்றமை இங்கே குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இந்து சமய கலாசாரத் திணைக்களம் இத்துறைக்கும், இத்துறையில் ஈடுபடுபவர்களுக்கும் பயனுள்ள வகையில் ஆதரவு வழங்குதல் சாலச் சிறந்தது. சமய மாநாடுகள், விழாக்கள், பொதுக்கலை வைபவங்களில் இன்று நலிவடைந்து போகக்கூடிய கதாப்பிரசங்க கலையை புத்துயிர் அளித்து முன்னெடுக்கும் நிலை நம்நாட்டில் துரிதமாக ஏற்படுத்தப்படவேண்டும். இசை பாரம்பரியத்தில் குறிப்பாக யாழ்ப்பாண இசை பாரம்பரியத்தின் வளர்ச்சி குறித்து தமிழர்களிடையே விழிப்புணர்வு ஏற்படவேண்டும் என்பது இங்கு குறிப்பிடக்கூடியதாகும்.

கட்டுரையின் சாராம்சம்

1. கலைத்துவமான முறைமையில் பொதுமக்களுக்கு கதைகளைக்கூறி மகிழ்வித்து, காலத்தைச் சேபனம் செய்யும் ஆற்றுகைக்கலை தமிழர்கள் வாழ்வில் பண்டுதொட்டிருந்தது.
2. பட்டி கிருஷ்ணபாகவதர் காலஷேபக் கலையோடு புராண இதிகால சமயப்பாங்கான கதை செய்தல் முக்கியம் பெற்ற வரலாறு.
3. ஆரம்ப காலத்தில் இக்கலையை இந்தியாவில் சங்கீத வித்துவான்கள் மிக ஈடுபாடு காட்டி இசை ஈடுயிட்ட வகையில் கதை சொல்லும் முறைமையை மராத்தி, தெலுங்கு மொழிகளில் அறிமுகம் செய்தமை.

4. ஹரிகதை கலாசாரம் சமய கதாப் பிரசங்கங்களாக வளர்ச்சி அடைந்தமையும் ஆரம்பகால பங்குதாரரும்.
5. நல்லை ஆறுமுகநாவலர் பக்திப் பிரவாக எழுச்சிக்கும் சமயப் பிரசாரத்துக்கும் லோபோகாரமாக சைவ பிரசங்கம் செய்யும் முறைமையைத் தொடக்கி வைத்தமை.
6. காலஷேபனத்துக்காக இக்கலை புதிய பரிமாணம் பெற்று தமிழ்கூறும் நல்லுலகில் ஜீவனோபாயத்தக்காக பயன்பட்டமை.
7. திருமுருக கிருவானந்தவாரியாரும் இலங்கையில் சி.எஸ்.எஸ் மணிபகவதரும் சங்கீத கதாப்பிரசங்கத்தின் முன்னோடி களாக விளங்கி வழிசமைத்தமை.
8. கதாப்பிரசங்க கலை இன்று தமிழ் மக்களிடையே நலிவடைந்து செல்வது பற்றிய ஒரு ஆய்வு பார்வை.
9. இவ்வாற்றுகலையின் பெருமையும் இன்றுவரை இக்கலையில் ஈடுபடும் பெரியவர்களும் அருட்கலைஞர்களும்.
10. எதிர்காலத்தில் கதாப்பிரச்ங்க மரபு புத்துணர்ச்சியுடன் பேணப்படவும், இவ்வாற்றுக்கலை விருத்தியடையவும் செய்யவேண்டிய முயற்சிகள்.

## கிருபாகரமாய் கல்யாண குணம் கொண்ட ஆறுமுகன்–சிவனே

கடவுள் பகவானின் பூரணத்துவத்தைக் காட்டக்கூடிய குணங்களாக முக்கியமாக மூன்றைக் குறிப்பிடலாம்.

முதலாவது : வாத்ஸல்யம்

தன்னுடைய பக்தர்களைக் குழந்தைகளாக நினைத்து. அந்தக் குழந்தைகளிடத்தில் வாத்ஸல்யத்தைக் கணித்த பிரியத்தைக் காட்டக்கூடிய தன்மை இதுவாகும்.

இரண்டாவது : சௌலப்யம்

சௌலப்யம் என்பது தமிழில் "வெளிவந்த தன்மை" என்று சொல்லக்கூடியது. பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக தெய்வம் அவ்வளவு தூரம் இறங்கியும், இரங்கியும் வரக்கூடியது என்பதை உணர்த்துவது. "தர்ம ஸம்ஸ் தாபநார்த்தாயே சம்பவாமி யுகே யுகே" என்ற சுலோகம் இக்கருத்தில் அமைவதே.

மூன்றாவது : சொளசீயம்

இப்பதமானது எளிமைப்படுததி நோக்கினால் தோழமை என்ற பொருளைக் கொண்டு அமையும், தெய்வீகம் ஒரு நண்பனோடு பழகுகின்ற பாணியில் பழகும் தன்மை இதுவாகும்.

இக்கல்யாண குணங்களோடு சக்தி, தேஜஸ், வீர்யம் என்ற மற்றும் 3 குணங்களையும் அடக்கி, ஆறு குணங்களைக் கொண்டவனாக பகவான் அல்லது இறைவன் என்ற பதத்தை வியாக்கியானம் செய்வர் ஆன்றோர். முகனாகத் தோன்றிய பரம் பொருளான பிரம்ம-இறைவன் சிவன் கொண்ட ஆறுகுணங்களே ஆறுமுகப் பெருமானினும் பிரதி பலிக்கின்றன என்பதை அறிந்துள்ளோம்.

# கலியுகத்தில் கடவுளின் கருணைபெற பஜனைவழி

ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தஜி
(சிவயோக சமாசம், திருகோணமலை)

நாதஸ்ய யோகம் அல்லது நாம பஜனை என்பது ஜனங்'களுடைய சித்த விருத்திகளை இருதயாமிருதமான ஆத்ம நாதத்தில் லயப்படுத்தி ஒடுக்குவதற்குரிய ஒரு லலிதமான ஆத்மசாதனை.

எய்யும் அம்பு கூரியதானால் குறியில் ஆழமாய்த் தைப்பது போன்று, கூர்மையான மனம் உடையவர்களால்தான் இறைவன் என்ற குறியைத் தவறாமல் அடைய முடியும்.

மனோலயம் என்பதனால்தான் மனம் ஒடுங்கிக் கூர்மை பெறுகின்றது. தீட்சா முறைகளும், கடினமான சாதனைகளும் இன்றி பாலர்களில் இருந்து வயோதிபர்கள் வரையும் பாடிப் பாடியே தம் மனத்தை இறைவன் பால் லயித்து ஒடுங்கச் செய்வதற்கேற்ற எளிதான மார்க்கந்தான் பஜனை.

சர்வ சராசரங்களிலும் ஒலிக்கின்ற 'ஓம்' என்ற பிரணவ சத்தத்தையே நாதம் என்று வழங்குகின்றோம். பிராணிகளை உயிர்ப்பிக் கின்ற இந்த நாதம் மனிதருடைய மூலாதாரத்திலிருந்து உச்சிக் கமலம் வரையில் இருக்கும் சுழுமுனைத் துவாரம் வழியில் அமைந்து, ஆறு ஆதார சக்கரங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான ஒலி பேதங்களுடன் ஒலிக்கின்றது.

சக்கரங்கள் என்றால் சில்லுகள் என்று அர்த்தம், வாகனம் ஓடுவதற்குச் சில்லுகள் எவ்வாறு பயன்படுகின்றனவோ, அவ்வாறே சரீரமாகிய வாகனத்தின் போக்குவரவுக்கு இந்த ஆறு சில்லுகளும் ஆதாரமாயிருக்கின்றன.

**பிரதான சக்கரம்:**

ஆதார சக்கரங்களில் பிரதானமானது ஹிருதய ஸ்தலத்தில் அமைந்திருப்பதாகிய அனாகத்ச் சக்கரம், சப்தசுருதிச் சாஎரமாகிய அனகதச் சக்கரத்தில் நின்று எழும் ஹரீம் என்ற அனாதக நாத்தில் மனத்தை லயப்படுத்தினால், தேனுண்ணும் வண்டு மலரின் மணத்தில் அக்கறையற்றிருப்பது போன்று, சாதகனுடைய மனம் பிரபஞ்ச வாசனையற்று கர்ணாதீதமான அனாகத நாத சுகத்தில் சதாலயித்திருக்கும்.

பரம சுகமுடைய இந்தத் திவ்விய நாத சுவையில் ஒரு குறிக்கப்பட்ட நேரம் மனம் லயிக்குமேயானால் நாதத்தின் உள்ளே யிருக்கும் இறையொளியாகிய உள்ளொளி சாதகனுடைய மனக் கண்ணில் ஒளிரும்.

பிராரப்த கர்ம வினைகளைத் தீர்த்து ஜீவனை ஜீவன்முக்தனாக்கும் இறையொளி தரிசனந்தான் நாத லயயோகமாகிய நாம பஜனையின் குறிக்கோள்.

செவிப்புலனாகாததும் ஒடுங்கின மனத்தால் மாத்திரம் கிரகிக்கக்கூடியதுமாகிய அதி சூக்குமமான அனாதக நாமத்தைக் கேட்டு அதில் மனத்தை லயப்படுத்துவதற்கு இரண்டு விதமான சாதனா மார்க்கங்களிருக்கின்றன.

ஒன்று குண்டலினியோகம்: மற்றது நாத லய யோகமாகிய நாம பஜனை.

**கலியுகத்தில்**

மனிதர் இப்பொழுது சதுர்வித யுகத்தின் கடைசி யுகமாகிய கலியுகத்தின் மத்திய பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கலியுகத்தில் மனிதனுடைய மனம் கண மாத்திரையில் உணர்ச்சிவசப்பட்டுச் சலனம் அடைவதால் கலியுகமென்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. உணர்ச்சிவசத்தால் அலை மோதிக் கொண்டிருக்கும் மனமுடையவர்கள் எடுத்த எடுப்பில் தியானத்தில் மனத்தை நிலைநிறுத்துவதற்கோ, கடுமையான நியமங்களோடு கூடிய பிராணாயாம பிரத்தியாகார தாரணிகளின் வழியே குண்டலினி சக்தியை எழுப்பி அனாதக நாதத்தைக் கேட்பதற்கோ அருகதையற்றவர் களாயிருக்கின்றனர்.

அது மாத்திரமன்று: இத்தகைய தீர்க்கமான உள்ளப் பயிற்சிக்கு நாடோறும் மாறிக் கொண்டிருக்கும் ஜீவிதக் கிரமங்களும், சமுதாயச் சூழ்நிலைகளும் சாதகமாக அமையவும் இல்லை.

ஆகையால் காலதேச வர்த்தமானங் களுக்கு இசையக்கூடிய பஜனை மார்க்கந்தான் கலியுகத்திற்கேற்ற ஆத்மசாதனை.

ஒளிப்பு மறைப்பின்றி அனைவரும் ஒன்று சேர்ந்து இசைச் சுகத்துடன் அப்பியசித்துக் கடைத்தேறுவதற்குரிய ஒரு உத்தம சாதனம் பஜனை.

**பஜனைக்கு உகந்த நேரம்**

பஜனைக்குத் தேர்ந்தெடுக்கும் இடம் மிகத் தூய்மையானதாயும், தெய்வீக உணர்வுகளைத் தூண்டிவிடக்கூடிய புனித சின்னங்களால் அலங்கரிக்கப்பட்டதாயும், காற்றோட்டமும் வெளிச்சமும் உடையதாயு மிருத்தல் வேண்டும்.

மனத்தில் இயற்கையாகவே அமைதியும், சாந்தமும் நிலவக்கூடிய உதயம் அல்லது அஸ்தமனமான காலம் பஜனைக்கு உகந்த நேரம்.

பஜனையில் கலந்து கொள்கின்ற வர்கள் எல்லாம் தூய்மையான மனத்துடன் ஸ்தலத்திற்கு வந்து நிசப்தமாய் அமர்ந் திருத்தல் வேண்டும.

பஜனை ஆரம்பிக்கும் நேரம் வந்ததுதம் அனைவரும் எழுந்து நின்று மங்கள இசையுடன் தெய்வீகச் சின்னங்களுக்குத் தீபாராதனை செய்து, குருவணக்கமும் இறைவணக்கமும் முடித்து, உடலை நேராக நிமிர்த்தி வைத்து அசைவற்றிக்க வேண்டும்.

கண்களை முற்றாக மூடியோ அல்லது அரைக்கண் பார்வையுடனோ இருப்பது மன ஒருமைப்பாட்டிற்கு அனுகூலமாயிருக்கும்.

பஜனைக்கு நாம் சங்கீர்த்தனங் களையோ, நாமாவளிகளையோ அல்லது ஞான வைராக்கிய உணர்வுகளை ஊட்டக்கூடிய கீதங்களையோ உபயோகிக்கலாம்.

பாட்டுக்களை ஆத்மீகப் பண்ணிசை முறையில் சுருதி தாள லயத்துடன் பாட வேண்டும்.

இசைச்சுகம் தரக்கூடிய, இன்னிசைக் குரல் உடைய ஒருவரோ அல்லது இருவரோ பாடிக் கொடுக்க மற்றவர்கள் அதனை ஒருமைப்பாட்டுடன் ஏற்றுப் பாட வேண்டும்.

பாடும் போது பாட்டின் இனிய ராக ஒலியிலும், பட்டில் அமைந்திருக்கும் கருத்திலும் மனம் முற்றாக லயித்துப் போகுமளவிற்கு ஒருமுக உணர்வுடன் பாடவேண்டும்.

பஜனைக்கு ஒன்று அல்லது ஒன்றரை மணிநேரம் போதுமானது. பஜனை முடிந்த பின் எழுந்து நின்று தீபாராதனை செய்து, பிரசாதமும் பெற்று, அதே சிந்தனையுடன் அவரவர்கள் இடத்திற்குத் திரும்ப வேண்டும்.

**வாய்ப்பு அளிக்கவும்**

பஜனை நாட்களில் சாத்வீகமான உணவைக் குறைந்த அளவில் உட் கொள்வதால், கூடுதலான பயனுண்டு.

பஜனையின் போது இறுக்கமில்லாத தூய உடைகளையே அணிய வேண்டும்.

பஜனையில் கலந்து கொள்பவர்கள் எல்லாம் கூட்டுறவுக் குடும்ப யோகத்துடன் ஐக்கியமாகவும், அன்பாயும், அன்னியோன்னிய உபகாரம் உடையவர்களாயுமிருத்தல் வேண்டும். பஜனையில் ஆர்வமும், பக்தியும் இருப்பவர்களுக்கு யாதொரு அங்கத்துவ நிபந்தனையும் இல்லாமல் சுதந்திரமாய் அதில் கலந்து கொள்ளும் வாய்ப்புகள் அளிக்க வேண்டும்.

பஜனை முடிவில் இதுவரையில் தேங்கி நின்ற மனக் கிலேசங்களுக்குச் சமனம் வந்திருப்பது போன்ற மனத்திருப்தியும் சொல்ல முடியாததோர் உட்சுகமும், சாந்தியும் கிடைத்திருப்பது போன்ற அனுபவம் இருக்குமேயாகில், பஜனையில் நற்பயன் அடைந்து வருவதாக அனுமானிக்கலாம்.

நாளடைவில் பஜனையில் நின்று உருவாகும் மனாதீத சக்திகள் பக்தர்களுடைய வாழ்க்கையில் எல்லாப் பாங்கிலும் நின்று அருள் பாலித்துக் கொண்டிருப்பதைப் பிரத்தியட்சமாக அறியலாம்.

இறுதியில் பஜனையும், பஜனையில் அடங்கிய கருத்தும், பூஜிக்கின்றவனும் ஒன்று கலந்து ஏகபாவத்தில் வரும் பொழுது அனாகதத் தொனியின் சித்தி விஷேசங்கள் அனுபூதி மயமாய்த் தீரும்.

கலிகால உபாதையால் நொந்துருகி நிற்கும் மனம் நாம பஜனையின் திவ்விய சக்தியால் அனுகத நாத வெளியிலிருந்து வருசிக்கும்.

நாதாமிர்தத் துளிகளால் குளிர்மைப் படும் பொழுது தங்க விக்கிரத்தில் சாத்திய பட்டுப் பீதாம்பரம் போன்று தளர்ந்த ஜீவிதம் தேஜோமயமாய் மிளிரும்.

# சத்ரு சங்கார வேற் பதிகம்

சண்முகக் கடவுள் போற்றி
சரவணத் துதித்தாய் போற்றி
கண்மணி முருகா போற்றி
கார்த்திகை பாலா போற்றி
தன்மலர் கடப்ப மாலை
தாங்கியதோளா போற்றி
விண்மதி வதனவள்ளி
வேலவா போற்றி போற்றி

[கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வழிபாட்டு மரபிலே பண்டுதொட்டு பஜனை வழிபாடுகளும். பிள்ளையார் பெருங்கதை. கந்தபுராண படனம். நித்திய பூசை முடிவடைந்ததும் ஒவ்வொரு நாளும் கைத்தபளத்தோடு. கூட்டு வழிபாடு என்பன அடியார்களினால் நடத்தப்படுவது வழக்கம். இவ்வொழுங்கினை கோயிலின் அண்மையில் வாழ்ந்த அமரர்களான திருவாளர்கள் தம்பு. இராசப்பா. முத்துதம்பி. சின்னத்தம்பி பாலசுந்தரம் சபாரத்தினம் தம்பி. அமரர் திருமதி. அமிர்தாம்பிகை. திருமதி. கந்தவனம். தம்பர் கோபால். தயாளன் போன்றவர்கள் அக்காலத்தில் ஒழுங்காக கோவில் கிழக்கு வாசலில் நடத்தி வந்தனர். இம்முறைமை வருங்காலத்திலும் பெரியவர்களாலும் இளைஞர்களாலும் கடைப்பிடிக்கப்படுவது அவசியமெனக் கருதுகிறோம். அப்பாடல்களில் சிலவற்றை மாத்திரம் கீழே பதிவு செய்கிறோம்]

### பல்லவி

முருகா ! முருகா ! முருகா ! 1

### சரணங்கள்

வருவாய் மயில்மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா)

அடியார் பலரிங் குளரே:
அவரை விடுவித் தருள்வாய்!
முடியா மறையின் முடிவே அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே! (முருகா)

சுருதிப் பொருளே வருக
துணிவே, கனலே,வருக!
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகா)
அமரா வதிவாழ் வுறவே

அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா, பிணியா வையுமே சிதறக்
குமுறும் கூர்வே லவனே, சரணம் (முருகா)

அறிவா தியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய் (முருகா)

குருவே! பரமன் மகனே!
குகையில் வளருங் கனலே!
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
ஸமரா திபனே! சரணம் சரணம்! (முருகா)

மகாகவி - ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்

**பல்லவி**

வேல் முருகா மால் மருகா வா வா ஷண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வா வா ஷண்முகா 2

சரணம்

நால் வேதப் பொருளோனே நாதா ஷண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா ஷண்முகா
செல்வமாகச் சிவை அணைக்கும் சேயே ஷண்முகா
செங்கதிர்வேல் தாங்கிய என் தேவே ஷண்முகா (வேல்)

ஆறுபடை வீடுடைய ஆண்டவா ஷண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா ஷண்முகா
தேறுதலை தருபவனே தேவா ஷண்முகா
சிங்கார ஓங்கார சீலனே ஷண்முகா (வேல்)

நாறுமாலை யணிமார்பா நாயகா ஷண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா ஷண்முகா
ஏறுமயில் வாஹனனே ஏந்தலே ஷண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதமே ஷண்முகா (வேல்)

பாடும்பணி தந்திடுவாய் பண்தொ ஷண்முகா
பக்தருடன் கூட்டிடுவாய் முத்தனே ஷண்முகா
ஆடும்சேவற் கொடியழகா ஆண்டவா ஷண்முகா
அடியார்உள்ளக் குறையமர்ந்த ஆனந்த ஷண்முகா (வேல்)

வீடும் நாடும் நின்திருத்தாள் வேண்டினேன் ஷண்முகா
வீரன் சூரன் உடல்கிழித்த வேலவனே ஷண்முகா
ஓடும்மனம் உன்னைநாட ஆடிவா ஷண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா ஷண்முகா (வேல்)

எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா ஷண்முகா
எங்கும் நிறை அன்புருவே முருகா ஷண்முகா
தில்லையிலே ஆடும்தேவி பாலா ஷண்முகா
திருட்டுத் தனமாய் குறக்கொடியை கொண்டவா ஷண்முகா
(வேல்)

தொல்லையெல்லாம் கடந்தபதம் தந்திடும் ஷண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் ஷண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணைசெய் ஷண்முகா
கல்லெனச் சிலம்பொலிக்க ஓடிவா ஷண்முகா (வேல்)

-ஸாது. ஸ்ரீ முருகதாஸ்-

ராகம் : பேஹாக் தாளம் : திஸ்ர ஏகம்

| | | | |
|---|---|---|---|
| அன்பர்க்கு அன்பனே நீ | வா | வா | முருகா |
| ஆறுபடை வீடுடையாய் | வா | வா | முருகா |
| இன்பமய ஜோதியே நீ | வா | வா | முருகா |
| ஈசனுமை பாலகனே | வா | வா | முருகா |
| உலகநாதன் மருகனே | வா | வா | முருகா |
| ஊமைக்கருள் புரிந்தவனே | வா | வா | முருகா |
| எட்டுக்குடி வேலா நீ | வா | வா | முருகா |
| ஐங்கரனுக் கிளையவனே | வா | வா | முருகா |
| ஆறுமுக வேலவனே | வா | வா | முருகா |
| ஒய்யாரி வள்ளிலோலா | வா | வா | முருகா |
| ஓங்காரத்தத்துவமே | வா | வா | முருகா |
| ஔவைக்குப தேசித்தவா | வா | வா | முருகா |
| அகில லோக நாயகனே | வா | வா | முருகா |
| ஓடிவா நீ ஓடிவா நீ | வா | வா | முருகா |
| ஆடிவா நீ ஆடிவா நீ | வா | வா | முருகா 3 |

சுப்பிரமணியம் சுப்பிரமணியம்
சண்முகநாதா சுப்பிரமணியம் (2)

சிவ சிவ சிவ சிவ சுப்ரமண்யம்
ஹர ஹர ஹர ஹர சுப்ரமண்யம்
சிவ சிவ சிவ சிவ சுப்ரமண்யம்
ஹர ஹர ஹர ஹர சுப்ரமண்யம்
சிவ சரவணபவ சுப்ரமண்யம்
குரு சரவணபவ சுப்ரமண்யம்
சிவ சிவ சிவ சிவ சுப்ரமண்யம்
ஹர ஹர சிவ சிவ சுப்ரமண்யம்

நமப்பார்பதிபதயே - அரஹர மகாதேவா
புதுக்கோயில் முருகனுக்கு அரோஹரா !

# ஸாதன பஞ்சகம்

1. வேதோ நித்யம தீயதாம் தததிதம் கர்ம ஸ்வநுஷ்டீயதாம்
தேநே ஸஸ்ய விதீயதாமபசிதி: காம்யே மதிஸ்த்யஜ்யதாம்
பாபௌக: பரிதூயதாம் பவஸுகே தோஷோநு ஸந்தீயதாம்
ஆத்மேச்சா வ்யவஸீயதாம் நிஜக்ருஹாத் தூர்ணம் விநிர் கம்யதாம்

2. ஸங்க: ஸத்ஸு விதீயதாம் பகவதோ பக்திர் த்ருடாதீயதாம்
சாந்த்யாதி: பரிசீயதாம் த்ருடதரம் தர்மாசுஸந்த்யஜ்யதாம்
ஸத்வித்வான் உபஸர்ப்யதாம் பிரதிதினம் தத்பாதுகா ஸேவ்யதாம்
ப்ரஹ்மைகாக்ஷரமர்த்யதாம் ச்ருதி சிரோவாக்யம் ஸமாகர்ண்யதாம்

3. வாக்யார்த்த: ஸுவிசார்யதாம் ச்ருதிசிர: பக்ஷ ஸமாச்ரீயதாம்
துஸ்தர்காத் ஸுவிரம்யதாம் ச்ருதிமதஸ்தர்கோநு ஸ்ந்தீயதாம்
ப்ரஹ்மாஸ்மீதி விபாவ்யதாமஹரஹர் கர்வ: பரித்யஜ்யதாம்
தேஹேஹம்மதிருஜ்யதாம் புதஜனைர்வாத: பரித்யஜ்யதாம்

4. க்ஷுத்வ்யாதிச்ச சிகித்ஸ்யதாம் ப்ரதிதினம் பிக்ஷௌஷதம் புஜ்யதாம்
ஸ்வாத்வன்னம்நது யாச்யதாம் விதிவஸாத் ப்ராப்தேந ஸந்துஷ்யதாம்
ஸீதோஷ்ணாதி விஸஹ்யதாம் நதுவ்ருதா வாக்யம் ஸமுச்சார்யதாம்
ஔதாஸீந்யமபீப்ஸ்யதாம் ஜநக்ருபா நைஷ்டுயர்யம் உத்ஸ்ருஜ்யதாம்

5. ஏகாந்தே ஸுகமாஸ்யதாம் பரதரேசேதஸமாதீயதாம்
பூர்ணாத்மா ஸுஸமீக்ஷ்யதாம் ஜகதிதம் தத்பாதிதம் த்ருச்யதாம்
ப்ராக்கர்ம ப்ரவிலாப்யதாம் சிதிபலாத் நாப்யுத்தரை: ச்லிஷ்யதாம்
ப்ராரப்தம் த்விஹ புஜ்யதாமத பரப்ரஹ்மாத்ம நாஸ்தீயதாம்

## இறைவனை கும்பத்தில் பூஜிப்பது ஏன்?

இறைவன் நின்று அருள்பாலிக்கும் இடங்களில் கும்பமும் ஒன்றாகும். பிரதிஷ்டை, மஹோற்சவம், உருத்திரம், ஸ்நமனம், மற்ற சுபகாரியங்களிலும் கும்பத்தில் சிவபெருமானை மந்திரம், கிரியை பாவனைகளினால் எழுந்தருளச் செய்து வழிபடுதலும் ஒருவகை.

முதல் ஒன்றைப் பிண்டம் (உடம்பு) ஆக்கி கொண்டு, மேலே காட்டப்படுவது போல அமைத்துப் பூஜித்து வழிபடுவதில் உள்ள விளக்கம் பின்வருமாறு.

கும்ப வஸ்திரம் = தோல்
சிவந்த நிறம் ஏறப்பூசிய மண் = இரத்தம்
கும்பமாக அமைக்கப்படும் பொருள் (மண்) = மாமிசம்
நிறைக்கப்படும் தண்ணீர் = மேதை (நிணம்)
தருப்பைக் கூர்ச்சம் = குடுமி (எலும்பு)
சுற்றப்படும் நூல் = எழுபத்தீராயிரதம் நரம்புகள்
உள்ளே இடப்பட்ட இரத்தினம் = வீரியம் (பொன், புஸ்பம் ஆகியன)
செபிக்கப்படும் மந்திரம் = உயிர் (பிராணன்)
ஆசனம் = நெல், அரிசி, டிள், பயறு, உழுந்து, துவரை, கோதுமை
தேங்காய் = தலை
மாவிலை = மயிர் (சடை)

புதுக்கோயிலான்
கும்பாபிஷேக மலர்-2014

# சாதன பஞ்சகம்

1 அனுதினமும் வேதம் பயிலுங்கள் : வேதத்தால்
விதிக்கப்பட்ட கர்மங்களை (கடமைகளை) செவ்வனே செய்யுங்கள்
அனைத்து கர்மங்களையும் ஈசனுக்கு அர்ப்பணமாக,
இறைவழிபாடாகச் செய்யுங்கள்: மனதிலுள்ள ஆசைகளை
துறந்து விடுங்கள்: உள்ளத்திலுள்ள பாவச்சுமைகளை
நீக்க முயலுங்கள்: இந்திரிய சுகங்களால் விளைவது
துக்கமே என்பதனை உணருங்கள்: தொடர் முயற்சியின்
ஆத்மாவிலேயே இச்சையை வளர்த்துக் கொள்ளுங்கள்:
வீடு எனும் பந்தத்திலிருந்து விடுபடுங்கள்.

2. சத்புருஷர்களின் சங்கத்தை நாடுங்கள்: இறைவனிடம்
திடமான பக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள்: சாந்தி, அடக்கம்
போன்ற நல்லொழுக்கங்களைக் கடைப்பிடியுங்கள்: காம்ய
கர்மங்களைத் தவிர்த்து விடுங்கள்: ஒரு நல்ல சத்குருவினிடத்தே
சேவை செய்யுங்கள் : ஓம் எனும்
அக்ஷரத்தை உபாசியுங்கள்: உபநிடத மஹாவாக்கியங்களை
கவனத்துடன் செவிமடுக்க முயலுங்கள்.

3. உபநிடத வாக்கியத்தின் உண்மையான பொருளை (லட்சியார்த்தம
விசாரம் செய்யுங்கள்: உபநிடத சாரமாகிய பரம்பொருளையே
ஆசிரயித்து வாழப் பழகுங்கள்: குதர்க்க வாதங்களை
தவிர்த்து விடுங்கள் : சுருதிகள் காட்டும் சரியான
வாதங்களின் வழியே உங்களின் கருத்துக்களைச் சீரமைத்துக் கொள்ளுங்கள்:
கர்வத்தை விட்டு விடுங்கள்: "நான்" என்கிற
தேஹ பாவனையை விட்டொழியுங்கள் :
அறிஞர்களுடன் வாதம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

4. பசி மற்றும் பிணி (அல்லது பசிப்பிணி) உண்டாயின் அவற்றிற்கு சிகிச்சை
செய்யுங்கள் : மருந்தைப் போன்று பிட்சா உணவு உண்ணுங்கள்:
சுவையான உணவுப் பதார்த்தங்களை வேண்டி அலைந்து திரியாதீர்கள்:
விதிவசத்தால் உங்களுக்குகிடைப்பதைக்கொண்டு
திருப்தியுறுங்கள்: வெப்பம் - குளிர் போன்ற இருமைகளை
சகித்துக் கொள்ளுங்கள்: வீண் வார்த்தைகள் பேசாதீர்கள்.
உதாசீன பாவத்துடன் இருக்கப் பழகுங்கள் : மக்களின்
கருணை அன்பு எனும் தளையிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள்.

5. ஏகாந்தத்தில் சுகமாக இருக்கப் பழகுங்கள்:
பரம்பொருளில் மனதை சாந்தப்படுத்துங்கள் : எங்கும்
நிறைந்த ஒரே ஆத்ம சுவரூபத்தைக் காண முயலுங்கள்:
இந்த உலகமானது அதில் தோன்றும் வெறும் காட்சி மாத்திரமே
என்பதனை உணருங்கள்: பல ஜன்மங்களில் செய்த கர்ம
வினைகளிலிருந்து மீள இப்பொழுது சரியான கர்மங்களில்
ஈடுபடுங்கள் : சரியான ஞானச்செறிவால் எதிர்கால வினைகளிலிருந்து
உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்: பிராரப்த வினைகளை
அனுபவித்தே தீர வேண்டும் என உணருங்கள்:
அதன்பின் எப்பொழுதும் அஹம் பரம்மாஸ்மி பாவனையிலேயே திளையுங்கள்.

# ஆறுமுகப் பெருமானுக்கமைத்த அறுகோணத்தேர்

ஸ்தபதி கலாகேசரி ஆ. தம்பித்துரை

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபதனோ டெட்டு மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே.

எனக் கோயில் அமைப்பு முறைகளைப் பற்றி அப்பர் சுவாமிகள் அழகாகக் கூறியுள்ளார். 'கரக்கோயில்' என்பது தேர்வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப்பெற்ற கோயில் ஆகும். தேவதைகளின் இரதங்களின் (தேர்) அமைப்பு முறைக்கேற்பக் கோயில் கட்டடக் கலையை மத்தியகாலக் கலைஞர்கள் வளர்த்து வந்துள்ளனர்.

பிரம்மாவின் இரதமான வைராஜம், குபேரனது இரதமாகிய புஷ்பகம், சிவனது இரதமான கைலாசம், வருணனுடைய இரதமாகிய மானிகம், இந்திரனுடைய இரதமாகிய திரிவிஷ்டபம் என்னும் ஐந்துவித இரதங்களில் இருந்து பிரிந்து நாற்பத்தைந்து விதமான கோவில்களை அமைத்தனர்.

'சமராங்கன சூத்திரதானம்', 'சிவகுருவேதபத்ததி' ஆகிய நூல்கள் கோயில்களை மூன்று பிரதான பாணிகளாகப் பிரிக்கின்றன. அவை நாகரம், திராவிடம், வேஸரம் அல்லது வராடம் ஆகும். தேரின் அமைப்பு முறைகளிலும் இவை வழக்கிலிருந்து வருகின்றன. அதாவது சதுரவடிவமான தேரை 'நாகரம்' என்றும், எண்கோண வடிவமான தேரை 'திராவிட' என்றும், வட்டவடிவமான தேரை 'வேஸரம்' என்றும், அறுகோண வடிவினதான தேரை 'அந்திரம்' என்றும் சிற்ப நூல்கள் கூறுகின்றன. இவற்றை விட அமைப்பு முறைகளைக் கொண்டு நபஸ்வன் பத்ரகம், பிரபாஞ்சன பத்ரகம், விதான பத்ரகம், பவன பத்ரகம், பிரஷத பத்ரகம், சந்திர பத்ரகம், அநிலக பத்ரகம் எனவும் இரதங்கள் எழுவகையாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வேழு வகைகளுள் அறுகோண வடிவினதானது பிரபாஞ்சன பத்ரகம் எனப்படும். எனவே பிரபாஞ்சன பத்ரகம் என அழைக்கப்படும் அந்த்ரம் (அறுகோணம்) என்றும் மரபிலமையும் தேர் அழகன் முருகனுக்கு மிகவும் உகந்ததாகும். ஈழத்திலே முதன்முதலாக இம்மரபு முறையிலே அமைக்கப் பெற்றுள்ள தேர் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகோயில் (புதுக்கோயில்) தேர்தான் என்பதில் பெருமையடைகின்றோம்.

அறுகோண வடிவினதான இத்தேரின் சில்லுக்கு மேற்பட்ட பகுதிகள் கீழிருந்து மேலாக ஆறு பெரும்பாகங்களாகவும் பிரிக்கபட்டுள்ளன. அவையாவன பூதஸ் தானம், சித்தூர் மட்டம், பேரூர் மட்டம், நராசனம், தேவாசனம், சிம்மாசனம் என்பனவாகும். இப்பாகங்கள் முகபத்திர வேலைப்பாடுகளுடன் மிளிர்ந்து இத்தேரின் மற்றுமோர் சிறப்பாகும். இம்முகபத்திர வேலைப்பாடு பூதஸ்தானம் தொடக்கம் கலசம் வரை செல்வது குறிப்பிடத்தக்கது. சித்தூர் மட்டம், பேரூர் மட்டம் ஆகியன வேண்டிய தெய்வாம்சச் சிற்பங்களி னால் சித்தரிக்கப்பெற்றுள்ளன. இவற்றைவிட யாளிவரிமானம், குதிரை வரிமானம், சரபப்பட்சி வரிமானம், போதிகை வரிமானம் ஆகியனவும் வேண்டிய இடங்களை அலங்கரிக்கின்றன. ஈழத்திலே ஒரு புது மோடியாக மிளிரும் இச்சித்திரத் தேரில் 12 பெரிய யாளிகளும் 24 பவளக் கால்களும் இரு பெரிய குதிரைகளும் பொருத்தப் பெற்றுள்ளன. ஈழவளநாட்டின் முதலாவது அறுகோண வடிவினதான இச்சித்திரத்தோர் பூரணப் பொலிவுடன் நிறைவெய்திடத் திருவருள் பொலிவு நிறைந்த கிருபாகரப் பெருமான் அருள்பாலித்துள்ளார்.

- நன்றி -

# கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மூல விமானம்

மூலமூர்த்தி உறையும் கருவறைக்கு மேல் அமைந்துள்ள இவ்விமானம் இக்கோவில் தோன்றிய காலந்தொட்டே அடிப்படையான மாற்றம் எதுவுமின்றி இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. விமானம் என்னுஞ் சொல் (வி + மானம்) விசேடமாக அளந்து அமைக்கப்பட்டது எனப் பொருள்படுவது. எல்லையில்லாத அகண்டாகார இறைவனை நாம் எமது சிற்றறிவிற்கு எட்டியவாறு எல்லைப்படுத்தி உருவத்திருமேனியில் வடித்து வழிபடுகின் றோம். அவ்வாறே அண்டங்களுக்கு உள்ளேயும் அப்பாலும் நிறைந்துறையும் அவ்விறைவனுக்கு உறைவிடமாக அளந்து வரையறுக்கப்பட்ட ஆலயத்தையும் அமைக்கின்றோம். அதுவே விமானம் எனப்படுவது. விமானம் என்னுஞ் சொல் இறைவனுக்கு ஊர்தியான தேரையும் குறிக்கின்றது. எங்கும் பரந்து வியாபித்திருக்கும் இறைவனுக்கு எமது உடலும், இந்த உலகமும், இதனை உள்ளடக்கிய அண்டமும் எல்லாம் தேராகவே அமைகின்றன. அத்தேர் வடிவிலேயே கோவிலும் அமைக்கப்படுகின்றது.

அடியிலே அகன்று பரந்த விமானம் படிப்படியாக ஒடுங்கிச் சென்று தனிச்சிகரமாய் முகின்றது. அது உலகியல் விடயங்களில் ஈடுபட்டுப் பரந்து செல்லும் தமது உள்ளம் படிப்படியாக ஒடுங்கிச் சென்று இறைவனோடு இரண்டறக் கலக்கும் கேவல நிலையை உணர்த்தி நிற்கின்றது. முருகப் பெருமானின் மூலக் கோவிலாக அமைந்து தெய்வானை சமேதராக மயில்மீது அமர்ந்திருத்தலையும், சுவாமிநாதனாகத் தந்தைக்கு உபதேசித்தல் போன்ற திருவிளையாடல்கள் புரிவதையும் சித்திரித்துக் காட்டும் உயிர்த்துடிப்புள்ள சுதைச் சிற்பங்கள் அமைந்து கண்ணுக்கும் கருத்துக்கும் நல்விருந்தளிக்கின்றன.

- நன்றி தேர்த் திருப்பணி மலர் 1983 -

**பிள்ளையாருக்கு புதிய தேர்:**

மெய்யன்பர்களே முருகன் அடியார்களே!

தற்போது திருப்பணியில் ஈடுபட்டுவரும் நிர்வாக சபையினரின் தகவலின் படி கருணை மிகு புதுக்கோவிற் பெருமான் உற்சவ தினத்தன்று சித்தி தரும் விநாயகன் புதிய சித்திரத்தேரில் இவர்ந்து ஆரோஹணிக்க இருக்கிறார் என்பதையும் அப்புதிய சித்திரத் தேருக்கான தேர்முட்டி ஒன்று ஆலயத்தின் ஈசான மூலையில் நிறுவப்பட்டிருப்பதையும் இம்மலர் சுட்டிக்காட்டி மகிழ்கிறது. இக்கைங்கரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நிதி உதவி செய்தவர் எம் புதுக்கோயில் நிர்வாசபை உறுப்பினராகவும் பின் லண்டனில் வாழ்ந்து அமரராகிவிட்ட நா. சண்முகம் பிள்ளை என்தையும் அறிகிறோம்.

**மஹாலட்சுமி எழுந்தருளி விக்கிரக பிரதிஷ்டை:**

இப்பணியோடு இந்நிர்வாக சபைக் காலத்திலே ஏலவே தம்குடும்பத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ மஹாலட்சுமி தெய்வத்துக்கு புதிய சிலாவிக்கிரகமும் கோவில் தாமிர விக்கிரகங்களோடும் இணைகிறது. இதனை குடும்பத்தின் சார்பாக லண்டனில் வாழந்து வரும் தொண்டர் சுப்பிரமணியம் முருகதாஸ் அவர்கள் நிறைவேற்றித் தந்துள்ளார்.

# தேரேறி வருகின்ற கிருபாகரன்

## யாழ்ப்பாணம் கொக்குவிற்பதி கிருபாகர ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி (புதுக்) கோவில் பிரம்மோற்சவகால இரத உற்சவம்

### புதுக்கோவில் திருமுருகன் பேரில் கண்ணி

அப்பன்முருகன் எம்குறைதீர்க்கும் ஐயன்
இப்போது தேரேறி வருகின்றான்
தப்பாமல் வந்து தருணமதில் துதித்திடுவீர்
தந்திடுவான் கிருபைதனை தந்திடுவான்.

கிருபாகரனென்ற பெயர்கொண்ட கந்தனவன்
கதியென்று தொழுவார்க்குக் காட்டிடுவான்
உருவாகும் புதியவினை உடன் வந்து உலையாமல்
காத்திடுவான், கிருபை காட்டிடுவான்.

புதுக்கோவில் மணி கேட்டு முருகா என்றெழுவார்க்கு
புதுமையாம் வாழ்வுதனை நல்கிடுவான்
கதிநீயென் றழுவார்க்குக் கடிதிலவன் கருணைசெய்து
கவலையெல்லாம் போக்கி ஆண்டிடுவான்.

பதிவாழும் கொக்குவிலில் பலநாளும் உறைந்துயரும்
பன்னிரு கரமுடைய பாலனவன், புதுக்கோவிற் குமரனவன்
பதினாறு பெரும்பேறும் தந்திடுவான், பக்தர்க்கு
பதியாளும் வல்லமையும் நல்கிடுவான்.

முருகேசர் வம்சமது முறைமுறையாய் தொழுதேத்த
முந்துசெல்வம் அளித்திட்ட முதல்வனவன்
அருவாகி உருவாகி அருவுருவந் தானாகி
ஆறுமுகனாய்த் தேரேறி அருள்கின்றான் - உண்மை
அன்பர் குறைதீர்க்கத் தேரேறி வருகின்றான்.

ஆறுமுகம் கொண்ட ஐயன் கிருபாகரன் - இன்று
அறுகோணத் தேரேறி அருள்கின்றான்
ஏறுமயிலேறுமவன் பேறுதனைப் பாடிநின்றால்
பாறிடுமே பலவினைகள் பாரினிலே - முருகன்
பதமதனைத் தொழுது உண்மை பார்த்திடுவீர்!

தேவமகள் தெய்வயானை தூதுபெறவைத்த கந்தன்
மாதுகுறவள்ளிமகிழ் காந்தனவன்
சேவல் மயிலாக அந்தச் சூரனையே மாற்றியவன்
சுந்தரச் செவ்வேல் முருகன் - காத்திடுவான் - எளிதில்
சூழும் துன்பம் தொலைத்து எம்மைக் காத்திடுவான்.

கொக்குவிலான் என்றபெயர் கொண்ட புகழ்த் தெய்வமிவன்
கொழுவியவர் இழுவினைகள் பாரினிலே
நெடுவினையாய் முடிந்தவிதம் பார்த்த பின்னே, பண்புடனே
முருகன் இதம் கொள்ளு விதம் நடந்திடுவீர் - அந்தக்
கருணை வள்ளல் அருளும் விதம் கண்டிடுவீர்

வைகாசி மாதத்தில் சங்காரத் திருநாளாம் தொடரும்
விசாகத்தில் வரும் தீர்த்தம் வினைகழுவும்
மெய்யான காட்சியெல்லாம் கண்ணாரக் கண்டிடுவோம்
சிவனார்தம் அருள் பாலா கந்தா! கடம்பா!
எமக்கு அருள் சுரந்து இரட்சிக்க வாராய்!

ஆறுமுகம் கொண்ட ஐயன் கிருபாகரன் இன்று
அறுகோணத் தேரேறி வரவே, அப்பன் வலம் வரவே
அறுந்திடும் துயரெல்லாம், அன்பும் விழைந்துவரும்
ஐயன் கருணையெல்லாம் ஓடிவரும் கண்டிடுவீர்!
உண்மை வாழ்வில் இன்பமெல்லாம் துய்த்திடுவீர்!
கிருபன் கருணை மழை குளித்திடவே வந்திடுவீர்!

- என் கவி -

# நின் அடி நினைந்தால் உள்ளம் நிர்மலம்

"கலாபூஷணம்" பருத்தியூர் பால-வயிரவநாதன்

திருவருள் மேவு சிவ குமாரா - நின்
அருள் தரு திருவடி சரணம் சரணம்!
உருளும் உலகு உன் திருக்கரத்தில்
கருணை கூர்ந்து புது நிலை தருக!
எது, எம் தேவை என நீ தெரிந்தும்
அக இருள் விலக்கிட ஏன்தான் தயக்கம்?
கிருபா கரனே கருணாநிதியே சுப்பிரமணியே!
விருப்புடன் அருளும் அடியார் தலை!
களிகூர்தல் எமக்கு திருவருள் நோக்கினால்
எளியவர் இருந்தால் விழி விரியுமே
முழுதும் உணர்ந்த அழகு பாலகா!
கார்த்திகை பெண்களின் செல்லக்குமரா!
உன் திருத்தோற்றம், இறையனார் அற்புதம்!
நெற்றிக் கண்களில் நெருப்பாய் உதித்து
குலுங்கும் அழகுடன், குளிர்ந்து சிரித்தாய்
தேவர் அழுகுரல் நிறுத்திய வள்ளல்
தமிழை ஈந்து தலைமை தாங்கினாய்
இனிமை, இளமை, புதுமை, அழகு
எல்லாம் முருகனின் பெயருள் அடக்கம்
ஆணவ அசுரரை அடக்கி அழித்தாய்
மனங்களின்.மமதை அகற்றும் பொருட்டு
நின் வழி விரிய, புவி எழுந்தது
வள்ளி, தேவயானி சமேதா!

துள்ளி விளையாடும் சிவசக்தி மைந்தா!
வல்லமைதரும் வடிவேல் முருகா!
எல்லை என்பது உந்தனுக்கேது?
பிரபஞ்சம் எல்லாம் கைக்குள் நிலைக்கும்
மெல்லென விழிகளை கனிவுடன் நோக்க
அலையென அமிழ்த்தும் சிந்தனை அடங்கும்
செல்வப் பேறு, புகழும் சகலதும்
செல்லக் குமரா உன்முன் ஏது?
நீயும், வேலும், வள்ளி தெய்வானையும்
நேயமாய் எம்மைப் பார்ப்பது எப்போ?
பொல்லா வினைகள் பொடிபட அறுபட
உள்ளத்தில் நல்லதை தந்திடு குருவே
கொக்குவில் பதியுறை சிவசுப்பிரமணியனே!
எக்காலமும் எமக்கு கதி நீ அப்பனே!
இறையோன் மகனே ஆறுபடை உடையாய்
குறையேது எமக்கு, திருவருள் இருக்கையில்
நிறைந்த நெஞ்சும், அறிவொரு ஞானமும்
பொருந்திச் சேர அருள் செய் வேலா!
சிரித்த கண்களும், புன்னகைப் பூ முகமும்
உருகும் நெஞ்சுடன் பார்ப்பதாய் உணர்கின்றோம்
துன்பமும் இல்லை, ஏக்கமும் ஏது
நின்னை நினைந்தால் எல்லாம்
உள்ளம் நிர்மலம்!

**ஓம் சரவணபவ**

**பால-வயிரவநாதன்**

# வேண்டும் புதுக் கோயிலானுக்கு ஒரு புதிய இராஜகோபுரம்

கிருபாகர சிவசுப்பிரமணியன் என்ற அற்புதமான நாமத்தோடு யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் ஆண்டு பல்லாண்டு கோயில் கொண்டருளி அண்டியவர் குறை தீர்க்கும் கிருபாமூர்த்தியாய் விளங்குபவன் கந்தப் பெருமான். கந்தபுராண கலாசாரத்தின் இலக்கணமாய் அன்று நம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலனார் வாழ்ந்து சைவங் காக்கப் புறப்பட்ட காலத்திலேயே மிக எழுச்சிவாய்ந்த கோவிலாகத் திகழ்ந்தது. இக்கிருபாகர சிவசுப்பிரமணியர் கோவிலாகும். முருக பக்தியில் ஊறித் திளைத்த பக்திமான்களையும் பண்டிதர்களையும் தனவந்தர்களையும் மாத்திரமல்ல, வீண் வம்புக்கு வரும் வீணர்களுக்கு சிம்ம சொற்பனமாக விளங்கிய வீர மறவர்களையும்கொண்டிருந்த பழைமை மிக்க கிராமம் கொக்குவில். அந்த அளவுக்கு மக்களை தன்வயமீர்த்துத் தக்க வரமளிப்பதில் இம்முருகப் பெருமான் பேரருள் சொல்லில் அடங்காது!

ஆணவமும், அகங்காரமும் கொண்டு மார்தட்டி மிடுக்குப் பேசும் எவரையும் மறக்கருணையால் ஆண்டு கொள்ளும் கந்தபுராண முருகன் இங்குதான் இருக்கிறார் என்று யாழ்ப்பாணமே போற்றும் கொக்குவில் கிருபாகர கடவுளின் மறக்கருணை பற்றியதே இன்றும் கூறப்படும் ஒரு மொழி. அதுதான், "கொக்குவிலானோடு கொழுவினால், இழுவல்" என்பது.

கொக்குவில் மத்தியில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கந்தபுராணப் படிப்பு, முருக வழிபாடு என்பவற்றின் மையமாக விளங்கிய இக்கோவில் இன்றும் "ஆடியாமடத்தடி" எனும் பெயரால் அழைக்கப்படுவதும் "நினைத்தது முடித்தான்" எனப்படும் தோம்புப் பெயரமைந்த குறிச்சியில் பொலிவோடு விளங்குவதும் பிரசித்தம். தெய்வம் என்பதோர் சித்தம் நிறைந்த மக்கள் தம் பெயர்களிற்கூட முருகனின் திருநாமத்தை இணைத்துக்கொள்ளும் வழக்கம் கொக்குவிலுக்குப் பெருமை சேர்த்தது. நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வழிபாடு ஆறுமுக சுவாமி வார்ப்பு தேர் உற்சவம் தொடர்பான சின்ன முருகேசர், பெரிய முருகேசர் முதல் பல தொண்டர்கள் கொக்குவில் முருகனைப் புதிய கோலத்தில் காண விழைந்து கோவிற் பணியை விரிவாக்கினர். அன்று "புதுக்கோயிலாக" அமைக்கப்பட்ட இத்தலத்துக்கு இன்றும் "புதுக்கோயில்" என்ற பெயரே நிலைத்து நிற்கிறது. 1927களிலேயே வருடாந்த மஹோற்சவம் முறைமையாக ஆரம்பிக்கப்பட்டது. 1966களிலே முறையான பரிபாலனசபை அங்கீகரிக்கப்பட்டதும், 1962இல் பதிவு செய்யப்பட்ட ஆலயமாக வந்ததும், 1964இல் புதிய திருப்பணிகள் நிறைவடைய 31-03-1966இல் உலகில் எங்குமேஇவ்வளவு சிறப்பாக அமைந்திராத சித்திரத்தோர் முதன் முதல் வீதி வலம் வந்ததும், புதுக்கோவிலான் பதியின் புண்ணிய நாட்களாகும். புதுக்கோவிலிற் கோவில் கொண்டருளியிருக்கும் கருவறையில் வள்ளி தேவ சேனா சமேத சிவசுப்பிரமணியக் கடவுளே அருள் வியாபியாய் வீற்றிருந்து கிருபைநோக்கம் செய்கிறார். கிருபாகரன் என்ற பெருநாமத்தின் கீர்த்தியை அருணகிரிப் பெருமானும் தன் கந்தரலங்காரச் செய்யுளிலே கூறுவதைப் பாருங்கள்.

"சேற்றைத் தவஞ்சற்று மில்லாத வெனைப் பிரபஞ்சமென்னும் சேற்றைக் கழிய வழியிட்டவா செஞ்சடாவடாவிமேல் ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியில் கீற்றைப் புணர்ந்த பெருமான் குமரன் கிருபாகரனே"

என்பதே கிருபாகரன் எனும் நாமம் புதைந்த அப்புண்ணியப் பாடலாகும். ஆற்புதமான ஆலயச் சூழல் புதுக்கோயிலை இன்னும் புதுமையாகவே வைத்துக் கொண்டிருக்கிறது.

இக்கோவிலைச் சூழ வடக்கு தெற்கு வீதிகளை முகப்பாகக் கொண்ட பிரபலமான கொக்குவில் இந்துக்கல்லூரி வகுப்பறை கட்டிடங்கள், சனசமூகநிலையம், நூலகம், மாதர்சங்க அமைப்பு, உள்ளக விளையாட்டு மையங்கள், இனிய பூஞ்சோலைகள் அமைந்திருக்கின்றன. அண்மையிலே நான்கு வீதிகளுக்கும் நான்கு வாயில்கள் கே.கே.எஸ். வீதி முகப்பில் மேலை வாயில் புதிய எழுச்சியில் "ஒரே முறையில் உருவாகிய மூர்த்தியான ஆறுமுகச் சுவாமி"யை சுமந்து வரும் அற்புதமான சித்திரத்தேரோடும் புதுக்கோவிலுக்கு இனி, ஒரு எழிற்கோபுரமானது அமையவேண்டும். மேற்கு வாசலிலோ இராஜகோபுரம் ஒன்றை உத்தேசித்த நிலையிலேயே கோபுரத்துக்கான கீழ்த்தளம் உறுதியாக அமைக்கப்பட்டிருப்பது அடியார்கள் அறிந்ததே.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்"

என்பார் திருமூலர். படுத்திருந்த நிலையிலே ஒரு மனிதனின் உடலுக்கு ஒப்பாகக் கூறப்படும் ஆலய நிர்மானப் பரிமானத்திலேகோபுரங்கள் பாதத்தை ஒத்தன என்கிறது காரணாகம சாரம். மனிதனுக்கு பாதம் பிரதானமானது போல கோவில்களுக்கு கோபுரம் அத்தியாவசியமானது பொதுவாக கிழக்கு கோபுர வாசல் அமையாத கோயில்களை தேவஸ்டதானம் என அமைக்கின்ற அரபு இல்லை என சான்றோர் கருதுவர். கடவுளின் திருவடிகளை நினைவூட்டி, தூரத்தில் நின்றே கோபுரத்தை காண்பவர்களையும் ஈர்த்துக்கொள்ளும் சக்தி இருப்பதனாலேதான் கோபுரத்தை தூல லிங்கம் என்று மதிப்பர் ஆகம விதி அறிந்த சான்றோர். புதுக்கோவிலில் கீழை வாயிலுக்கு ஒரு இராஜ கோபுரம் அமைய முருகனை முன்னிறுத்தி வேண்டுவோம்.

கருவறை எப்போதும் இருள் கவிந்ததாகவே அமைதல் அவசியம் அடியவர்கள் ஆண்டவனுடைய அருள் ஒளியை தேடிக் காணவேண்டும் என்பதே இதன் உட்பொருள். ஆலய உட்புறமெல்லாம் மூடிய கூரையில் முருகனை ஒளி வடிவில் தேடுவோம். முகிழ்ந்தெழுந்த இளைஞரெல்லாம் இப்போது முனைப்புடனே தொண்டு செய்ய முந்துகிறார்கள். எழில் நிறைந்த அறுகோண தேர் இவர்ந்து ஆறுமுகன், இன்று எம் அப்பன் கிருபாகரன்வள்ளி தேவசேனா சமேதராக அண்ணன் சித்தி தரும்வித்த விநாயகனும் பதம் பெற்றுயர்ந்த ஈசசண்டிதரும் புடை சூழ வெளி வீதி வலம் வருகிறான். அழகு நிறை காட்சியை தரிசித்து கிருபை மாந்தக் கொகுவில் பதியென்ன, வட பிரதேசமே புதிய கோவிலை நோக்கிப் படையெடுக்கும் உதித்தன்ன உலகம் உய்ய" என்று கந்தபுராணம் சுட்டும் பிரம்மசொரூபன் இங்கும் கிழக்கு வானத்தில் உதித்தது, என்று சுவாமியை நினைந்து உருகுவோம் எம்குலதெய்வம் சுப்பிரமணியப் பெருமான் புதிய கீழைக்கோபுர பொழிவோடு ஊர்விளங்க வரும் ஆரோகணிக்கும் நாள் இனி அதிக தூரத்தில் இல்லை. அதுவே நம் அடியார்கள் எல்லோரினதும் அடுத்த எதிர்பார்ப்பும் ஆகும்.

சுபம்

**குறிப்பு :** இக்கட்டுரையானது இலங்கை தினகரன் பத்திரிகையில் 2011ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு பிரசுரம் செய்யப்பட்டிருந்த கட்டுரை என்பதும் இதன் பேறாக இராஜகோபுரத்துக்கான சிந்தனை துளிர்விட்டதென்பதனையும் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.



- ஆசிரியர் -

# 2014 ஆம் மகா கும்பாபிஷேக மலர் வெளியீடு

## நீங்காத நினைவுகள்

கருணையே உருவான கிருபாரக்கந்தன் பாலசுப்ரமணியனாகவோ, வள்ளி தெய்வானை சமேதமுத்துக்குமரனாகவோ, ஆறுமுகசுவாமியாக வள்ளி தேவயானையுடனோ, பிள்ளைப்பெருமான் சகிதம் உற்சவங்களில் பொன், தங்க ஆபரணங்கள் மலர் மாலைகளுடன் வசந்த மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் காட்சியை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.

திராவிடதோத்திரம் பாடும் ஆர்வத்தினால், சந்தர்ப்பம்கிடைக்காதோ என ஏங்கும் எமக்கு வசந்தமண்டபதரிசனம் வாய்பாக இருக்கும். சுவாமி வெளிவீதி உலாவந்து, மீண்டும் மண்டபத்துள் நுழைந்து குருக்கள் தீபம் காட்டியதுதான் தாமதம் தியாகராச ஐயரிடம் நானும் நண்பரும் கையேந்திநிற்பது, சுவாமிகளின் அலங்காரத்தில் பயன்பட்ட புஸ்பமாலைகளைப் பெற்று வீடுகளுக்கு கொண்டு செல்வதற்கு ஷஷகறுவல் ஐயர்;; என்று பிரபலம் பெற்ற தியாகராசா ஐயரின் சாத்துப்படி அலங்கார விதங்களே தனி அத்தனை அலாதியான அலங்காரம் கந்தனுக்கு!

## வில்வமரமும் வைரவர் ஆலயவழிபாடும்

ஆலயத்தின் முன் வீதியில் தென்கிழக்கு மூலையில் ஒரு வில்வமரம் அதன் கீழ் முச்சூலவடிவில் வயிரவர் மழை வெய்லுக்கு உத்தரவாதமில்லாத சிறிய சூலவடிவக் கோயில் எத்தனை அற்புதமான வயிரவடிவம். சேத்திரபாலகர் அவர் விளாத்திவயிரவரை வழிபாடு செய்யாமல் வீடு திரும்பினால் கனவுகள் வந்து பயமுறுத்தும். பெற்றோர் அப்படித்தான் சொல்லி கோயில் வழிபாட்டுக்கு தம்பிள்ளைகளை அன்று ஆற்றுப்படுத்தினர். அதற்கு விளக்குவைப்பதிலும், வழிபாடு நிறைவேற்றவதிலும் முனைந்து நின்றார்கள் பலரை நினைவில் காண்கிறேன். அதில் ஒருவர் ஜெயநாயகி மணாளன் அழகரத்தினம். வில்வவிருட்சம் சிவபெருமானுக்குரியதாம். சிவநாரின் அகோர மூர்த்தங்களில் ஒன்றே பைரவர் ஆவார்.

இந்த வயிரவருக்குத்தான் முன்பு வைரவ மடையன்று பொங்கலிடுவர். 12வது நாள் உற்சவ நிறைவாக இடம்பெறும் இப்பொங்கலில் பங்குபற்றாத குடும்பங்களே இலர் என்னுமளவுக்கு கிழக்கு, தெற்கு வீதி மருங்கெங்கும் பெண் அடியார்களும் ஆண் அடியார்களும் பக்திபூர்வமாக பொங்கலிட்டு படைத்து அடியார்களுக்குப் பங்கிடும் காட்சி மறக்க முடியாதது.

## புதுக்கோயில் சூரன்போல வேறெங்கும் காண முடியாது

சிறுவர்களாயிருக்கும்போது புதுக்கோயிலின் உட்பிரகாலத்துக்கு போகும் நாம் தெற்கு மூலையிலிருக்கும் வாகன சாலையில் அங்குள்ள அழகான பெரிய வாகனங்களை அடிக்கடி பார்த்து பிரமிப்பதுண்டு. இலங்கையில் மாத்திரமல்ல உலகத்திலேயிருக்கும் ஆலயங்களிலுள்ள சூரன்களில் மிகப் பிரமாண்ட பெரிய சூரன் எம்வாலயத்தில்தான் இருக்கிறது என்று கோயிலார் சொல்லக் கேட்டு நாமும் பெருமை கொள்வோம். தடிப்பான மீசை வைத்த உடல்பருத்த உயரமான எவரையும் கண்டால் அவரைப் பார்த்து என்ன ஷஷபுதுக்கோயில் சூரன்போல இருக்கிறாய்;; என கூறும் வழமை இன்றும் யாழ்ப்பாணமெங்கும் பிரசித்தமானது.

அதுமாத்திரமல்ல பெரிய சிகப்புநிறக் குதிரை, (மானம்பூ உற்சவம்) ஆட்டுக்கடா (சூரன் போர்) என்பனவும் அத்தனை பாரமான, பெரிய உருவமுடை வாகனங்களே. இதைவிட அப்போது மூன்று வெள்ளைக் குதிரைகளடங்கிய, இரண்டு குதிரைவாகனங்களும், அன்னவாகனங்களுமிருந்தன. அற்புதமாக அமைக்கப்பட்ட பச்சைமயில்வாகனம் இன்றும்

பயன்படுத்தபடினும் மேலே கூறிய சூரன், குதிரை ஆகிய வாகனங்கள் தூக்கிக் கொள்ள முடியாத நிலையில், பதிலாக சிறிய சூரன் சிறிய மயில் என்பன இன்று வீதிஉலாவுக்கு பயன்டுகின்றன.

### மண்டபப்படி

தேர் தீர்த்த திருவிழாக்களில் சிறப்பாக பாடசாலைகள், வீடுகளில் மண்டபப்படிகளை வைக்கும் வழக்கம் இன்று நலிந்து மலிந்து, பூசைத்தட்டுடன் வீதிவலம் வரும் மூர்த்திகைள வரவேற்கும் சம்பிரதாயமே இப்போது நிலைத்திருக்கிறது.

பாடசாலை மாணவராய்

கொக்குவில் கிருபாகரன் அருள் வீச்சில் அமைந்த பாடசாலைக்கும் ஆலயத்துக்கும் இருந்த அன்னியோன்னியம் அற்புதமானது. மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் புதுக்கோவில் திருவிழாக்களில் தமது இந்து - சைவ மாணவர்கள் மன்றத்தின் சார்பில் சேர்ந்து ஆலய பணிகளில் ஈடுபடவதும், உற்சவாதிவைபவங்களில் பங்கேற்றுத் தொண்டு செய்வதும் நடைமுறையிலிருந்தது. தேவாரமும், வித்தியாலயமும் அந்தனை அன்னியோன்னியமாய் இருந்தன.

சிறப்பாக வெள்ளிக்கிழமைதோறும் அதிபர் கல்லூரி மாணவர்கள், மாணவியர், ஆசிரியர் அனைவருமே ஆசார சீலர்களான அணிவகுத்து கோவில் உட்பிரகாரத்திலுள்ள பிள்ளையார் சந்நிதியின் முன் நின்ற நிலையிலேயே தேவார திருவாசக பாராயணங்களை செய்து பின் வகுப்பறைகளுக்கு செல்வது அண்மைக்காலம்வரை நடைமுறையிலிருந்து வந்தது. அங்கு பண்ணிசை, கலைநிகழ்ச்சிகள், பிரசங்க நிகழ்ச்சிகளைக் கூட பாடசாலையினர் ஒழுங்கு செய்வர் மாணவர் பிரசன்னம் கட்டாயப்படுத்தப் பட்டது. இளைய தலை முறையினரின் வழிபாட்டு மரபுப் பேணலுக்கு இந் நடவடிக்கை எத்தனை பயனுள்ளதாயிருந்தது?

### பயனுள்ள பணிகள்

சமயப்போட்டிகளை கிருபாகரன் ஆலயம் நடத்தும் வேளைகளிலும், மகேஸ்வர பூசைகள் நடைபெறும் சில சந்தர்ப்பங்களிலும் பாடசாலை மண்டபங்கள், வகுப்பறைகள் பயன்படுத்தப்பட்டன. திரு.நா.சண்முகப்பிள்ளை, திரு.த.சகோதேவன், திரு.சண்முகரத்தினம் போன்றவர்கள் முயற்சியால் நிர்வாகமும், சமயப்பெரியவர்களின் சொற்பொழிவுகள் கதாப்பிரசங்கம், நல்லுரைகளின் அடிப்படையில் சமய அறிவுப்போட்டி நடத்தப்பட்ட அக்காலம் பொன்னானது. இந்நடவடிக்கைகளில் கிருபாகர சிவசுப்பிர மணியம் அலயத்தில் சமய உரைகளை ஆற்றிய ஊ.ளு.ளு மணிபகவதர் (1966இல் தொடந்து 48 நாள் கதாப்பிரசங்கம்) பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவம், பண்டிதர் மு.சின்னத்தம்பி, சிவ மகாலிங்கம், ஆறு திருமுருகன் சிவகுமாரன், மு.திருஞானசம்பதப்பிள்ளை போன்றவர்களும் இன்னும் பலரும் எனது காலத்தில் குறிப்பிடப்பட வேண்டியவர்களாக இருந்தனர்.

தேவார வகுப்புகள் நடத்த உதவியவர்களில் முத்துத்தம்பி, ராசப்பா, திருமதி சரஸ்வதி பாக்கியராசா, குப்பிளான் செல்லத்துரை, தாவடி ஓதுவார் திருஞான சம்பந்தர், இசைமணி இராசையா, ஸ்ரீதயாளன், திருமதி சரோஜினி குலசிங்கம், திருமதி.கந்தவனம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் எனலாம்.

நடந்தகதையாக இன்னொறை நகைச்சுவையாகவும், உண்மையாகவும் சொல்லி இனிய நினைவுகளை நிறைவு செய்கிறேன்.

**கடலைக் காரியின் வியாபாரத்தில் எம் குறும்பு விளையாட்டு:**

கோவிலில் பத்துநாள் உற்சவமென்றால் இரண்டு மூன்று நிரந்தர கடலைக் கொட்டில்கள் கோவிற் சூழலில் திடீரென்று தோன்றி விடும். வயது முதிர்ந்த, கொண்டடைக்கார மூதாட்டியான கடலை ஆச்சியிடம் கடலை திருடிய ஒரு குறும்புச் சம்பவம். ஞாபகத்தில் வருகிறது. கொக்குவிலலிலேயே நாம் சிறுவர்களாயிருந்த காலத்தில் பரபலமாயிருந்த எமக்கு கொஞ்சம் வயதுக்கு மூத்தவர்கள் சகிதம் திருவிழாக், குதூகலத்தில் இரவிரவாக கொண்டாட்டாம்.

ஒரு நாள்.... தம்பிமாரே இன்று காசில்லாமலே கடலை வாங்கி எல்லாரும் சாப்பிடுவோமா? என்று எம்மை உஷார்ப்படுத்திய ஜெயம் - நண்பர் எங்களையும் அழைத்துக்கொண்டு அக்கடலைக்காரியின் முன் அலாதியாக உட்கார்ந்து கொண்டார். மின்சாரமில்லாத காலம். கொட்டிலுக்கு வெளிச்சம் தர ஒரு தண்டு விளக்குத்தான் கிழவிக்கு! முன்பின்தெரியாத அந்த கடலைக்கார மூதாட்டியுடன் நண்பர் அன்பாக உரையாடி கொண்டிருந்தார். திடீரென்று நிசப்தம்! என்ன ஆச்சிரியம்... கடலைவைத்திருந்த பெட்டி சுளகோடு இருந்த கடலைக்கடையில் அந்தக் குறும்புக்கார நபர் விளக்குக்கு முன்னாக அமர்ந்த மெல்லம ஷஷஆ...ச்...சீ, க..ட..லை தாங்கோ;; என்று மூச்செடுத்து கேட்டதுதான் தாமதம். குப்பி விளக்கு அவன் மூச்சுக் காற்றினால் விளக்கு அணைந்து விட்டது! பிறகென்ன பாவம் மூதாட்டி குரலெடுத்தாள்.....

“ஐயோ எல்லாம்போச்சே! எங்கே என் கலைக் கடகம்! எங்கே சோளம் வைத்த சுளகு? கடலை ஆச்சி சத்தமிட்டாள். யாருமில்லையா பாருங்க இந்த அநியாயத்தை” பாருங்க பொடியளின் குறும்பு விளையாட்டை என் வயிற்று அடித்து விட்டார்களே என்று அம் மூதாட்டி அழ என் மனம் ஏனோ திக் திக் என்றடித்துக்கொண்டது?

பதில்சொல்ல யார் வந்தார்?

நாங்களெல்லாரும் சிறிது தூரத்தில் இருந்த மணல் கும்பியில் இருந்து கொண்டு அவ்வளவு கடலையையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுக் களித்தோம்.... ஆம் அன்று நாம் செய்த குறும்பு... அது புதுக்கோவிலுக்குத்தான் வெளிச்சம்.

குறிப்பு :-

எம்பெருமான் முருகனுக்குரிய ஊர்தியாக பொதுவாக ஷஷமயில்” பேசப்படினும், ஷஷயானையே” முருகனுக்கு மிகவும் பிரியமான ஊர்த்தி எனவும் சொல்லப்பட்டிருக்கிறது. சங்கத்தமிழிலக்கியங்களிலே முருகனது வாகனமாக யானையே இடம்பெற்றிருக்கிறது என்று கூறும்

முருகவணக்க ஆய்வார்கள், பேராற்றல் படைத்த வாரணத்தில் பவனிவருவதில் அவனுக்கு இருக்கும் விருப்பினை எடுத்துக் காட்டுவர்.

"மணிநிற மஞ்சை யோங்கிய புட்கொடிப்
பிணிமுக மூர்ந்த வெல்போர் இறைவா" என்று பரிபாடலிலும்
ஷஷமணிமயி லுயரிய மாறாவென்றிப்
பிணிமுக வூர்தி பொன் செய்யோனும்"

என்று புறநானூறும் முருகனின் ஊர்த்தியற்றிய செய்தியைக் குறிக்கின்றன. புதுக்கோயிலில் யானை வாகனமொன்று இருப்பின் நன்று.

பூந்தபண்டிகை

தைப்பூசம், கற்பூரத்திருவிழா, பூங்காவன உற்சவம், திருக்கல்யாணத்திருவிழாக்களில் வள்ளிதேவசேனா முருகன், வீதி வலம் செய்ய தண்டிகை, யொன்று பூவினால் தயாரிக்கப்பட்டு அதில் சுவாமி முருகவடிவிலோ, ஆறுமுகவினனானவோ உலாவருவது புதுக்கோயிலின் ஒழுங்காக இருந்தது. இதைக் கருத்துக்கொண்டு இந்தக் கும்பாபிஷேக நிறைவு உற்சவத்தோடு வீதி உலாவுக்காக நம் பெருமானுக்கு நிரந்தரமாக ஒரு தண்டிகை அமைப்பு வாகனசாலையில் இப்போது சேர்க்கப்பட்டிருப்பது சுப்பிரமணியப்பெருமானின் திருவருட்போறே.

என்ற அருணகிரியார் பாடலின்படி நாமும் புதுக்கோயிலுள்ள சுப்பிரமணியப் பெருமானின் பாத இணைகளை எந்நாளும் பக்தியுடன் நினைந்து ஈடேறுவோமாக.

நிறைவாக

புதுக்கோயிலடியார் "கொழுவற் காரர்" "சண்டியர்" என்ற கருத்தில் ஒரு பேச்சுக்க சொல்லும் வழக்கம் இன்றும் பிரசித்தமாயிருக்கிறதை யாவரும் அறிவார்கள். கொக்குவில் மகாஜனா, இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்து, உதைபந்தாட்ட தினமம்என்றால் ஆடியாமடச்சந்தியில் அன்று ஒரே களாபரம்தான். இது ஒரு பார்வை.

ஆனால் உண்மை என்னவென்றால் எவரொருவர் கொக்குவில் சிவசுப்பிரமணிய கடவுளை மறந்தும் உதாசீனப்படுத்தியும், வழிபாடு மனிதநேயம் ஒழித்து வாழ்கிறார்களோ அவர்களின் காரியங்கள் தடைபட்டு பின்னர் "கருணைவாரிதி" யான கிருபாகர முருகன் சம்மதத்தில்தான் நிறைவேறுகிறது என்பதே அதன் பொருளாகும்.

"அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சேல் என வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்றொதுவார் முன்

சுபம்.

# புதுக்கோயிலடியார் தனிப்பெருமைபற்றி சில நினைவுகள் மீளவும் நினைத்துப் பார்க்கிறேன்.

சுதையாற் கட்டப்பட்ட ஆடியபாதன் மடத்தின் சிதைந்த பகுதிகளும், ஆவுரஞ்சிக் கல்லும், தண்ணீர் தொட்டியும், இப்போதிருக்கும் கொக்குவிற் சந்திக்கும், கோயிலுக்கும் அண்மித்த காங்கேசன்துறை வீதி மருங்கில் மேற்குப் புறமாக இருந்த மடம் - இடங்கள், பழைய கிணறு, வாசிகசாலை, கந்தையா, தேவராசாவின் சைக்கிள் கடை, விஸ்வரத்தினம் நடத்திய வியாபாரம், முன்னுக்கிருந்த கிறாதியடித்த சங்கக்கடை, திரு.நடராசா நடத்திய தேனீர்சாலை என்பனவும் நினைவுக்கு வருகின்றன. கோவிற் கர்ப்பக்கிரகத்திற்கு தெற்கு ஆறுமுக சுவாமி வாசலில் நின்ற விசாலமான மகிழமரத்தின் நிழலில் மகிழம்பழம் பொறிக்கித்தின்றது, அம்மரத்தைச் சுற்றி விளையாடியது, வயது சென்ற ஆணடியவர்கள் மரத்தின் பக்கத்திலிருந்த கல்லிலிருந்து பலத்த சத்தமாக ஊர்வழக்கு, நாட்டு நடப்புக்களை காரசாரமாக கதைப்பது, தோளை மூடிய சால்வையை உதறிபடி பிரம்படித் தம்பாபிள்ளை அப்பு வர சிறுவர்களாக இருந்த நாம் பயந்தோடுவதுமான பிள்ளைப்பராய நினைவுகள் இன்னும் பசுமையாக எம் மனத்தில் நிழலாடுவன.

நல்லூர்க்கந்தன் உற்சவகாலம் வந்து விட்டால் கொக்குவிற் கிராமமே பக்தி எழுச்சி, ஆரவாரம் என வழிபாட்டில் மூழ்கிவிடும். சாமம் விடிகாலையில் 'டான்... டான்....' என அடிக்கும் அந்த மெல்லிருளில் எழுந்து நல்லூர்க்கந்தன் பரவசமான மணியோசை புதுக்கோயிலடிவரை கேட்கும். அந்த விடிகாலையிலே எழுந்து, ஆசாரமாகப் புறப்பட்டு ரயிற் பாதை வழியாக வெறும் கால்களோடு நடந்து கொண்டே முதியவர்கள், பெரியவர்கள், சிறுவர்கள், சிறுமியர்கள் அரோகரா சொல்லிக்கொண்டு நடக்கும் அரவம் கேட்கும்.

மாலை வேளையாகி சற்று இருள் கவியத்தொடங்க.... கொக்குவில் ஆடியாமடச் சந்தியிலுள்ள பிரமாண்டமான தண்ணீர்ப்பந்தலை நோக்கி நாம் ஓடி வந்து இடம் பிடிப்போம். வெள்ளைவெளேரென பரப்பப்பட்ட வெண் குருமணலிலே உட்கார்ந்து கொண்டால் பஜனை, பிரசங்கங்கள் நடக்கும். நானறிந்தவரை கந்தபுராண வாசிப்பது முதல், சின்ன மேளம், பாட்டுக்கச்சேரி போன்ற களியாட்டங்கள் கூட அந்த தண்ணீர்பந்தலில் நடந்தது ஞாபகமாய் இருக்கிறது. அமரராகிவிட்ட பீதாம்பரத்தார், கந்தையாவிதானையார் மக்கள் குமரையா, தேவராசா மற்றும் நடராசா, புலந்திரன், இராமலிங்கம், விஸ்வரத்தினம், சௌந்தரம், மார்க்கண்டு, எம். ஆர். இராசரத்தினம், பஞ்சலிங்கம், கோண்டாவில் அருளம்பலத்தார் போன்றோர் அக்காலத்தில் தளகர்த்தாக்களாக இருந்து புதுக்கோயில் பெருந்திருவிழாக்களையும், தண்ணீர்ப்பந்தல் நிகழ்ச்சிகளையும் வழிநடத்தினர். என்பதும் என் நினைவுக்கு வருகின்றன.

புதுக்கோயில் திருவிழாக்காலம் என்றால் அப்போது கொக்குவில் ஆலயச் சூழலில் இருந்த சிறுவர்களுக்கு மாத்திரமல்ல, பெரியவர்களுக்குக் கூட கொண்டாட்ட உணர்வு தான். அந்தளவுக்கு எம். ஆர். ஒழுங்கு செய்த 5.6 கூட்ட மேளம், சின்னத்துரை சின்னமேளம், புத்தூர் நடனக்காரிகளின்

டான்ஸ், ஈழத்து சவுந்தரராசன் இசை நிகழ்ச்சி (ஈழத்து சீர்காழி), கிருஷ்ணமூர்த்தி பொன்னம்பலம்(p/o), கண்ணன்கோஷ்டி, இரட்டையர்குழு என்று பலவகை நிகழ்ச்சிகளை இரசிப்பதில்தான் எத்தனை மகிழ்ச்சி. 4ஆம், 6ஆம் திருவிழாக்கள், பூங்காவனத்தில் அவிட்டு வாணவேடிக்கை, மத்தாப்புக்கள் வானத்தில் வர்ணஜாலம் காட்டும்.

அக்காலத்தில் சிறுவர்களால இருந்த நாம் கோயில் உள்வீதி, வெளிவீதியில் ஓடியாடிய விளையாடிய களைப்பில் தேர் முட்டிக்குள்ளும், உள்வீதி மூலை முடுக்குகளிலம் எம்மை அறியாது அயர்ந்து உறங்கி விட, பெரிய வாலிபர்கள் வேடிக்கையாக விளக்குத்திரி எண்ணை கருமைகளால் எமக்கு மீசை, தாடிகள் வரைந்து சந்தோஷிப்பதுமான நிகழ்ச்சியை இன்றும் நினைக்கின்றேன். மறுநாள் விடிந்ததும் வீடு திரும்பும் போது எல்லோரும் எங்களைப்பார்த்து கைகொட்டி சிரிக்கும் போதுதான் எமக்கு எம் நிலை புரியத்தொடங்கும்...

புதுக்கோயிலில் சித்திரத்தேர் இல்லாத காலத்தில் இருந்த கட்டுத் தேருக்கு சிகப்பு, வெள்ளைச் சீலைகளினாலும் திருத்தொங்கல் கொண்டு அலங்கரிப்பதும் கமுகு, கரும்பு, நுங்குகள், வாழைகளினால் தேரின் பவளக்கால்களை அலங்கரிப்பதற்கும் நாம் உள்ளூரிலே (பெடியளாக) தேடித்திரிந்து கோயில் முன்னால் கொண்டுவந்து சேர்ப்பதும் அக்காலத்தில் எமக்கு அலாதியான பணிகள்.

சிறுவர்களாய் ஏன் வாலிபர்களாய் வந்த பின்பும் கோயிலில் அடித்தொண்டுகளில் ஈடுபடுவதில் நாம் கண்ட நிறைவு பஜனை பாடுவது வசந்த மண்டபத்திலே யாகமண்டபத்திலே பஞ்சபுராணம் பாட முந்துவது எல்லாம் இன்று ஏன் நம்மிடையே தொலைந்து விட்டது? இன்றைக்கு மாணவர் சமுதாயத்திற்கு தரப்படும் வழிகாட்டல்களை பார்த்தீர்களா? அக்காலத்தில் பாடசாலைகள் கோவில்களை பேணும் வித்தியாலயங்களாக, கோயில்கள் நிலையில் நடத்தப்பட்டன.

அந்த அளவுக்கு கொக்குவில் கிராமத்துப் பெற்றோர்கள் வழிபாட்டையும், சேவையையும் எமக்குச் சொல்லித் தந்திருந்தார்கள். C.S.S. மணிபாகவதரின் சங்கீத இசை, கதாப்பிரசங்கம் உற்சவகாலத்திலே தவிர்க்க முடியாத நிகழ்ச்சி, பெரியவர்களின் சொற்பொழிவுகள் அவைகளெல்லாம் இன்று ஏன் கோயில்களில் இடம் பிடிப்பதில்லை? எமது சிறிய பருவத்தில் நலம் தேடிய அறிவு, புராண இதிகாச கதைமாந்தருடனான விழுமியங்களை கொக்குவில் சுருட்டுக் கொட்டில்களில் கூட புராண இதிகாசக் கதைகளை நியமிக்கப்பட்ட ஒருவர் ஆசாரசீலராக தனியே இருந்து வாசிக்க மற்றவர்கள் கேட்டுக்கொண்டே சுருட்டுச் சுற்றிய காலந்தனை இன்று யாரறிவர், அவருக்கு அதற்கு நாள் சம்பளம் வழங்கப்படுமாம்.

மீண்டும் அந்த பக்தி மரபு வளரவும், வளர்க்கவும் இளைஞர் சமூகத்துடன் சேர்ந்து நாமும் சேர்ந்து இனி முனைய வேண்டாமா?

- கடைக்குட்டி எம்எஸ் -

# கொக்குவிற் பதி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வில் வளைவான அமைப்புடைமையார் குளங்களோடு கூடிய ஊர்ப் பெயர்கள் "வில்" எனற சொல்லோடு அமைகின்றன. அதிலும் அருகருகே அமைந்த குறிச்சிகளை அடக்கிய குறிப்பிட்ட பகுதியான கொக்குவிற் கிராமமோ ந்தாவில், கோண்டாவில், இணுவில், உடுவில், கொடுத்துவில் தலையாழி என்ற எல்லைகளை உடையதாய் இருப்பது நோக்கத்தக்கது. கொக்குகள் வகை தொகையாக இங்குள்ள சோலைகளில், குளக்கரைகளிலும் சூழ்ந் திருந்தும் இம்மண் மாமங்கள் அதிகமாக (கொக்கு = மாமரம்) வளர்வதற்கான வளம் கொண்டிருப்பதும் இதற்கு காரணங்கள் எனக் கருதவைக்கின்றது.

முடிவில்லாதுறை சுன்னாகத்தான் வழி முந்தித் தாவடிக் கொக்குவில் மீதுவர என்ற பழம் பாடல் இக்கிராமத்தினவைவைச் சுட்டியும் ஒருபாடலாகும். கொக்கு என்பது குதிரையைக் குறிப்பதனால் இங்கே நல்லூர் இராசதானியின் குதிரைப் படைத்தளம் அமைந்திருக்கலா மெனவும் கருத இடமுண்டு என்பார். ஆ. முத்துத்தம்பிபிள்ளை என்ற ஆய்வாளர் (யாழ்ப்பாணச் சரித்திரம்-1963) மேலும் ஞானம் உள்ள அளவு சோதிடம் நிலைத்து நிற்க சோதிடபரிபாலன மடமும் அச்சுக்கூடமும் நிறுவிய உலகப்புகழ் பெற்ற இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் கொக்குவிலை உலகுக்கு அறிவிக்கும் தன்மையும் "நாடுவிளைந்தால் நந்தாவில் விளையாது யாது" என்ற முதுமொழியினர் அர்த்தமும் அதிபர் ஹண்டி பேரின்பநாயகப்பேர் சான்றோரின் தலையிலான கொக்குவில் மகுடமான இந்துக் கல்லூரியும் சைவப்பெரியார் சுபாரத்தின முதலியார் மற்றும் புலவர்கள், பண்டிதர்கள் நியாயவாதிகன் தணவுந்தர்களாத் தோற்றுவித்த பெருமையும் இக்கிராமத்திற்கு உண்டு. முத்தாய்ப்பாக "புதுக்கோயில்" என்றே பெயராலேயே இன்னும் கருணவாருதியாக விளங்கும் "கிருபாபர சிவசுப்பிரமணிய சுவாமி இவ்வூரின் பெருமையை ஓங்கச் செய்யுமாறு கண்டு இன்புறப் பாலது. பொதுவாக கல்வி, வீரம், செல்வமெனும் பேறுகள் பெற்றுயர்ந்த மக்களைக் கொண்டொளிர்ந்த கொக்குவில் பற்றிய "கொக்குவிலானோடு கொழுவினால் இழுவல்" என்ற பேச்சு வழக்குப் பழமொழியானது பல பரிபாணங்களில் அர்த்த புஸ்டியானதே என்று கூறும் சான்றோர் அது கிருபாகர முருகனின் ஆற்றலையும், அச்சுப்பிரமணியன் அடியார்களின் உடல்வலு, வீரதீரத்தையுமே குறிக்க எழுந்ததே என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த வகையிலே நல்லூர்க் கோயிற் பற்றிலே அடங்கியதாயும் நல்லைநகர் ஆறுமுகநாவலர் காலத்திலேயே முருக வழிபாட்டில் ஊறித்திளைத்த ஊராயும் விளங்கிய கொக்குவில் கந்தபுராணபடனம் நடக்கும் மடாலய நிலையிலிருந்து 175 ஆண்டுகளுக்கு முன்பே கந்தபுராண கலாசாரம் பேணும் பக்தர்களால் போற்றப்பட்ட கோயிலாய் இருந்ததுமான புதுக்கோயில் கிருபாகரனின் கோவிலும் அதன் மகிமையும் இன்று மீள நினைந்து போற்றப்பட வேண்டியதாயுள்ளன.

(ஆதாரம்:கொக்குவில் நம்ம ஊர் வெளியீடு-2009)

உ
சிவமயம்

# இலச்சினை விளக்கம்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தேவஸ்தான வெளியீடுகளுக்கென உருவாக்கப்பட்ட இலச்சினை கண்ணுக்கு அழகாகவும் கருத்துக்குப் பொருண்மை பொதிந்ததாகவும் அமைந்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பார்ப்பவர் கண்ணுக்கு உடனே புலப்படுவன ஓம் என்னும் சமட்டிப் பிரணவ மந்திரமும், நடுவே ஓங்கி நிமிர்ந்து நிற்கும் வேலும் ஆடும் மயிலின் விரிந்த தோகையும் ஆகும். பிரணவமே இலச்சினையின் அடித்தளமாக அமைந்துள்ளது. சைவர்களுக்கு அது பிரணவப் பொருளாம். பெருந்தகை ஐங்கரக் கடவுளாகிய விநாயகரை உடனே நினைவூட்டுகின்றது. வேதங்களுக்கு முன்னும், பின்னும் ஒலிக்கப்படும் இப் பிரணவ மந்திரம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சைவர்களுக்கு மாத்திரமன்றி முறையே விட்டுணு, சக்தி, கணபதி, குமாரன் ஆகிய தெய்வங்களை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம் ஆகிய பிற வைதீக சமயங்களுக்கும் பொதுவான மகாமந்திரமாகும். ஆகவே அது சிவன் என்றும், விட்டுணு என்றும், சக்தி என்றும், கணபதி என்றும், குமாரன் என்றும் வெவ்வேறு பெயர் கொள்ளும் முழுமுதற் பரம்பொருள் ஒன்றே என்னும் உண்மையை உணர்த்தி நிற்கின்றது.

- மலராசிரியர் -



# நிர்வாகசபை சார்பாக பொருளாளரின் வாழ்த்தும், நன்றியும், செய்தியும்

எல்லாம் வல்ல கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் கருணையின் திறத்தை நினைத்து பிரார்த்திக்கிறேன். எம்பொருமான் வீற்றிருக்கும் புதுக்கோவிலுக்கு ஒரு தொண்டனாகவே நின்று திருப்பணி செய்யக்கிடைத்ததை பெரும்பேறாக கருதுகின்றேன்.

உண்மை அன்பும் விசுவாசமும் உள்ளவருமாய் முயற்சியோடு உழைப்பவர்களுக்கு இறைவன் கட்டாயம் கைகொடுப்பான் என்பது உனது நம்பிக்கை.

ஆலயத்தை பேணுவது எம் அனைவரின் கடமையாகும். மேலும் ஆலயத்தின் சொத்துக்களையும், மரபுகளையும் நாம் எந்தவேளையிலும் பேணிப் பாதுகாக்க கூடியவர்களாய் இருக்க வேண்டும்.

திருப்பணி வேலைகளுக்கும் மஹா கும்பாபிஷேகத்திற்கும் எங்களோடு தோள் கொடுத்து உதவி தங்களால் இயன்ற நிதி உதவியை மனமுவந்து வழங்கி இக்கைங்கரியத்தை நிறைவேற்ற உதவிய அனைவருக்கும் நிர்வாக சபை சார்பாக நன்றியைத் தொவித்துக் கொள்கின்றேன் மேலும் புதுக்கோயிலான் பெருமையையும் எமது பழமைச் சிறப்பையும் அபிவருத்தியின் முன்னேற்றங்களையும் தாங்கி வரும் புதுக்கோயிலான் பெருங்கருணை என்ற பெயரிலான மலரை பதிப்பிக்க எமக்கு பாடுபட்டு உதவிய எம் அன்புக்குரிய அண்ணன் ஸ்ரீதயாளன் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எம் குலதெய்வம் எம்மோடு இருந்து என்றும் அருள்சுரக்க பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

நன்றியுடன்,

தொண்டுக்குரிய
**அ.அருள்நேசன்**

புதுக்கோவில்
கொக்குவில்.
5/5/2014



# கொக்குவில்

# கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் நிர்வாகசபைக் காரியதரிசியின் செயற்பாட்டு அறிக்கை

2014 கும்பாபிஷேகமலர் சுப்ரமணிய சுவாமியின் மணம் வீசும் தெய்வமலர். இக்கோயிலின் பண்டைப் பெருமையையும் இடைக்காலப் பணிகளையும் சிறப்பாக இக் கால ஆலய வளர்ச்சியை ஒரு சேர விளக்கிக் காட்டுகின்ற வரலாற்றை அடியவர்கள் அனைவரும் படித்து இன்புறுவார்களாக. மூன்றாவது கும்பாபிஷேக மலராக வெளிவரும் புதுக்கோயிலானின் இச்சிறப்புப் பிரசாரம் முன்னிட்டுப் பலருக்கு நன்றி கூறவேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. கடந்தகால செயற்பாடுகள் வருமாறு.

இவ் ஆலயம் தோன்றிய 19ம் நூற்றாண்டு முற்பகுதியில் இவ்வாலயச் சுற்றாடலைச் சேர்ந்த சைவ வேளாள மரபினராகிய நம் மூதாதைகள் முருக இறைவழிபாடு செய்யவும், தொண்டாற்றவும் விழாக் கொண்டாடவும் திருக்கோயில் இன்றியமையாததென உணர்ந்து இவ் ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தனர். அந்தக் குடும்பத் தலைவர்களின் சிந்தனைத் தெளிவின் விளைவுதான் கோயில் ஆரம்பம். காலக் கிரமத்தில் பல அடியார்களின் முயற்சியால் இன்று நாம் காணும் பெரிய முருகன் கோவிலாக பரிமளிக்கின்றது. அவர்களது சிந்தனையை செயற்படுத்தவல்லதொரு "பஞ்சகர்த்தா சபை" ஏற்படுத்தினர்.

அக்கால கட்டத்தில் சபையில் அங்கம் வகித்தவர்கள் சண்முகம் முருகேசு (பெரிய முருகேசர் என்பது பொது வழக்கு) வேலாயுதர் முருகேசு (சின்ன முருகேசர்) சட்டநாதர், சின்னப்பு, கதிரித்தம்பி, அம்பலவாணர், தாமோதரம்பிள்ளை, என்பவர்களாவர். இவர்கள் சண்முகம் முருகேசுவைத் தலைவராக்கிக் கோவில் அமைக்கும் பொறுப்பு அவரிடம் விடப்பட்டது.

ஆலயம் அமைப்பதற்கென நிலத்தைச் சபையினர் கொள்வனவு செய்து அதனை தர்மசாதனம் ஆக்கினர். இந்த நிலம் கொக்குவில் செட்டிகளின் உரிமையில் இருந்து பின் பலருக்கு உரிமை மாறிய பின் பஞ்சகர்த்தா சபையினர் ஏற்றனர். கொக்குவில் ஆங்கில பாடசாலை அமைந்திருந்த காணியும் பிறவும் நினைக்க முடிச்சான் வளவைச் சேர்ந்ததாம். கோயிற் காணித் துண்டோடு பஞ்சகர்த்தா சபையின் தலைவர் சண்முகம் முருகேசு அவர்களும் தமது சொந்த நிலத்தின் ஒரு பகுதியை இந்த தர்மசாதனத்துடன் சேர்த்துள்ளார். அந்த மகானின் தெய்வ நம்பிக்கையும் சைவ வாழ்வுந்தான் ஆலயத்தின் இன்றைய பொலிவிற்கும், அருளாட்சிக்கும் மூலம் எனல் குறைவுடைத்தாகாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நல்லூர் கோயிற்பற்றில் உள்ளது கொக்குவில் கிராமம். அங்கு மத்தியில் திகழ்வது "புதுக்கோயில்" ஆரம்ப காலத்தில் பிள்ளையார் சந்நிதியும், வள்ளி தெய்வானை சமேத முருகன் சந்நிதியும் 1830ம் ஆண்டளவில் அமைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டு வந்தது. பிரபல சோதிட வல்லுனரான கொக்குவில் இரண்டாம் இரகுநாதஐயர் தலைமையில் கும்பாபிஷேக அநாவர்த்தனப் பிரதிக்ஷ்டை நடைபெற்று நித்திய பூசைகள் ஆரம்பிக்கப்பட்டன.

காலத்திற்கு காலம் வந்த கொண்குவில் வாழ் அடியார்கள் திருப்பணி தொண்டுகளைப் பாரமேற்று வழிவழியாக நடத்தி வந்தனர் அந்த வகையில் 19.04.2010ல் இருந்து 20.03.2011 வரை

கொக்குவில் கிருபாகர சிவசுப்ரமணிய சுவாமி கோயிலின் தலைவர் பதவியைப் பொறுப்பேற்றேன். 15.09.2013 தொடக்கம் இன்று வரை ஆலயத்தின் காரியதரிசியாக பொறுப்பேற்று நடாத்தி வருகின்றேன்.

இவ்வாண்டு எமது ஆலயத்திற்கு ஓர் புனித ஆண்டாகும். நாட்டின் யுத்த சூழலால் முடிவுக்கு வந்து பதினைந்து ஆண்டுகளின் பின் சிவில் நிர்வாகங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இயல்பு நிலைக்கு வந்துள்ளது. இக்காலப்பகுதியில் எமது ஆலயத்தில் முக்கிய ஆவணங்கள் இல்லாத நிலை எம்மால் காணக் கூடியதாக இருந்தது. இதன் நிமித்தம் முதற்கட்டமாக ஆலயத்திற்கு சொந்தமான காணியின் உறுதியை காணித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பல சிரமங்களுக்கு மத்தியில் உறுதியின் பிரதியை 13.05.2010ல் பெற்றேன். உறுதி இலக்கமானது (4099/13.01.1969) (முற்பதிவு இலக்கம் D371/149) 4245/23.03.1971. இந்து சமய கலாசார விவகார அமைச்சின் HA/5/JA/226 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்ட எமது ஆலயம் அண்மையில் முகவரி மாற்றங்களுடன் மீள்பதிவு செய்யப்பட்டும் உள்ளது. அதற்கு அனுசரயாய் இருந்த எம்மூத்த உறுப்பினர் முன்னாள் உதவி இயக்குநர் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்துடன் கொக்குவில் மத்திய இந்து இளைஞர் மன்றத்தின் நிர்வாகத்தினர், கொக்குவில் மத்திய இளைஞர் மன்ற சனசமூக நிலைய சார்பில் 07.12.1981ம் ஆண்டு 4196 குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் இருபது ஆண்டுகளுக்கு மட்டும் குத்தகை ஒப்பந்தங்களுக்கு அமைய குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. இவ் ஒப்பந்த காலம் 2001ம் ஆண்டுடன் குத்தகை ஒப்பந்தம் முடிவடைந்தும் குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் அதனை ஆலய நிர்வாகத்திற்கு கையளிக்கப்படவில்லை. இதனை கடந்த கால நிர்வாகங்கள் சிவில் நிர்வாகம் அற்றிருந்த காரணத்தால் பல தடவை மீளத்தரும்படி கோரியும் அதனை கையளிக்கவில்லை. நாம் ஆலயத்தை பாரம் எடுத்த காலத்தில் இக்குத்தகை ஒப்பந்தத்தின் சான்றிதழ்கள் எவையும் இல்லை. நாம் காணித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு 13.05.2010 மேற்குறிப்பிட்ட குத்தகை ஒப்பந்த இலக்கத்தின் மூலப்பிரதி எம்மால் பெறப்பட்டது.

இதன் நிமித்தம் 2010.12.05 திகதி விஷேட பொதுக் கூட்டமொன்று கூட்டப்பட்டு இந்து இளைஞர் மன்ற நிர்வாகத்தினர் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளுமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

20.10.2010ம் திகதி செயலாளர் நல்லூர்ப் பிரதேச சபைக்கு மேற்குறிப்பிட்ட விடயமாக கடிதம் ஒன்றை அனுப்பினோம். இவ்விடயமாக 22.11.2010 அன்று பிரதேச சபை செயலாளரால் இரு பகுதியினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலின் போது கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினர் குத்தகை உடன்படிக்கையை மீளக் கையளிப்பதற்கு பின்நின்ற காரணத்தால் மத்தியஸ்தர் சபை நல்லூர்ப் பிரதேசத்திற்கு முறையிட்டோம். (குழாத்தின் சுட்டிலக்கம் J/247/2013/169) இதன் நிமித்தம் 24.08.2013 அன்று மத்தியஸ்தத்திற்கு எடுக்கப்பட்டது.

கொக்குவில் கிருபாகர சிவசுப்ரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபையினர் கொக்குவில் மத்திய இந்து இளைஞர் மன்றத் தலைவர் சுப்பையா வரதஇராஜேஸ்வரமுதலியும் செயலாளர் நாகலிங்கம் இராசேந்திரம் ஆகியோருடன் கொக்குவில் இளைஞர் மன்ற சனசமூக நிலையம் அமைப்பதற்கு குத்தகை உடன்படிக்கை இல.4196/7-12-1981ன் பிரகாரம் 07.12.1981ல் இருந்து 07.12.2001 வரை 20 வருட காலத்திற்கு குத்தகை உடன்படிக்கை செய்யப்பட்டது. குத்தகை உடன்படிக்கை 07.12.2001உடன் முடிவடைந்தும் குத்தகை ஒப்பந்தத்தை செய்த 2ம் பகுதியினர்

ஆகிய கொக்குவில் இந்து இளைஞர் மன்றத்தின் செயலாளர் நாகலிங்கம் இராசேந்திரம் நீண்ட காலமாக நாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதன் காரணத்தால் சுப்பையா வரதஇராஜேஸ்வரமுதலியை மத்தியஸ்தத்திற்கு முறையிட்டிருந்தோம்.

இதில் 2ம் பகுதியினராகிய கொக்குவில் மத்திய இந்து இளைஞர் மன்ற தலைவராக இருந்த சுப்பையா வரதஇராசேஸ்வரமுதலி பின்வருமாறு தனது இணக்கப்பாட்டை தெரிவித்திருந்தார். சு.வரதஇராசேஸ்வர முதலியாகிய நான் இல.4196:.7.12.1981ல் கோவில் பரிபாலன சபையில் செய்து கொண்ட குத்தகை உடன்படிக்கை 20வருடங்களுக்கு மேலான ஒப்பந்தத்தின் பிரகாரம் காலாவதியாகின்றது. இதன் காரணத்தாலும் 1995 இருந்து இந்து இளைஞர் மன்றம் இயங்காத காரணத்தினாலும் கோவில் பரிபாலன சபைக்கும் எனக்கும் ஏற்படுத்திய ஒப்பந்தம் போன்ற பிணக்கில் இருந்து விடுபட்டுக் கொள்கிறேன் என இணக்கப்பாட்டுக்கு வந்தார். இந்து வாலிபர் சங்கத் தலைவர் ஒப்பந்தத்தில் இருந்து விலகிய காரணத்தாலும் ஒப்பந்தகாலம் முடிவடைந்த காரணத்தாலும் இவ் நிலைப்பாடுகளை இலங்கை மின்சார சபையிடம் எழுத்து மூலம் முறையிட்டு அக்கட்டடத்திற்கான மின் இணைப்பு நிறுத்தப்பட்டது. மிக விரைவில் இக்கட்டடத்தில் இருந்து தற்போது அத்துமீறி செயற்படும் சனசமூக நிலையத்தை வெளியேற்றுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

மேலும் ஆலயத்திற்கு சொந்தமான கடை குத்தகை ஒப்பந்தங்கள் பல வருடங்களாக ஒப்பந்தங்கள் செய்யாத நிலையில் காணப்பட்டது. கடந்த காலத்தில் குத்தகையில் உடன்படிக்கைகள் செய்வதற்கான படிவங்கள் ஒன்றும் ஆலய நிர்வாகத்தின் கையிருப்பில் இல்லை. இதன் நிமித்தம் ஆலயத்திற்கு சொந்தமான கடைகளுக்கு 2011.03.11ம் திகதி ஞ.முத்துக்குமாரசாமி நொத்தாரிசு அவர்களால் கடைகளுக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டது. பலநோக்கு கூட்டுறவு சங்க மூன்று கட்டிடத்திற்கு 12.03.2011ல் இருந்து குத்தகை ஒப்பந்தம் இவர் மூலம் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்கள் இதற்கான ஒப்பந்தம் செய்வதற்கான திகதியை தருவதில் பின்னெடுத்து வருகின்றனர். எனவே இவர்களிற்காக நாம் எடுத்த முயற்சியை பின்வாங்காமல் தொடர்ந்து நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டும். கடந்த காலங்களை விட இவர்களிற்கான குத்தகைப் பணம் சற்றுக் கூட்டப்பட்டுள்ளது. ஏனைய கடைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இதன் குத்தகைகள் குறைவாகவே காணப்படுகின்றது. இக் குத்தகைப் பணத்தின் ஊடாகவே ஆலயத்தின் நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய நிலை உள்ளது.

ஆலயத்தின் நிலவரைபட இலக்கம் 896, 22.06.1986ம் ஆண்டு எடுக்கப்பட்டது. அதன் பின் எமது காரியதரிசியின் உதவியுடன் 2010ம் ஆண்டு நிலவரைபடம் மீண்டும் எடுக்கப்பட்டது. ஆலய ஏனளவபைெ ழசனநச வு.சு 95 யாழ் மாவட்ட நீதிமன்ற கட்டளையின் பிரதி எடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் நிலவரைபட இலக்கம் 896, நில அளவையாளர்,க.ஐயாறு அவர்களால் 04.06.1968 காணிப்பதிவு இலக்கம் 149பதையும் டுழவ ழே1 22பரப்பு நிலத்தையும், டுழவ ழே2 16.08ம் யாழ்மாவட்ட நீதிமன்றத்தால் முன்னாள் நீதிபதி ஐ.எம்.இஸ்மயில் அவர்களால் 22.02.1970 கட்டளை வழங்கப்பட்டது. இதனடாக எமது ஆலய சொத்துக்கள் அனைத்தும் பாதுகாக்கக் கூடியதாக உள்ளது. அதற்கு முன்னின்று உழைத்த முன்னாள் தலைவர் திரு.க.பொன்னம்பலம் அவர்களுக்கு இன்றும் நாம் அனைவரும் நன்றி சொல்ல வேண்டிய நிலையில் உள்ளோம். இவரைப் போன்று வருங்கால சமுதாயம் ஆலயத்தின் சொத்துக்களைப் பயன்படுத்தி நடுநிலைமையாகவும் துணிச்சலுடனும் ஒன்று இணைந்து செயற்பட்டு ஆலயச் சொத்தை பாதுகாக்க முன்னின்று செயற்படுதல் வேண்டும்.

ஆலய வீதிப்பகுதி வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மிக வேகமாக செல்லும் காரணத்தால் ஆலயத்தை தரிசிக்க வரும் அடியார்களுக்கு இடையூறு விளைவிக்கும் காரணத்தினால் ஆழஉநயடிடந ளுவயஅெ போடப்பட்டு தடைகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்ற ஆலயப் புனர்ஸ்தாபனத்தில் புதிதாக இடம்பெற்ற வேலைகளாவன. கடந்த காலத்தில் செங்கட்டிகளால் கட்டப்பட்டிருந்த கட்டடம் புதிதாக மாற்றப்பட்டது. வசந்த மண்டபத்தின் மேல் சுவாமிகளின் சிலைகள் கட்டப்பட்டுள்ளன. வசந்த மண்டபத்தின் பூசைகளை சகலரும் பார்க்கக் கூடியதாக தெற்குப் பகுதியில் நுழைவாயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்குப்பக்க கோபுரத் தளத்திற்கு மேல் கே.கே.எஸ் வீதியால் செல்லும் மக்கள் இறைவனைத் தரிசித்து செல்லும் நோக்குடன் முருகன் சிலையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் புதிதாக மகாலட்சுமி சுவாமி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக் கும்பாபிஷேக புனர்ஸ்தாபனம் அனைத்திற்கும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இக் கும்பாபிஷேக புனர்ஸ்தாபன வேலைகளுக்கு என்றொரு காலமும் எங்கும் இல்லாதவாறு ஆலயத்தின் திருத்த வேலைகளிற்கு அவ்வப் பிரதேசசபைகள் ஒத்துழைப்பு நல்கி வருவதைக் காணக் கூடியதாக இருந்தது. நல்லூர் பிரதேசசபை இதற்கு மாறாக அனுமதி அளிப்பதில் பல சிரமங்களை ஏற்படுத்தியதால் கட்டட வேலைகளை செய்வதில் சில தாமதங்கள் ஏற்பட்டன. இச் செயற்பாடுகளிற்கு வீதி அபிவிருத்தி சபையினர் நல்லூர், பிரதேச செயலர், இலங்கை மின்சாரசபை, யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, யாழ் அரசாங்க அதிபர், எண்ணெய்க்காப்பு தினத்தன்றும் கும்பாபிஷேக தினத்தன்றும் ஆலய வீதிகளிற்கு தண்ணீர் தெளித்து உதவிய மாநகரசபை முதல்வருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த காலத்தில் ஆலய நாளாந்த வழிபாடுகளில் பங்குபற்றியும், ஆலய பணிகளை திறம்பட தொண்டாற்றிய திருவாளர் க.சண்முகரத்தினம் அவர்களுக்கும் ஆலய பிரதம குருக்கள் சிவதாசக் குருக்கள் அவரது பிள்ளைகள் ஏனைய அங்கத்தவர்கள், நிர்வாகசபையினருக்கும் ஆலய கும்பாபிஷேகத்திற்கு தேவையான பொருட்களையும் பணங்களையும் தந்துதவிய உள்நாட்டு, வெளிநாட்டு அடியார்களுக்கும், இம் மலராசிரியர் M.S.ஸ்ரீதயாளன் அவர்களுக்கும், இம்மலரை குறுகிய காலத்தில் பல சிரமங்களுக்கு மத்தியில், மலராசியருடன் இணைந்து 24 மணித்தியாலங்களும் இதனைகுறிப்பிட்ட காலத்தில் வெளியிடவேண்டும் என்ற நோக்கில் அச்சிட்டு ஒத்துழைத்த இரகுநாத ஐயர் குடும்பத்தினருக்கும் எமது ஆலய நிர்வாகசபை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செ. செல்வறஞ்ஜன். O.ST.J
செயலாளர்

# 1962 முதல் 2014 வரையிலான காலப்பகுதியில் திருப்பணிகளைக் கவனித்து புதுக்கோவிலின் வளர்ச்சியில் பங்கேற்ற நிர்வாக (பரிபாலனம்) சபையினர்

| வருடம் | தலைவர் | காரியதரிசி | பொருளாளர் |
|---|---|---|---|
| 1962 | வே. மாணிக்கவாசகர் | வ. கந்தையா | வே. சிற்றம்பலம் |
| 1963 | க. பொன்னம்பலம் | வ. கந்தையா | கு. தாமோதரம்பிள்ளை |
| 1980 | க. சோமசுந்தரம் | மு. திருஞானசம்பந்தபிள்ளை | அ. நடராசா |
| 1986 | த. பாக்கியராசா | அ. மாணிக்கவாசகர் | த. பொன்னம்பலம் |
| 1987 | வ. குலசிங்கம் | அ. மாணிக்கவாசகர் | க. சோமசுந்தரம் |
| 1988 | த. பொன்னம்பலம் | C.V. இராசேந்திரம் | து. அழகராசா |
| 1990 | பா. சடாச்சரம் | ந. ஸ்ரீரஞ்சன் | அ. நடராசா |
| 1991 | க. சோமசுந்தரம் | நா. சண்முகநாதபிள்ளை | அ. நடராசா |
| 1992 | க. சோமசுந்தரம் | நா. சண்முகநாதபிள்ளை | ந. சச்சிதானந்தன் |
| 1993 | க. சோமசுந்தரம் | நா. சண்முகநாதபிள்ளை | ந. வேல்தாசன் |
| 1994 | க. சோமசுந்தரம் | த. வில்வராசா | அ. நடராசா |
| 1995 | க. சோமசுந்தரம் | த. வில்வராசா | அ. நடராசா |
| **1995 ஐப்பசி மாதத்தில் யாழ்ப்பாண மக்கள் இடம்பெயர்வு** | | | |
| 1996 | த. பொன்னம்பலம் | மு. திருஞானசம்பந்தபிள்ளை | வை.சி. அம்பிகாபதி |
| 1997 | த. பொன்னம்பலம் | ச. லோகேந்திரன் | வை.சி. அம்பிகாபதி |
| 1998 | 29.05.1998 வரை<br>த. பொன்னம்பலம் | ச. லோகேந்திரன் | வை.சி. அம்பிகாபதி |
| 98-99 | அ. நடராசா | ச. லோகேந்திரன் | வை.சி. அம்பிகாபதி |
| 2000 | அ. நடராசா | ச. லோகேந்திரன் | வை.சி. அம்பிகாபதி |
| 2001 | செ. செல்வகுமார் | தி. ஞானசுந்தரன் | வை.சி. அம்பிகாபதி |
| 2002 | 30.02.2002 வரை<br>த. பொன்னம்பலம் | தி. ஞானசுந்தரன் | வை.சி. அம்பிகாபதி |
| 02-03 | செ. மதனசுரேந்திரன் | தி. ஞானசுந்தரன் | வை.சி. அம்பிகாபதி |
| 2004 | செ. மதனசுரேந்திரன் | தி. ஞானசுந்தரன் | வை.சி. அம்பிகாபதி |
| 2005 | செ. மதனசுரேந்திரன் | ந. ஸ்ரீரஞ்சன் | வை.சி. அம்பிகாபதி |
| 2006 | செ. மதனசுரேந்திரன் | ந. ஸ்ரீரஞ்சன் | வை.சி. அம்பிகாபதி |
| 2007 | த. சகாதேவன் | ந. ஸ்ரீரஞ்சன் | ந. ரவீந்திரராஜன் |
| 2008 | த. சகாதேவன் | ந. ஸ்ரீரஞ்சன் | ந. ரவீந்திரராஜன் |
| 2009 | த. சகாதேவன் | ந. ஸ்ரீரஞ்சன் | க. வசீகரன் |
| 2010 | செ. செல்வரஞ்சன் | அ. அருள்நேசன் | ச. பாலாபரணம் |
| 2011 | ம. பாலாபரணம் | செ. செல்வரஞ்சன் | அ. அருள்நேசன் |
| 2012 | ம. பாலாபரணம் | செ. செல்வரஞ்சன் | அ. அருள்நேசன் |
| 2013 | ம. பாலாபரணம் | செ. செல்வரஞ்சன் | அ. அருள்நேசன் |
| 2014 | ம. பாலாபரணம் | செ. செல்வரஞ்சன் | அ. அருள்நேசன் |

# புதுக்கோவில் மஹோற்சவ விழா உபயகாரர்கள்


## வைகாசி மீ

| | | |
|---|---|---|
| 01. கொடியேற்றம் | பகல் | திருமதி. நாகேஸ்வரி ஆறுமுகம் குடும்பம் (Canada) |
| | இரவு | மு. ஜெயரட்ணம் (Canada) |
| 02. 2ம் திருவிழா | பகல் | அ. மாணிக்கவாசகம் (Canada) |
| | இரவு | மு. சின்னத்தம்பி குடும்பம் |
| 03. 3ம் திருவிழா | பகல் | திருமதி. நிததியானந்தம் நடராசா குடும்பம் (U.S.A) |
| | இரவு | திருமதி. அ. பாலசுப்பிரமணியம் |
| 04. 4ம் திருவிழா | பகல் | த. செல்வநாயகம் குடும்பம் |
| | இரவு | மு. சவுந்தரலிங்கம் குடும்பம் (Canada) |
| 05. 5ம் திருவிழா | பகல் | கொக்குவில் இந்துக் கல்லூரி |
| | இரவு | அ. பஞ்சலிங்கம் |
| 06. 6ம் திருவிழா | பகல் | நாகலிங்கம் றஞ்சித்குமார் (UK) |
| | இரவு | இ. இராசேந்திரம், இ. வசந்தராசன் குடும்பங்கள் (Germany) |
| 07. 7ம் திருவிழா | பகல் | மா. மகாதேவா குடும்பம் |
| மாம்பழத் திருவிழா | பகல் | திருமதி. மகேஸ்வரி இரத்தினம் |
| 7ம் திருவிழா | இரவு | ச. பிறேம்குமார் |
| 08. 8ம் திருவிழா | பகல் | மு. மகாதேவா குடும்பம் |
| 09. சப்பறம் | இரவு | கொ.கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இந்துவாலிபர்சங்கம் |
| 10. தேர் | காலை<br>மாலை | செ. ஸ்ரீராம் (UK) |
| 11. தீர்த்தம்<br>12. கொடியிறக்கம் | காலை<br>மாலை | வே. சிற்றம்பலம் குடும்பம் |
| 13. திருக்கல்யாணம் | மாலை | மயூரன் அபிராமி (Canada) |
| 14. பிராயச்சித்த அபிஷேகம் | காலை | பொ. பொன்னையா குடும்பம் (Malaysia) |
| 15. வைரவர் பொங்கல் | மாலை | A. அருள்நேசன் |

**குறிப்பு: வங்கி மூலம் பணம் அனுப்புவர்கள் கோயில் நடைமுறைக்கணக்கு இலக்கம் 0001090676 இலங்கை வங்கி யாழ்ப்பாணம் என்னும் கிளைக்கு அனுப்பி வைக்கவும்.**

# மாதாந்த பூசை உபயகாரர்கள்

| | |
|---|---|
| ஜனவரி | திருமதி.சௌந்தலா இராமச்சந்திரன் (USA) |
| பெப்ரவரி | திரு.செ.இரத்தினப்பிரகாசம் [கொழும்பு] |
| மார்ச் | திரு.S.விஜயரட்ணம் (USA) |
| ஏப்றில் | திரு.அ.மாணிக்கவாசகம் (Canada) |
| மே | திருமதி.கமலா.மகேஸ்வரன் (கொழும்பு) |
| ஜூன் | திரு.அ.நடராஜா (Canada) |
| ஜூலை | திரு.செ.நடராசா (Canada) |
| ஆகஸ்டு | ரகுதேவராசா,சுகன்யாதேவராசா,றோஷான்தேவராசா (Canada) |
| செப்டெம்பர் | கிரிஷான்,அஷான்,திரிஷான்,இராமகிருஷ்ணன் (UK) |
| அக்டோபர் | திருமதி.ஸ்ரீ ரதி.கனகசபை [கொழும்பு-பம்பலப்பிட்டி] |
| நவெம்பர் | திருமதி.சொரூபிஇராமகிருஷ்ணன் (UK) |
| டிசெம்பர் | திரு.T.நடராசா.கிருபாகரன் (UK) |



கற்பக்கிரகத்தின் மேலுள்ள விமானம்

# கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோயிலின் (புதுக்கோயில்) முதல் திருப்பணிக்குப்பின் குறிப்பிட்ட சில திருப்பணிகள் நிறைவேற்ற உதவியவர்களின் பெயர்ப்பட்டியல்.


| பெயர் | திருப்பணி |
|---|---|
| சபாரத்தின முதலியார் (தாமோதரம்பிள்ளை) | தம்ப மண்டபம் |
| சபாரத்தின முதலியார் (தாமோதரம்பிள்ளை) | வசந்த மண்டபம் |
| சபாரத்தின முதலியார் (தாமோதரம்பிள்ளை) | வாகனசாலை |
| சண்முகம் முருகேசு பெண் பறுவதம் | சுற்று மதில் |
| ஆ. குட்டித்தம்பி | வைரவர் மூர்த்தி பிரதிஷ்டை |
| இராமலிங்கம் ஆறுமுகம் | நவக்கிரக பிரதிஷ்டை |
| செ. இரத்தினப்பரகாசம் | வேணுகோபாலர் பிரதிஷ்டை |
| சு. காசிப்பிள்ளை (மக்கள் உதவியால்) | ஆறுமுகசுவாமி பிரதிஷ்டை |
| சு. காசிப்பிள்ளை | விநாயகர் உற்சவமூர்த்தி |
| சண்முகம் முருகேசு | சுப்பிரமணியர் உற்சவமூர்த்தி |
| வேலாயுதர் முருகேசு | பாலசுப்பிரமணியர் உற்சவமூர்த்தி |
| போ. அப்பாத்துரை | பழனியாண்டவர் கோயில் |
| சீனிவாசகம் பெண' ராசாத்தியம்மா | பழனியாண்டவர் மூர்த்தி |
| வை. சின்னத்தம்பி/மகன் வை.சி. சிவகுரு | உள்வீதி கொட்டகை |
| ச. சங்கரசிவம் | மடைப்பள்ளிக் கடை |
| சின்னத்துரை பெண் வள்ளியாச்சி | வடக்குவீதிக் கடை |
| வ. கந்தையா | புதிய கண்டாமணி |
| பத்மநாதபிள்ளை (மக்கள் உதவியால்) | முன்னைய கட்டுத்தேர் |
| ஆ.க. செல்வரத்தினம் | சண்டேஸ்வரர் பிரதிஷ்டை |
| முருகதாஸ் சுப்பிரமணயிம் குடும்பம் | மகாலட்சுமி அம்பாள் |
| என். பி. தேவராசா குடும்பம் | முத்துக்குமாரசுவாமி பிரதிஷ்டை |
| வை.சி. அம்பிகாபதி | தட்சணாமூர்த்தி பிரதிஷ்டை |

| | |
|---|---|
| நடராசா பெண் பூப்பிள்ளை குடும்பம் | வள்ளி தேவசேனாசமேத முருகமூர்த்தி |
| செ. சுப்பிரமணியம் / கு. இந்திரகுமாரன் | புதிய சூரன் |
| பொன்னையா குடும்பம் (துரைராசா - மலேசியா) | சமயகுரவர் நால்வர் பிரதிஷ்டை |
| திருமதி. பாலா சதாசிவம் | ஓட்டினால் கூரை (சீமெந்து கொங்கிறீட்டினால் போடப்பட்ட கருவறையை அண்மித்த மூன்று மண்டபங்களுக்கும் மேலாக) |
| செ. இரத்தினப்பிரகாசத்தின் முயற்சி | வசந்தமண்டபம், களஞ்சிய அறை, யாகசாலை புதுப்பித்தல் |
| கமலா மகேஸ்வரன் | வசந்தமண்டபத் திருக்கதவு (உருக்குக் கம்பியினாலானது) |
| மல்லாகம் இரத்தினத்தின் மகள் மூர்த்தி | பாலமுருகன் சிலை |
| நா. சண்முகம்பிள்ளை (U.K) | பிள்ளையார் சித்திரத்தேர் |
| திரு. மு.சி. ஸ்ரீ தயாளன் (உடுவில்) | ஆறுமுகசுவாமி / முத்துக்குமர சுவாமிக்கு தண்டிகை (வாகனம்) |
| சிவபாலசுந்தரம் இந்திரஜோதி (U.K) | உள்வீதி-மயில் வாகனம் |
| சுப்பிரமணியம் முருகதாஸ் | மகாலட்சுமி (விக்கிரகப் பிரதிஷ்டை) |
| திருமதி. கமலாதேவி இரத்தினசிங்கம் | வசந்தமண்டபம் குதிய சிற்ப ஆலாத்தி / திரை |

"திருவேறு முகங்க ளாறுந் திசையெலாங் கருணைகால
இருபாலும் மங்கை நல்லார் இன்னருள் சுரந்திருப்ப
ஒருவேலைக் கையி லேந்தி ஒளிர்மஞ்சை மீத மலர்ந்தே
முருகாநீ கொக்கூர் வாழ மூர்த்தியாய் அமைந்தாய் வாழி"

வாழ்க! வையகம் - வளர்க சிவநெறி

# ஆலய கிடைப்படம் 2011 வரை




1. கர்ப்பக்கிருகம் மூலவர்
2. சண்முகர்
3. நாகதம்பிரான்
4. சண்டீசர் எழுந்தருளி
5. முத்துக்குமாரசுவாமி எழுந்தருளிகள்
6. மயூரம்
7. பலிபீடம்
8. தம்பவிநாயகர்
9. நால்வர்
10. விநாயகர்
11. மகாலக்குமி
12. வேணுகோபலர்
13. நடேசர்
14. பைரவர்
15. நவக்கிரகங்கள்
16. சண்டீசர்
17. தெட்சணாமூர்த்தி
18. பாலசுப்பிரமணயிர்
19. பழனியாண்டவர்
20. தேரடி வைரவர்

# அனுபந்தம் 1

புதுக்கோயிலானோடு மீளா அடிமைகளாய் வளர்ச்சியில் கருத்தோன்றி வாழ்ந்து வருகின்ற கொக்குவில் அடியார்களை இப்பகுதியில் நினைவு கூறுவது பொருத்தமாய் அமையும் எம்பெருமான் கும்பாபிஷேக திருநாளிலே அத்தகைய அடியவர்களின் எமக்கு கிடைக்கக்கூடிய விபரங்கள் புகைப்படங்களின் அடிப்படையில் இப்பகுதியில் பிரசுரம் செய்ய முருகனின் திருவருள் கைகூடியுள்ளது. பெருஞ்சிரமத்தின் மத்தியில் அவசியமாகவும் அவசரமாகவும் இந்த அம்சம் மலரில் இடம்பெறுவதால் இது தொடர்பாக வரும் சிந்தனைகள் பெருமான் அருள் உந்த நேரியதாக மகிழ்ச்சியானதாக அமைய வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. தெய்வமென்பதோர் சித்தம் நிறைந்த அன்பர்கள் விடுபட்ட விபரங்களுக்காக எம்மை பொறுத்தருளவும் வேண்டி நிற்கின்றோம்.

எல்லாம் எம்பெருமான் சித்தமே

- நன்றி -


பிரம்மஸ்ரீ.இ.சி.இரகுநாதையர்


திரு.இராசரட்ணம் (சுப்த்திரை)


டாக்டர்.இராசப்பா


திரு.மாணிக்கம்


திரு.கி.கோபாலரட்ணம்


திரு.இ.சீவரட்ணம்


திரு.த.செல்வநாயம்


திரு.இ.மகாதேவா


திரு.மு.தி.பத்மராஜா


திரு.அருளம்பலம்


திரு.தம்பிஐயா



திரு.சௌந்தரலிங்கம்



திரு.சு.இ.இராசலிங்கம்
(ஆசைப்பிள்ளை)



திரு.வே. தம்பு



திரு.ஞானலிங்கம்



டாக்டர்.வி.கனகசபை (ரதி)



பிரம்மஸ்ரீ.இ.வெங்கடேசஐயர்



திரு.வேலாயுதபிள்ளை



திரு.குலசிங்கம்



திரு.ரி.பாக்கியராஜா



திருமதி.அ.ஜெயநாயகி



பிரம்மஸ்ரீ.
த.யோகேஸ்வரசர்மா



திருமதி.யோ.லலிதாம்பாள்



திரு.மா.சொக்கநாதன்



திருமதி.வே.செல்வரட்ணம்



திருமதி.த.குணரட்ணம்



பண்டிதை.
ச.அமிர்தாம்பிகை



செல்வி. நேசரத்தினம்
இராமச்சந்திரன்


திரு.கந்தையா
(நீலாவதி)


திரு.பஞ்சாட்சாரம்
(முத்தம்மா)


திரு.செ.துரைரட்ணம்
(சாந்தா)


திரு.தா.பாலசுந்தரம்
(பாலா)


திரு.இராமலிங்கம்


செல்வி இ.அமிர்தவல்லி
–அம்மா (பண்டிதை)

## ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செய்வதால் நமக்கு கிடைக்கும் சிறப்பான பலன் என்ன?

பாலில் நெய் மறைந்திருப்பது போல, எல்லா இடங்களிலும் இறைவன் மறைந்திருக்கின்றான். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு வருவதைப்போல, ஞானிகள் உள்ளத்திலும், திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சி அளிக்கின்றான். மற்ற இடங்களில் இறைவனை நினைத்துத் தியானிப்பதனாலும், துதிப்பதனாலும், வழிபடுவதனாலும், வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால், வினைகள் வெந்து, எரிந்து, கருகி, நீறாகி விடுகின்றன.

கொடிய வெயிலில் ஒரு துணியை வைத்தால், அத்துணி வெதும்புமேயன்றி, வெந்து சாம்பலாகாது, சூரிய காந்தக் கண்ணாடியை வெயிலில் வைத்து அதன் கீழே குவிந்து வரும் சூடான கதிரில் துணியை வைத்தால், அது கருகிச் சாம்பலாகிவிடுகிறது. நேர் வெயிலுக்கு இல்லாத ஆற்றல், சூரியகாந்தக் கண்ணாடியின் கீழே வரும் வெயிலுக்கு உண்டு.

பரந்து விரிந்திருக்கின்ற கதிரவனுடைய கதிர்களின் வெப்பத்தை ஒன்றுபடுத்தி தன் கீழே உள் இடத்திற்குச் சூரியகாந்தக் கண்ணாடி பாய்ச்சுகிறது. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது, வெயிலில் வேட்டியை காயவைப்பது போலாகும். ஆகையால் மற்ற எல்லா இடங்களிலும் வழிபட்டாலும், திருக்கோயிலில் இறைவனை வழிபாடு செய்வது இன்றியமையாததாகும்.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரசன் எனத் தொழுமே"

என்பது சிவஞான போதம்

நமது திருக்கோயில்களில், உள்ள திருவுருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர்கள், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப்பட்டு துதிக்கப்பட்ட காரணத்தால், ஆணவ இருளை அகற்றி வரங்களை அளிக்கின்றன. இத்தகைய தனிச்சிறப்பைப் பெற நாம் ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதே மிக உயர்ந்ததாகும்.

கொக்குவில் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பற்றை சேர்ந்தவர்களாயும்,
திருப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களுமான சிலர்



## கொக்குவில் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பற்றை சேர்ந்தவர்களாயும், திருப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களுமான சிலர்


















**கொக்குவில் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பற்றை சேர்ந்தவர்களாயும், திருப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களுமான சிலர்**










கொக்குவில் புதுக்கோயிலான் மலர் வெளியீடும், பெருஞ்சாந்தி விழாவும் சிறப்புடன் நிறைவேற எமது வாழ்த்துக்கள்



# Poobalasingham Book Depot

**A Comprehensive Range of Books**

Medical, Engineering, Electronics, School Text Books, Children Books, Computer Studies, Novels & Stationaries

\# 309 A 2/3, Galle Road,
Wellawatte.

Tel : 4515775, 2504266
Fax : 4515775



அமரர் நா.சண்முகம்பிள்ளை

19.06.1922 09.10.2012

## பிள்ளையார் சித்திரத்தேர் உருவாக்கம்

புதுக்கோயில் முருகன் ஆலயத்தில் நீண்டகாலம் நிர்வாக சபையில் அங்கத்துவம் வகித்தவர். சொற்பொழிவுகளையும் மாணவர்களுக்கு இந்து சமய அறிவுப் போட்டிகளை நடத்தவும் முன் நின்றவர். ஆலயத்துக்காக ஒரு உயர்ந்த சப்பைரதம் ஒன்று செய்து தந்து அந்த உற்சவத்தை தனது உபயமாக செய்ய முன்வந்தவர். இவர் முயற்சியால் உருவாகிய மேலைக் கோபுர தளத்திலேதான் புதிய முருகன் சிலை ஒன்றை கோண்டாவிலைச் சேர்ந்த சிற்பி ஒருவரால் அழகிய வேல் முருகன் சிலை உருவாக்கப் பட்டிருக்கிறது இதுவே இம்மலரின் முகப்பில் காணப்படுகிறது. இந்த பெரியாரின் நிதி உதவியினால் இவ்வாண்டு மஹோற்சவத்தில் 2014ல் ஓட இருக்கும் புதுக்கோயில் பிள்ளையார் சித்திரத்தேர் உருவாகி இருக்கிறது என்பது நன்றியுடன் குறிப்பிடத் தக்கது.



திரு. சுப்பிரமணியம் முருகதாஸ்

## மஹாலட்சுமி தாமிர எழுந்தருளி விக்கிரகம் உருவாக்கம்

லண்டன் மாநகரில் வசித்துவரும் தொழில் நுட்ப உயர் அதிகாரியான புதுக் கோயிலடியைச் சேர்ந்த திரு. முருகதாஸ் சுப்பிரமணியமும் அவர் குடும்பமும் எங்கள் ஆலயத்திற்கு பல வகையில் உதவி செய்தவர்கள். அவரின் உதவியால்தான் புதுக்கோயில் ஒரு மஹாலட்சுமி பரிவாரக் கோயில் உருவாக்கப்பட்டதுடன் 5.5.2014 கும்பாபிஷேகத்தோடு ஒரு புதிய மஹாலட்சுமி எழுந்தருளி விக்கிரகம் ஒன்றும் அடியார்களின் வணக்கத்திற்காக எமக்கு கிடைத்திருக்கிறது. மஹோற்சவ உபய காரர்களில் திரு.சு.முருகதாஸ் அவர்களும் ஒருவராவர். பக்தி உணர்வும் நல்ல வள்ளன்மை மிக்க உணர்வும் கொண்டவர்.




**தருமை ஆதீன ஸ்ரீ மௌன மடம் மலைக்கோட்டை திருச்சிராப்பள்ளி முனைவர் ஸ்ரீமத் மௌனசுவாமி தம்பிரான் சுாமிகள்**

இச்சுவாமிகளின் ஆசீர்வாதமும் வாழ்த்துச் செய்தியும் இம்மலரிலே பிறிதொரு பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது



**எங்கள் ஆலயத்தில் தொடர்ந்தேர்ச்சியாக சங்கீத கதாபிரசங்கம் ஆற்றிய ஸ்ரீ மத் சி.எஸ்.எஸ்.மணிஜயர்**

இவரே பின்னர் நல்லூரில் ஞானசம்பந்தன் ஆதீனம் அமைத்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் என்ற பெயரோடு எமது ஆலயத்திலும் உலகெங்கிலும் சைவத்தொண்டாற்றிய முதலாவது இலங்கை ஆதீனம் ஆவார்.



**சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தம்பிள்ளை அவர்கள்**

புதுக்கோவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுாமி கோவிலுன் நீண்டகாலம் தொடராக இருந்ததோடு பரிபாலன சபையிலும் இடம்பெற்று சிறந்த சொற்பொழி வாளராக கோயில் வளர்ச்சிக்கு தொண்டாற்றியவர். அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் தலைவரும் ஆவார்.



**கொக்குவில் தாவடியைச் சேர்ந்த பண்ணிசை மணி ஓதுவார் எஸ்.இராசையா அவர்கள்**

எமது ஆலயத்தில் 1962களுக்கு பிறகு பண்ணிசை ஆசிரியராகவும், ஊர்ப்பிள்ளைகளுக்கு தேவார, திருவாச திருமுறைகள் பயிற்றுவிக்கு ஆசியரிராகவும் பணிபுரிந்தவர் குப்பிளான் செல்லத்துரை அவர்களின் காலத்திற்கு பிறகு இிக்கோயிலில் இசைப்பயிற்சி ஆசிரியராக இருந்தவர். இவருடைய மகனாரே பண்ணிசை வித்தசஷகர் பிரபலமான தாவடி எஸ்.ஆர்.திருஞானச ம்பந்தர் அவர்கள் தந்தை வழியில் எம்கோயிலுக்கு தொண்டாற்றியவர்.

## திருவிழாக்கள்:

சித்திரை

வருடப்பிறப்பு
நடேசரபிஷேகம்
திருநாவுக்கரசர் குருபூசை
கார்த்திகை உற்சவம்

வைகாசி:

கார்த்திகை உற்சவம்
கொடியேற்றம்
மாம்பழத் திருவிழா
சப்பறத் திருவிழா
இரதோற்சவம்
பௌர்ணமி தீர்த்தோற்றசவம்
கொடியிறக்கம்
பூங்காவனம்
வைரவர் பொங்கல்
திருஞானசம்பந்தர் குருபூசை

ஆனி:

கார்த்திகை உற்சவம்
மாணிக்கவாசகர் குருபூசை
நடேசரபிஷேகம்
ஆனி உத்தரம்

ஆடி:

கார்த்திகை உற்சவம்
நடேசரபிஷேகம்
சுந்தரர் குருபூசை

ஆவணி:

கார்த்திகை உற்சவம்
கிருஷ்ண ஜெயந்தி
விநாயக சதுர்த்தி
நடேசரபிஷேகம்

புரட்டாதி:

புரட்டாதிச் சனிக்கிழமைகள்
நவராத்திரி
கார்த்திகை உற்சவம்
நடேசரபிஷேகம்

ஐப்பசி:

தீபாவளி
கந்தஷஷ்டி
திருக்கார்த்திகை
சூரசம்ஹாரம்
திருக்கல்யாணம்
ஐப்பசி வெள்ளிக்கிழமைகள்

கார்த்திகை:

கார்த்திகை உற்சவம்

மார்கழி:

திருவெம்பாவை
கார்த்திகை உற்சவம்
சுவர்க்கவாயிலேகாதசி
திருவாதிரை

தை:

தைப்பொங்கல்
தைப்பூசம்
சண்டேசர் குருபூசை
கார்த்திகை உற்சவம்

மாசி:

நடேசரபிஷேகம்
மஹா சிவராத்திரி
கார்த்திகை உற்சவம்

பங்குனி:

கும்பாபிஷேக தினம்
கார்த்திகை உற்சவம்

குறிப்பு:

வைகாசிப் பூரணையிற் தீர்த்தம் என்பதால் கொடியேற்றம் முதலான சில விழாக்கள் சித்திரையிலும், கொடியிறக்கம், பூங்காவனம் முதலான திருவழாக்கள் ஆனியிலும் நடைபெறலாம்.

### உற்சவாதி காலங்களில் புதுக்கோவிலில் பயன்படுத்தப்பட்டுவரும் வாகனங்கள்

மயில் வாகனம், அன்ன வாகனம் இரண்டும் முருகன் ஊர்திகளாகப் பயன்படுகின்றன. எலி வாகனமும் யானை வாகனமும் விநாயகன் ஊர்திகளாக உள்ளன. ஆட்டுக்கடா சூரன் போரின் போது உபயோகமாகின்றது. இடப வாகனமும் பயன்பாடுடையதாக உள்ளது. இரட்டைக் குதிரை வாகனம் மகோற்சவ காலத்தின் சப்பறத் திருவிழாவிற்கு முதல் நாள் திருவிழாவின் போது பயனுடையதாகின்றது. சூரன் பெரியதொன்று உண்டு. அதை இன்றுள்ளவர்கள் தூக்கி உரிய முறைப்படி கையாள்வது கடினமானது. இப்பொழுது சிறியதொரு பாரங்குறைந்த சூரனை உபகரித்துள்ளனர். அதுவே சூரன் போர் நிகழ்வின் போது பயனுடையதாகின்றது.

# கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோவில்
# நவகுண்ட பக்ஷ ஜீர்ணோத்தர மஹா கும்பாபிஷேகம் - 2014

சிவபூமியாம் இலங்கை மணித் திருநாட்டின் வடமாகாணத் தலைநகரான யாழ்ப்பாணத்துக் கொக்குவிற் பதியிலே முருகவழிபாடு. கந்தபுராண கலாச்சாரத்தின் நிலைகளான பல ஆண்டுகளாக விளங்கிவரும் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் பிரதான குருவாகவும் இக்கோவிலின் இரண்டு பிரதஷ்டா கிரியா கைங்கரியங்களின் முதற்குருவாகவும் திகழ்ந்து தம் வேதாகம அறிவாலும் அனுபவத்தாலும் இவ்வாண்டு புதுக்கோயிலின் புனராவர்த்தன கிரியைகளை செம்மையாக நடத்தி வைத்து வழிகாட்டுபவரான நற்பண்புகள் மிகு.

**சிவ. ஸ்ரீ சிவதாசக் குருக்கள்** அவர்களுக்கு
## "சிவாகம கிரியாரத்தினம்"

**என்னும் கௌரவ பட்டத்தினை கோவில் அடியார்கள் சார்பிலும்,**

**நிர்வாக சபையினர் சார்பிலும் தேவ பிராமணர்கள்,**

**பொதுமக்கள் முன்னிலையில் இன்று வழங்கி வாழ்த்துகின்றோம்.**

சுபம்

**முன்னிலை**
**இணுவை காயத்திரிபீட அதிபர் சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள் (வாத்தியார்)**
**"கலாபூஷணம், சைவப்புலவர்" மு.சி.ஸ்ரீதயாளன்** M.phil
(இந்துசமயக் கல்வி ஆலோசனைச் சபை உறுப்பினர் - கல்வியமைச்சு)

தலைவர் : **ச. பாலாபரணம்**
செயலாளர் : **செ. செல்வரஞ்சன்**
தனாதிகாரி : **அ. அருள்நேசன்**

உ

சிவமயம்

# "புதுக்கோயிலான் வெளியீடு நன்றிமலர்"



எம்.எஸ்.ஸ்ரீதயாளன்
M.Pil,PGDE
(கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைக்குழு உறுப்பினர்)
*'கலாபூஷணம்'*
*'சைவப்புலவர்'*

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலானது புருத்தாராணம் வேண்டிநின்ற கர்ப்பக்கிருகம், வசந்தமண்டபம், பயிரவர்பரிவாரக்கோயில் மற்றும் புதிய விக்கிரகங்கள் வார்ப்பு, வீதி ஆலயஉட்பிரகார அகலிப்பு, தெற்கு வசந்தமண்டபவாயில் அமைத்தல், புதிய கல்யாணமண்டபம் உட்பட்ட பல பணிகளை முன்னெடுத்து சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் பாலஸ்தாபனம் செய்து ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயத்தின் பணிகளின் நிறைவாக நடைபெறும் ஜீர்ணோத்தாரன நவகுண்ட பக்ஷ மகாகும்பாபிஷேகத்தையொட்டிய சிறப்புமலரொன்றைக் ஆலயநிர்வாக சபையினர் வெளியிட விரும்பியிருந்தனர்.

எமது கோயலின் வளர்ச்சியும், அடியார்களின் அன்பு வேண்டுகோள் நோக்கியும் இவ்விபரங்களை ஆவணப்படுத்தி வைக்கவேண்டிய தேவையும் சுட்டிக்காட்டப்பட, மிகக்குறுகியகால ஏற்பாட்டில் **"புதுக்கோயிலான்..பெருங்கருணை"** என்ற இம்மலர் உங்கள் கைகளுக்கு கிடைத்திருக்கிறது.

எம்பொருமான் கிருபாகர முருகன், தன் அடியார்கள் நினைக்கும் நற்காரியங்களை எல்லாம் எழிதில் முடித்து வைக்கு கிருபைமிக்க கருணைவள்ளல். சங்கநூலாம் புறநானூறு சுட்டுவது போல "முன்னியது முடித்தலில்.." எம்முருகனின் கருணைக்கு யார்தான் ஈடாவர்? அவன் கருணைச்சாகரமல்லலவா?

"துன்ப முறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

என்பார் வள்ளுவர் பெருமான். இதுவும் எமக்கு அருளும் இன்பமும் தருகின்ற பணி இப்புனிதபணி என்றே கருதுகிறேன். மிகக் குறுகியகால அவகாசமும், பொருள்வளதேவையும் கருதி, இம் மூன்றாவதுமலரில் முழுமையாக அனைத்துத் தகவல்களையும், செயற்பாடுகளையும் எழுத்துருவில் படியெடுத்து அச்சேற்றி பதிவாக்குவதென்பது எம்போலியருக்கு சாத்தியமா? புதுக்கோயில் சிவசுப்பிரமணியசுவாமி பேரில் அவன் மகிமைகளும் அகச்சான்றுகளுடன் கூடிய, இலக்கியத்தரம் மிக்க பலநூல்கள் இதுவரை வெளியிடு செய்யப்பட்டுடிருக்கின்றன என்பதை யாவரும் அறிவோம். இந்த வகையிலே அப்பணியில் முன்னின்ற எமது புதுக்கோவில் மூத்தஅடியார் எனது மைத்துனர் திரு.செ.இரத்தினப் பிரகாசம் அவர்கள் எம்வாழ்த்துக்கும், எல்லோருடைய பாராட்டுக்கும் உரியவராவர்.

கொக்குவிற் பெரியார் சைவசித்தாந்த ச.சபாரத்தின முதலியார் தொடக்கம், அடியேன் வரையிலான மீளா அடியார்கள் விடயப் பங்களிப்புகள் எம் கிருபாகர வெளியீடுகளுக்கு வளம் செய்வன.

அவசரமாச் சேகரிக்கப்பட்ட கட்டுரைகள், பிரதான தகவல்கள், புகைப்படங்கள், மேலாக ஆசியுரைகள், வாழ்த்துரைகள் மட்டும் இம்மலரின் இடம்பெறுகின்றன. ஏலவே நூலாக்கம் பெற்ற பாடற்தொகுப்புகள் பலவற்றை இம்மலரில் மீண்டும் பிரசுரிக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. எனின் 2009 ஆண்டிலிருந்து 2014 இன்றைய மகாகும்பாபிஷேகவிழா நிறைவுவரையிலான நிர்வாகத்தினரின் செயல்பாடுகள், திருப்பணிகள், ஆலயத்தின் புதிய உருவாக்கங்கள் பற்றிய ஆவணமாகவும் இம்மலர் அமைகிறது என்பதை இங்கு குறிப்பிட விழைகிறோம் .

31.03.66 மற்றும் 10.04.1998 ஆகிய தினங்களில் வெளிவந்த இரண்டு மலர்களையடுத்து மலரும் இஃது, புதுக்கோயிலானின் மூன்றாவது கும்பாபிஷேக மலராகும். இம்மலரில் இடம்பெறும் கோயில் வரலாறு தொடர்பான கட்டுரைகள் ஏலவே வெளிவந்த நூல்களிலிருந்து அடிப்படியே பதிவிறக்கம் செய்யப்பட்டவையே. இவ்வெளியீடுகளுக்கு பொறுப்பானவர்களுக்கு எம் நன்றியும் வாழ்த்துக்களும்.


வருங்கால சந்ததியினர் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயிற் பழமையையும், மகிமையையும் அறிந்து புதுஎழுச்சி பெற்று, எம் ஆலயப்பணிகளில் உற்சபகத்துடன் ஈடுபட உந்துசக்தி தரும் சில குறுங்கட்டுரைகளும் இதில் பிரசுரம் பெற்றுள்ளன. ஆதீனங்கள் வழங்கிய ஆசிகள், பெரியவர்களின் வாழ்த்துரைகள், பேராசிரியர்கள், அறிஞர்கள், மூத்தவர்களின் விடயதானங்கள், கவிதைகள் என்பன இம்மலருக்கு மேலும் அணிசெய்கின்றன. கோயில் நிர்வாக சபையினரின் செயலூக்கம் திருப்பணிச்சிறப்பு என்பவை கூட இம்மலரூடாக மதிக்கப்படவேண்டும் என்பது எனது கருத்தாகும். இந்தவகையில், இதுவரை புதுக்கோயில் சிவசுப்பிரமணிய சுவாமி பேரில் உருவாகிய இம்மலர் எம் குலத்தெய்வமாம் கொக்குவில் கிருபாகரனின் கருணைப்பிரவாகத்தின் பேறாக எமக்கு கிடைத்திருக்கிறது. ஆலயத்தோடிணைந்த புதியகல்யாண மண்டபப்பணியும் இவ்வாலயம் பல காலமாக அவாவி நிற்கும் கீழை இராஜகோபுர நிர்மாணப்பணிகளும் புதுக்கோயில் முருகப்பெருமான் திருவருளாளல் மிகவிரைவில் முட்டின்றி ஆரம்பித்து நிறைவுறவும் "புதுக்கோயிலான் பெருங்கருணை" என்ற புது மலர் கருதிய பயனை அடியார்களுக்கும், வாசகர்களுக்கும் வழங்கி, இனியமணம்பரப்பவும் வேண்டி எம் பெருமான் பொன்னார் திருவடிகளுக்கு இம்மலரை நன்றியுடன் காணிக்கையாக்டகுவதில் பெருமகிழ்வடைகிறேன்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

*சுபம்*

நன்றியுடன், தொண்டுக்குரிய
**சின்னத்தம்பி ஸ்ரீதயாளன்**
(மலர்ப் பதிப்பாசிரியர்)

கொக்குவில்.
5.5.2014




கிழக்கு வாயிற் தோற்றம்



தெற்கு வாயிற் தோற்றம்



ஸ்நான மண்டப வாசல்



தண்டாயுதபாணி சந்நிதி



பரிவார மூர்த்தமாய்
விளங்கும்
சித்தி விநாயகர்

# 'புதுக்கோயிலான் பெருங்கருணை'

ஜய வருஷம் சித்திரை ௨௨

அட்டைப்பட முகப்பில்,
ஆலயத்தின் மேலை வாயிற்
கோபுரத்துக்காக அமைக்கப்பட்ட
தளத்தில் தமிழ்நாடு சிற்பிகளால்
உருவாக்கப்பட்டிருக்கும் சுப்பிரமணிய
சுவாமியின் புதிய சிலாவிக்கிரகம்



பரிவார மூர்த்தமாய்
விளங்கும்
பைரவர்

## பெருஞ்சாந்தி விழா - 2014



திருவா ரீழச் செழுந்தாய்க்குச் சிரமாய்த் திகழும் யாழ்ப்பாணம்
சிரத்துக்கொளிசெய் நெற்றியெனச் செப்பும் ரதியாங் கொக்குவிலவ்
வுருவார் நெற்றித் திலகமென ஒளிருந் தொல்சீர்ப் புதுக்கோயில்
உறையும் கிருபா கரமுருகா உமையாள் சிறுவா ஒருமுதல்வா
மருவார் குழலி வள்ளியையும் மானேர் தேவ சேனையையும்
மருங்கில் அணைக்கும் மணவாளா மயில்மீ தரும்ம அயில்வேலா
செருவார் அசுரர் பகைதீர்க்குந் தேவா சிறியேம் பணியேற்றுச்
செம்மைத் தமிழால் உனைப்பாடுஞ் செல்வம் தருவாய் செவ்வேளே.



புதிதாக வார்க்கப்பட்ட
தாமிர விக்கிரகம்



பரிவார மூர்த்தமாய்
விளங்கும்
வேணுகோபாலர்

பதிப்பாசிரியர் : சின்னத்தம்பி ஸ்ரீதயாளன்
(கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைக்குழு உறுப்பினர்)

சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்.